ஒப்பியல் இந்திய இலக்கியம்

ஓர் அறிமுகம்



முனைவர். அ. பிச்சை

ஒப்பியல் இந்திய இலக்கியம்
ஓர் அறிமுகம்

முனைவர் அ. பிச்சை
தமிழ்த்துறை
கிராமியப் பல்கலைக்கழகம்
காந்திகிராமம் - 624 302

கபிலன் பதிப்பகம்
காந்திகிராமம், திண்டுக்கல் மாவட்டம்.

TAMIL
OPPIYAL INDIYA ILAKKIYAM - Oor Arimugam
(Comparative Indian Literature - An Introduction)
By
Dr. A. PITCHAI, Dept. of Tamil, GRI, Gandhigram.

Publisher : Kapilan Pathipagam
53, A.T.S. Nagar, Gandhigram-624 302
Dindigul District, Tamil Nadu. © 0451-2451967

Copy right : P. Kamalam
Edition : First , August 2003
Pages : 184
Size : I x 8 Demmy
Copies : 800
Type set : *Perfect Computers*, 106-A Palace Road,
Madurai-1. © (0452) 2670312, 3150409.
Wrapper Design : Dharshna Marees, Kovilpatti.
Printing : Hemamala Syndicate, Sivakasi.
Price : Rs. **65.00**


நூல் கிடைக்குமிடங்கள்

பாரதி புக் ஹவுஸ்,
டி-28, மாநகராட்சி வணிக வளாகம்,
பெரியார் பேருந்து நிலையம்,
மதுரை-625 001.

*

தமிழ்ப் புத்தகாலயம்,
ஜி-3/8 (15), மாசிலாமணி தெரு,
பாண்டி பஜார், தி.நகர்,
சென்னை-600 017. © 044-24345904

சமர்ப்பணம்



என்னை ஈன்றெடுத்த பெற்றோர்

தெய்வத்திரு க.அருணாசலம்

தெய்வத்திரு வெ.சின்னத்தாயம்மாள்

பொருளடக்கம்

பதிப்புரை

ஒப்பிலக்கிய ஆய்வும் கல்வியும் மேனாடுகளில் 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோற்றம் கண்டன. இந்தியாவில் 20-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் என்.கே.சித்தாந்தா, வ.வே.சு.ஐயர், எஸ்.வையாபுரிபிள்ளை ஆகியோரால் வலியுறுத்தப்பட்டது. இரவீந்திரநாத் தாகூர் இதனை 'விஸ்வசாகித்யா' என்று பெயர்சூட்டி வங்காளியில் அழைத்தார். ஒப்பிலக்கியக் கல்வியில் முதுகலைப்படிப்பை அறுபதுகளில் புத்ததேவ் போஸ் ஜாதவ்புர் பல்கலைக்கழகத்தில் தொடங்கினார். தமிழகத்தில் எழுபதுகளிலிருந்து தனித்தாளாகவும் விருப்பப்பாடமாகவும் ஒப்பிலக்கியம் மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட்டு வருகின்றது. தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், வை.சச்சிதானந்தன், தமிழண்ணல், கதிர்.மகாதேவன், ஜான் சாமுவேல், க.ப.அறவாணன், கே.செல்லப்பன், ப.மருதநாயகம் ஆகியோர் சிறந்த பங்களிப்பு செய்துள்ளார்கள். ஒப்பிலக்கிய ஆய்வில் மூன்றாம் தலைமுறையும் உருவாகிவிட்டது.

முதுகலையில் ஒப்பிலக்கியத்தைப் பேராசிரியர் தமிழண்ணல் அவர்களிடமிருந்து விருப்பப் பாடமாக பயின்றவன். அதுமுதல் எனது இலக்கிய ஆய்வில் ஒப்பிலக்கிய அணுகுமுறை ஓர் இன்றியமையாத பாகமாகிவிட்டது. தமிழியல் ஆய்வு எது செய்தாலும் உலக/இந்தியப் பண்பாட்டுத் தளத்தில் ஆய்வுப் பொருளை ஒப்பியல் நோக்கில் ஆராய்வது என்னுள் பதிந்துவிட்டது. காந்திகிராமப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மற்றும் இந்திய இலக்கியப் படிப்பைக் கற்பிக்கும் ஆசிரியனாகச் சேர்ந்த பின்பு, தமிழ் இலக்கியத்தைத் தமிழ், இந்தி, மலையாளம் போன்ற மொழிகளின் இலக்கியத்தை ஒப்பிட்டுக் கற்கும் - கற்பிக்கும் வாய்ப்புக் கிட்டியது; தமிழிலக்கியத்தோடு எல்லா இந்திய இலக்கியங்களோடு ஒப்பிட்டுக் காண நேர்ந்தது.

1986-இல் ஜனவரி முதல் டிசம்பர் வரை 12 இந்திய ஒப்பிலக்கியச் செய்தி மடலை வெளியிட்டேன். மீண்டும் 1997 ஜனவரி முதல் வெளியிட்டுக் கொண்டு வருகின்றேன். இந்த இதழ்களில் வெளிவந்த கட்டுரைகளையும், தமிழியல் ஆய்வுக் கருத்தரங்க மலர்கள், ஆய்வுக் கோவைகள் ஆகியவற்றில் வெளிவந்த கட்டுரைகளையும், தொகுத்து வெளியிடும்படி நண்பர்கள் தூண்டினார்கள். அதன் விளைவே நீங்கள் காணும் இந்நூல். இந்தநூல் அச்சில் வெளிவர நிதியுதவி அளித்த காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்கு நன்றி. இந்நூலாக்கத்தில் பெரிதும் துணைநின்ற முனைவர் பா.ஆனந்தகுமார் மற்றும் ஆய்வு மாணவர் செ.நாகநாதன் ஆகியோருக்கு நன்றி கூறுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். கலைநுணுக்கத்தோடு நூலை உருவாக்கிய ஃபெர்பெக்ட் கம்ப்யூட்டர்ஸ் நிறுவனத்தாருக்கும் இதயப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முனைவர் **அ.பிச்சை**

முன்னுரை

ஒப்பீடு புதுமையன்று; எப்பொழுது உவமை தோன்றி விட்டதோ அன்றே ஒப்பீடும் பிறந்து விட்டது எனலாம். இலக்கியத்தை இயற்கை அறிவியல் முறைப்படி ஆராய்பவர்கள் அடிப்படை நெறிமுறைகளான பொதுவழி நிறுவுதல் (induction), உய்த்துணர்தல் (deduction), பகுப்பாய்வு (analysis), கூட்டிணைப்பு (synthesis), ஒப்பாய்வு (comparision) ஆகியவற்றைப் பின்பற்றுவார்கள் எனக்கூறுவர். உலகப்புகழ் பெற்ற திறனாய்வாளரும், படைப்பாளருமாகிய டி.எஸ்.எலியட் ஒப்பாய்வும், பகுப்பாய்வும் திறனாய்வாளனின் இரண்டு முக்கியமான உத்திகள் எனக் குறிப்பிடுவார். ஜே.ஏ.கட்டன் என்பவர் திறனாய்வுக்கலை அல்லது திறனாய்வு அறிவியல் என்பது ஒப்பீடு (comparision), பகுப்புமுறை (Analysis), விளக்க முறை (interpretation), மதிப்பீடு (evaluvation) என்ற நான்கினோடும் தொடர்புடையது; கடப்பாடு உடையது என்று குறிப்பிடுகின்றார். எனவே, அறிவியல் முறைப்பட்ட திறனாய்வில் 'ஒப்பீடு' என்பது ஒரு சிறப்பான அம்சமாகக் கருதப்படுகின்றது. சமூக அறிவியல் ஆராய்ச்சிகளிலும், திறனாய்விலும் ஒப்பீட்டுமுறை பல முறையியல்களில் ஒன்றாகப் பயன்படுத்தப்படுகின்றது.

ஒப்பாய்வு

Comparative method என்னும் ஆங்கிலச்சொல்லின் மொழிபெயர்ப்பாக ஒப்பீட்டுமுறை, ஒப்பாய்வு என்னும் சொற்கள் கையாளப்படுகின்றன. ஒப்பியல், ஒப்புநோக்கு, ஒப்பியல் நோக்கு போன்ற தொடர்களும் வழக்கில் இதே பொருளில் பயன்படுத்தப்படுகின்றன. ஒப்பாய்வு இன்று உடலியல், மானிடவியல், உளவியல், சமூகவியல், சட்டம், சமயம், தத்துவம், நாட்டுப்புறவியல் போன்ற அனைத்துத் துறைகளிலும் ஊடுருவி உள்ளது. இலக்கிய உலகில் 17-ஆம் நூற்றாண்டு இறுதியிலும் 20-ஆம் நூற்றாண்டு ஆரம்பத்திலும் ஒப்பாய்வு அதிகமாகக் குறிப்பிடப்படுகின்றது.

மேத்யூஆர்னால்டு தான் ஒப்பிலக்கியம் என்ற சொல்லை உருவாக்கினார் என்றாலும் இலக்கிய ஒப்பீட்டிற்குரிய அடித்தளத்தை 'லான்ஜினஸ்' என்றும் இத்தாலியத் திறனாய்வாளர் இட்டுள்ளார் என்று சொல்லப்படுகின்றது. மேத்யூஆர்னால்டு கவிதை என்பது வாழ்க்கையின் திறனாய்வு எனக்குறிப்பிட்டது மட்டுமல்லாமல், கவிதைக் கலையின் மதிப்பீட்டுத்தரம் காண 'கட்டளைக்கல்' அல்லது 'உரைகல்' முறையை (Touch stone method) என்பதை முன்வைத்தார். இம்முறையின்படி ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட கவிதையைச் செவ்வியல் காலத்தைச்

சேர்ந்த சிறந்த கவிதை ஒன்றோடு ஒப்பிட்டு அதன் தரத்தை மதிப்பிட்டு உணரலாம் என்று வலியுறுத்தினார். இம்முறையில் ஒப்பீடு ஒரு கூறாக அமைந்தாலும், இது கவிதையின் சில பகுதிகளுக்கே கூறியதால் முழுமையான ஒப்பீட்டிற்கு வழிகாட்டவில்லை, பயன்படவில்லை.

ஒப்பியல் திறனாய்வு

Comparative criticism என்னும் தொடர் தமிழில் ஒப்பியல் திறனாய்வு என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஒரு மொழியில் தோன்றிய இரண்டு நூல்களை அல்லது இரண்டு படைப்பாளர்களை அல்லது இரண்டு இலக்கியப் போக்குகளை அல்லது காலகட்டங்களை ஒப்பிடுதல் ஒப்பியல் திறனாய்வு ஆகும். இதன்படி கம்பனையும், இளங்கோவையும், பாரதியையும், பாரதிதாசனையும், கபிலரையும், பரணரையும் ஒப்பிடுவது ஒப்பியல் திறனாய்வு ஆகும். இந்த விளக்கத்தை எஸ்.இராமகிருஷ்ணன், வை.சச்சிதானந்தம், இராம. பெரிய கருப்பன், ஜி.ஜான்சாமுவேல் ஆகியோர் கூறியுள்ளனர். மு.நிலாமணி போன்ற விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர் மட்டும் ஒப்பியல் திறனாய்வு என்பதும் ஒப்பிலக்கியமும் ஒன்று என்றே வாதிடுகின்றனர். இந்தக்குழப்பம் ஆசிரியர்களிடையேயும், மாணவர்களிடையேயும் நீங்கிடவில்லை. தினமணிச்சுடரில் (31.3.90) அ.சிவக்கண்ணன் என்பவர் எழுதிய 'திறனாய்வுக்கலை' நோக்கும் போக்கும் என்னும் கட்டுரையில் ஒப்பிலக்கியத் திறனாய்வு பற்றிக்குறிப்பிடும் பொழுது 'ஒரே நாட்டில் தோன்றிய இலக்கிய வகைகளோடு ஒப்பீடு செய்வது, பல்வேறு நாட்டைச் சேர்ந்த இலக்கிய வகைகளோடு ஒப்பீடு செய்வது போன்ற திறனாய்வுப்போக்கினால் பல உண்மைகள் தெரியவருகின்றன'. என்று குறிப்பிடுகின்றார். ஒரே நாட்டில், ஏதாவது ஒரு மொழியில், தோன்றிய இலக்கிய வகைகளை ஒப்பீடு செய்வது 'ஒப்பியல் திறனாய்வு' ஆகுமேயன்றி ஒப்பிலக்கியம் ஆகாது. ஒரே மொழியில் உள்ள இலக்கிய வடிவங்களை, யாப்புக்களை, ஆசிரியர்களை, உத்திகளை, இலக்கியப் போக்குகளை ஒப்பிடுவது புலன் அல்லாதனவற்றை புலன் ஆக்கும் ஒப்பியல் திறனாய்வு முறையாகும். மூலப்பாடத்திறனாய்வுக்கு (textual criticism) துணைபுரியும். மேலும், படைப்பாளர்களின் தனித்திறன்களை அல்லது நடைச்சிறப்புக்களை பிரித்துணரத் துணை செய்யும்.

ஒப்பிலக்கியம்

Comparative literature என்னும் தொடரின் மொழி பெயர்ப்பாக தமிழில் ஒப்பிலக்கியம், ஒப்பியல் இலக்கியம், இலக்கிய ஒப்பீடு என்னும் தொடர்கள் பயன்படுத்தப்படுகின்றன. வெவ்வேறு மொழிகளைச் சேர்ந்த

இரண்டு படைப்பாளர்களை அல்லது இரண்டு நூல்களை ஒப்பிடுவது ஒப்பிலக்கியம் ஆகும். ஒரு மொழியில் தோன்றிய இலக்கியத்தை அம்மொழியில் தோன்றிய பிற கலைகளோடும் (சிற்பம், ஓவியம், கட்டிடம், இசை) மற்றும் பிற அறிவுத் துறைகளோடும் (அறிவியல், மெய்யியல், உளவியல், சமூகவியல்) ஒப்பிடுவதும் ஒப்பிலக்கியம் என்று ஒப்பிலக்கியத்தின் எல்லையை விரிவுபடுத்தியுள்ளார், அமெரிக்க ஒப்பிலக்கிய அறிஞர் எச்.எச்.ரிமார்க். கம்பனும் கல்கியும் முன்ஷியும் பற்றிய ஒப்பீடு ஒப்பிலக்கியம் என்னும் வரையறைக்குள் அடங்கும். ஒப்பிலக்கியம் என்பது ஒத்த கூறுகளை மட்டுமின்றி வேற்றுக்கூறுகளைப் பகுத்துணர வலியுறுத்துகின்றது. இந்தியா என்பது பல மொழிகளைப் பேசுகின்ற மக்களை மாநிலங்களை உள்ளடக்கிய ஒரு தேசம் ஆகும். எனவே, இந்தியாவில் உள்ள பல்வேறு மொழி இலக்கியங்களை ஒப்பிடுவதும் ஒப்பிலக்கியம் என்னும் வரம்புக்குள் அடங்கும்.

ஒப்பிலக்கியத்தில் இரண்டு வகையான கோட்பாடுகளைக் குறிப்பிடுவர். ஒன்று பிரெஞ்சுக் கோட்பாடு, மற்றொன்று அமெரிக்கக் கோட்பாடு. பிரெஞ்சுக்கோட்பாட்டில் அறிவியல் முறை, எழுத்தாளரின் தன்வரலாறு, தாக்கக்கொள்கை, வாய் மொழி இலக்கியமே வரிவடிவ இலக்கியத்திற்கு அடிப்படை போன்றவைகள் முக்கியமான அம்சங்களாகும். இரண்டு மொழிகளில் அல்லது நாடுகளில் சமூகப்பொருளாதார அரசியல் காரணங்கள் மாறாதிருக்குமானால் அல்லது ஒன்றுபட்டு இருக்குமானால் அவற்றுள் தோன்றிய இலக்கியங்களில் ஒற்றுமைக்கூறுகள் மீக்கூர்ந்து காணப்படும் என்பது அறிவியல் வழிப்பட்ட ஒப்பிலக்கியத் தத்துவமாகும். அமெரிக்க ஒப்பிலக்கிய அறிஞர்கள் தற்சார்பற்ற அறிவியல் முறையை ஏற்றுக் கொண்டாலும், தன்வரலாறு தாக்கம், வாய்மொழி இலக்கியத்தின் பங்கு ஆகியவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை. முருகியல் உணர்ச்சி, அதனை வெளிப்படுத்தும் முறை ஆகியவற்றை அழுத்தமாகக் கூறினர். பிரெஞ்சுக் கோட்பாட்டினர். இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட இலக்கியங்களை ஒப்பிடுவதை மிகுதியாக வலியுறுத்தினர். ஆனால் இரண்டு இலக்கியங்களை மட்டுமின்றி இலக்கியத்தை மற்ற கலைகளோடு அறிவியல் துறைகளோடு ஒப்பிடுவதையும் வரவேற்று ஒப்பிலக்கியத்தின் ஆய்வெல்லையை அகலப்படுத்தினர் அமெரிக்க ஒப்பிலக்கிய அறிஞர்கள். ஒப்பிலக்கிய ஆய்வில் மேலே குறிப்பிட்ட கோட்பாடுகளைப் பின்பற்றுவதோடு அமைப்பியல், உளவியல், மானிடவியல், சமூகவியல் ஆகியவற்றின் அணுகுமுறைகளைக் கடைப் பிடிக்கலாம். ஏதாவது ஒரு கோட்பாட்டினை ஏற்றுக் கொண்டு ஏதாவது ஒரு அணுகுமுறையைக் கடைப்பிடித்து இரண்டு இலக்கியங்களை ஒப்பிட்டால் நல்ல முடிவுகளைத் தரும்.

க.கைலாசபதி, இராம.பெரியகருப்பன், வை.சச்சிதானந்தம், ப.மருதநாயகம், ஜி.ஜான்சாமுவேல், கதிர்.மகாதேவன் ஆகியோர் தத்தம், நூல்களில் தமிழில் மற்றும் மேனாடுகளில் ஒப்பிலக்கியத்தின் வளர்ச்சியைச் சுட்டிக்காட்டியுள்ளனர். உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் எண்பதில் தமிழ், எண்பத்தொன்றில் தமிழ், எண்பத்திரண்டில் தமிழ் என்னும் நூல்களில் காணப்படும் ஒப்பிலக்கியக்கட்டுரைகள் ஒப்பிலக்கிய வளர்ச்சியில் மூன்றாண்டுக் காலத்தின் நிலைபற்றிக் குறிப்பிடுகின்றன. அ.பிச்சை 1986-இல் வெளியிட்ட இந்திய ஒப்பிலக்கியம் என்னும் மாதஇதழ் ஒப்பிலக்கிய நூல்களை விமர்சித்தும் ஒப்பிலக்கிய நூற்பட்டியலை வெளியிட்டும் வருகின்றது. மது.ச.விமலானந்தத்தின் தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம் இரண்டாம் பாகம் (1987) ஒப்பிலக்கிய வளர்ச்சியைச் சுருக்கமாக எடுத்துரைக்கின்றது. கா.செல்லப்பனின் ஒப்பியல் தமிழ், வை. சச்சிதானந்தத்தின் ஒப்பிலக்கியம், கதிர்.மகாதேவனின் ஒப்பிலக்கிய நோக்கில் சங்ககாலம், கி.இராசாவின் இலக்கிய வகைமை ஆய்வு, ஜி.ஜான்சாமுவேலின் கம்பனும் ஹோமரும்-கலைகள், இராம.குருநாதனின், சங்கப் பாட்டும் ஜப்பானியக் கவிதையும், ச.வே.சுப்பிரமணியனின் திராவிட மொழி இலக்கியக் கலைகள் போன்றவை எண்பதுகளில் வெளிவந்த நூல்களில் குறிப்பிடத்தக்கவை. தொண்ணூறுக்களில் ம.திருமலை, இரா.காஞ்சனா, செ.சாரதாம்பாள், பா.ஆனந்தகுமார் ஆகியோர் தமது கட்டுரைகள் மற்றும் நூல்கள் வாயிலாக ஒப்பிலக்கிய வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்து வருகிறார்கள்.

1

இந்திய இலக்கியம் : பொதுத்தன்மைகளும் மேனாட்டுத் தாக்கங்களும்

இந்தப் பூமிப்பந்தில் பெரிய கண்டமாக இருப்பது ஆசியா. ஆசியாவில் துணைக்கண்டமாக பண்பாடு, வரலாறு, அரசியல், தகவல் தொழில் நுட்பம் ஆகியவற்றில் முன்னோடியாகத் திகழ்வது இந்தியா. இந்தியா ஆங்கில ஏகாதிபத்தியத்திலிருந்து 1947-இல் ஆகஸ்ட் 15-ஆம் நாளில் பூரணவிடுதலை பெற்றது. 1950-ஆம் ஆண்டில் அரசியல் சாசனத்தில் 15 பெரும்பான்மையினரின் மொழிகளும் சாகித்ய அகடமியினால் 7-க்கு மேற்பட்ட சிறுபான்மையினரின் மொழிகளும் இந்திய இலக்கிய மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இந்த 22 இந்திய மொழிகளில் காணப்படும் பொதுத்தன்மைகளையும் மேனாட்டுத் தாக்கங்களையும் இலக்கிய இயக்கங்களின் செல்வாக்கினையும் காணலாம்.

1. இந்திய இலக்கியம்: வரையறையும் விளக்கமும்

18-ஆம் நூற்றாண்டின் இறுதிவரை எல்லா இலக்கியங்களுமே ஒரே பெரிய கருத்தோட்டத்தின் பகுதிகளே என்று கருதப்பட்டது. ஜெர்மனி நாட்டு எழுத்தாளர் கதே உலக இலக்கியம் என்ற கோட்பாட்டிற்கு முதன்மை கொடுத்து, தேசியவாதத்திற்கு எதிர்ப்புக் குரல் கொடுத்தார். இருப்பினும் மொழி, தேச அடிப்படையில் இலக்கியங்களை இனங்காட்டுவது- அடையாளப்படுத்துவது இன்றையச் சூழலில் தவிர்க்க முடியாத ஒன்றாக அமைகின்றது. சில இலக்கியத் திறனாய்வாளர்கள், மொழி அறிஞர்கள் இந்திய இலக்கியம், என்பதை வரையறை செய்வதில் உள்ள சிக்கல்களை வெளிப்படுத்தித் தீர்வு காண முயன்றுள்ளார்கள்.

1.1. முத்துச் சண்முகன் பிள்ளை (பிப்ரவரி 1986)

இந்தியாவில் வழங்கும் மொழிகள் அனைத்திலும் இலக்கியம் என வெளிவருவன எல்லாம் இந்திய இலக்கியம் என்பது ஒரு அணுகுமுறை. இந்தியாவில் ஆங்கிலத்தையே தாய்மொழியாகக் கொண்ட ஒரு சிறுபான்மையினர் இருக்கின்றனர். இவர்கள் ஆங்கில மொழியில் இலக்கியம் படைக்கின்றனர். ஆங்கிலம் மாநில எல்லைகளைக் கடந்து இந்தியா முழுவதும் கற்றவர்களிடையே கருத்து பரிமாற்றத்திற்குரிய மொழியாகச் செயல்படுகிறது. சாகித்ய அகடமி, நேஷனல் புக் டிரஸ்ட், ரூபா அண்டு கோ., மேக்மில்லன் போன்ற நிறுவனங்களும் இந்திய மொழிகளிலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிடுகின்றன. எனவே, ஆங்கிலமும் இந்திய இலக்கிய மொழித்தகுதியைப் பெற்று விட்டது. ஆங்கிலத்தில் இந்திய பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு இந்தியர்களால் எழுதப்படும் இலக்கியமும் இந்திய இலக்கியமே. ஆகவே இந்திய இலக்கியத்தை மொழி, நாடு, பண்பாடு, ஆசிரியர் ஆகியவற்றின் அடிப்படையில் வரையறை செய்ய வேண்டுமா என வினா எழுப்புகிறார் முத்துச் சண்முகனார்.

1.2. வை.சச்சிதானந்தம் (மார்ச் 1986)

இந்திய இலக்கியம் என்பது பல மொழிகளில் எழுதப்பட்ட ஒரே இலக்கியம் என்று டாக்டர் இராதாகிருஷ்ணன் போன்றவர்கள் கலாச்சார ஒற்றுமை அடிப்படையில் உணர்ச்சி பூர்வமாகக் குறிப்பிட்டுள்ளார்கள். இக்கூற்றுக்குச் சான்றுகளோ விளக்கமோ தரவில்லை. இதற்குக்காரணம் பல மொழி இலக்கியங்களிலுள்ள இந்தியக் கலாச்சாரத்தை ஆழ்ந்து அறியும் உத்திகள் கிடைக்கவில்லை. இப்பொழுது இந்த உத்தி ஒப்பிலக்கியம் மூலம் கிடைக்கின்றது.

நேரு கூறியது போல இந்தியப் பண்பாடு என்பது பன்மை கலந்த ஒருமை அதாவது வேற்றுமையில் ஒற்றுமை, என்று கூறலாம். வேற்றுமையை விளக்குவது எளிது, ஒற்றுமையை நிலைநாட்டுவது கடினம். இந்த ஒற்றுமையைத் தான் நாம் இந்திய இலக்கியம் என்று சொற்றொடரில் இந்திய என்ற சொல்லுக்குரிய பொருளாகக் கொள்கிறோம். இந்தியத் தன்மைகளைத் தனித்துக் காணும் பொழுது மேனாட்டுத் தாக்கங்களைக் காணலாம். இந்திய மொழிகளில் நேரு, காந்தியடிகள் போன்றோர்களின் கருத்தியல்களின் தாக்கத்தையும் ஆராயலாம், இந்திய மொழிகளில் வடமொழிகளிலிருந்து செய்யப்பட்ட தழுவல்களையும் விளக்கலாம். இந்திய இலக்கியங்களிடையே காணப்படும் ஒற்றுமை, வேற்றுமைகளை ஆராய்வதற்கும் மொழிபெயர்ப்பு இலக்கியங்கள் ஆங்கிலத்தில் அல்லது பிராந்திய

மொழிகளில் மிகுதியாக வெளிவரல் வேண்டும். இதற்கு இந்திய மொழிப் பெயர்ப்புக் கழகம் அமைக்கப்படல் வேண்டும் என்று பரிந்துரை செய்கிறார் வை.சச்சிதானந்தன்.

1.3. இ.அண்ணாமலை (ஏப்ரல், 1986)

புவியியல் அல்லது அரசியல் அடிப்படையில் அமைந்துள்ள இந்திய நாட்டில் எழுதப்படும் இலக்கியம் இந்திய இலக்கியம் என்று சொல்வது போதாது. அது விளக்கத்துக்குத் தேவையான கூறாக இருக்கலாம். ஆனால், போதுமான கூறாக இருக்க முடியாது. இந்தியாவில் எழுதப்பட்டது என்பதற்கு மேலாகச் சில கூறுகள் இந்திய இலக்கியத்துக்கு இருக்கின்றன. அதே போல் இந்தியர்கள் பேசும் மொழிகளில் எழுதப்பட்டது. இந்தியர்களால் எழுதப்பட்டது என்பன போதுமான விளக்கக்கூறுகளாக இருக்க முடியாது. முத்துச் சண்முகன் இவை மூன்றும் (மொழி, இடம், பண்பாடு) தேவையான கூறுகளாக வேண்டுமா என்ற கேள்வியை எழுப்புகிறார். தேவையான கூறுகளாக எடுத்துக் கொண்டால் இந்திய இலக்கியத்தை ஒரு எல்லைக்குள் வரையறுக்க உதவியாக இருக்கும். இதனால் இந்தியாவுக்கு வெளியே இந்தியர் அல்லாதவர்களால் வேறு மொழிகளில் எழுதப்படும் இலக்கியத்தில் இந்திய இலக்கியக் கூறுகள் இருக்காது என்று சொல்ல வேண்டியதில்லை. அத்தகைய இலக்கியத்தை இந்திய இலக்கியக் கூறுகளைப் பிரதிபலிக்கிற வேறு இலக்கியம் எனலாம்.

இந்திய இலக்கியம் என்று சொல்லும் போது சில பொதுவான இலக்கியக்கூறுகளை உள்ளடக்கிய இலக்கியம் என்ற பொருளில் கூற வேண்டும். இந்திய இலக்கியக்கூறுகள், இலக்கியத்தில் எடுத்தாளப்படும் பொருள்கள், அப்பொருள்களை அணுகும்முறை, அந்த அணுகுமுறைக்கு அடிப்படையாக அமைந்த வாழ்க்கைத்தத்துவம், அணுகுமுறைக்குப் பயன்படுத்தும் உத்திகள் முதலியவற்றை உள்ளடக்கும் இந்திய இலக்கியக்கூறுகள் எவை என்று இப்போது தெளிவாகத் தெரியவில்லை. அவற்றை ஆராய்ச்சியின் மூலம் கண்டுபிடிக்க வேண்டும். அது ஒப்பிலக்கிய ஆராய்ச்சியின் ஒரு நோக்கமாக இருக்க வேண்டும்.

இந்திய நாட்டுப்புற இலக்கியங்களில் பொதுவான கருப்பொருள்கள் இருக்கின்றன என்று சொல்லப்படுகின்றன. இந்திய இலக்கியத்தின் பொதுக்கூறுகள் என்று சொல்லும் போது ஒவ்வொரு மொழிக்கும் உரிய தனிக்கூறுகளிலிருந்து இவை வேறுபட்டிருக்க வேண்டும். தமிழ், வங்காளம், பஞ்சாபி முதலான இலக்கியங்களின் தனிக்கூறுகளையெல்லாம் திரட்டி எடுத்து, தொகுத்துத் தருவது இந்திய இலக்கியக் கூறுகள் ஆகாது. எல்லா இந்திய மொழி இலக்கியங்களுக்கும் பொதுவான கூறுகளைக் கண்டறிய வேண்டும். இந்திய இலக்கியப் பொதுக் கூறுகளைத் தேடும் முயற்சி மாயமான் வேட்டையாக இராது. முயற்சியில் வெற்றிபெறுபவருக்குப் பல வகை மான்களுக்கும் 'பொதுவான ஒருமான் உரு' கிடைக்கும் என்று நம்புகிறார் இ.அண்ணாமலை.

2. இந்தியத்தன்மை

இந்தியா மொகஞ்சோதரா, ஹரப்பா நாகரிகக் காலகட்டத்திலிருந்து தனது வரலாற்றைத் தொடங்குகின்றது. ஏறக்குறைய ஐயாயிரம் ஆண்டு வரலாற்றுச் சான்றாதாரங்களும் பண்பாட்டுப் பெருமையும் உடையது. தொன்மையான பண்பாடும் அதன் பரவலும் இந்தியா முழுவதும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே பரவி பண்பாட்டில் ஒருமித்த தன்மையை விதைக்கக் கால்கோள் போடப்பட்டது. முகலாயர், ஆங்கிலேயர் ஆட்சிகள் பண்பாட்டு ஒற்றுமையை எதிர்நீச்சல் போட்டு வளர்த்துக் கொள்ளச்செய்தன. இவ்வாறு ஏற்பட்ட பண்பாட்டு ஒற்றுமையை இந்திய இலக்கியங்கள் பிரதிபலிக்கின்றன. இந்திய இலக்கிய அறிஞர்களும் சுட்டிக்காட்டத் தவறவில்லை. இராதாகிருஷ்ணன், நேரு மட்டுமின்றி, சுனித்குமார் சாட்டர்ஜி, டாக்டர் நாகேந்திரா, ஏ.என்.மூர்த்திராவ், வி.கே.கோக்காக், கே.எஸ்.சீனிவாசன், கே.எம்.ஜார்ஜ் போன்ற அறிஞர்கள் இந்திய இலக்கியத்தின் பொதுவியல்புகளைத் தம் பேச்சிலும் எழுத்திலும் வெளிப்படுத்தியுள்ளனர்.

மோதிலால் ஜோத்வாணி "பலமொழிகள், ஓர் இலக்கியம்" என்னும் கட்டுரையையும் (24.31977 ப.11.) நாகேந்திரா "ஒருமையின் அடிப்படைக் கூறுகள்" என்னும் கட்டுரையையும் இந்துஸ்தான் டைம்ஸ் என்னும் இதழில் வெளியிட்டார்கள். இவ்விரு கட்டுரைகளும் இந்திய இலக்கியங்களில் பொதுப்பண்புகள் அல்லது இந்தியத்தன்மை என ஒன்று காணப்படுகின்றதா என்று ஆராய்வதற்கு வித்திட்டன. இதன் விளைவாக ஆர்.கே.குப்தா மற்றும் பிரியலட்சுமி குப்தா ஆகியோர் "இந்திய இலக்கியம்" என்னும் இதழில் (செப் - அக் 1983) ஒரு நீண்ட கட்டுரையை விரிவாக ஆராய்ந்து ஒன்பதிற்கு மேற்பட்ட ஒற்றுமைக் கூறுகளைக் கண்டறிந்து வெளியிட்டார்கள். இதற்கு முன்னதாக வி.கே.கோக்காக் எழுதிய இந்திய இலக்கியக் கொள்கை (1979) என்னும் நூல் வெளிவந்தது. இந்தியத்தன்மை, இந்திய இலக்கியத்தில் பொதுமைக்கூறுகள் ஆகியவற்றை இந்நூலிலுள்ள கட்டுரைகள் சுட்டிக் காட்டின. இவர்களைத் தொடர்ந்து இந்தியத்தன்மை, இந்திய உளவியல் மற்றும் தத்துவரீதியாக எவ்வாறு இந்திய இலக்கியங்களில் மற்றும் கதைமாந்தர்களின் அடித்தளத்தில் அமைந்துள்ளது என்று விளக்கியுள்ளார்கள்.

2.1. இலக்கிய வகைகள்

வேதகாலத் தனிப்பாடல்கள், இதிகாசங்கள், புராணங்கள், நாடகங்கள், சம்புக் காவியங்கள், சதகங்கள் ஆகியவற்றை சமஸ்கிருத மொழியில் காணலாம். இவைகள் யாவும், இந்திய மொழிகளில் தழுவப்பட்டன மொழி பெயர்க்கப்பட்டன. சதகம், தூது, இயற்கை பற்றிய பாடல்கள் பிரபந்தங்களாக இந்திய மொழிகளில் இயற்றப்பட்டுள்ளன. தென்னிந்திய மொழிகளில் குறவஞ்சி சிறப்பாகக் காணப்படுவதைப் போல் வடஇந்திய மொழிகளில் கஜல், உபாக்கியான், மங்கல் போன்ற சிற்றிலக்கிய வகைகள் காணப்படுகின்றன.

பிள்ளைத்தமிழை தமிழுக்கே உரிய சிறப்பான இலக்கிய வகையாகக் கூறலாம். ஒவ்வொரு இந்திய மொழியும் தனக்கே உரிய சிறப்பான இலக்கிய வகையைப் படைத்துத் தனித்தன்மையையும் வெளிப்படுத்தியுள்ளன. பாரம்பரியத்தையும் தேசியத்தையும் மேனாட்டுத் தாக்கத்தையும் உள்வாங்கிக் கொண்டு பொதுவான இலக்கிய வடிவத்தையும் படைத்துள்ளன.

2.2 அடிக்கருத்துக்கள்

பாரதியார் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே 'செப்புமொழி பதினெட்டு உடையாள் - எனில் சிந்தனை ஒன்றுடையாள்' என்று இந்திய இலக்கியத்தன்மையை எடுத்துரைத்தார். இக்கருதுகோளை நிருபிக்கும் வகையில் பல அறிஞர்கள் இந்திய இலக்கியங்களில் அடிச்சரடாக இழைந்தோடும் இக் கருத்துக்களை விளக்க முயன்றனர். அறம் பொருள், இன்பம், வீடுபேறு என நான்கிற்குள்ளும் அடங்கும் பல வேறுபட்ட கருத்துக்கள் இந்திய இலக்கியத்தில் கையாளப்பட்டுள்ளன. காதல், வீரம், விதி, கற்பு, ஈகை, இரக்கம், ஜாதி, காருண்யம், அகிம்சை, மனித நேயம், சகோதரப்பாசம், துறவறம், ஆன்மீகம், ஒழுக்கம் போன்ற பல அடிக்கருத்துக்களை இந்திய எழுத்தாளர்கள் எடுத்துக் கொண்டு தனிப்பாடல், நாவல், சிறுகதை, காவியம், நாடகம் ஆகியவற்றில் கலைவடிவம் தந்துள்ளனர்.

2.3. யாப்பு வடிவங்கள்

வேத இலக்கியத்திலிருந்து சில வகையான யாப்பு வடிவங்கள் போற்றப்பட்டு வருவதைக் காணலாம். குறிப்பாக, எல்லா மொழிகளில் ஈரடிப்பாடல்கள் (தோஹா, குறள், கண்ணி, கஜல்) மற்றும் நான்கடிப்பாடல்கள் (தாண்டகம், விருத்தம், நேரிசை, வெண்பா, கலித்துறை) போன்றவை அடிக்கடி புலவர்களால் பயன்படுத்தப்பட்டுள்ளன. எதுகை, மோனை, இயைபு போன்ற உத்திகள் (பிராசம், அனுப்பிராசம்) ஆகியவை பாட்டின் ஒலிநயத்தைக் காட்டும் சப்த அலங்காரங்கள், சந்தஸ் பற்றிய நூல்கள் இடைக்கால இலக்கணிகளால் நிறைய எழுதப்பட்டுள்ளன. 19, 20 ஆம் நூற்றாண்டில் யாப்பு வடிவம் எல்லா மொழிகளிலும் புறக்கணிக்கப்பட்டு, வசனக் கவிதை, ஹைக்கூ கவிதை புதுக்கவிதைகள் பரவலாகி உள்ளன. யாப்பு வழிப்பட்ட கவிதைகள் மிகக்குறைந்த கவிஞர்களால் பின்பற்றப்பட்டு வருகின்றன.

2.4 பாவியல் உத்திகள்

அலங்காரம், தொனி, ரசம், வக்ரோத்தி, ரீதி, அவுசத்தியம் போன்ற பாவியல் கோட்பாடுகளை இந்தியப்பாட்டியலாளர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

இந்தச் சிந்தனைகள் இந்திய மொழிகளில் எழுதப்பட்டுள்ள இலக்கண நூல்களிலும், எழுத்தாளர்களால் புனையப்பட்ட படைப்புகளிலும் இவைகள் பல்வேறு அளவுகளில், பெயர்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு கால கட்டத்திலும் ஏதேனும் ஒரு கோட்பாடு தலைமை-முதன்மை பெறுவதும், மற்றவை சிறுபான்மை பெறுவதையும் இலக்கிய வரலாற்றில் காணலாம். இந்தக் கோட்பாடுகளை மொழிபெயர்த்தோ தழுவியோ இந்திய மொழிகளில் நூல்கள் இயற்றப்பட்டுள்ளன. அதே சமயத்தில் இணைத்து சிந்திக்கத்தக்க கோட்பாடுகளைத் தொல்காப்பியம் மற்றும் தண்டியலங்காரம் என்பவை குறிப்பிடுவனவற்றை இவண் நினைக்கத்தக்கது.

2.5. இயக்கங்கள்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் வடஇந்தியாவில் தோன்றிய வைதிக, அவைதிக மதங்கள் தென்னிந்தியாவில் செல்வாக்குச் செலுத்தின. யோக, ஞான மார்க்கங்களும் காலூன்றின. சமண பௌத்த மதங்கள் தென்னகத்தில் புதிய பரிமாணத்தையும் பரிணாமத்தையும் பெற்றன. ஒரு காலக்கட்டத்தில் தென்னிந்தியாவில் ஏழாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை பக்தி இலக்கியம் என்னும் வைதிக மத எழுச்சி ஏற்பட்டது. சமண, பௌத்தமதங்களின் வளர்ச்சி குன்றின. வைதிக எழுச்சி, கர்நாடகம், மகாராஷ்டிரம், குஜராத், இராஜஸ்தான், ஒரிசா, வங்காளம், அசாம் போன்ற மாநிலங்களுக்கும் பரவியது. இம்மாநிலங்களில் இஸ்லாமிய, கிறித்தவ மதங்களுக்கு எதிரான இயக்கமாகச் செயல்பட்டது. 19, 20 நூற்றாண்டுகளில் சமூகச்சீர்திருத்த இயக்கங்களும், (ஆரிய சமாஜம், பிரம்மசமாஜம்), தேச விடுதலை இயக்கங்களும் காந்தியத்திட்டங்களும் போராட்டங்களும் இந்திய இலக்கியங்களில் புதிய பொலிவையும் வலிவையும் சேர்த்தன.

3. மேனாட்டுத் தாக்கம்

கி.பி.16-ஆம் நூற்றாண்டுக்குப்பின் ஐரோப்பாவில் தொழிற்புரட்சி ஏற்பட்ட பின்பு பிரிட்டன், ஜெர்மனி, பிரான்சு, போர்ச்சுக்கல், பெல்ஜியம், ரஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகளைச் சேர்ந்த வணிகர்களும், பாதிரிமார்களும் இந்திய அரசியலிலும் பண்பாட்டிலும் செல்வாக்குச் செலுத்தினர். இவர்கள் அரசியல் அதிகாரம் செலுத்திய போது ஆங்கில இலக்கியக்கல்வி முறை இங்குப் பின்பற்றப்பட்டது. இவர்கள் தொடங்கிய பத்திரிக்கைகளும் இந்திய நாகரீகம், கலாச்சாரத்தின் மீது மாற்றத்தைத் தூண்டின. இவர்களின் செல்வாக்கு பெரும்பாலும் சமூக முன்னேற்றத்தை முதலாளித்துவ வளர்ச்சியை அதிகரிக்கும் நோக்கிலே அமைந்தன. கூட்டுக்குடும்ப முறை சிதைவடையத் தொடங்கியது. விவசாயத் தொழிலாளர் வர்க்கம் விழிப்புணர்ச்சி கொண்டது. புதிய நடுத்தர வர்க்கம் தோன்றி அரசியல் வாழ்வில் செல்வாக்குப் பெறத் தொடங்கியது. பெண்கள்

கல்வி பேணப்பட்டது. சிறுபான்மையோர் நலன்கள் சிறப்புப் பெறச் செயல்படுத்தப்பட்டது.

3.1 கவிதை

ஆங்கிலக் கல்வியின் காரணமாக இந்திய இலக்கியங்களில் புனைவியலின் தாக்கம் ஏற்பட்டது. ஷெல்லி, கீட்ஸ், கோலரிட்ஜ், வேர்ட்ஸ்வொர்த் ஆகியோரின் கவிதைகளைக் கற்கும் இந்திய மாணவர்கள் அவர்களைப் போல புனைவியல் அம்சங்களை உள்வாங்கிக் கொண்டும் கவிதைகளைப் புனைந்தார்கள். சிலர் மில்டனின் காவியங்களைக் போல பெருங்காப்பியங்களை இயற்றினார்கள். மலையாளத்தில் குமரன் ஆசான், உள்ளூர், வள்ளத்தோள் ஆகியோரும், கன்னடத்தில் பேந்த்ரே, கோவிந்தபை போன்றோரும், வங்காளத்தில் ரங்கலால்பானர்ஜி, மைக்கேல் மதுசூதன் தத்தா, பிஹாரிலால் சக்ரவர்த்தி, இந்தியில் மைதிலிசரண்குப்தா, ஜெய்சங்கர் பிரசாத், மகாதேவிவர்மா ஆகியோரையும் எடுத்துக்காட்டாகக் கூறலாம். பின்பு டி.எஸ்.எலியட்டின் ‘பாழ்நிலம்’ என்னும் புதுப்பாணிக் கவிதையும் வால்ட்விட்மனின் ‘புல்லின் இதழ்கள்’ என்னும் வசனகவிதையும் மரபான புனைவியல் கவிதையில் மாற்றத்தை ஏற்படுத்தி புதிய படிமங்களையும் குறியீடுகளையும் ஒலிநயங்களையும் உருவாக்கின. ஜப்பானின் ஹைக்கூ கவிதையும் ஆங்கிலமொழி பெயர்ப்பின் வாயிலாகத் தமிழிலும் மற்ற இந்திய மொழிகளிலும் எண்பதுகளிலும் தொண்ணூறுகளிலும் பெரிய தாக்கத்தைச் செலுத்தின. இதற்கு இணையான ‘வடிவம்’ இந்திய இலக்கியங்களில் ஏற்கனவே .இருப்பதையும் கண்டறியத் தூண்டியது.

3.2. சிறுகதை

இந்திய பாரம்பரியத்தில் பலவகையான கதைகள் வழக்காற்றில் இருந்து வருகின்றன. ஆனால், சமகாலசமூக வாழ்வை அடியொட்டி எழுதப்படும் ‘எதார்த்த சமூகக்கதைகள்’ வெளிநாட்டார் தொடர்பில் தோன்றியவை. எட்கர் ஆலன்போ, இவ்வகை கதைகளுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தார். க.நா.சு., இரவீந்திரநாத் தாகூரை இந்தியச் சிறுகதையின் தந்தை என அழைக்கின்றார். ஏனென்றால் 1880-களில் தாகூர் சிறுகதை எழுதத்தொடங்கி, 1892-இல் முதல் சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டார். பின்பு தமிழ், இந்தி போன்ற இந்திய மொழிகளில் சிறுகதை படைக்கத் தொடங்கினார்கள். ஆரம்பகாலத்தில் மாப்பசான், செகாவ், டால்ஸ்டாய், ஆகியோரின் சிறுகதைகள் மொழிபெயர்க்கப்பட்டன. ஃபிராய்ட், காரல் மார்க்ஸ் ஆகியோரின் சிந்தனைகளும் சர்ரியலிசம், இருத்தலியம், இயற்கைவாதம் போன்ற இலக்கியவாதிகளின் போக்குகளும் இந்திய இலக்கிய வகைகளைத் தாக்கம் செலுத்தி உள்ளன. ஆசிரியர், ஆண்டு, நூற்றாண்டு, பிராந்தியம் ஆகியவற்றின் அடிப்படையில் சிறுகதைகள் தொகுக்கப்பட்டுவருகின்றன.

3.3 நாவல்கள்

ஆங்கிலக் கல்வி கற்ற மேட்டுக்குடி மக்கள் ஆங்கிலத்தில் வெளிவந்த "ரொமான்சை" நாவல் என்ற பெயரில் அமைந்த நெடுங்கதையாக மொழி பெயர்த்தனர். போலச்செய்தல் அல்லது தழுவல் அடிப்படையில் நாவல்கள் எழுதப்பட்டன. காவியம், புராணம் ஆகியவை இருந்த இடத்தை நாவல்கள் ஆக்கிரமித்துக் கொள்ளத் தொடங்கின. சார்லஸ்டிக்கென்ஸ், கோல்ட்ஸ்மித் ஆரம்பகாலத்தில் இந்திய நாவலாசிரியர்களிடையே ஆதிக்கம் செலுத்தினர். பின்பு ஜி.டபிள்யூ.எம்.ரெய்னால்டு இந்திய நாவல்களில் ஒரு பரவலான தாக்கத்தை ஏற்படுத்தியவர் என்று க.நா.சுப்பிரமணியம் குறிப்பிடுகிறார். (1985: 166-68) ரெய்னால்டின் கதைப்போக்கு இந்திய மனப்பாங்கிற்கு மிகவும் பொருந்தி வந்ததால் பல மொழிகளின் ஜனரஞ்சக நாவலாசிரியர்களை அவரின் படைப்புகள் கவர்ந்தன. இந்தியில் பகவதிசரண் வர்மாவிலிருந்து தமிழில் கல்கி வரை ஜனரஞ்சக நாவலாசிரியர்கள் அனைவரும் ரெய்னால்ட்ஸின் பாதிப்புக்குத் தம்மை அறியாமலேயே ஆட்பட்டிருந்தனர். பிரெஞ்சு நாவலாசிரியரான விக்டர் ஹ்யூகோவின் படைப்புகள் (Les miserables and the Hunch Back of Norta Dame) அலெக்சாண்டர் திமஸின் மூன்று வீரர்கள் (Three Musketeers) வால்டர்ஸ்காட்டின் ஐவன்கோ ஆகியவை இந்திய மொழிகளில் செல்வாக்கு செலுத்தியவைகளில் குறிப்பிடத்தக்கவை. 1940-க்குப் பின் ஃபிராய்டு, சாத்ரே, காஃப்கா, ஜாய்ஸ், போன்றவர்களின் தாக்கம் புதுப்பாணியாக இந்திய இலக்கியங்களில் படியலாயின. மர்மநாவல்களும், வரலாற்று நாவல்களும் புதுப்பாணி நாவல்களுக்கு வழிவிட்டன. நனவோடை உத்தியிலும் பாலியல் பிறழ்வுகளின் அடிப்படையிலும் உளவியல் நாவல்கள் தோன்றின. இருத்தலியம், மிகைநடப்பியல் ஆகியவற்றைப் புதுச்செல்நெறிகளாக கொண்டும் நாவல்கள் எழுதப்பட்டன. காலகட்டங்கள் இந்திய மொழிகளில் முன்பின் அமைந்தாலும் எல்லாமொழிகளிலும் ஐரோப்பிய நாவலாசிரியர்கள் இப்புதுப்போக்கு கணிசமான அளவில் செல்வாக்கைச் செலுத்தியது. எண்பதுகளுக்குப்பின் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் தோன்றிய பின் நவீனத்துவம் இந்திய மொழிகளில் தலித்தியமாகவும் பெண்ணியமாகவும் தமிழ் நாவல்களில் செல்வாக்கைச் செலுத்தி வருகின்றது. பெரும்பாலான இந்திய மொழிகளில் நவீனத்துவமே முழுமையும் பூரணத்துவமும் பெறாத நிலையில் இருப்பதால் பின்நவீனத்துவம் அதிகச்செல்வாக்கு செலுத்திப் பரவமுடியவில்லை.

3.4 நாடகங்கள்

ஆங்கிலக் கல்விவாயிலாகக் சுவைக்கப்பட்ட ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் இந்திய மொழிகளில் தழுவப்பட்டன, மொழிபெயர்க்கப்பட்டன. சான்றாகத் தமிழில் பம்மல் சம்பந்தமுதலியார் இத்தகைய பணிகளில்

ஈடுபட்டார். பின்பு பெர்னாட்ஷாவின் நாடகங்கள் இங்கு படிக்கப்பட்டன. பகுத்தறிவுப் பாணியில் மூடநம்பிக்கையை ஒழிக்கும்வகையில் சமூக சீர்திருந்த நாடகங்களை அறிஞர் அண்ணாவும் கலைஞர் கருணாநிதியும் எழுதி நிகழ்த்தினார்கள். பிரெஞ்சு நாடகாசிரியர் மோலியரின் நாடகங்களும், ரஷ்ய நாடகாசிரியர் ஆண்டன் செகாவ்வின் நாடகங்களும் தமிழாக்கம் செய்யப்பட்டன. இப்சனின் பொம்மை வீடு பெண்ணிய மறுமலர்ச்சிக்குப் புதுப்பாதை காட்டியது. மேனாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அபத்தவாத நாடகங்கள் சில மொழிகளில் பரிசோதனையாக நிகழ்த்தப்பட்டன. ஆனால், பரவலான - அழுத்தமான தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. விரைவிலே மேனாட்டு மரபையும் இந்திய மரபையும் (குறிப்பாக நாட்டுப்புற மரபை) கலந்து மூன்றாம் அரங்கத்தை உருவாக்கினார்கள். வங்காளியில் பாதல் சர்கார், மராத்தியில் விஜய்தெண்டுல்கர், கர்நாடகத்தில் இராமசந்திரகம்பார் மற்றும் கிரிஷ்கர்னாட், தமிழில் இராமானுஜம் மற்றும் முத்துச்சாமி ஆகியோரைச் சுட்டிக்காட்டலாம். கலாநிதி க.கைலாசபதி தமிழ் இலக்கியத்தில் ஆங்கிலத்தின் பிரதிபலிப்பு பற்றி விரிவாக ஆராய்ந்து ஒருநூல் ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ளார். இந்தப்பாதிப்பை மூன்று வகையாகப்பிரித்து விளக்குகின்றார். முதலாவது மேனாட்டு நாகரிக முறைகளையும் இலக்கிய இயக்கங்களையும் அப்படியே பின்பற்றும் போக்காகும். இரண்டாவது மேனாட்டு நாகரிக முறைகள், பண்பாட்டுக்கூறுகள் என்பன்வற்றை முழுமையாக நிராகரித்து அயல்வரவற்ற திணைப்பிறந்த அடிப்படைகளை விடாப்பிடியுடன் கைக்கொள்ளும் போக்காகும். மூன்றாவது அந்நிய ஆட்சியின் விளைவாக வந்து சேர்ந்த சிலபல நாகரிகக்கூறுகளையும் பண்பாட்டு அம்சங்களையும் பிறப்புரிமையான திணைப்பிறந்த பண்பாட்டுக் கூறுகளுடன் இணைத்துச் சமரசமும் அமைதியும் காணும் போக்காகும். பின்பற்றல், மறுத்தல், ஒன்றிணைத்தல் என இம்மூன்று போக்குகளே அடிப்படையாய் தோன்றும். மலையாள முக்கவிகளிடத்தில் குமரன் ஆசான், உள்ளூர்பரமேஸ்வர அய்யர், வள்ளத்தோள் நாராயணமேனன் ஆகியோரிடத்தில், பின்பற்றல், மறுத்தல், ஒருங்கிணைத்தல் ஆகிய முப்போக்குகளைப் பொருத்திக் காணலாம்.

4. முடிவுரை

இந்திய இலக்கியத்தின் மீது ஆங்கில இலக்கியத்தின் செல்வாக்கை இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே ஆராய்ந்து வந்துள்ளார்கள். இந்திய விடுதலைக்கு முன் இத்தகைய ஆய்வுகள் உருதுஇலக்கியம் (1924), வங்காளிக் கவிதை (1935), வங்காளி நாவல்கள் (1932) ஆகியவற்றில் நிகழ்த்தியுள்ளார்கள். இந்திய விடுதலைக்குப்பின், பஞ்சாபி இலக்கியம் (1969), குஜராத்திக் கவிதை (1969), தமிழ் இலக்கியம் (1976, 1984) தெலுங்கு

புனைகதை (1974, 1976) மற்றும் மொழி, மலையாளமொழி மற்றும் நாவல் இலக்கியம் (1972, 1980), ஓரியா இலக்கியம் (1974) ஆகியவற்றில் மேனாட்டு இலக்கியவகைகளின் தாக்கம் எந்த அளவிற்குப் பதிவாகி உள்ளன என்று ஆராய்ந்துள்ளார்கள். 20-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பத்தாண்டுகளில் ஒவ்வொரு மொழியிலும் இலக்கிய வடிவத்திலும் மேனாட்டுச் செல்வாக்கு மாற்றத்தை ஏற்படுத்தியதை முனைவர்பட்ட ஆய்வுக்குச் செய்துள்ளார்கள், எடுத்துக்காட்டாக, சு.ஆவுடையப்பனின் தமிழ்ப்புதுக்கவிதையில் மேனாட்டுத்தாக்கம் (1990) பற்றிய ஆய்வேட்டைக் குறிப்பிடலாம். இதுபோன்று இந்திய மொழிகளில் இலக்கியவகை, பொருள், உத்தி, இயக்கம், மேனாட்டுச் செல்வாக்கு எவ்வாறு மடைமாற்றம், பாதிப்பு ஏற்படுத்தியுள்ளன என ஆராய்வதற்கு நிறைய வாய்ப்புண்டு.

*

துணைநூற் பட்டியல்

ஆங்கிலம்

A. Indian literature and Indianness in Indian Literatures.

(i). **Articles :**

1. Gupta R.K.and Priyalakshmi Gupta, **Towards of concept of Indian Literature**, Indian Literature Sep-oct, pp: 28-55

2. Motilal Jotwani, **Many Languages one Literature?**, The Hindustan Times Magazine, April 24, 1977, p-11.

3. Nagendra, **The Basic Elements of Unity**, The Hindustan Times Magazine, April - 24, 1977. p.11.

4. Srinivasan, S.K., **what is Indian Literature?** Indian Literature, July - Aug.1982, pp.5-15.

(ii) **Books**

5. Amiya Dev and Sisir Kumar Das, **Comparative Literatures: Theory and Practice**, Indian Institute of Advanced Study, shimla and Allied Publishers Madras, 1979.

6. Gokak.V., **The concept of Indian Literature**, Munshiram Manoharlal Publishers Pvt. Ltd., Delhi, 1979.

7. Indranath Choudhuri, **Compartive Indian Liteture, some prospectives,** Sterling publishers Pvt. Ltd., New Delhi -16, 1992.

8. Srinivasan. K.S., **The Ethos of Indian Literature**, Chanakya publications, Delhi-9, 1985.

9. Sujit Mukherjee. (ed), **The Idea of an Indian Literature: A Book of Readings**, Central Institute of Indian Language, Mysore -6, 1981.

B. **Western Influence of Indian Literature**

10. Abdul Latif Saiyyed, **The Influence of English Literature on Urudu Literature**, London, 1924.

11. Anjaneyalu, D., **English Influence on Telugu Fiction**, Triveni, 1974.

12. Das Gupta, H.M., **Studies in Western Influence on 19th C Bengal poetry** (1857 - 1887) Calcutta, 1935.

13. George, K.M., **Western Influence on Malayalam Language and Literature**, Sahitya Academy., New Delhi, 1972.

14. Kailasapathy, K., **The relation of Tamil and western Literature**, Madurai Kamaraj University, Madurai-21. 1984.

15. Kohli Mohinder Pal, **The Influence of West on Pujabi Literature**, Lyall Book, Depot, Ludhiana, 1969.

16. Lal, P., **The concept of an Indian Literture**, A writers workshop, Calcutta-45.1987 (2.ed)

17. Leelavathi, K., **Influence of English on Malayalam Novels**, College Book House, Thiruvananthapuram, 1980.

18. Maniar, U.M., **The Influence of English on Gujarathi Poetry**, M.S.University, Baroda, 1969.

19. Narayana Reddy, C., **The Influence of English on Telugu Literature**, University of Madras, Madras-5, 1976.

20. Somalay, **European Impact on Modern Tamil Writing and Literature**, Dravidian Linguistics Association, Thiruvanthapuram, 1976.

21. Sen Priyaranjan, **Western Influence in Bengali Novels**, Calcutta University, 1982.

தமிழ்

21. ஆனந்தகுமார். பா., **இந்திய ஒப்பிலக்கியம்**, கியூரி பப்ளிகேஷன்ஸ், மதுரை-1, 1997.

22. சுப்பிரமணியன். க.நா., **சிறந்த பத்து இந்திய நாவல்கள்**, அன்னம், சிவகங்கை, 1987.

23. செல்லப்பன், கா., **ஒப்பியல் தமிழ்**, எமரால்ட், சென்னை, 1987.

24. தான்யா. கே., **இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க்கவிதைகளில் மார்க்சிய கொள்கைகளின் தாக்கம்**, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை-1988.

25. பாண்டுரங்கன். அ., **இந்திய இலக்கியம்; பொதுமை வடிவமும் கருவும்**, புதுவைப் பல்கலைக்கழகம் (தமிழ்த்துறை), காரைக்கால், 1990.

26. பிச்சை. அ., **இந்தியநாட்டுப்புற இலக்கியங்கள், வேற்றுமையில் ஒற்றுமை**, நாட்டுப்புற ஆய்வுக்கோவை, இந்திய தமிழ்நாட்டுப் புறவியல் கழகம், அண்ணாமலைநகர், 1987, பக். 80-89.

27. பிச்சை.அ., **வடஇந்திய இலக்கியத்தில் மார்க்சியத்தாக்கம், இந்திய ஒப்பிலக்கியம்**, ஜனவரி 2001, பக்.4-8.

28. மருதநாயகம்.ப., **கிழக்கும் மேற்கும்** (ஒப்பிலக்கியக் கட்டுரைகள்) ஐந்திணைப் பதிப்பகம், சென்னை-5, 1991

*

2

இந்திய ஒப்பிலக்கியமும் எஸ்.வையாபுரிபிள்ளையும்

முன்னுரை

இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட மொழிகளிலுள்ள இலக்கியங்களை ஒப்பிட்டு, பொது இயல்புகளையும் சிறப்பியல்புகளையும் கண்டறிந்து, பொது இயல்புகளின் அடிப்படையில் உலக இலக்கியக் கோட்பாட்டை வரையறை செய்ய முனைவதே ஒப்பிலக்கியத்தின் நோக்கமாகும். இன்று ஒப்பிலக்கிய துறை ஒருமொழி இலக்கியத்துறைக்கு இணையான புதியதொரு "பலவியல் துறையாக" (Inter - disiplinary department) வளர்ந்து வருகின்றது. இந்தியாவில் திராவிட இலக்கியத் துறையாகவும், இந்திய இலக்கியத் துறையாகவும், தெற்காசிய இலக்கியத் துறையாகவும் தனது எல்லையை விரித்துக் கொண்டு வருகின்றது. ஆப்பிரிக்க இலக்கியம், இலத்தீன் அமெரிக்க இலக்கியம், ஆசிய இலக்கியம், மூன்றாம் உலக நாடுகளின் இலக்கியம் என்னும் பெயர்களில் தன்னாட்டின் பூகோள எல்லைகளைத் தாண்டி இலக்கியப் பொதுமைகளைக் காணும் குறிக்கோள் வேட்கையோடு தழைத்தோங்கி வருகின்றது. இத்தகைய பெருமைக்குரிய ஒப்பிலக்கியத் துறைக்குப் பேராசிரியர் எஸ்.வையாபுரிபிள்ளை அவர்கள் ஆற்றிய பணியை - அளித்துள்ள பங்களிப்பை மதிப்பிடுவது அவசியம்.

1. சொல்லாட்சியும் வரையறையும்

1.1. 'Comparative Literature' என்னும் ஆங்கிலத் தொடரை முதன் முதலில் மேத்யூ ஆர்னால்டு பயன்படுத்தினார் (1848) என்று ஒப்பிலக்கிய வரலாறு தெரிவிக்கின்றது. "ஒப்பியல் இலக்கியம்" என்னும் அமைப்பும் பொருளும் தரும் தொடராட்சி ஜெர்மன், ரஷியன் ஆகிய மொழிகளிலும் வழங்கப்படுகின்றது. பிரான்சிலும் இத்தாலியிலும், ஸ்பானிஷ் மொழியிலும் "இலக்கிய ஒப்பீடு" எனப் பொருள்படும்படி மாற்றி வழங்கப்படுகின்றது. ஆனால் பேராசிரியர் தமது காவிய காலம் என்னும் நூலில் (1949) "ஒப்பு

நோக்கு ஆய்வு" என்று குறிப்பிடுகின்றார். ஆங்கிலத்திலே அத்தொடர் தவறான சொல்லாக்கமாக இருப்பதைப் போல, தமிழிலும் ஒப்பியல் இலக்கியம் (க.கைலாசபதி) ஒப்பு இலக்கியம் (எல்.குளோரியா சுந்தரமதி), ஒப்பிலக்கியம் (தமிழண்ணல்) என வழங்கப்படுகின்றது. ஏனென்றால் ஒப்பிலக்கியம் என்பது ஒரு குறிப்பிட்ட கால இலக்கியத்தையோ, இலக்கியவகையையோ சுட்டாமல், இலக்கிய ஆய்வு முறையைச் சுட்டுவதால் "ஒப்பு நோக்கு ஆய்வு" என்னும் வழக்கே இன்று நிலைபேறு அடைந்துள்ளது.

1.2. ஒப்பு நோக்கு ஆய்வு என்பதில் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட மொழிகளில் உள்ள இலக்கியங்களை / ஆசிரியர்களை ஒப்பிடுவதை மட்டும் பேராசிரியர் கருதினார். தமிழ்-வடமொழி, தமிழ் - பிற திராவிட மொழிகள், தமிழ் - கிரேக்கம், தமிழ்-ஆங்கிலம் என்னும் நான்கு பிரிவுகளில் ஒப்பிலக்கிய ஆய்வை நிகழ்த்தலாம் என்று களம் அமைத்துத் தந்துள்ளார். இது மேனாட்டாரின் வரையறையோடு ஒத்துச் செல்கின்றது. இதனைப் புரியாமல் சிலர் ஒரு மொழியில் உள்ள இருவர் படைப்புகளை / இரு ஆசிரியர்களை ஒப்பிலக்கியம் எனப்பிறழ்பட உணர்ந்து நூல்களையும் வெளியிட்டுள்ளார்கள். ஒரு மொழியில் இலக்கியத்தை மற்ற கலைகளோடு அல்லது சமூக அறிவியல் துறைகளோடு ஒப்பியல் முறையைப் பயன்படுத்தி இணைத்துச் சிந்தித்தால் மட்டுமே அவ்வாய்வு ஒப்பிலக்கியம் என்னும் வரம்புக்குள் அடங்கும். அப்படி இல்லாத பொழுது அவ்வாய்வு ஒப்பியல் திறனாய்வு (Comparative Criticism) எனப்படும்.

2. ஒப்பிலக்கியத்தின் இன்றியமையாமை

2.1 காவிய காலம் என்னும் நூலில் ஒப்பு நோக்கின் அவசியம் பற்றி வலியுறுத்தியுள்ளார். ஒப்பு நோக்கி ஒற்றுமை வேற்றுமைகளைத் தெரிவதனாலேயே மக்களது அறிவு வளர்கின்றது. அறிவுக்கு விஷயமான எல்லாப்பொருள்கள் பற்றியும் இவ்வுண்மை பொருந்துவதாகும். மொழி பற்றியும் இலக்கியம் பற்றியும் நமது அறிவு விசாலிப்பதற்கும் மேன்மேலும் வளர்ந்தோங்குவதற்கும் ஒப்புநோக்குதல் இன்றியமையாததாகும் என்று ஒப்பு நோக்கின் சிறப்பை விளக்குகின்றார்.

2.2 1946-இல் நாகபுரியில் நிகழ்ந்த அகில இந்தியக் கீழைநாட்டுக் கலைஞர்களின் மகா நாட்டில், திராவிட மொழிப்பகுதித் தலைமைப் பேருரையில் ஒப்பு நோக்கு இலக்கியப் பயிற்சியின் முக்கியத்துவத்தைக் கண்டுணர்ந்து கூறியுள்ளார். "இலக்கியத்துறையில் இன்னும் ஒரே ஒரு விஷயம் பற்றித்தான் பேச எண்ணுகிறேன். அது ஒப்புக் நோக்கு பயிற்சியாம். திராவிட மொழிகள் அனைத்திற்கும் பீடிக்கப் பெற்று

நிலையுணராதிருக்கின்றார்கள் என்று தான் சொல்ல வேண்டும். வியாசர், வால்மீகி, காளிதாசன் என்பவர்களைப் பற்றியும் வள்ளுவர், கம்பன் என்பவர்களைப் பற்றியும் திக்கண்ணா, நன்னய்யா என்பவர்களைப் பற்றியும், எழுத்தச்சனைப் பற்றியும் அறியாதவனைத் திராவிட மொழிகள் ஒன்றிலேனும் வல்லவன் என்று எவ்வாறு கூற முடியும்? இவ்வறியாமை நமது நாட்டில் நீடித்திருக்கவிடக்கூடாது" என்று கூறுகின்றார். "மேலும் அவர் திராவிட இலக்கியங்களையும், இந்திய இலக்கியங்களையும் ஒப்பு நோக்கிக் கற்றவனுடைய கல்வியறிவு மிகவும் பரந்துள்ளதாயும் செழிப்புள்ளதாயும் இருத்தல் ஒருதலை. இவ்வொப்பு நோக்குக் கல்வி நமது அறிஞர்களுடைய குறுகிய மனப்பான்மையாகிய திண்ணிய சுவரை இடித்துத் தகர்த்து விடும். அச்சுவரை அரணாகக் கொண்டு நம் அறிஞர்கள் மறந்து வாழ முடியாது. இவ்வகைக் கல்வியின் மேல் எழுந்து ஆராய்ச்சிக்கு ஒரு புதிய பொருண்மையும் புரிய பெருமையும் ஏற்படும். நம்முள் ஒவ்வொரு மொழியாளரும் பிற திராவிட மொழிகள் ஒவ்வொன்றிலுமுள்ள சிறந்த இலக்கியங்களைக் கற்று அனுபவித்துப் பரஸ்பரம் நன்மதிப்பைத் தேடிக் கொள்வாராக" என்று வேண்டுகோள் விடுத்துள்ளார். எனவே, பேராசிரியர் ஒப்பிலக்கியத்தின் இன்றியமையாமையை அரை நூற்றாண்டுக்கு முன்னதாக நன்குணர்ந்து எடுத்துரைத்துள்ளமை பாராட்டத்தக்கது.

2.3 க.கைலாசபதி தம் நூலாகிய ஒப்பியல் இலக்கியம் என்னும் நூலில் 14 இடங்களில் வையாபுரிபிள்ளை அவர்களை பற்றிக் குறிப்பிடுகின்றார். இவற்றுள் 5 இடங்கள் ஒப்பிலக்கியத்தோடு நேரடியாகத் தொடர்புடையவை. "*யாமறிந்த வரையில் வையாபுரிபிள்ளை அவர்களை போல் சமயம் வாய்க்கும் போதெல்லாம், ஒப்பியலை வற்புறுத்திய தமிழறிஞர் வேறு யாருமில்லை*" என்று அன்னாருக்குப் புகழாரம் சூட்டுகின்றார் க.கைலாசபதி. வீரயுகக் கிரேக்க, தமிழ்த்தொகை பாடல்களுக்கு இடையில் உள்ள உறவினைச் சுட்டிக்காட்டிய பேராசிரியரைத் தம் ஆய்வின் முன்னோடியாக மா.சண்பகம், ஜி.ஜான்சாமுவேல் ஆகியோர்தம் நூல்களில் குறித்துள்ளனர். தமிழண்ணலும், ஒப்பிலக்கிய அறிமுகம் என்னும் தம் நூலில் ஒப்பிலக்கியத் துறையில் முன்னோடிகளுள் ஒருவராகக் கூறியுள்ளார்.

3. ஒப்பிலக்கிய ஆய்வுநெறி

3.1 எண்ணமும் செயலும் போல் கோட்பாடும் ஆய்வு நெறியும் தொடர்புடையன. இலக்கிய ஆய்வில் பல கோட்பாடுகள்/இயக்கங்கள்/ அணுகுமுறைகள் பின்பற்றப்படுகின்றன. இவற்றில் பலவற்றைப் பேராசிரியர் நன்கறிந்துள்ளார். கம்பனைக் கற்கும் நெறிகள் அவரது நுண்மாண் நுழைபுலத்தையும் பரந்த கல்வியறிவையும் வேறுபடுத்திக் காட்டுகின்றன. அவர் அந்நெறிகளை மூன்றாக வகைப்படுத்தி அவற்றின்

குறைநிறைகளைச் சுட்டிக் காட்டுவது நம்மைப் பிரமிக்க வைக்கின்றது. காலச்சேப முறை, பண்டித முறை, தர்க்க முறை, அலங்கார முறை என்பவை முதல் தொகுப்பில் வழக்கில் உள்ள முறைகளாகும். இரண்டாம், தொகுதியாக பூர்வ வரலாற்று முறை, ஜாதி சூழ்ச்சி முறை, பொய் மெய் முறை, காமரஸ முறை, தத்துவார்த்த முறை என்பனவற்றை நவீன ஆராய்ச்சி முறையாக கூறுகின்றார். சிற்பமுறை, சித்திரமுறை (காலச்சேப முறையை உள்ளடக்கியது) ரஸிக முறை, உளநூல்முறை, பொருள்கோள் முறை ஆகியவற்றை இலக்கிய நயமுறை எனப்பெயரிட்டு மூன்றாம் தொகுதியாகத் தருகின்றார். இலக்கிய ஆய்வில் மூன்றாம் தொகுதியில் தரப்படுகின்ற நெறிகளைப் பின்பற்ற வேண்டும் என்று பரிந்துரை செய்கின்றார். பேராசிரியர் ஒப்பியல் முறையோடு அறிவியல், சமூகவியல், அழகியல் அணுகுமுறைகளைப் பின்பற்றியுள்ளார்.

3.2 பேராசியர் சட்டக்கல்வி கற்றவர். சாட்சியங்களின் அடிப்படையில் தருக்க முறையில் விவாதித்து காரணகாரியங்களின் அடிப்படையில் முடிவு காணும் நெறியை அறிந்தவர். எனவே, அவர் தம் ஆய்வில் அறிவியல் நெறியை மேற்கொண்டதில் வியப்பொன்றும் இல்லை. காரணத்திலிருந்து காரியத்தை அனுமானிக்கும் ஏப்ரியோரி ரீஸனிங் (Apriori reasoning) பற்றித் தம் நூலில் குறிப்பிடுவர். அகப்புறச் சான்றுகளைக் கொண்டு காலமுறையில் வரிசைப்படுத்தி விருப்பு வெறுப்பு அற்ற நிலையில் ஆய்வினை மேற் கொண்டவர், அறிவு வளர்ச்சியும் தமிழுணர்வுப் பெருக்கமும் உண்மை நாட்டமும் நடுவு நிலைமையுமே என்னை ஊக்கி வந்தன, என்று அவரே குறிப்பிட்டுள்ளார். கி.வா.ஜகந்நாதன், நேர்மையான விஞ்ஞான ஆராய்ச்சியைப் பின்பற்றியவர் என்றும், விருப்பு வெறுப்பு இல்லாமல் ஒருவகைத் துறவு மனப்பான்மையோடும் தெளிவோடும் ஆராய்ச்சியில் விஞ்ஞான முறை கண்டவர் எனப் போற்றிய தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் இங்கும் அவர் கண்ட முறை ஒன்று என்றும் வாழும் அவர் கண்ட முடிவுகள் மாறலாம் சில வழிகாட்டும் கல்களாக மாறலாம் என்று மதிப்பிட்டுக் கூறியுள்ளார். எனவே, பேராசிரியர் தற்சார்பற்ற நடுவுநிலைமையைப் பேணும் அறிவியல் நெறியைப் பின்பற்றினார் என்பது வெளிப்படை.

3.3 பேராசிரியர் சமயம், வரலாறு ஆகிய இரண்டையும் விருப்பப் பாடங்களாகக் கற்றவர். குடும்பச்சூழலும் நண்பர் குழாமும் சமய அறிவைத் தந்தன. கல்விச் சூழலும் கற்றவர் தொடர்பும் இவரது வரலாற்று அறிவையும் சமூகவியல் கண்ணோட்டத்தையும் கூர்மைப்படுத்தின. தமது காவிய வகை ஆய்விலும் மற்ற இலக்கிய ஆய்விலும் சமூக நிலையைப் பின்னணியாகக் கொண்டு ஆராய்வதை வற்புறுத்தினார். சமுதாயத்தின் நிலைக்கும் சூழ்நிலைக்கும் அவற்றில் உண்டாகும் இலக்கியத்திற்கும் மிக நெருங்கிய விட்டுவிலகாத தொடர்பு உண்டு என்று காவிய காலத்தில் குறிப்பிடுகின்றார். மேலும் காவியத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் ஒடுக்கத்திற்கும்,

சமுதாய நிலையும் அரசியல் நிலையும் காரணிகள் என்கிறார். இலக்கியச் சிந்தனை என்னும் நூலில் *"சரித்திர மூலமாய் அறிந்த ஒரு காலப்பகுதியிலுள்ள சமுதாய நிலையினையும் அக்காலத்துத் தோன்றிய இலக்கியத்தினையும் ஒப்பிட்டுப் பார்ப்பதே தக்க நெறியாகும்"* என்று மொழிகின்றார். தமிழர் பண்பாடு என்னும் நூலில் கிரேக்கர், தமிழர் ஆகியோரின் சமூகச் சூழல்களை ஒப்பிட்டுப் பேசுகின்றார். கிரேக்கச் செல்வர்களைப் போல கோவலன், மாதவி இருவரும் மிக்க கேளிக்கையோடு சுகித்து வாழ்ந்தனர் என்று ஒப்புமைகளை புலப்படுத்துகின்றார். இவ்விடத்தில் சமூக அரசியல் நிலைகள் இரண்டு மொழிகளிலும் சமுதாயங்களிலும் ஒரே மாதிரியாக இருக்குமானால் அங்கு தோன்றுகின்ற இலக்கியங்களிலும் ஒற்றுமைகள் காணப்படும் என்ற ஒப்பிலக்கிய அறிவியற் கோட்பாட்டை நினைத்தல் தகும்.

3.4 பேராசிரியருக்கு "இயற்கை அறிவியல் கோட்பாடும்" உடன் பாடானதாகும். இலக்கிய வகையைக் கூர்தலறக் கோட்பாட்டின் படி ஆராய்ந்த ஜான் அடிங்டன் சைமாண்ட்ஸ் என்பவர் "ஒவ்வொரு இலக்கிய வகையும் முளைவிடுதல், வளர்தல், பூத்துக்குலுங்குதல், அழிதல் என்னும் விதிவழிப்பட்ட பரிணாம வளர்ச்சியை உடையது" என்று குறிப்பிட்டார். இக்கருத்து காவிய இலக்கிய வகையை ஆராய்ந்த பேராசிரியரிடமும் காணப்படுகின்றது". எல்லாப் பொருள்களுக்கும் தோற்றம் நிலை, ஒடுக்கம் என்பன உண்டு. இலக்கியங்களும் காவியங்களும் இப்பொது விதிக்கு விலக்கல்ல. சூழ்நிலைகள் மாறின, பிற்பட்ட காலத்துக் காவியம் கைக்கொண்ட நெறியில் இலக்கியக் கோட்டிற்குரிய தன்மைகள் இருந்தன. அதன் தோற்றத்திலேயே கேட்டுக்குரிய வித்தொன்று கிடந்து வரவர வலிமை மிகுந்த காவியத்தை அழித்து விட்டது என்று காவிய காலத்தில் காவியங்களின் ஒடுக்குதசையை இயற்கை அறிவியல் கோட்பாட்டின்படி விளங்குகிறார்.

3.5 அமெரிக்கர் ஒப்பிலக்கிய ஆய்வில் முருகியல் அணுகு முறை அதிகமாக வலியுறுத்தினர். ஒப்பிலக்கிய ஆய்வில் பேராசிரியரின் "கம்பராமாயணமும் ஜைன இராமாயணமும்" என்னும் கட்டுரை குறிப்பிடத்தக்கது. இக்கட்டுரையில் கதையமைப்பு, சாத்திரங்கள், மதப்பிரச்சாரம் ஆகியவற்றை முருகியல் நோக்கில் ஒப்பீடு செய்துள்ளார். சமய நோக்கம் ஜைன இராமாயணங்களில் சுவையைத் தாழ்த்தி விட்டது. கதையமைப்பில் கீழானது என்று முடிவு சொல்கின்றார். இரண்டு இராமாயணங்களுக்கும் இடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் கூறுகின்றார். கம்பராமாயணத்தில் இராமன் இப்பிறவியில் வேறொரு மாதரைத் சிந்தையாலும் தொடாதவன். ஆனால் ஜைன இராமாயணத்தில் 16,000 மனைவிமார்கள் இராமனுக்கு உண்டு. இவ்வாறு சமய நோக்கம் கலைக்கு அடிப்படையான இன்புறுத்துதலை கெடுத்து விடுகின்றது என்னும் கருத்தை அக்கட்டுரையில் விளக்கியுள்ளார்.

மேலும், தமிழர் பண்பாடு என்னும் நூலில் கம்பராமாயணத்தையும் அத்யாத்மராமாயணத்தையும் ஒப்பிட்டு அழகியல் அடிப்படையில் கருத்துரைக்கின்றார். "சொல்லப்படும் பொருளையும் சொல்லும் முறையையும் (ஒன்று) பிரிக்கமுடியாது. பொதுப்பட்ட அழகாகவுள்ள கதையைச் சொல்லும் முறை செம்மையாக இல்லாததால் அழகற்றதாகவும் செய்யக் கூடும். இராமாயணம் அழகான கதைப் பொருளைக் கொண்டது. கம்பன் கையாண்டமுறை செம்மையாக இருந்ததால் கதையும் அழகுபெற்று விளங்குகின்றது. இக்கதை அத்யாத்ம இராமாயணத்திலும் சொல்லப்படுகின்றது. ஆனால் அதில் கையாண்ட முறை செம்மையாக இல்லாத படியினால் கதையும் அழகு பெறவில்லை. இங்ஙனம் அழகுச் சிறப்பில்லாத கதையைக் கூட அதனைச் சொல்லும் முறையும் செம்மையினால் அழகுடைய கதையாகவும் அமைத்தல் கூடும்" என்று விரித்துரைத்துள்ளார். கதையமைப்பிலும் கதைமாந்தர் படைப்பிலும் காட்சித்தரப்பிலும் சுவையிலும் கம்பராமாயணம் மற்ற இராமாயணங்களைக் காட்டிலும் சிறப்புடையது என்று அழகியல் முறையில் மதிப்பிட்டுக் கூறியுள்ளார்.

முருகியல் உணர்வுக் கோட்பாட்டோடு தொடர்புடைய உறுப்பிசைவுக் கோட்பாடு பற்றியும் பேராசிரியர் குறித்துச் சென்றுள்ளார். இதனைப் பின்வரும் பகுதியிலிருந்து உய்த்துணர்ந்து கொள்ளலாம். இராமாயணம், சிலப்பதிகாரம் முதலியவை கதைப்பாட்டுக்களின் சிகரம் என்று சொல்லத்தக்க பெருங்காவியங்களாகும். இவை ஒரு தலைவன் அல்லது தலைவியினது பெருஞ்செயலை உணர்த்துகின்றன. இவற்றிலுள்ள பல பகுதிகளும் தலைமைப் பொருளோடு பொருத்தமுற்று இசைந்து விளங்கி அப்பொருளிற்குத் (தக்கவாறு) தகுதியான அவயவயமாக அமைந்து விடுகின்றன. இவ்வுறுப்புக்களில் ஒன்று நீங்கினாலும் கதைப்பொருள் கேடுறுவதாகும். இத்தகைய காவியங்கள் உலகம் முழுவதிலும் ஒரு சிலவே உள்ளன. கிரேக்க மொழியில் இலியட், ஆடிஸி என்பனவற்றைக் கூற வேண்டும். ஆங்கிலத்தில் பாரடைஸ் லாஸ்ட் என்பதைக் கூற வேண்டும்.

3.6 பேராசிரியரின் கால ஆராய்ச்சியில் "மூலமும் தாக்கமும்" பற்றிய தாக்குரவு கோட்பாடு தலை தூக்கி நிற்கின்றது. தொல்காப்பியம் திருக்குறள், சிலப்பதிகாரம், பெருங்கதை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் ஆகியவற்றின் காலத்தைக் கணிக்கும் பொழுது வடநூல்களின் காலம் அவற்றின் செல்வாக்கு தமிழ் நூல்களில் எங்ஙனம் காணப்படுகின்றன என்பதன் அடிப்படையில் ஆய்வு மேற்கொண்டு உள்ளார். வள்ளுவரும் மனுவும் என்னும் கட்டுரையில் மனுவின் தாக்கம் வள்ளுவரின் திருக்குறளில் இருப்பதை ஒப்பிட்டுச் சித்தரித்துள்ளார். இவ்வாறே அர்த்தசாஸ்திரம், காமசாஸ்திரம் ஆகியவற்றின் பிரதிபலிப்பு திருக்குறளில் உள்ளதைச் சுட்டிக் காட்டியுள்ளார். இச்சிந்தனைகள் பேரளவிலான ஒப்பாய்வுக்குத் தடம் அமைத்துத் தந்தன என்பது குறிக்கத்தக்கது.

ஒப்பு நோக்கின் அவசியம் பற்றி விளக்கும் பொழுது காவியம், புராணம் முதலிய கருத்துக்களும் இலக்கிய நெறிகளும் வட மொழியிலிருந்து கொள்ளப்பட்டனவே. இவையிரண்டின் இலக்கணங்களும் வடமொழி நூல்களிலுள்ளவற்றைத் தழுவி அமைக்கப்பட்டுள்ளன. நன்மையும் இவற்றால் விளைவதுண்டு, தீமையும் விளைந்ததுண்டு. ஆனால், இவற்றால் தமிழலக்கியங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன என்பது உறுதி. தமிழிலக்கிய சரித்திரமே வடமொழியிலுள்ள அலங்கார சாஸ்திரத்தின் வசப்பட்டு பழைய நெறியைக் கைவிடுத்துப் புதியநெறிகளை மேற்கொண்டு விட்டது. எனவே, காவியம், புராணம் முதலியவற்றை ஆராய விரும்புவோர் வடமொழியிலுள்ள காவியம், புராணம் முதலியவற்றின் கருத்துக்களையும் சரித்திரங்களையும் உடனுணர்ந்து கொள்வது பயனளிக்கும் என்கிறார். தமிழ்ச்சுடர்மணிகள் என்னும் நூலில் தமிழ்ப் புலவர்களின் காலத்தைக் கணிக்கும் பொழுது வடமொழியின் மூலக் கருத்துக்கள் தமிழில் இடம் பெற்றுள்ளதை விரிவாகவே சான்றாதாரங்களோடு விளக்கியுள்ளார். மூலமும் தாக்கமும் பற்றிய பேராசிரியரின் சிந்தனைகள் புதிய ஆய்வெல்லைகளையும் அதே சமயத்தில் பொறுப்பு உணர்ச்சியையும் அளித்தன.

3.7 பேராசிரியர் ஒப்பியல் நோக்கோடு வேறுசில அணுகுமுறைகளையும் இணைத்து ஆராய்ந்திருக்கின்றார். இவற்றை யெல்லாம் கோட்பாட்டு அடிப்படையில் சுருக்கிச் சொல்ல வேண்டுமானால் பேராசிரியரின் ஒப்பிலக்கிய ஆய்வு நெறி ஐரோப்பாவில் உருவாகிய பிரெஞ்சுக் கோட்பாட்டோடு நெருங்கியதாகத் தோன்றுகிறது. ஏனென்றால் பிரெஞ்சுக் கோட்பாட்டில் தான் இருமொழி/பன்மொழி இலக்கிய ஒப்பீட்டை வலியுறுத்துதல், அறிவியல் முறை, வரலாற்றுப் பின்னணி, மூலமும் தாக்கமும் ஆகியவை இடம் பெறுகின்றன. முருகியல் உணர்வைப் பிரதானப்படுத்தி உளவியல் நெறியை உளப்படுத்திக் கூறும் அமெரிக்க கோட்பாடு பேராசிரியரின் ஆய்வு நெறியில் இரண்டாவது இடத்தைப் பெறுகிறது. ஆனால் இவ்விரு கோட்பாடுகளை அவர் உணர்ந்து ஒப்பிலக்கிய ஆய்வு செய்யவில்லை. இது நாமாக இவருடைய ஆய்வு நெறியிலிருந்து உய்த்துணர்ந்து கொள்கின்ற முடிவாகும்.

4. ஒப்பிலக்கிய ஆய்வுக்களங்கள்

4.1 பேராசிரியர் தம் நூல்களில் பல இடங்களில் ஒப்பிடுவதற்குரிய களங்களைச் சுட்டிச் சென்றுள்ளார். அவற்றை மொழியடிப்படையில் நான்கு பிரிவுகளாகப் பிரித்துக் காணலாம்.

4.1.1 தமிழ் மற்றும் பிற திராவிட மொழிகள்

நாகபுரியில் நடந்த கீழ்த்திசை மாநாட்டிலும் காவியகாலச் சொற்பொழிவிலும் தமிழ் இலக்கியத்திற்கும் பிற திராவிட மொழி இலக்கியத்திற்கும் இடையே ஒப்பியல் ஆய்வு நிகழ்த்த வேண்டிய அவசியத்தை முன்மொழிந்துள்ளார். தமிழில் உள்ள சாந்தி புராணத்தை விளக்குகையில் கன்னட மொழியிலும் 10-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த "பொன்ன" என்னும் கவிஞரால் இயற்றப்பட்டது என்றும், இது 16-வது தீர்த்தங்கராகிய சாந்திதேவரது வரலாற்றைக் கூறுகிறது என்றும் குறிப்புத் தருகின்றார். மேலும், கன்னடதேசத்திலும் கம்பராமாயணம் செல்வாக்குப் பெற்றிருந்ததைக் கர்நாடகக் கல்வெட்டு சான்று மூலம் சுட்டிக் காட்டுகின்றார். தெலுங்குப் பிரதேசமாகிய ஓரங்கல் நாட்டின் பிரதாபருத்ரன் (கி.பி.1162/79) ஆஸ்தானத்திற்கு கம்பன் சென்றுள்ளான் என்று குறிப்பிடுகின்றார். கம்பராமாயணத்தின் தாக்கத்தைக் கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய இராமாயணங்களிலும் காண்பதற்கு வழிகாட்டுகின்றார்.

4.1.2 தமிழும் வட இந்திய மொழிகளும்

பேராசிரியர் வடமொழிகளிலும் தமிழுக்கும் நீண்ட காலமாக இலக்கண இலக்கியப் பரிவர்த்தனை நடந்து வந்துள்ளதையும் அதனால் தமிழ் செழுமையும் பாதிப்பும் பெற்றதையும் எடுத்துரைத்துள்ளார். திருவள்ளுவரின் காலத்தைப் பற்றி விவாதிக்கும் போது மனு சாத்திரம், பகவத்கீதை, அர்த்த சாஸ்திரம், காமசூத்திரம் ஆகியவற்றின் தாக்கம் உள்ளன என்று மூலநூல் சுலோகங்களோடு ஒப்பிட்டுக் காட்டியுள்ளார். தொல்காப்பியத்திலும் பாணினியின் சிஷை, தைத்ரீய ஸம்ஹிதை, பதஞ்சலி, பரதநாட்டிய சாஸ்திரம், சுசுருதம் போன்றவற்றின் செல்வாக்குக் காணப்படுகின்றன எனச் சான்றுகளோடு விளக்கியுள்ளார். காவ்யதர்சத்தையும் தண்டியலங்காரத்தையும் ஒப்பிட்டு பெருங்காப்பிய இலக்கணம் பேசுமிடத்து அவைகள் ஒன்றுபடுவதையும் வேறுபடுவதையும் காட்டியுள்ளார்.

வடமொழியில் பிற்கால வழக்காகக் கூறப்பட்ட ஆறு பெரும் பொழுதுப் பிரிவுகள் தமிழில் கார் முதலிய ஆறுவகைகளாகத் தொல்காப்பியரால் குறிப்பிடப்படுகின்றன என்கிறார். திருவள்ளுவர் "கணவரையே பத்தினிப் பெண்கள் தெய்வமாகக் கருதுவர்" என்று குறிப்பிடுவதை வால்மீகியின் கருத்தோடு (அயோத்; 24, 25-27) இணைந்து செல்வதாகக் காட்டுகிறார். அகலிகை கல்லாக மாறினாள் என்று வால்மீகி கூறவில்லை என்றும், ஆனால் காளிதாசரின் ரகுவம்சத்திலும் தமிழ்ப் பரிபாடலிலும் அகலிகைக் கல்லாகக் கிடந்தாள் என்னும் குறிப்பு காணப்படுகின்றது என்றும், அகலிகைக் கதையை ஒப்பியல் நிலையில் விளக்குகிறார். வடமொழியில் அஸ்வகோஷர் 18 சருக்கங்களில் எழுதிய

நந்தனின் துறவு பற்றிய பௌத்த காப்பியத்தை வழி நூலாகக் கொண்டு தமிழில் நாரத சரிதை (நந்தனின் சரிதை) எழுதப்பட்டிருக்கலாம் என்று துணிகின்றார்.

தமிழில் கம்பராமாயணத்தை "இராமவதாரம்" என்று குறிப்பிடுவதைப் போல் நேபாளியிலும் காஷ்மீரியிலும் இராமாயணத்தை "இராமவதாரம்" என்று அழைக்கும் போக்குக் காணப்படுகின்றது என்று கூறியுள்ளார். தமிழ் நாட்டரசரும் பாரத வீரர்களும் உறவுடையவர்கள் என விளக்குமிடத்து, அருச்சுனன் பாண்டியன் மகள் சித்திராங்கதையை மணந்தான் என்னும் கதையைப் போன்ற ஒரு கதை அஸ்ஸாம் இலக்கியத்திலும் காணப்படுகின்றது என்று அடிக்குறிப்பில் தருகின்றார். தமிழில் குடமூக்கிற் பகவர் செய்த "வாசுதேவனார் சிந்தம்" என்னும் நூலைப் பற்றிக் கூறும் போது, வாசுதேவ ஹிந்தி என்றொரு பெயரில் பிராகிருதத்தில் உள்ளது என்றும், குணாட்டியரது பிருஹத் கதையைப் பொருளாகக் கொண்டது என்றும், இது பற்றிய கருத்துக்கள் கே.எம்.முன்ஷி எழுதிய "குஜராத்தும் அதன் இலக்கியமும்" என்னும் நூலில் காணப்படுகின்றன என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

4.1.3 *தமிழும் ஆங்கிலமும்*

சில இடங்களில் ஆங்கில நூல்களையும் அறிஞர் தம் கருத்துக்களையும் ஒப்பிட்டுக் கூறியுள்ளார். கோலரிட்ஜ் கணக்கிட்டுக் கூறிய பத்து ஆண்டுக்காலம் இந்திய இதிகாசப் படைப்பிற்குப் பொருந்தவில்லை என்கிறார். ஏனென்றால் இதிகாசத்தை / காவியத்தை எழுதும் முறை ஆங்கிலத்திலும் தமிழிலும் வேறுபட்டது என்று விளக்கியுள்ளார். 1950 ஆம் ஆண்டு கம்பன் கழகத்தின் சார்பிலே சொற்பொழிவு ஆற்றும் பொழுது கம்பனைப்பற்றிய ஆராய்ச்சிகளுள் ஒன்றாக "ஒப்பு நோக்கு" ஆராய்ச்சி வலியுறுத்தினார். இத்தூண்டுதலினால் பிற்காலத்தில் கம்பனையும் மில்ட்டனையும் ஒப்பிட்டு இராமகிருஷ்ணனும் அ.அ.மணவாளனும் விரிவான நுட்பமான ஆய்வுகளை நிகழ்த்தி நூல்களை வெளியிட்டுள்ளனர்.

ஆங்கிலத்தில் இதிகாசங்களை ஆதி இதிகாசம் / முன்முறை இதிகாசம், அநந்தர இதிகாசம்/ பின்முறை இதிகாசம் என்று இரண்டாகப் பகுத்து கூறுகின்றார்கள். இந்த அடிப்படையில் இந்தியக் காப்பியங்களை வகைப்படுத்துகின்றார். வியாசாரது மகாபாரதம், கிரேக்க இலியாத்/ ஒதிஸி, ஆங்கிலோ சாக்ஜன் "போவுல்ப்" என்பவை முன்முறை இதிகாசங்களாகும். தமிழில் இதற்கு எடுத்துக்காட்டு இல்லை. பின்முறை இதிகாசத்திற்கு வால்மீகி இராமாயணமும் கம்பராமயணமும், மில்ட்டனின் "பாரடைஸ்லாஸ்ட்" காவியமும் வர்ஜிலின் "ஈனியத்" என்பவைகள் எடுத்துக்காட்டுகள். இவ்வகைப்பாடு மறுபரிசீலனைக்கு உரியவை.

4.1.4 தமிழும் கிரேக்கமும்

கிரேக்கப் பண்பாடும் இலக்கியமும் தமிழ்ப்பண்பாட்டோடும் இலக்கியத்தோடும் ஒப்பிடுவதற்குரியது என்று பேராசிரியர் தம் நூல்களில் முன் மொழிந்துள்ளார். கிரேக்க தேசத்தில் நிகழ்ந்த போர் நிகழ்ச்சி, அதைக் கண்ட கிரேக்கப்புலவரின் வீரம் ததும்பும் பாடல், அவை மக்களிடையே காட்டுத்தீப் போல பரவியமை, யுத்த வீரர்கள் கற்றுக் கொண்டு ஆவேசமாகப் போர்புரிந்தமை ஆகியவற்றைப் பாரத தேசத்தோடும், விடுதலைப் போரோடும், பாரதியின் விடுதலைக் கீதங்களோடும், சுதந்திரத் தொண்டர்களின் அகிம்சாயுத்தத்தோடும் போராடியதை ஒப்பிட்டுக் காட்டுகின்றார்.

தமிழிலும் கிரேக்கத்திலும் பழங்காலத்தில் தொகை நூல் வடிவில் செய்யுட்கள் தொகுக்கப் பெற்றன. மிலீகரின் (கி.மு.60) தொகைநூலும் சங்கத் தொகை நூல்களும் ஒப்பிடத்தக்கன. சுருங்கச் சொல்லல், பொருள் ஆழமுடைமை, நவின்றோர்க்கினிய நன்மொழி புணர்த்தல், பொருளின் ஒருமை என்ற குணங்கள் இத்தொகை நூல்கள் செய்யுட்களிலே அமைந்திருந்தன. இவ்வியல்புகளோடு பொருந்திய கிரேக்கத் தொகை நூல், புறநானூறு என்னும் நூலோடு பெரிதும் ஒப்பிடற்பாலதாயுள்ளது. இறுதியில் தொகுக்கப்பட்ட தொகையிலே காதற் செய்யுட்களும் பல துறைகளாகப் பகுக்கப்பட்டுச் சேர்க்கப்பட்டுள்ளன. இதனோடு நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு என்ற ஐந்து நூல்களும் ஒப்பிடத்தக்கன. இவ்வாறு தொகை நூல்கள் பற்றி விளக்கும் போது தமிழ் - கிரேக்க இலக்கியங்களின் ஒப்பீடு பற்றிக் கருத்துரைக்கின்றார்.

மேலும் பழமையிலும் பொருளமைதியிலும் செய்யுள் நயத்திலும் மாத்திரம் இன்றி, வேறு விஷயங்களிலும் இவ்விருமொழிகளிலுள்ள இலக்கியங்கள் ஒப்பிடக்குரியன. கிரேக்க நாகரீகம் நீடித்திருந்த காலத்தில் அதன் நிலைமை பல படியாக மாறி வந்திருக்கின்றது. இம் மாறுபாட்டுகளுக்கிடையேயும் கிரேக்கத் தொகைநூல் கிரேக்கர்களுக்குப் புத்துயிர் கொடுத்து உதவிய அமிர்த சஞ்சீவினியாய் நீடித்து வந்திருக்கின்றது. இது போன்றுள்ள தமிழ்த் தொகை நூல்கள் இரண்டிலும் பழைய நாகரிகங்களும் வழக்க ஒழுக்கங்களும் பிரதிபலித்துக் காண்கின்றன. பிற்காலத்தெழுந்த இலக்கியங்களின் நெறியை வரம்பு கட்டுவதற்கும் இத்தொகை நூல்களும் ஒன்றோடு ஒன்று உவமிக்க கூடியனவாக உள்ளன என்று விளக்கியுள்ளார். இக்கருத்துக்களே மா.சண்பகம் போன்ற ஆய்வாளர்களுக்கு களம் அமைத்து தந்திருக்கின்றன. வீரயுகப்பாட்டு என்னும் அடிப்படையில் கிரேக்க தமிழ்ப் பழங்காலப் பாட்டுக்களைக் க.கைலாசபதி ஆராய்வதற்கும் பேராசிரியர் முன்னோடியாகத் திகழ்ந்திருக்கிறார்.

4.2 இலக்கியமும் பிற கலைகளும்

அமெரிக்க ஒப்பிலக்கிய அறிஞர் எச்.எச்.ரிமார்க் ஒரு மொழியில் உள்ள இலக்கியத்தை அதே மொழியில் உள்ள இசை, கூத்து நாடகம், ஓவியம், சிற்பம் போன்ற நுண்கலைகளோடும் பிற அறிவியல் துறைகளோடும் ஒப்பிடுவதை ஒப்பிலக்கிய வரம்புக்குள் அடங்குவதாகக் கருதுவர். பேராசிரியரும் இலக்கியத்தைச் சிற்பத்தோடும் சித்திரத்தோடும் ஒப்பிட்டுக் கூறிய சிந்தனைகள் எதிர்கால ஒப்பீட்டு அழகியல் ஆய்விற்கு வழிகாட்டுபவை. சொல்லினால் இயன்ற திருக்கோயில்களும், கல்லினால் இயன்ற திருக்கோயில்களும் ஒன்றோடொன்று அடிக்கடி உவமிக்கப்படுகின்றன. இதற்கு ஒரு காரணம் உண்டு. கவிஞன் ஓரளவு சிற்பியாய் அமைகின்றான். அவ்வாறே சிற்பியும் ஓரளவு கவிஞனாகி விடுகின்றான். சிற்பி கவிஞனானதற்குத் தாஜ்மஹால் என்ற காதல் மாளிகையை உதாரணமாகக் கூறலாம். கவிஞன் சிற்பியானதற்குக் கம்பனது பெருங்காப்பியத்தை உதாரணமாகக் கொள்ளலாம் என்று ஒரு கலையின் தாக்கம் இன்னொன்றில் உள்ளது என்று விளக்கி இறுதியில் கீழ்க்காணும் பாரதியின் பாடலோடு முடிக்கின்றார்.

"வல்லன் ஆக்கிய சித்திரம் போலும்
வண்மைக் கவிஞர் கனவினைக் போலும்
. . . .
சொல்லை இசைந்துப் பிறர் செயுமாறே
சுந்தர மாமொரு காப்பியம் செய்தார்."

பேராசிரியர் தமிழர்பண்பாடு என்னும் நூலில் கம்பனது சொற்சித்திரம் பற்றிப் பேசுகையில் இலக்கியத்திற்கும் ஓவியத்திற்கும் உள்ள இனப்பிறப்புறவைச் சுட்டிக் காட்டுகிறார். இங்ஙனம் சித்திரம் இயற்றுதலால் உலகவியற் பொருளானது நமது கண்ணையும் கருத்தையும் விட்டகலாது மனத்திலே நிலைக்களம் கொண்டு விடுகின்றது, உல்ருசி என்னும் ஜெர்மன் எழுத்தாளர் ஒருவனது கவித்துவ பெருமை அவனது கவிதைகளினின்றும் எவ்வளவு சித்திரங்கள் வரையக் கூடுமோ அவ்வளவாகும் என்று ஓரிடத்துக் கூறுகிறார். கம்பசித்திரம் என்று கூறுவதன் கருத்தும் இது போன்றே கொள்ளத்தகும். உலாவியலில் இப்பகுதியில் காணப்படும் பல்வேறு நிறங்களில் கம்பசித்திரங்கள் போல பிற இலக்கியங்களில் காணுதல் அருமை. கம்பனது அளப்பறியா கவிதாசக்திக்கு இச்சித்திரங்கள் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகின்றன என்று கம்பனது காவியம் சொற்சித்திரக் காட்சிகளாக விரிவதைக் காட்டுகின்றன. இதனை இலக்கியம் ஓவியமாகவே அமையும் நிலைக்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

4.3 இலக்கியவகையும் ஒப்பிலக்கியமும்

ஒப்பிலக்கியத்தில் இலக்கியவகை (Genre) ஆய்வு ஒரு சிறந்த இடத்தை வகிக்கின்றது. இலக்கிய வகைக் கோட்பாட்டையும் அதன் பயன்பாட்டையும் ஒப்பிலக்கிய அறிஞர்கள் விரிவாகவே சிந்தித்துள்ளார்கள். பேராசிரியரின் "காவியகாலம்" என்னும் ஆய்வுநூல் "காவியம்" என்னும் செய்யுள் இலக்கிய வகையை ஒப்பியல்-வரலாற்றியல் கண்ணோட்டத்துடன் விளக்கும் ஒப்பற்ற- அரிய முழுமையான ஆராய்ச்சிப் படைப்பாகும். பேராசிரியர் சாட்விக் என்பவரின் இலக்கணநூல்களையும் இதிகாசங்களையும் புராணங்களையும் தமிழ்க் காவியங்களின் எழுச்சிக்குத் தோற்றுவாயாகக் கொண்டு, சோழகால அரசியல் சமூக வரலாற்றுக் காரணிகளின் பின்னணியில் தமிழ்க் காவியங்களை ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார். இந்நூலில் சில குறைகளும் ஏற்றுக் கொள்ள முடியாத முடிவுகளும் இருந்தாலும் கூட தமிழ்க் காவிய ஆய்வில்-ஒப்பிலக்கிய வரலாற்றில் தனித்து நின்று வழிகாட்டும் ஒரு மைல்கல் எனலாம்.

5. ஒப்பிலக்கியத்தின் பயன்

5.1 ஒப்பிலக்கியத்தின் தலையான நோக்கம் இறுதிக் குறிக்கோள் உலக இலக்கியக் கோட்பாட்டை வரையறை செய்தலாகும். இதுவே இபோலைட் தெயின் என்னும் ஒப்பிலக்கிய அறிஞரின் கருதுகோள் ஆகும். எல்லா இலக்கியங்களிலும் காணப்படுகின்ற பொதுவியல்புகளை ஒன்று திரட்டி ஒருங்கிணைந்து உலக இலக்கியகோட்பாட்டை உருவாக்கம் செய்ய வேண்டும். பேராசிரியரும் தம் நூல்களில் சில இடங்களில் உலக இலக்கியங்களின் பொதுவியல்புகளைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

5.2 தன்னுணர்ச்சிப் பாடல்களில் பெயர்சுட்டா மரபைத் தமிழுக்கே உரியது என்று பெருமைப்பட்டுக் கொள்கிறோம். ஆனால், இயற்பெயர் சுட்டா மரபு எல்லா மொழி இலக்கியங்களிலும் தன்னுணர்ச்சிப்பாடலில் காணப்படும் பொதுமரபு என்கிறார் பேராசிரியர். பிறநாட்டுக் கவிஞர்களும் (பெயர் சுட்டாமை) இவ்வழக்கத்தை மேற்கொண்டிருத்தல் காணலாம். ருது ஸம்ஹாரத்திலும் மேகதூதத்திலும் காளிதாசர் பாத்திரங்களைப் பெயர்களால் குறிப்பிடவில்லை. ஷேக்ஸ்பியரது "ஸாந்நெட்ஸ்" என்னும் சிறந்த காதற்பாட்டுக்களிலும் அப்படியே என்று மொழிகின்றார். இலக்கியத்தில் சில அடிக்கருத்துக்கள் எல்லா மொழிகளிலும் பொதுவானவை. காதலும் போரும் நமது பண்டைத் தமிழ் இலக்கியங்களுக்கு மட்டும் தனித்துரிய பொருட்கள் என்று நினைத்தல் தவறு. கிரீக், இலத்தீன் முதலிய பிறமொழிகளிலுள்ள பண்டைச் செய்யுட்களும் இவ்விஷயங்களைப் பற்றியே பெரும்பாலும் அமைந்துள்ளன என்று பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார். மேலும், உமர்க்கய்யாம் ரூபாய்யாத் என்னும் நூலில் வெளியிட்டுள்ள கருத்துக்கள் கீழைத் தேசங்கள் அனைத்திற்கும்

பொதுவானவை என்றும், ஆனால், இந்திய பண்பாட்டின் அடிநிலைக் கொள்கைகளுள் ஒன்று என்று மத்திய ஆசிய, கிழக்கு ஆசிய நாடுகளின் சிந்தனைகளுக்கிடையே உறவுநிலை ஒப்பீடு செய்கிறார்.

5.3 நூலாசிரியர்கள் கதையோடும் கதைமாந்தர்களோடும் தொடர்புபடுத்திக் கூறுதல், வீரத்தாலும் கொடை முதலிய தகுதிகளாலும் பெயர் சிறந்து விளங்கிய தேசிய வீரர்களோடு தொடர்புடையவராக அரசர்களைக் கூறுதல் ஆகியவைகள் உலகம் முழுவதும் வழங்கிய ஒரு பொதுமரபாகும். சிலப்பதிகாரத்தின் வரந்தரு காதையில் சாத்தனார், இளங்கோவடிகள் தம்மைக் கதையோடு தொடர்படுத்திக் கூறியுள்ளார்கள். இது போன்றே சாஸர், டானியல்டிபோ, ஸ்விப்டு முதலியோர் எழுதிய தம் நூல்களில் தம்மைத் தொடர்படுத்தியுள்ளனர் என்கிறார். ஐரோப்பிய அரசர்கள் துரோஜன் யுத்தத்தில் போர்புரிந்தவராகக் கருதும் வீரர்களோடு தொடர்புடையவராகவும் தம்மைக் கூறிக் கொண்டார். இது போன்ற மரபினையே மனத்துள் கொண்டே முடிநாகராயர் தமது அரசனைப் பாடினார் என்று நாம் கொள்ளுதல் வேண்டும் என்று விளக்குகின்றார்.

5.4 உலக இலக்கியமும் ஒரு மொழி இலக்கியமும் முதன்- சினை உறவு உடையன. உலக இலக்கியம் ஆலமரத்தின் அடிமரம் போன்றது, தனியிலக்கியம் அம்மரத்தின் கிளைகளும் விழுதுகளும் ஆகும். அம்மரத்தின் வேர்களாக உலக இலக்கியப் பொதுவியல்புகள் ஆகும். இந்தப் பொதுவியல்புகளைக் காண்பதே ஒப்பிலக்கியத்தின் தலையாய பணி. இப்பணி மாயமான் வேட்டை ஆகாமல் நிதர்சனமாக வேண்டும். மொழியியலில் மொழிப் பொதுவியல்புகளைக் (Language universals) காண்பதைப் போல ஒப்பிலக்கியத்திலும் இலக்கியத்தின் பொது இயல்புகளைக் கண்டறிந்து கோட்பாடுகளை உருவாக்க வேண்டும். தமிழில் இதற்கு முன்னோடியாக பேராசிரியர் சில பொதுவியல்புகளைக் சுட்டிக் காட்டியுள்ளமை கவனிக்கத்தக்கது.

6. முடிவுரை

பேராசிரியர் எஸ்.வையாபுரிபிள்ளை அவர்கள் சிறந்த சிந்தனையாளர். பன்மொழிப் பேரறிஞர். விஞ்ஞான நெறியைத் தமிழாய்வில் புகுத்திய வித்தகர். எளிமையான வாழ்விலே ஏற்றம் கண்டவர் விளம்பரத்தை நாடாத-வீண்பேச்சு விரும்பாத முழு நேர ஆராய்ச்சியாளர். அவருடைய ஒப்பிலக்கியப் பங்களிப்பைக் கீழ்க்கண்டவாறு தொகுத்துக் கூறலாம் :

1. ஒப்பு நோக்கு ஆய்வின் இன்றியமையாமையை முதன்முதலில் உணர்ந்து முன்மொழிந்த தீர்க்கதரிசி.
2. உண்மையை விடச்சிறந்தது எதுவுமில்லை என்னும் அடிப்படையைக் கொண்டு காரணகாரிய முறையில் விஞ்ஞானமுறையைக் கடைப்பிடிக்க வழிகாட்டியவர்.

3. சங்கத் தொகைநூல்கள், திருக்குறள், கம்பராமாயணம் ஆகியவற்றை ஒப்புநோக்கு முறையில் ஆய்ந்து பிற்கால ஒப்பிலக்கிய அறிஞர்களுக்குக் களம் அமைத்துத் தந்தவர்.

4. இலக்கிய உதயம் என்னும் நூலின் வாயிலாகவும் உலக இலக்கியப் பொதுவியல்புகளை ஆங்காங்கே சுட்டிக் காட்டியும் உலக இலக்கியப் பார்வையை வளர்க்க முன்னோடியாகத் திகழ்ந்தவர்.

*

துணைநூற் பட்டியல்

1. **முதன்மை ஆதார நூல்கள்**

1. வையாபுரிபிள்ளை, எஸ்., ***இலக்கியச் சிந்தனைகள்,*** பாரிநிலையம், சென்னை, 1951. (2-ஆம் பதிப்பு)
2. வையாபுரிபிள்ளை, ***தமிழ்ச்சுடர்மணிகள்,*** பாரி நிலையம், சென்னை, 1952 (2-ஆம் பதிப்பு)
3. வையாபுரிபிள்ளை, ***இலக்கிய விளக்கம்,*** தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, 1965 (3-ஆம் பதிப்பு)
4. வையாபுரிபிள்ளை, ***இலக்கிய மணிமாலை,*** தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, 1965, (3-ஆம் பதிப்பு)
5. வையாபுரிபிள்ளை, ***தமிழர் பண்பாடு,*** தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, 1974, (8-ஆம் பதிப்பு)
6. வையாபுரிபிள்ளை, ***காவியகாலம்,*** வையாபுரிபிள்ளை நினைவு மன்றம், சென்னை, 1991.

2. **குறிப்பு நூல்கள்**

7. கைலாசபதி.க., ***ஒப்பியல் இலக்கியம்,*** சென்னை புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, 1982, (3-ஆம் பதிப்பு)
8. வையாபுரிபிள்ளை, ***வாழ்க்கைக் குறிப்புகள்,*** தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, 1957.
9. தமிழண்ணல், ***ஒப்பிலக்கிய அறிமுகம்,*** மீனாட்சி புத்தக நிலையம், மதுரை-1, 1985, (5-ஆம் பதிப்பு)
10. வசந்தகுமாரி சுந்தரம். கே., ***வையாபுரிபிள்ளையின் ஆய்வுநெறி*** (காவியகாலம்), மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1981
11. பெருமாள். அ.கா., ***தமிழ் இலக்கியங்களின் காலம் பற்றி வையாபுரி பிள்ளையின் கணிப்பு,*** க்ரியா, 268, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை-14.

*

3

இந்தியாவில் மருதநில வேளாண் பண்பாடு - ஒப்பீடு

முன்னுரை

இந்தியச் சமூக இனங்களில் - தமிழ்ச் சாதிகளில் ஒரு பிரிவினர் தேவேந்திரகுல வேளாளர். இவர்கள் பழங்காலத்தில் "மள்ளர்" என்றும், தற்காலத்தில் "பள்ளர்" என்றும் குறிக்கப்படுகின்றனர். இன்று ஒவ்வொரு தமிழ்ச் சாதியும் இந்தியப் பண்பாட்டில் தனக்கென ஓர் அடையாளத்தைக் காணவும் ஓர் இடத்தைப் பெறவும் வட இந்தியச் சாதிகளோடும் பிற தென்னிந்தியச் சாதிகளோடும் இயைபினையும் தொடர்பினையும் கண்டு வருவதை இக்காலத்தில் காணலாம். இடையர்/கோனார் வடஇந்திய "யாதவர்"களோடும் பறையர்/அருந்ததியர் வடபுலத்திலுள்ள "தலித்" இனத்தவர்களோடும் தம்மை ஐக்கியப்படுத்திக் கொண்டு வருகின்றனர். இச்சூழலில் இந்திரனைத் தமது வழிபடும் தெய்வமாகக் கூறும் தேவேந்திரரின் வாழ்வியலைத் தேசிய நீரோட்டத்தில் வைத்துச் சிந்தித்து ஆராயலாம்.

மருதப் பண்பாடு, பெருமையும் சிறப்பும்

வேட்டைச் சமுதாயம், அடிமைச் சமுதாயம், கால்நடைச் சமுதாயம் ஆகியவற்றின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் பின் நாகரிகத்தின் சிகரமாகக் தோன்றியது மருதநிலப்பண்பாடு. இப்பண்பாட்டிற்கு அடிப்படையாக அமைவது உழவுத் தொழில். இதன் சிறப்பை உணர்ந்த திருவள்ளுவர் உழவு என்பதற்குப் பொருட்பாலில் ஓர் அதிகாரத்தை ஒதுக்கி பத்துக் திருக்குறளை இயற்றியுள்ளார்.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர் (குறள் 1033)

மேலும், இத்தகைய உழவுத் தொழிலுக்கு மழை முக்கியமான

தேவையான பொருளாகும். ஆகவே, வான் சிறப்பு பற்றியும் வியந்து பாடியுள்ளார்.

ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரிவளங் குன்றிக் கால் (குறள் 13)

தொல்காப்பியத்திற்கு முன்பிருந்து தொடங்கிய இனக்குழு சார்ந்த மருதநிலப் பண்பாடு சோழர் காலத்தில் வெளிநாட்டோடு உறவு கொள்ளும் வகையில் பேரரசைத் தோற்றுவித்தது. நிலவுடைமைச் சமுதாயம் முழுவடிவம் பெறுகின்றது. இக்கால கட்டத்தைச் சேர்ந்த கவிப்பேரரசு கம்பன்,

தண்டலை மயில்கள் ஆட
தாமரை விளக்கம் தாங்க
. . . .
வண்டுகள் இனிது பாட
மருதம் வீற்றிருக்கும் மாதோ

என்று மருதத்தை உயர்ந்த நிலையில் கொலுவீற்றிருக்கக் காண்கின்றார். இது மட்டுமல்லாது "ஏர் எழுபது" என்னும் நூலை இயற்றி உழவுத் தொழிலின் சிறப்பை உயர்த்திப் பாடியுள்ளார். அயலவரின் படையெடுப்பும் வெளிநாட்டவரின் பண்பாட்டுத் தாக்கமும் மருதநிலப் பண்பாட்டையும் அம்மண்ணின் மைந்தர்களாகிய மள்ளர் எனப்படும் தேவேந்திரர்களையும் மிகவும் பாதித்தன. பள்ளு போன்ற இலக்கிய வகைகள் அவர்களின் வீழ்ச்சியைச் சித்தரிக்கின்றன. இனி, மருதநில வேளாண் பண்பாட்டைச் சேர்ந்த இனத்தவர்களை ஒப்பீடு செய்யலாம்.

அசாம்

"கைபர்தஸ்" எனப்படும் அசாமின் அட்டவணைச் சாதியினர் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். மத்திய தரைக் கடல்பகுதியிலிருந்து வந்து ஹரப்பாவில் உயர்ந்த நாகரிகத்தைப் படைத்த திராவிட இனத்தைச் சேர்ந்தவர்களாக அசாம் அறிஞர்கள் கருதுகின்றார்கள். "பனியா" வகுப்பினரும் இப்பிரிவைச் சேர்ந்தவர்கள். சிவன், ஆரியரல்லாதவர்களின் தெய்வம், இத்தெய்வத்தைச் சிந்து சமவெளி மக்கள் வணங்கினார்கள். அசாமிலுள்ள கைபர்தாஸ் இனமும் வணங்கி வருகின்றது. "காளிகாபுராணம்" சிவனை அசாமின் தலையாயத் தெய்வமாகக் கூறுகின்றது. சத்திரியர்களும் இத்தெய்வத்தை வணங்கினார்கள். அசாமில் பல கிராமங்களில் வணங்கப்படும் ஜீவனுள்ள தெய்வம் சிவன். பிஹூ என்னும் பெயரில் திருவிழாவை அறுவடைக்குப் பின் இளவேனில் விழாவாகவும் கால்நடைக்கு நன்றி தெரிவிக்கும் விழாவாகவும் நடத்துக்கின்றனர். சிவவழிபாடு, அறுவடை மற்றும் இளவேனில் விழா மூத்தத் தமிழர்களாகிய தேவேந்திரரின் வாழ்வியலோடு உறவு கொண்டிருப்பதைக் காணலாம்.

ஆந்திரம்

கம்மர், ரெட்டியார், வேளமர் ஆகியோர் ஆந்திராவில் வேளாண் தொழிலோடு தொடர்புடையவர்கள். கம்மவரின் முழுநேரத் தொழில் வேளாண்மை ஆகும். முன்னொரு காலத்தில் வீரர்களாக இருந்தனர். ரெட்டியார் பிரிவுகளில் பள்ளர் ஓர் உட்பிரிவாகக் கூறப்படுகின்றது. ரெட்டியார், ஜோகுமாரா என்னும் மழைக் கடவுளை வழிபடுகின்றார்கள். வேளமர் நிலவுடைமையாளராக வாழ்கின்றார்கள். முற்காலத்தில் சத்திரியராகப் பணிபுரிந்தனர். இவர்களில் 77 பிரிவுகள் காணப்படுகின்றன. இவர்களுள் ஒரு பிரிவு குணபள்ளி. வேளமர் தமிழ்நாட்டில் உள்ள வேளிர், வேளாளர் சாதிகளோடு ஒன்றுபடுத்திச் சிந்திக்கலாம். மு.இராகவையங்காரின் வேளிர் வரலாறு இதற்கான குறிப்பைத் தெரிவிக்கின்றது (ப.114).

இராஜஸ்தான்

இம்மாநிலத்தில் இராஜபுத்திரர், ஜாட், குஜர் மீனா, மலிஸ் அல்லது கச்சிஸ், பிஸ்னோய், மியோ, சமர், பட், பில்ஸ், கரசியாஸ் போன்றவர்கள் உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள். மீனா, மிலிஸ், பட், பில் ஆகியோர் தேவேந்திர இனத்தோடு ஒப்பிடத்தக்கவர்கள். மீனா என்பவர்கள் இராஜஸ்தானின் பூர்விகக் குடிகள், மண்ணின் மைந்தர்கள், இராஜபுத்திரர்களின் படையெடுப்பால் தமது நிலவுடைமையை இழந்த விவசாயத் தொழிலாளர்களாகவும், குற்றம் செய்பவர்களாகவும் குற்றவேல் செய்பவர்களாகவும் ஆக்கப்பட்டவர்கள். பட் (Bhat) என்ப்படுவோர் பல்வேறு கிளைகளைக் கொண்டதாக இருப்பர். அதன் தலைவர் கோம்தி (gomti) அல்லது சௌதுரி (choudhuri). இவர் வழக்குகளை விசாரித்துத் தீர்த்து வைக்கிறார். சடங்கு முறைகளை நடத்தி வைக்கின்றார். இவர்கள் பல தெய்வங்களை வணங்குகிறார்கள். இருப்பினும் வைரவர் இவர்களது தலைமைத் தெய்வமாகும். பில் இனத்தவரும், மள்ளர் இனத்தவரும் வாழும் பகுதியைப் பள் (பள்+ஆம், பள்+இ) எனக் குறிப்பிடுவதால், இருவருக்கும், இடையே உள்ள பண்பாட்டு மூலத்தை மேலும் ஆராய வேண்டியுள்ளது. பாவைக்கூத்து, கரகாட்டம், பொய்க்குதிரை ஆட்டம் ஆகியவற்றை நிகழ்த்துகிறார்கள். தீஜ் என்பது மழைக்காலத்திற்குப் பின் பெண்கள் கொண்டாடும் வளமைத் திருவிழாவாகும். அப்போது தங்கள் கைகளைச் சிவப்பு வர்ணத்தால் (மருதாணி) அலங்கரித்து, பெற்றோர்களிடமிருந்து ஆடை ஆபரணங்களைப் பெற்று மகிழ்வார்கள்.

ஒரிசா

வேளாண்மையைப் பிராமணர் முதல் எல்லோரும் - பார்கை (தச்சர்) பாணர் (நெசவாளி), கௌடர் (இடையர்) சுமர் (கொல்லர்) ஃபகீர். தெளில் (வாணியச் செட்டி, சஸா (விவசாயி), கண்டெய்த் ஆகியவர்கள் 25%

அட்டவணைச் சாதிகள். கி.மு.2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த காரவேலர் ஓரிசாவில் உத்கல்/கலிங்கப்பகுதியை ஆண்ட மன்னர். சங்ககாலத்தில் தமிழக மன்னர்களோடு தொடர்பு கொண்டிருந்தார் எனக் குகைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. வேலர் என்ற சொல்., வேள், வேளிர், வேளாளர், என்னும் சொற்களோடு இணைத்துச் சிந்திக்கத்தக்கது.

கர்நாடகம்

ஒக்கலிகர், ஹொலெயர் (புலையர்), தொரெயர் (துறையர்) ஆகியோர் கர்நாடகத்தில் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ள உடைமையாளர்கள்- தொழிலாளர்கள். தமிழகத்தில் வேளாளருக்கு இணையான ஓரினம் ஒக்கலிகர். இவர்கள் உள்ள கரெஒக்கலு. ஹள்ளகர் (பள்ளியர்) ஒக்கலு ஆகியோர் மள்ளர்களின் பிரிவைச் சேர்ந்த கரையாளர், பள்ளர் போன்றவர்களோடு ஒப்பிடத்தக்கவர்கள். பிராமணர், லிங்காயத் ஆகிய இனத்தவருக்கு அடுத்த நிலையில் ஒக்கலிகர்கள் கௌரவிக்கப்படுகின்றனர்.

புலையர் என்று சொல் ஹொலெய என்ற கன்னடத்தில் உச்சரிக்கப்படுகின்றது. புலையர் இனத்தவர் தென்னிந்தியா முழுவதும் பரவியிருக்கின்றனர். ஹெதலோ என்றால் வயல் என்று பொருள் காண்கின்றார்கள். புர்-புலம்-புலையர். இவ்வாறு புலையர் என்ற சொல்லை விளக்குவதற்கு வாய்ப்புள்ளது. கர்நாடகத்தில் புலையர் சிலர் உடைமையாளராகவும். பலர் விவசாயக் கூலிகளாகவும் உள்ளனர். இவர்கள் தீண்டப்படாத இனமாக ஆனதற்கு ஒரு கதை சொல்லப்படுகிறது. ஹொள்ளய்யா (பொன்னையா= பொன்+ஐயா> ஹொன்னைபா) என்னும் தலைவன் தனது தொண்டர்களோடு ஊர்வலம் வந்தான். ஒரு கோவிலுக்குள் நுழையும் பொழுது, சிறுவாயிலைக் கொண்ட கோவிலுக்குள் அவனும் அவனது யானையும் தொண்டர்களும் உள்ளே போக முடியவில்லை. அது முதற்கொண்டு தீண்டாமைச் சாதியினராக அவர்கள் நடத்தப்பட்டார்கள் என்று கூறப்படுகிறன்றது. இக்கதையிலிருந்து புலையர் ஆரம்ப காலத்தில் சமுதாயத்தில் உயர்ந்த நிலையில் இருந்ததை அறியலாம்.

மீன் பிடித்தல், உழவுத் தொழில் செய்தல் ஆகிய இரண்டும் தொரையர்களின் பூர்விகத் தொழில்களாகும். துறை-தொர, துறை என்பது நீர்முகக்கும் (river ghat) இடத்தைக் குறிக்கும். மகாபாரதத்தில் கூறப்படும். சந்தானுவின் வழித்தோன்றல்களாகவும், யமுனை நதிக்கரை மீனவன் மகள் மத்சயகாந்தியின் வளையலிலிருந்து தோன்றியதாகத் தமது பிறப்புப் புராணத்தைக் கூறுகிறார்கள். தொரையர் கிராமத்தலைவர் எஜமான். இவருக்கு தளவாயி, கொண்டிசர் என்னும் இரண்டு உதவியாளர்கள்

செயல்படுகின்றனர். இவர்களின் உதவியால் சமூக வாழ்க்கையை நிர்வாகம் செய்து வருகின்றனர். சிவன், விஷ்ணு ஆகிய இருவரையும் வணங்குகிறார்கள். இறந்தவர்களைப் புதைக்கின்றார்கள். தமிழ் இலக்கியத்தில் மருதம்/ நெய்தல் நிலத்தலைவர்கள் துறைவன் என்று சுட்டப்படுவது இங்கு நினைவு கூறத்தக்கது.

குஜராத்

இம்மாநிலத்தில் படிதார், ராஜபுத்ரர், அரிஜன், பில் மற்றும் சில ஆதிவாசிகள் வேளாண் தொழில் செய்கின்றார்கள். இரும்பு மனிதர் வல்லபாய் பட்டேல் படிதார் எனப்படும் வேளாண் சமூகத்தைத் சேர்ந்தவர். படிதார் என்னும் பிரிவினர் சிறந்த உழவர் பெருமக்கள் எனப்பெயர் பெற்றவர்கள். பமேல் கிராமத் தலைமையைக் குறிக்கும் சொல்லாகும். பில் (Bhil) எனப்படும் இனத்தவர் தேவேந்திரரோடு ஒப்பிடத்தக்கவர். இவர்கள், நம்பிக்கை, நாணயம், வீரதீரம் ஆகியவற்றுக்கும் பெயர் பெற்றவர்களும் கூட. கருப்பு நிறமும் அளவான உயரமும் படைத்தவர்கள். உணர்ச்சிவயப்பட்டு வன்முறையில் ஈடுபடக் கூடியவர்கள்.

இவ்விடத்தில் தென் குஜராத் மக்களின் மோஹுலியாஸ் (Mohulies) எனப்படும் மழை நடனம் நினைக்கத்தக்கது. மழை காலத்தின் தொடக்கத்தில் வேப்ப மரக்கிளைகளையும் மண்சட்டிகளையும் கையில் ஏந்திக் கொண்டு வீடு வீடாகச் சென்று பாட்டுப்பாடி ஆடுவார்கள். (நமது மாரியம்மன் திருவிழாவோடு ஒப்பிடத்தக்கது.) மழைக்கடவுள் இந்திரனை வேண்டிப்பாடி ஆடுவார்கள். பானையில் ஒவ்வொருவரும் விதைகள் போடுவார்கள். நீரையும் ஊற்றுவார்கள். இறுதியில் ஊரின் எல்லைக்குச் சென்று மண்குடத்தை உடைத்துவிட்டுத் திரும்புவார்கள். மோஹுலியாஸ் என்பது ஓர் வளமைச் சடங்காகும் (பக்-245). ஆதிவாசிகள் களம் மரத்தை நட்டு இந்திரனை வழிபடும் நிகழ்ச்சி இங்குக் காணப்படுகிறது.

கேரளம்

நாயரில் சில பிரிவினரும், செறுமாரும், புலையரும் தமிழகத் தேவேந்திரர்களோடு ஒப்பிடத்தக்கவர்கள். நாயர்களில் பள்ளிச்சான் என்ற பிரிவு இருப்பது குறிப்பிடத்தக்கது. நாயர்கள், செறுமார், புலையர் ஆகியோரைத் தாழ்ந்தவராக கருதுகிறார்கள். முன்னாளில் செறுமாரும், புலையரும் மண்ணாரும் வருடத்தில் ஒரு நாள் நாயர் பெண்களைத் தொடுவதற்கு அனுமதி தருவார்கள். அப்படித் தொடப்பட்டவர்கள் சாகும்வரை புலையரோடும் மண்ணாரோடும் வாழ்வதற்கு அனுமதித்தார்கள். இவ்வழக்கத்தைத் புலப்பேடி, மண்ணார் பேடி என்று அழைத்தார்கள்.

புலையர் என்ற மக்களும் இன்று தாழ்ந்தவராகக் கருதப்பட்டாலும் இடைக்காலததிற்கு முன் மள்ளரைப் போல் உயர்ந்த நல்ல நிலையில் வாழ்ந்திருந்தனர். புலையர்கள் அரசர்களாக இருந்தார்கள் என்பதைத் திருவனந்தபுரத்திற்கு அருகிலுள்ள புலையனார் கோட்டை நினைவூட்டுகின்றது. அவர்கள் வாழ்கின்ற பகுதியை மாடம் என்று குறிப்பிடுகின்றார்கள். அரண்மனை/ அடுக்கு மாடியைத்தான் மாடம் என்ற சொல் சுட்டியது. தமிழ்நாட்டில் சீமந்தம்/வளைகாப்பு நடத்துவதைப்போல நாயரும் புலையரும் 'புளிகுடி' என்னும் சடங்கினை கர்ப்பிணி பெண்களுக்கு ஏழாவது மாதத்தில் நடத்துகின்றனர். இவ்வழக்கம் நாயர்களிடத்திலும் உண்டு. வல்லோன் என்ற புலையர் தலைவன், கருப்பகன் வடிக்காரன் ஆகியோரின் துணையோடு சமூக வாழ்வை ஒழுங்குபடுத்திக் கவனிக்கிறார்கள். இறந்தவர்களைப் புதைக்கிறார்கள். திருமண நிகழ்ச்சியில் நாத்தனார் (மாப்பிள்ளை அக்கா) முக்கிய இடம் பெறுகிறாள். இவர்கள் வேலன். மண்ணான், பறையன், நாயாடி, உள்ளாடன் ஆகியோரைத் தமக்குத் தாழ்ந்தவராகக் கருதுகின்றனர். இவர்களோடு சேர்ந்து உணவு உண்பதில்லை.

வடமலபார் பகுதியில் புலையரைச் செறுமார் என்று அழைக்கிறார்கள், சேர்மார் என்பது சேரர்களின் வழித்தோன்றல் எனப் பொருள்படும். தங்களைச் சேர மன்னர்களின் பரம்பரை என்று கூறுகிறார்கள். வடமலபாரின் ஆயக்கார எஜமான் புலையர்களின் மன்னனாக மதிக்கப்பட்டார். திருவனந்தபுரத்திலுள்ள பத்மநாபசுவாமி கோயில் புலையப் பெண்ணோடு தொடர்புபடுத்தப்படுகின்றது. ஒரு பாம்பு ஒரு குழந்தையைக் காப்பாற்றி வந்ததைப் புலையப் பெண் கண்டதாகவும், இந்த இடத்தில் பத்மநாப சுவாமி கோவில் கட்டப்பட்டதாகவும் புராண வரலாறு சொல்லப்படுகின்றது. காதணிவிழா என்பது இவர்களின் முக்கியமான சடங்காகும். இறந்தவர்களைச் சாவர், என்ற பெயரில் வழிபடுகிறார்கள். கொடுங்களூர் பகவதியை முக்கியமான தெய்வமாக வழிபடுகிறார்கள். ஆரியத்தாக்கத்தினால்தான் இவர்கள் தீண்டாமைக்கு ஆளாகி, தமது சொந்தப்பூமியை இழந்து, கொத்தடிமைகளாக, விவசாயக் கூலிகளாக மாறி வாழ்ந்து வருகின்றார்கள் என்று கேரள வரலாறு உணர்த்துகின்றது.,

மத்திய பிரதேசம்

அஹிர், கடரியஸ், கச்சிஸ்,லோதிஸ், குஜர்ஸ், மலிஸ், குன்பிஸ், பவார், குர்மி, தெலி, சமர், மஹர், பங்க, ரவத் போன்றவர்கள் விவசாயத் தொழிலைச் செய்கிறார்கள். இவர்கள் குர்மிஸ், மலிஸ், குன்பிஸ், மஹர்ஸ் ஆகியோர் தமிழகத் தேவேந்திரர் இனத்தோடு ஒப்பிடத்தக்கவர்கள். கோண்டு என்ற திராவிடப் பழங்குடி இனமும் மலிஸ், வில்ஸ் என்ற பழங்குடி இனமும் பண்பாட்டு அடிப்படையில் மள்ளர்களோடு நெருங்கிய தொடர்புடையவர்கள். கோந்துகள் தாய்வழிச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்,

மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டாருக்குப் பரிசம் கொடுத்து, அவர்கள் செலவிலேயே திருமணம் செய்ய வேண்டும். இந்த இரண்டு இனங்களிலும் பெண்கள் தங்கள் கணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு உரிமையுண்டு, விவாகரத்தும் மறுமணமும் இச்சமூகங்களில் அனுமதிக்கப்படுகின்றன.

கொஷங்காபாத் மாவட்டத்தில் பெண்கள் கோதுமை வித்தினை முளைப்பாரி வைத்து எட்டு நாட்கள் கழித்து அதை ஒரு திருவிழாவாகக் கொண்டாடுகிறார்கள் (பூஜாரியா), மண்ணையும், எருவையும் நீரிலே விட்டுவிட்டு, கோதுமை முளைச் செடிகளைத் தோழிப்பெண்களுக்குக் கொடுக்க அவர்கள் தங்கள் டர்பன்களில் செருகிக் கொள்கிறார்கள்.

மகாராஷ்டிரம்

பஞ்சதிராவிடத்தின் ஒரு பகுதியாகக் கருதப்படும் மகாராஷ்டிரத்தில் மராட்டா, மலி, குன்பி, லேலா, கொலாம் ஆகியோர் உழவுத்தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள். பழங்காலத்திலும் இடைக்காலத்திலும் மள்ளர், என்னும் சொல்லுக்குத் தரப்பட்ட விளக்கம் மராட்டா என்ற இனத்தவருக்குப் பொருந்தும். வீரராகவும் விவசாயியாகவும் இருந்தவர்கள். இருக்கின்றவர்கள். இம்மாநிலத்தின் 40% மக்கள் தொகையில் இடம் பெற்ற, இம்மாநிலத்தின் பெரிய விவசாய சமூகமாகும். வீர சிவாஜியின் வழித்தோன்றல்கள், இவர்களுக்குள் 96 பிரிவுகள் உள்ளன. மலி என்றால் விவசாயம் செய்கின்றவர்கள், மலி என்றால் தோட்டக்காரர் (Gardener) என்று பொருள். மஞ்சள் சீரகம். பூ ஆகியவற்றை உற்பத்தி செய்வதன் அடிப்படையில் உட்பிரிவுகள் அமைகின்றன. குன்பி தங்களை மராட்டாவின் ஒரு பிரிவாகக் கூறுகின்றனர். ஆனால், மராட்டாவினர் இவர்களைத் தங்களுக்குத் தாழ்ந்த சாதியாகவும், மண உறவு மறுப்பதாகவும் காணப்படுகின்றது.

கோலாமி மொழியைப் பேசுகின்ற திராவிட இனம்தான் கோலாம், நெல் உற்பத்தியில் சிறப்பு வல்லுநராகக் கூறப்படுகின்றனர். (Specialist in Cultivation of rice). வரிசையாக வீடுகள் கட்டியும், ஊருக்கு மத்தியில் சாவடி அமைத்தும் வாழ்கின்றவர்கள். மொழி அடிப்படையில் கோண்டி மக்களுக்கு நெருக்கமானவர்கள். எனவே கோலாமி மக்களைத் தேவேந்திரர்களின் முன்னோர்களுள் ஒருவராகக் குறிப்பிடலாம். பத்ராபத் (செப்டெம்பர்- அக்டோபர்) மாதத்தின் இறுதி நாளை காளைகளை வணங்கும் நாளாகக் கொண்டாடுகின்றனர். இது போலா எனப்படுகின்றது. தமிழர் திருநாளில் நிகழ்த்தப்படும் ஜல்லிக்கட்டு போல நிகழ்த்துகின்றனர். பங்குனி மாதத்தின் 5-ஆம் நாளில் ஹோலி பண்டிகையைக் கொண்டாடுகின்றனர். தமிழகத்தில் உள்ள மஞ்சள் நீராட்டம், சொக்கப்பான் கொளுத்துதல் (கார்த்திகை திருவிழா) ஆகிய இரண்டின் சேர்க்கையாக ஹோலிப்பண்டிகையை மராட்டியர்கள் கொண்டாடுகிறார்கள்.

வங்காளம்

வங்காளத்தில் தென் மேற்கு, வடமேற்கு எல்லைப்புறங்களில் வாழும் திராவிடப் பழங்குடிகள் ஒராவன். மாலேர் என்ற இரண்டு இனத்தவர்களும் ஒப்பிட்டுச் சிந்திக்கத்தக்கவர்கள். பீர்பூம் மாவட்டத்தில் வாழும் மாலர்கள் அட்டவணைச் சாதியைச் சேர்ந்தவர்கள். மல்லபூம் என்ற பெயர் வடக்கு வங்காளத்திலும் (மால்டா மாவட்டம்) மேற்கு வங்காளத்தில் பரவலாக வழங்கப்படுவதால் ஒரு காலத்தில் இவர்கள் வங்காளம் முழுவதிலும் பரவலாக வாழ்ந்திருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்களால் ஊகிக்கப்படுகின்றது. மானசதேவி எனப்படும் பாம்பு தேவதையை வணங்குபவர் களாகவும் காணப்படுகின்றனர். மானச தேவியால் இத்தகைய தாழ்ந்த நிலையை அடைய சாபம் பெற்றுவிட்டதாக நம்புகின்றனர். உடல் ரீதியாக, நல்ல கட்டமைப்பும் தொழில் திறனும் பெற்ற இவர்கள் விவசாயத் தொழிலாளர்களாகவும் வாழ்க்கை நடத்துகின்றனர். இவர்கள் பூயிமாலி (Bhui Mali) என்ற பிரிவைத் தமக்குத் தாழ்ந்தவராகக் கருதுகின்றனர்.

முடிவுரை

தமிழ் மள்ளர் என்னும் சொல், வீரர் மற்றும் உழவர் என்ற பொருளில் வழங்கப்பட்டுள்ளது. இந்த மள்ளர் என்ற சொல்தான் பிற்காலத்தில் பள்ளர் என்று மருவி வழங்கப்பட்டது. மள்ளர் என்னும் சொல்லின் வேர்ச்சொல் மலி, மால என்ற வட இந்திய இனங்களோடும் தொடர்புடையதாகக் காணப்படுகிறது. வேள் என்பது வேலமர், பில் ஆகிய இனத்தவரோடு தொடர்புடையது. பில், புலையர் ஆகிய இனத்தவர்களும் ஒப்பிடத்தக்கவர்கள். பள்ளி என்னும் சொல் இந்தியாவின் தென் பகுதியில் கிராமத்தையும் ஊரையும், குறிப்பதற்கு (மகாராட்டிரம், வங்காளம், உட்பட) வழங்கப்படுகிறது. ஆகவே மள்ளர், பள்ளர் என்ற சொற்கள் இந்தியாவெங்கும் பொதுவாக வழங்கப்படுகின்றன என்று கருதலாம். பஞ்சாப், உத்திரபிரதேசம், பீஹார், இமாசலப்பிரதேசம், அரியானா, காஷ்மீர் போன்ற மாநிலங்களில் வாழும் வேளாண் தொழிலைச் செய்கின்ற இனத்தவர்களை ஒப்பிட்டால் மள்ளரியம் பற்றிய கருது கோளை முற்றிலும் உண்மையென்று நிரூபித்துவிடலாம். ஆரியர்கள் வருவதற்கு முன்பு திராவிட இனத்தவர்கள் இந்தியாவெங்கும் பரவியிருந்தனர் என்பது இந்திய வரலாற்று அறிஞர்களும், வெளிநாட்டு அறிஞர்களும் ஏற்றுக் கொண்ட உண்மை. திராவிட நாகரிகத்தில் கோட்டை கட்டி வாழ்ந்த மருதநில பண்பாட்டைக் கொண்ட மூவேந்தர்களின் வழித்தோன்றலாகிய மள்ளரினத்தவர் இந்தியாவெங்கும் பரவியிருந்தனர் என்று கருதலாம். சிவன் மற்றும் காளி வழிபாடுகள், இறந்தவர்களைப் புதைத்தல், முளைப்பாரி மற்றும் கரகமெடுத்தல், விவாகரத்து மற்றும் மறுமணம் செய்தல் போன்ற பண்பாட்டுக் கூறுகளும் மள்ளர் அல்லது பள்ளர் இந்தியாவின் / தமிழகத்தின் ஆதிக்குடிமக்கள் என்று நிரூபணம் செய்கின்றன.

*

துணைநூற் பட்டியல்

1. குருசாமி சித்தர், **தமிழ் இலக்கியத்தில் பள்ளர் (மள்ளர்) தேவேந்திர குல வேளாளர் (அடிப்படைச்சான்றுகள்)** தேவேந்திர மன்றம் 5/1, குருசாமிநகர், பாரதியார் பல்கலைக்கழகம் (அஞ்சல்), கோயம்புத்தூர் - 641 046

2. ஞானசேகரன். தே, **தலித் சிந்தனை விவாதம்,** மாமன்னர் பதிப்பகம், 10/2, கி.நால்வர் நகர், கோயம்புத்தூர் - 641 046.

3. Indian Council for Agricultural Research, **Farmers of India** (Madhya Pradesh, Rajasthan, Gujarat, Maharashtra), Vol: IV. ICAR, New Delhi, 1968.

4. International School of Dravidian Linguistics, **Dravidian Encyclopedia,** Vols, I-III, ISDL, Thiruvananthapuram, 1997.

*

4

இந்திய நாட்டுப்புற இலக்கியங்கள் : வேற்றுமையில் ஒற்றுமை

முன்னுரை

பாரத நாடு பழம்பெரும் நாடு. விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பல கிராமங்களினால் ஆனது. 25 விழுக்காடு எழுத்தறிவு பெறாத குடிமக்களைக் கொண்டது. எனவே, வாய்மொழி மரபு இன்னும் அறுந்து போகாமல் செல்வாக்குடன் இருந்து வருகின்றது. இனம், சாதி, சமயம், மொழி, பண்பாடு, அரசியல், ஆகியவற்றில் இந்தியா வேறுபாடுகளை கொண்டிருந்தாலும் மனிதவுறுப்புகளை இணைக்கும் உயிராற்றல் போல அனைத்து மட்டங்களிலும் உள்ளார்ந்து கிடக்கும் பொதுப்பண்பு களையும் கருக்கொண்டுள்ளது. வாய்மொழி மரபைக் காட்டும் இலக்கியம், பழக்கவழக்கங்கள், கலை, நம்பிக்கைகள், விளையாட்டுக்கள், திருவிழாக்கள், தெய்வங்கள் ஆகியவற்றில் பொதுக் கூறுகளைக்காண இயலும். இந்திய நாட்டுப்புற இலக்கியங்களில் காணப்படும் ஒற்றுமைக் கூறுகளை மேலோட்டமாக காணலாம்.

பழமொழி

பழமொழி மக்கள் அனுபவத்தின் சாரமாகும். அறிவுரை முத்துக்களாகும், நாடுகளும் மக்களும் ஒரேவிதமான சமூக அரசியல், பொருளாதாரச் சூழ்நிலைகளினால் தாக்கத்திற்கு உள்ளாகும் போது அவற்றால் ஏற்படும் அனுபவத்தினால் விளையும் பழமொழிகளிடையே ஒற்றுமை காணப்படும். முடியாட்சி, நிலவுடைமை, விதி, பலதாரமணம், பரத்தமை, பலதெய்வவழிபாடு போன்றவற்றால் இந்திய மக்களின் சிந்தனைகளின் சில நெருக்கமான ஒருமித்த உண்மைகளைக் காணமுடியும். பழமொழி மலையாளத்தில் பழஞ்சொல் என்றும், தெலுங்கில் நாதுடி என்றும், கன்னடத்தில் நாநுடி என்றும், சமஸ்கிருதத்தில் சாணக்யா, அல்லது ஸ்லோகம் என்றும்

சுட்டப்படுகின்றது. பழமொழிகள் உலகப்பொதுமை உடையவை ஆசிரியன் பெயர் அறியாதவை; பேச்சுக்குச் சுவையூட்டி, உரையாடலை அர்த்தமுள்ளதாக்குபவை; காலத்திற்கு ஏற்ப மாறும் இயல்புடையவை.

ரா.பி. சேதுபிள்ளை மற்றும் பிறமூன்று தென்னிந்திய மொழி அறிஞர்கள் தென்மொழிகளில் பழமொழிகள், என்னும் நூலை 1962இல் வெளியிட்டனர். இந்நூல் பழமொழிகளை ஒப்பீட்டு நோக்கில் ஆராய்ந்து பொதுமைகளைக் காண வித்திட்டது. ஆனால். இந்தியமொழிகள் அனைத்திலும் வழங்கப்படும் பழமொழிகளைத் தொகுத்து ஆராய வேண்டும். சில ஒப்புமையுள்ள பழமொழிகள் பின்வருமாறு :

1. *வெந்த புண்ணிலே வேலைப் பாய்ச்சாதே (தமிழ்)*
   புண்ணின் மேலே உப்பைத் தூவாதே (அஸ்ஸாம்)
2. *அன்று கிடைக்கும் பலாக்காயைக் காட்டிலும் இன்று கிடைக்கும் களாக்காயே மேல் (தமிழ்)*
   கடனாய் கிடைக்கும் 13 ரூபாயைக் காட்டிலும் ரொக்கமாக கிடைக்கும் 9 ரூபாயே மேல் (இந்தி)
3. *கழுதை அறியுமா கற்பூரத்தின் வாசனையை (தமிழ்)*
   வெல்லத்தின் அருமையைக் கழுதை அறியுமா (மராத்தி)
4. *நாய் போல் உழைத்து துரை போல் வாழ் (தமிழ்)*
   வேலைக்காரனைப் போல் உழை, வேந்தனைப் போல் அனுபவி (கன்னடம்)

விடுகதை

தமிழில் பிசி அல்லது புதிர் என்றழைக்கப்படும் விடுகதை எல்லா இந்திய மொழிகளிலும் காணப்படுகின்றது. இது தெலுங்கில் பொடுபுக்கதலு என்றும், கன்னடத்தில் ஒடகதே என்றும், மலையாளத்தில் கடம்கதா என்றும், குறிப்பிடப்படுகின்றது. விடுகதையில் ஒரு பொருள் உருவகமாகத் தரப்பட்டிருக்கும். இதனைக் கண்டுணர்தல் சிந்தனைக்குரியதாகும். விடுகதைகள் எதுகை, மோனை ஆகிய கூறுகளைக் கொண்டு செய்யுள் போலவும் அமையும். சில சிலசமயங்களில் குட்டிக்கதை போலவும் இருக்கும். இந்திய விடுகதைகளைப் பயன்பாட்டு நோக்கில் இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம், அவையாவன :

1. பொழுது போக்கு விடுகதைகள் (Recreative riddles)
2. சடங்குமுறை விடுகதைகள் (Ritualistic riddles)

பொதுவாக தென்னிந்தியாவில் விடுகதைகள் பொழுது போக்குக்காக உள்ளன. ஆனால் வடஇந்திய விடுகதைகள் பொழுது போக்கிற்காகவும்

சடங்கிற்காகவும் பயன்படுத்தப்படுகின்றன. வங்காளி, இந்தி பேசும் மக்களிடத்தில் விடுகதைகள் திருமணத்தின் போதும் விழாக்காலங்களிலும் சிறப்பான இடத்தைப் பெறுகின்றன. வங்காளியில் தாழ்த்தப்பட்ட சாதியினர் மாப்பிள்ளை வீட்டார் விடுகதைகளுக்குப் பதில் சொல்லும் வரை கிராம எல்லையிலே நிறுத்திவைப்பார்கள். மராத்தியில் அறுவடைக்குப்பின், நெற்பொலியைச் சுற்றி ஆண்கள் நடனமாடி விடுகதைப் போட்டி நிகழ்த்துவார்கள். போளா எனப்படும் உழவர் திருநாள் மகாராட்டிர கண்டேஷ் பகுதியில் நடைபெறும். அலங்கரிக்கப்பட்ட எருதுகளை உடையவர் இடத்தில் விடுகதைப் போட்டி நிகழும். வடஇந்திய அசுவமேதயாகத்தின் போது விடுகதைகளைப் பயன்படுத்தினர் என்பது இவண் நினைக்கத்தக்கது.

கீழ்க்காணும் பஞ்சாபி விடுகதை தமிழில் தேங்காயைப் பற்றி வரும் விடுகதையோடு ஒப்பிடத்தக்கது.

உயரே வாழும், பறவையும் அல்ல
மூன்று கண்ணிருக்கும் சிவனும் அல்ல
பால் கொடுக்கும், பசுவும் அல்ல
தாடியோடு இருக்கும், சாதுவும் அல்ல
நீர் நிரம்பி இருக்கும், கோப்பையும் அல்ல
அது என்ன? (தேங்காய்)

நாட்டுப்புறப் பாடல்

இன்ப துன்ப பக்தி உணர்ச்சிகளைப் பரிமாறிக் கொள்வதற்கும் பாடல்கள் தேவைப்படுகின்றன. இந்திய மொழிகளில் தாலாட்டு, மரணம், விழா, வழிபாடு, ஆட்டம், திருமணம், தொழில் ஆகியவற்றோடு தொடர்புடைய பாடல்கள் நிறைய காணப்படுகின்றன. காதல் பாடல்கள் மராத்தி மொழி தவிர இந்திய மொழிகள் அனைத்திலும் காணப்படுகின்றன என்று துர்கா பகவத் குறிப்பிடுகின்றார். தாலாட்டுப் பாடல்கள் மலையாளத்தில் தாராட்டு என்றும், தெலுங்கில் ஜொலப்பாலு என்றும், கன்னடத்தில் ஜோகுல என்றும், வங்காளியில் புலா நொசரா என்றும், காஷ்மீரியில் மன்ஜூலி, என்றும், ஒரியாவில் நானாபாயா என்றும் வழங்கப்படுகின்றன. பஞ்சாபில் ஆண்குழந்தை அத்தைமாரால் பாடல் பாடப்படுகின்றது. குழந்தைகள் தாங்கள் விளையாடும் போது விளையாட்டுப் பாடல்களை பாடுகின்றார்கள். அசாமில் திருமணப்பாடல்கள் மிக விரிவாக எட்டு நிலைகளில் பாடுகிறார்கள். மழைபெய்யா காலத்தில் தவளைக்குத் திருமணம் செய்து வைத்து மழையை எதிர்நோக்கும் நம்பிக்கை அசாமில் காணப்படுகின்றது. இதிலும் பாடல் பாடுகின்றார்கள். மேலும் கொசுக்களை விரட்ட நாட்டுப்புறப் பாடல்களைப் பாடுகின்றார்கள்.

புத்தாண்டு, தீபாவளி, தசரா, சிவராத்திரி, கிருஷ்ணஜெயந்தி, துர்கா, நவமி, பொங்கல், ஈத் ஆகிய விழாக்களின் போது பாடல்கள் பாடி மகிழ்கின்றனர். தெய்வங்களைப் பரவும் பாடல்களும் உள்ளன. வெவ்வெறு தொழில்கள் செய்வோர் தமது அலுப்பை - சலிப்பை மறப்பதற்குப்பாடல்கள் பாடுகின்றார்கள். உழவர், வண்டிக்காரன், படகோட்டி, பச்சைகுத்துவோர், மாடுமேய்ப்பவர் ஆகியோரின் பாடல்கள் குறிப்பிடத்தக்கவை. விவாத உரையாடல்கள் பாடல்கள் (லாவணி) தமிழ், சிந்தி, காஷ்மீரி, உருது போன்ற மொழிகளில் காணப்படுகின்றன. கைகொட்டி கும்மி அடித்து, கோலாட்டம் ஆடிப்பாடும் பாடல்கள் தென்னிந்திய மொழிகளிலும் குஜராத்திலும் வழங்கி வருகின்றன. பொருளிலும் உத்தியிலும் சில ஒப்புமைகளைப் பாடல்களில் காணமுடியும். அதற்கு நிறைய மொழி பெயர்ப்பு பாடல்கள் தேவை.

கதைப்பாடல்

எல்லோருக்கும் தெரிந்த நாட்டுப்புறக்கதை ஒன்று பாடல் வடிவில் இசைவடிவில் பாடப்பட்டால் அதைக் கதைப்பாடல் என்கிறோம். கதைப்பாடல்கள் இசைக்கருவியின் துணையோடு பாடப்பெறும். சில சமயங்களில் பாட்டைத் தொடர்ந்து நாட்டியமும் நடைபெறும். கதைப்பாடலில் முக்கியமான வரலாற்று நிகழ்ச்சியோ அல்லது மக்கள் போற்றும் தலைவனோ தலைவியோ இடம் பெறுதல் உண்டு. அவலத்தில் முடிந்த லட்சியக் காதல், கலப்புத் திருமணம், சாதி எதிர்ப்பு, நரபலி வீரமரணம், தற்கொலை, பசுவின் நேர்மை, துறவு பூண்ட அரசன், மகனை உணவுக் கறிக்காக இழக்கும் தியாகம், உடன்கட்டை ஏறல், நாடு கடத்தப்படல், தன் மக்களைக் கொன்ற தாயின் நிலை, தன் தலையைத் தானே வெட்டிப் பலிகொடுத்தல் போன்றவைகள் கதைப்பாடலின் தோற்றத்திற்கு அடிப்படை காரணிகளாய் அமைகின்றன.

இந்திய கதைப்பாடல்களை, புராணக்கதைப்பாடல்கள், வரலாற்றுக் கதைப் பாடல்கள், சமூகக்கதைப் பாடல்கள் என்ற மூன்று பெரும் பிரிவுக்கு அடக்கலாம். இம்மூன்றிலும் அடங்காத சில கதைப்பாடல்களும் உள்ளன. புராணங்கள், இதிகாசங்கள் ஆகியவற்றில் இடம் பெறும் கிளைக்கதைகள் நாட்டுப்புறக் கதைப்பாடலாக ஆக்கம் பெறுகின்றன. அந்தந்த வட்டாரங்களில் நடந்த போர்களில் - கழகங்களில் வீரமரணம் அடைந்த நாட்டுப்புறத் தலைவர்களைக் கொண்டு வரலாற்றுக் கதைப்பாடல்கள் தோன்றியுள்ளன. ஆங்கிலேயரை எதிர்த்துத் தூக்குத் தண்டனை பெற்ற தமிழ் நாட்டு கட்டபொம்மனைப் பற்றியும் அசாமிய மணிராம் திவானைப்பற்றியும் கதைப்பாடல்கள் தோன்றியுள்ளன. அசாமில் நெசவு, உழவு, பருத்தி, ராட்டை ஆகியவற்றின் தோற்றம் மற்றும் தெய்வீகத்தன்மைகளை எடுத்துரைக்கும் கதைப்பாடல்கள் காணப்படுகின்றன. கதைப்பாடல்கள் இடம் பெயரலும் உண்டு.

நல்லதங்காள் கதை, தேசிங்குராஜன் கதை தமிழ், தெலுங்கு இரண்டு மொழிகளிலும் காணப்படுகின்றன. இரவிக்குட்டிப்பிள்ளைப் போர் தமிழிலும் மலையாளத்திலும் உள்ளது. கபிலைகதை தமிழிலும் கர்நாடகத்திலும் சொல்லப்படுகின்றது. பல கதைப்பாடல்கள் அந்தந்தப் பகுதிகளுக்கே உரியவை. சில கதைப்பாடல் அச்சு வடிவம் பெறும் போது மாநிலம் முழுவதற்கும் அறிய வருகின்றது. கதைப்பாடல் கலைஞர்கள் எல்லா மாநிலங்களிலும் உள்ளனர். தமிழில் அயோத்தி கதை, அண்ணன்மார் சுவாமி கதை போன்றவை நாட்டுப்புறக் காப்பியங்கள். கன்னடத்தில் பி.கே.இராசசேகரன் 1973-இல் மலை மாதேஸ்வரா என்னும் காப்பியத்தை 1200 பக்கங்களில் அச்சிட்டு வெளியிட்டுள்ளார். இது ஃபின்னிஷ் தேசியக் காப்பியமான கலிவல என்பதைக் காட்டிலும் பெரியது என்று சொல்லப்படுகிறது. பல கதைப் பாடல்கள் அந்தந்த பகுதிகளுக்கே உரியவை. டோலோ ஆல்ஹா போன்ற இந்திக் கதைப்பாடல்கள் காப்பியப் பரிமாணங்களைக் கொண்டவை. ஆல்ஹா என்னும் காப்பியக் கதைப்பாடலில் 52 சண்டைகள் வருகின்றன. இச்சுவையான கதைப்பாடலை அதிகாரிகள் மக்களைப் படையில் சேர்க்க நிகழ்த்தியதாகச் சொல்லப்படுகின்றது. விவாத முறையில் இருவர் உரையாடும் லாவணிக் கதைப்பாடல்கள் தமிழ் மராத்தி, பஞ்சாபி ஆகிய மொழிகளில் காணப்படுகின்றன. காதலும் வீரமும் கதைப்பாடல்களின் உயிராகவும் ஆன்மாவாகவும் இருக்கின்றன.

நாட்டுப்புறக்கதை

இந்தியாவைக் கதைகளின் தாயகம் என்று சொல்வார்கள். நினைவிற்கு அப்பாற்பட்ட காலந்தொட்டே இந்தியாவின் பல பகுதிகளில் பல்வேறு கதைகள் வழங்கி வருகின்றன. வடமொழியில் உள்ள பஞ்சதந்திரக்கதைகளும் இதோபதேசக் கதைகளும் இந்தியா முழுவதிலும் பரவியுள்ளன. புராண, இதிகாச, புத்தசாதகக் கதைகளும் பரவலாக உள்ளன. பண்டித நடேச சாஸ்திரி (தக்காண பூர்வ கதைகள்) க.அ. இராமசாமிப் புலவர் (தென்னாட்டுப் பழங்கதைகள்) ஆகியோர் தென்னிந்தியாவில் வழங்கி வரும் கதைகளைத் தொகுத்து வெளியிட்டுள்ளார்கள். இந்திய நாட்டுப்புறக்கதைகள் ஆங்கிலத்தில் பல தொகுதிகளாக வந்துள்ளன. இக்கதைகளை மனிதக்கதைகள், மிருகக்கதைகள், மந்திரக்கதைகள், தெய்வக்கதைகள் என்னும் பிரிவிற்குள் அடக்கலாம்.

மானிடவியல் அறிஞர் எல்வின் ஒரிஸாவின் பழங்குடிப் புராணக்கதைகள் என்னும் நூலை வெளியிட்டுள்ளார். இதில் சூரியன், சந்திரன் படைப்புபற்றிய கதைகள் இந்தியா முழுவதும் உள்ள பழங்குடி மக்களிடையே ஒன்றாக உள்ளது என எடுத்துக்காட்டியுள்ளார். நாட்டுப்புறக்

கதைகளை அமைப்பியல் நோக்கில் ஒப்பிட்டு ஆராய்ந்தால் இந்திய நாட்டுப்புறக்கதைகளுக்குரிய பொதுவான கூறியல்களைக் (Motifs) காணமுடியும். சொர்ணநசகாளியும் ஏழு சகோதரர்களும் என்னும் கதை தமிழ், மலையாளம், மராத்தி, குஜராத்தி ஆகிய மொழிகளில் திரிந்து பல்வேறு வடிவங்களில் காணப்படுகின்றது என்று கூறுவர். இவ்வாறு ஒற்றுமையுள்ள கதைகளைத் தொகுத்து மீட்டுருவாக்கம் செய்து மூலத்தைக் காணலாம். வட்டக்கதையமைப்பு, முக்கோணக் கதையமைப்பு, வினாவிடை அமைப்புக்கதைகள் காணப்படுகின்றன. கீழ்க்காணும் ஒரிசா கதைச் சொல்லும் முறை தமிழில் தேன், தேன் என்னா தேன்? என்னும் பாடலோடு ஒப்பிடத்தக்கது.

கதை ஒன்று சொல்கிறேன்

என்ன கதை?
தவளைக் கதை
என்ன தவளை,
மரத் தவளை
என்ன மரம்?
செக்கு மரம்
என்ன செக்கு?
எண்ணெய்ச் செக்கு. . . .

நாட்டுப்புற நாடகம்

இந்தியாவில் கூத்தும் நாடகமும் மிக நீண்ட தொன்மையான பாரம்பரியத்தைக் கொண்டவை. ஒவ்வொரு இனமும் தமது பண்பாட்டிற்கு ஏற்ப, பலவகைப்பட்ட நாடகங்களைத் தந்துள்ளன. இந்திய நாட்டுப்புற நாடகங்களில் உரையாடலின் பங்கு குறைவு, இசைப்பாடலின் பங்கு அதிகம். கதைப்பாங்கு பாத்திர வளர்ச்சி ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் தரப்படுவதில்லை. பெண் பாத்திரத்தை ஆடவரே ஏற்று நடித்து வருகின்றனர். இந்நிலை இப்போது மாறிவருகின்றது. கூத்தாடி மேற்கே பார்ப்பான், சம்சாரி கிழக்கே பார்ப்பான், என்று தமிழில் சொல்லுவதைப் போல, முன்னிரவில் நாடகம் தொடங்கப்பட்டு விடியற்காலை வரை நடைபெறும். நாடகங்கள் ஏதேனும் சமய வழிபாட்டோடு, விழாவோடு தொடர்புடையவை. குறிப்பிட்ட தெய்வத்திற்குக் குறிப்பிட்ட நாடகம் போடுதல் உண்டு. நாடகங்கள் சமயவழிபாட்டிலிருந்து சமய சமுதாய விழாக்களோடு நெருங்கிய உறவினைக் கொண்டதாக உள்ளன. நாட்டுப்புற நாடகங்களின் உரையாடல்களில் காம உணர்வு (Obsenity) பரவலாகக் காணப்படுகின்றது.

பெரும்பாலும் நாடகத்தின் கதைக்கருக்கள் புராண இதிகாசங்களிலிருந்து எடுக்கப்படுகின்றன. இரண்டாவதாக வரலாற்றுக் கதைகள் இடம் பெறுகின்றன. சமகால குடும்ப வாழ்வு மிக அரிதாக இடம் பெறுகின்றது. ஹிட்லர்,

நெப்போலியன் போன்ற தலைவர்கள் நாட்டுப்புற நாடகங்களில் இடம் பெறுதல் இல்லை. யட்சகானம் என்னும் நாடக வகை தமிழ், கன்னடம், தெலுங்கு ஆகிய மூன்று மொழிகளிலும் காணப்படுகின்றது. உழவர்களின் வாழ்க்கையை அடிப்படையாக கொண்ட மலையாள காக்கன் நாடகமும், தமிழ் பள்ளுநாடகமும் ஒப்பிடத்தக்கது, சவிட்டு நாடகம் தமிழ் மலையாளக் கிறித்தவர்களிடையே வழக்கிலிருந்து சிறிது சிறிதாக மறைந்து கொண்டு வருகின்றது. தமிழிலும் தெலுங்கிலும் குறவஞ்சி நாடகங்கள் தத்துவப் பொருளை பக்திச் சுவையுடன் எடுத்துரைக்கின்றன. தமிழில் தெருக்கூத்தைப் போன்று தெலுங்கில் வீதி நாடகம் நிகழ்த்தப்படுகின்றது. தமிழ் பொய்க்கால் குதிரையாட்டமும், ஒரிஸா, சைதிகோதாநாதா ஆட்டமும் ஒப்பிடுதற்குரியவை. ஒழுக்கத்தையும், தர்மத்தையும் வலியுறுத்தும் நோக்கம் எல்ல நாடகங்களிலும் இழையோடுகின்றது.

முடிவுரை

மேலை நாட்டில் வாய்மொழி இலக்கியங்களைப் பற்றிய ஒப்பிட்டு ஆராய ஒப்பிலக்கியம் என்னும் துறையைத் தோற்றுவித்ததாகக் கூறுவார்கள். ஆனால் இந்தியாவில் ஒப்பிலக்கியத் துறை இந்திய நாட்டுப்புற இலக்கியங்களை ஒப்பிட்டு ஆராய்ந்து பொதுப்பண்புகளையும் சிறப்புப் பண்புகளையும் வெளிக் கொணர வேண்டும் என்னும் நிலையில் உள்ளது. இந்தியப் பண்பாடு வேற்றுமையில் ஒற்றுமை உடையது என்பதை ஆய்வுச்சான்றுகளின் வழி நிதர்சனமாகக் காட்ட வேண்டும். மொழியாலும் பழக்கவழக்கத்தினாலும் மேலோட்டமான வேற்றுமைகள் இருந்தாலும் மாற்றார் ஆட்சியாலும் மதக் குறுக்கீடுகளினாலும் இந்திய மக்களின் சிந்தனையில் ஒருமைப்பாடு ஏற்பட்டுள்ளது. அந்த ஒருமைப் பாட்டைக் காண நிறைய மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட நாட்டுப்புற இலக்கியங்கள் தேவை பிறமொழிகளிலிருந்து தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ வாய்மொழி இலக்கியங்கள் மொழிபெயர்க்கப்படும் போது இந்திய நாட்டுப்புற இலக்கியங்களிலும் ஒப்பியல் ஆய்வுகள் பல்கிப் பெருகும் என்பதில் ஐயமில்லை.

*

துணைநூற் பட்டியல்

1. George, K.M., **Comparative Indian Literature**, Vol:1, Macmillan India Ltd., Madras, 1984.

2. சக்திவேல், சு., **நாட்டுப்புற இயல் ஆய்வு**, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1983.

3. பிச்சை, அ., **தமிழ்நாட்டுப்புறவியலின் ஆய்வுவரலாறு**, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை-113. 2003.

*

5

தமிழும் பிறமொழி உறவுகளும்

1. கலிங்கம்

ஆரியவர்த்தத்தின் ஒரு பகுதியாகிய வங்காளத்திற்கும் திராவிட தேசத்தின் ஒரு பகுதியாகிய ஆந்திரத்திற்கும் இடையில் கிழக்குக் கடற்கரைப் பிரதேசமாக அமையும் நாடு கலிங்கமாகும். ஆரியம், திராவிடம் என்னும் இரண்டு பண்பாட்டுத் தாக்கங்களினால் தனக்கென ஒரு சிறப்பான பண்பாட்டை உருவாக்கிக் கொண்டது கலிங்கம் ஆகும். இன்றைய இந்திய அரசியல் அமைப்பில் கலிங்கம் ஒரிசா மாநிலத்தின் தென்பகுதியாக அமைந்துள்ளது. தமிழகம், கலிங்கம் ஆகிய இரு நாடுகளுக்கிடையே இருந்த பண்பாட்டு வரலாற்றுப் பரிவர்த்தனையைச் சுட்டிக் காட்டுகின்றது இக்கட்டுரை.

1.1 வாணிபம்

1.1.1 தமிழகத்திற்கும் கலிங்கத்திற்கும் சங்க காலத்திலிருந்தே கடல்வழி வாணிப உறவு இருந்து வந்துள்ளது. தமிழக வாணிகச் சாத்து கி.மு.3-ஆம் நூற்றாண்டு முதல் கி.மு.150 வரையில் கலிங்கத்திலே தங்கி வாணிபம் செய்தது. அவர்களுடைய வாணிபம் நாளுக்கு நாள் பெருகிச் செல்வாக்கும் வலிமையும் அமைந்து, அப்பொழுது கலிங்க நாட்டையாண்ட காரவேலன் என்னும் மன்னன் தமிழக வணிகரால் தன்னுடைய ஆட்சிக்கு ஆபத்து உண்டாகும் என்று கூறும் செய்தியை ஹத்திகும்பா குகைக் கல்வெட்டிலிருந்து அறிகிறோம்.

1.1.2 பல்லவர், சோழர், நாயக்கர் ஆட்சிக்காலங்களில் வாணிப உறவு தொடர்ந்து வந்திருக்க வேண்டும். பூம்புகார், தொண்டி ஆகியவற்றைப் போல் கலிங்கப்பட்டினம் சிறந்த துறைமுகமாக விளங்கியுள்ளது. கலிங்கம் என்னும் பருத்தி ஆடை தமிழகத்திற்கு இறக்குமதி செய்யப்பட்டது. கலிங்கம் என்னும் சொல் தமிழில் பொதுவாகத் துணியைக் குறிக்கப் பயன்பட்டதிலிருந்து அதன்

செல்வாக்கை உணரலாம். சீனப்பட்டு கலிங்கத்தின் வழியாகத் தமிழகத்திற்கு வந்ததால் அதனை நூலாக்கலிங்கம். என்று அழைத்தனர். இக்கலிங்கம் போனால் என்ன சொக்கலிங்கம் உண்டே துணை, என்ற தனிப்பாடல் அடியும் கலிங்கத்தின் செல்வாக்கை வலியுறுத்துகின்றது.

1.2. அரசியல்

1.2.1 குறுநில மன்னர்களை அடிமைப்படுத்திப் பெருவேந்தர்கள் தோன்றினார்கள் என்பதை இந்திய அரசியல் வரலாறு கூறுகிறது. கி.மு.முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த காரவேலன் என்னும் சமண மன்னன் தனது பதினோராம் ஆண்டு ஆட்சிக்காலத்தில் தெற்கு நோக்கிப் படையெடுத்து வந்தான் என்றும், தமிழக மூவேந்தர்களை வென்றான் என்றும், பாண்டிய மன்னன் காரவேலனுக்கு நிறைய நவமணிகளைத் திறையாக அளித்தான் என்றும் ஒரியா வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன. இவனைப் போல சூரிய வம்சத்தையும் தோற்றுவித்த கபிலேந்திரன் (கி.பி. 1435-1468) சோழரை வென்று காவிரி கரை வரைக்கும் தனது ஆட்சியெல்லையை விரிவுபடுத்தினான் என்றும், இவனுடைய மகள் ஹம்வீர மகாபத்திரன் தென் பகுதிகளுக்கு வைஸ்சிராயாக இருந்தான் என்றும் ஸ்ரீரங்கம் கோவிலுக்குப் பசுக்களை வழங்கினான் (கி.பி. 1464) மகாபத்திரன் என்று கல்வெட்டு தெரிவிக்கின்றது.

1.2.2 கங்க வம்சத்தைச் சேர்ந்த ராஜராஜதேவன்மிமி (1070-1077 கி.பி) என்பவன் வடக்கே சூரிய வம்சத்தைச் சேர்ந்த உத்கல மன்னனையும் தெற்கே சாளுக்கிய வேங்கி மன்னையும் அடக்கியாண்டவன். அப்போது சோழநாட்டிற்கு அரசனாக முதலாம் குலோத்துங்கன் ராஜேந்திசோழன் மிமி என்னும் பெயரில் அரியணை ஏறினான். வேங்கி நாடு இவனது ஆட்சியின் கீழ் இருந்தது. ராஜராஜதேவன் வேங்கி நாட்டின் மீது படையெடுத்து வென்றான். முதலாம் குலோத்துங்கன் தனது மகள் ராஜசுந்தரியை ராஜராஜதேவனுக்குக் கொடுத்துச் சமரசத்தை ஏற்படுத்திக் கொண்டான்.

ராஜராஜதேவன்மிமி ஏழு ஆண்டுகள் ஆட்சிக்குப் பிறகு கி.பி. 1077-இல் இறந்து போய் விட்டான். அவனது இரண்டு வயது மூத்த மகன் சோழகங்க தேவன் அரசுரிமை பூண்டான். இச்சமயத்தில் குலோத்துங்கன் வேங்கி நாட்டின் பிரதிநிதியாக இரண்டாவது மும்முடிச் சோழனையும், பின்பு மூன்றாவது மகன் வீரசோழனையும் அமர்த்தினான். வீரசோழன் நீண்ட காலம் கி.பி.1093 வரைக்கும் ஆட்சி செய்தான். ஆனால் கலிங்க தேசத்தோடு ரகசிய உறவு வைத்திருந்தான். எனவே குலோத்துங்கன் அவனை நீக்கி விட்டு நான்காவது மகனை வேங்கி நாட்டை நிர்வாகம் செய்ய வைத்தான். வீரசோழன் தனது சகோதரியின் மகனான சோழகங்கதேவனுக்குத் தனது மகளைத் திருமணம் செய்து வைத்தான்

(கி.பி.1093). இதனால் கலிங்கப் போர் கி.பி. 1093-94 ஆம் ஆண்டில் நடைபெற்றது. வீரசோழன் கலிங்கர் படைக்குத் தலைமை தாங்கினான். கலிங்கரிடமிருந்து அந்நாட்டின் தென்பகுதியைச் சோழமன்னன் பெற்ற இரண்டாவது கலிங்கப் போர் கி.பி.1110 ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. சோழர் படைகளும் கலிங்கர் படைகளும் தீவிரமாகப் போரிட்டன. கலிங்கத்திற்கு இதனால் பெருஞ்சேதம் விளைந்தது. இப்போரைப் பற்றிக் கலிங்கத்துப் பரணி குறிப்பிடுகின்றது.

1.2.3 கி.பி. 1568-இல் சூரிய வம்சத்தைச் சேர்ந்த முகுந்தன் தேவன் இறந்த பின்பு முஸ்லீம் மன்னன் கலிங்கத்தைக் கைப்பற்றினான். ஆப்கானியர்கள், மொகலாயர்கள், சுல்தான்கள், மராத்தியர்கள் என்பவர்கள் சில காலம் ஆண்டபின்பு ஆங்கிலேயர் வசம் வந்தது. கலிங்கத்தின் தென்பகுதி (கஞ்சம், கொராபுட் மாவட்டத்தைச் சேர்ந்த சில பகுதிகள்) மதராஸ் மாகாணத்தோடு இணைக்கப்பட்டன. தமிழகத்திற்கும் கலிங்கத்திற்கும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 150 ஆண்டுகள் அரசியல் கலாச்சாரத் தொடர்பு ஏற்பட்டது.

1.3 *சமயம்*

1.3.1 சமய வளர்ச்சியில் தமிழகத்திற்கும் கலிங்கத்திற்கும் ஒற்றுமையும் தாக்கமும் காணப்படுகின்றன. கலிங்கத்தில் காரவேலன் காலத்தில் சமணமும் அதற்குப் பின்பு பௌத்தமும், கலிங்கர்களின் ஆட்சிக் காலத்தில் சைவமும் வைணவமும் வளர்ச்சி பெற்றதைப் போலத் தமிழகத்திலும் ஆரம்ப காலத்தில் சமணமும் பௌத்தமும் சோழர் காலத்தில் சைவமும், நாயக்கர் காலத்தில் வைணவமும் வளர்ச்சி பெற்றுள்ளதைக் காணலாம். 12-ஆம் நூற்றாண்டில் தமிழகத்தைச் சேர்ந்த இராமானுஜர் கலிங்க நாட்டிலுள்ள பூரிஜெகந்நாதர் கோவிலில் போகமண்டபத்தைக் கட்டியும் வழிபாட்டு முறைகளை மாற்றியும் திருத்தொண்டு செய்தார் என்று வரலாறு கூறுகின்றது. மேலும், 15-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆண்ட புருஷோத்தமன் காஞ்சியிலிருந்து கொண்டுவந்த கணபதி சிலை பூரிஜெகந்நாதர் கோவிலில் பின்பகுதியில் வலப்புறத்தில் காஞ்சிக் கணபதி என்னும் பெயரில் இன்றும் ஒரியா மக்களால் வணங்கப்படுவதைக் காணலாம்.

1.3.2 கங்க வம்சத்தைச் சேர்ந்த நரசிம்மதேவன் மிமி (கி.பி.1238-1264) கொனாரக்கில் சூரியக் கடவுளுக்கு ஒரு பிரம்மாண்டமான கோவிலை எழுப்பினான். தமிழகத்திலும் ஆடுதுறைக்கு அருகில் சூரியனார் கோவில் ஒன்று உள்ளது. சூரியகுலத்தைச் சேர்ந்த சோழர்களும் பிற்காலக் கங்கர்களும் சூரிய வழிபாட்டைப் போற்றியதை இக்கோவில்கள் எடுத்துரைக்கின்றன. கலிங்கத்திலும் வங்காளத்திலும் வைணவத்தைப் பரப்பிய சைதன்யர் தென்னகத்திற்கு வந்து தமிழ் வைணவத்தை அறிந்து வடநாட்டில் வைணவ இயக்கத்தைத் தொடங்கி வைத்தார் என்று சைதன்யர்

வாழ்க்கை வரலாறு கூறுகின்றது. ஜெகந்நாதர் தேர்த் திருவிழா மற்றும் தெப்பத் திருவிழா தமிழகத் திருவிழாக்களையே நினைவூட்டுகின்றன. தமிழகத்தைப் போலவே ஓரிசாவில் அம்மன் வழிபாடு அதிகமாக உள்ளது என்றும், பிராமணர் அல்லாதார் கிராம தேவதைக் கோவிலுக்குப் பூசாரிகளாக இருப்பதும், ஆடு, மாடு, கோழி ஆகியவற்றைப் பலி பொருளாகக் கொடுப்பதும் பரவலாகக் காணப்படுகிறது என்றும் ஓரியா நாட்டுப்புறவியல் நூலிலிருந்து அறியலாம்.

1.4 இலக்கியம்

1.4.1 சிலப்பதிகாரத்தின் 23-வது காதையாக அமைகின்ற கட்டுரைக் காதையில் மதுராபதித் தெய்வம், கோவலன் கொலையுண்டமைக்கான காரணத்தை ஒரு பழம் பிறப்புக் கதையின் மூலமாகச் சொல்கின்றது. கோவலன் முற்பிறப்பில் கலிங்கநாட்டு சிங்கபுரத்தில் பரதன் என்னும் பெயருடையவனாய் இருந்தான். பரதனுக்குப் பகைவனாய் இருந்த சங்கமன் என்னும் வணிகன் பகைவர் ஊரிலிருந்து மாறுவேடம் கொண்டு தன் மனைவியோடு சிங்கபுரத்தில் புகுந்து அணிகலன் விற்று பொருளீட்ட முற்பட்டான். பரதன் அச்சங்கமனைப் பகை காரணமாகப் பிடித்துக் கொண்டு போய் இவன் கபிலபுரத்தினின்று வந்த ஒற்றன் என அரசனுக்குக் கூறினான். அரசன் அச்சங்கமனைக் கொல்வித்தான். கணவனைப் பிரிந்த நீலி கொடுத்த சாபத்தினால் இப்பிறவியில் கோவலன் கொலையுண்டான். இந்தக் கதையை அடிப்படையாகக் கொண்டு புரவலன் என்னும் எழுத்தாளர் கலிங்க நாயகி (1978) என்ற பெயரில் பெரிய புனைகதையை எழுதியுள்ளார்.

1.4.2 சாளுக்கிய குலத்தில் பிறந்த சோழர் குலத்தை விளங்க வைத்த பேரரசன் முதலாம் குலோத்துங்கன் கலிங்க நாட்டின் மீது படையெடுத்து வெற்றி கொண்டதைக் கலிங்கத்துப் பரணி காவியமாகப்பாடுகின்றது. சோழரது ஆட்சிக்கு உட்பட்டிருந்த கலிங்க மன்னன் ஆனந்தவர்மன் சோழகங்கதேவன் (கி.பி.1077-1147) திறை செலுத்தவில்லை என்ற செய்தியை, காஞ்சிக்கு வந்து சித்திரமண்டபத்தே எழுந்தருளியிருந்த குலோத்துங்கன் அறிகின்றான். இவனுக்கு அமைச்சனாகவும் படைத் தளபதியாகவும் இருந்த கருணாகரத் தொண்டைமானை அனுப்பி கலிங்க மன்னனைத் தோல்வியுறச் செய்கின்றான். தோற்ற நாட்டின் அழிவையும், வெற்றிபெற்ற மன்னனின் சிறப்பையும் கலிங்கத்துப்பரணி கூறுகிறது.

1.5 தொகுப்புரை

தமிழகத்திற்கும் கலிங்கத்திற்கும் சங்க காலம் தொட்டே வாணிபம் மற்றும் அரசியல் தொடர்புகள் இருந்துள்ளன. இத்தொடர்புகள் கலை, சமய, இலக்கிய உறவுகள் பெருகுவதற்கு வழி வகுத்துள்ளன. தமிழ் மன்னர்கள்

கலிங்கத்தின் பகுதியைக் கடந்து ஆண்டதையும், கலிங்கர் தமிழகத்தின் சில பகுதிகளைக் கவர்ந்து ஆட்சி செய்ததையும் இருநாட்டு வரலாற்று நூல்களும் குறிப்பிடுகின்றன. இவ்வரலாற்று நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு அந்தந்த மொழிகளில் இலக்கியங்களும் படைக்கப்பட்டுள்ளன. இவ்விரண்டு நாடுகளுக்கிடையே நிலவுகின்ற பன்முக உறவுகளை விரிவாகவும் ஆழமாகவும் ஆராய்வதற்கு இடமுண்டு.

2. குச்சரம்

இன்றைய குஜராத் மாநிலம் பழைய இலக்கியங்களில் குச்சரம், கூர்ச்சரம் என்று சுட்டப்படுகின்றது. சங்க காலம் தொட்டே குச்சரத்திற்கும், தமிழகத்திற்கும் அரசியல்-சமூக உறவுகள் இருந்து வருகின்றன.

2.1 சங்க காலம்

சங்ககாலத்தில் தமிழகத்தில் வாழ்ந்த வேளிர்களுள் இருங்கோவேள் என்னும் குறுநில மன்னனும் ஒருவன். இருங்கோவேளைப் பற்றிய கபிலரின் புறநானூற்றுப் பாடல் (201)

உவரா ஈகை துவரை யாண்டு
நாற்பத் தொன்பது வழி முறைவந்த
வேளிருள் வேளே! விறல்போர் அண்ணல்

என்று குறிப்பிடுகிறது. துவரை என்பது துவாரகையாகும். துவாரகையின் வேந்தருள் சிறப்பானவன் கண்ணன். இவன் பிறந்த துவாரகை இன்றைய குஜராத்தில் உள்ளது. குஜராத் நாட்டிலிருந்து வந்த மன்னர் வழியில் தமிழ் மன்னர்களாகத் திகழ்ந்தார்கள் என்று அறிகிறோம். இருங்கோவேளின் மரபினர் கொற்கை சூழ்ந்த பகுதியில் இன்னும் வாழ்ந்து வருகின்றனர் என்றும், முடிவைத்தானேந்தல், சிவகளை தெய்வச்சிலையார் (தெய்வச் செயல்புரம்) செக்காரக்குடி போன்ற ஊர்களில் இம்மரபினர் வருகின்றனர் என்று முனைவர் ச.கணபதிராமன் தம் நூலில் (1988:44) குறிப்பிட்டுள்ளார்.

2.2 இடைக்காலம்

தென்னாட்டில் காலடியில் பிறந்த ஆதிசங்கரர் இந்தியாவின் நான்கு திசைகளிலும் நான்கு திருமடங்களை நிறுவினார். அவற்றுள் ஒன்று துவாரகாவில் உள்ளது. சைவத்திருத்தலங்களுள் ஒன்றாக சோமநாத் ஆலயம் புகழ்பெற்றுள்ளது. பன்மொழிப் புலவர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் பிரமாண்டம் பவிஷ்யத் என்னும் புராண நூல்கள் பக்தி என்பதனை, ஒரு பெண் குழந்தையாக உருவகப்படுத்தி, இக்குழந்தை தமிழ்நாட்டில் பிறந்து (காவிரி, பொருநைக் கரைகளில்) வளர்ந்து, குஜராத்தை அடையும் போது முதியவளாக மாறுகின்றது என்று எடுத்துக் காட்டியுள்ளார்.

இம்முதியவள் மீராபாயைச் (கி.பி.1547-1614) சுட்டுவதாகக் கருதுவதற்கு இடமுண்டு. மீராவின் பிரேம பக்தி வடஇந்தியரின் பண்பாட்டில் மிகுந்த செல்வாக்கை ஏற்படுத்தியுள்ளது. குஜராத் மொழியில் இயற்பகைநாயனார் வரலாறு ஒருசில மாற்றம் பெற்று எழுதப்பெற்றுள்ளது. சிந்து கடக மன்னன் பல்லண்ணன் வரலாறு இயற்பகை நாயனாரைப் போன்று சித்தரிக்கப்பட்டுள்ளது.

2.3. நாயக்கர் காலம்

விஜயநகரப் பேரரசானது தலைக்கோட்டைப் போரில் (1565) வீழ்ச்சியுற்றுச் சிதறுண்டு போயிற்று. மதுரையில் திருமலை நாயக்கரின் ஆட்சி (1625-59) சீரும் சிறப்பும் பெற்று விளங்கியது. குஜராத்தின் ஒருபகுதியான சௌராஷ்டிரத்திலிருந்து பட்டுநூல்காரர்கள் எனப்படும் சௌராஷ்ட்ரா இனத்தவரை அங்கிருந்து வரவழைத்து மதுரையிலும் பல்வேறு பகுதிகளிலும் குடியேறச் செய்தார்கள். பருத்தி மற்றும் பட்டு நூல் ஆடைகள் உற்பத்தியில் இவ்வின மக்கள் சிறந்து விளங்குகிறார்கள். வணிகத்திலும் அரசியலிலும் செல்வாக்குப் பெற்றுள்ளார்கள். நரசிங்க மேத்தா (கி.பி.1415-1480) தயாராமே ஆகியோரைத் தொடர்ந்து கிருஷ்ணனைத் தலைவனாகவும் தங்களைக் கோபிகளாகவும் பாவித்துக் கொண்டு நாட்டியமாடிப் பக்திபாடல்களைப் பாடி இன்று சௌராஷ்டிரர்கள் பழையமரபைப் பின்பற்றி வருகின்றார்கள். எடுத்துக்காட்டாக நடன கோபாலநாயகி (1843-1914) என்பவரின் பக்திப் பாடல்களை ஒவ்வொரு சௌராஷ்டிரரும் அறிந்து வைத்துள்ளார்கள். இவர் சௌராஷ்டிரர்களின் சைதன்யர் என்று போற்றப்படுகிறார்.

2.4 இக்காலம்

ஆங்கிலேயர் வருகையினால் பம்பாய், சூரத், அகமதாபாத் பகுதியில் நிறைய புதுவகையான பருத்தி நெசவு ஆலைகள் தொடங்கப்பட்டன. உற்பத்தி செய்யப்பட்ட துணிகளை விற்க குஜராத்திகள் சென்னைக்கும் மதுரைக்கும் மற்றும் தமிழக ஊர்களுக்கு வந்து வணிகம் செய்து வருகின்றனர். குஜராத் போர்பந்தரில் பிறந்து வளர்ந்த இந்திய தேசப்பிதா மகாத்மா காந்தியடிகள் தமிழையும் நேசித்தார். இலண்டன் பல்கலைக் கழகத்தில் மெட்ரிக்குலேசன் தேர்வில் தமிழை ஒரு பாடமாகப் படிக்க பரிந்துரை செய்தார். இதுபற்றி இந்தியன் ஒப்பீனியன் இதழில் கட்டுரை வெளியிட்டார். மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை உப்புச் சத்தியாகிரகம், ஆகஸ்டு புரட்சி போன்ற சுதந்திரப் போராட்டங்களுக்கு மதுரை முக்கியமான கேந்திரமாகச் செயல்பட்டது. எம்.ஆர்.சுப்புராமன் காந்தியடிகள் நிகழ்த்திய போராட்டங்களில் கலந்து கொண்டு மதுரைக் காந்தி என்னும் சிறப்புப் பட்டத்தைப் பெற்றார்.

2.5. தொகுப்புரை

இன்றைய ஒப்பிலக்கியக் கல்வி குஜராத் இலக்கியத்தைத் தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தி வருகின்றது. கலா கே.தாக்கரின் ஒப்பாய்வு முன்ஷியின் வரலாற்று நாவல்களை அறிமுகப்படுத்தி உள்ளது (1988) பி.ஸ்ரீயின் ஆண்டாளும் மீராவும் என்னும் நூல் மீராபாயின் பிரேமபக்தியை விளக்குகிறது. இந்திரனின் பிணத்தை எரித்தே வெளிச்சம் என்பது குஜராத்திய தலித் இலக்கியப் படைப்புகளைத் தமிழாக்கம் செய்து தந்துள்ளது.

*

துணைநூற் பட்டியல்

1. Mansukhalal Jhaveri, **History of Gujarati Literature**, Sahitya Akademi, New Delhi, 1978.

2. Sahu, N.K., **History of Orisa, Nalanda**, Publishers & Book sellers, Cuttak-2. 1999 (5th ed.)

*

6

இந்தியக் கவிதைகளில் காந்தியத்தாக்கம்

தீவிரவாத தேச விடுதலை வீரர்களின் தலைவர் பாலகங்காதர திலகர் 1920-இல் இயற்கை எய்தினார். 1916-இல் இந்தியாவிற்குத் திரும்பிய காந்தியடிகள் 1920-இல் ஒத்துழையாமை இயக்கத்தின் மூலம் இந்திய அரசியலில் பிரவேசம் செய்தார். பேச்சு, எழுத்து, செயல் ஆகிய மூன்றின் வழியாகப் பாரதமக்களின் சக்தியை ஒருமுகப்படுத்தி அகிம்சை வழியில் பாரத விடுதலையை ஈட்டித் தந்தார். காந்தியுகம் என்றழைக்கப்படும் 1920-48ஆம் ஆண்டு கால கட்டத்தில் வாழ்ந்த எழுத்தாளர்களும் கவிஞர்களும் உண்மை, அகிம்சை, சத்தியாகிரகம், சர்வோதயம் போன்ற காந்தியக் கோட்பாடுகளால் கவரப்பட்டனர், பாதிக்கப்பட்டனர். அவரது வாழ்க்கை நிகழ்ச்சிகளை இலக்கியமாக்கி அமரத்தன்மையை வழங்கினர்.

அசாம்

1921-இல் காந்தியடிகள் அசாமிற்கு விஜயம் செய்தார். அது முதல் அசாமிய எழுத்தாளர்களுக்கும் காந்தியத்திற்கும் தொடர்பு ஏற்பட்டது. காந்தியடிகளின் அரிசன் பத்திரிகையில் வந்த சில சம்பவச் செய்திகள் கவிஞர்களுக்குப் பாடுபொருளாக அமைந்தன. அரிசன் பத்திரிக்கையில் வெளிவந்த கேரளப்பெண்ணைப்பற்றிய கௌமுதியின் துறவு என்னும் செய்தியை அடிப்படையாகக் கொண்டு அதுயி சந்திர ஹரிஜரிகளா என்பவர் கௌமுதி என்னும் கவிதையை எழுதினார். காந்தியடிகளின் வாழ்வைச் சித்திரிக்கும் கனகசந்திச்சர்மாவின் கவிதை நூலை (1931) பிரிட்டிஷ் அரசு தடை செய்தது. நீலமணிபுகின் என்பவர் ஜெயிலில் இருக்கும் ஜின்ஜிரி (Shackles) என்னும் ஹேம்பருவா, பிரேந்திரகுமார் பட்டாச்சார்யா, பத்மசார் சலிஹா, நளினி பாலாதேவி, ஜோதி பிரசாத் ஆகியோரின் கவிதைகளிலும் காந்தியத்தின் செல்வாக்கை உணரலாம்.

கன்னடம்

காந்தியடிகளின் போராட்டங்களும் அவரது சோகமான மரணமும் பல கன்னடக் கவிஞர்களைப் பாதித்துள்ளன. டி.ஆர். பேந்த்ரே, மாஸ்தி, கே.வி.புட்டப்பா,

டி.வி.குண்டப்பா, ஜி.கே.ஹெக்டே, பி.எச். ஸ்ரீதரன், பி.டி.நரசிம்மசாரி ஆகியோரின் கவிதைப்படைப்புகளில் காந்தியத்தாக்கத்தைக் காணலாம். பேந்த்ரே காந்தியின் வாழ்க்கை ஓர் அமைதி வீணையில் மீட்டப்பட்ட ராகம் எனக் கூறுகின்றார். இவரின் சூரியபான, அமர மரணம் எனும் கவிதைகள் காந்தியடிகளைப் பற்றியவை. கட்டிமணி வீ.சீதாராமையாவின் கவிதையில் வெள்ளையனே வெளியேறு என்னும் இயக்கத்தின் தாக்கம் காணப்படுகிறது. ரசிகசங்கரின் மானதேவ கவிதையில் காந்தியச் சிந்தனை விரிவான இடத்தைப் பெற்றுள்ளது. காந்தியடிகளின் மரணத்திற்குப்பின் அவரைப்பற்றிப் பல தன்னுணர்ச்சிப் பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன.

குஜராத்தி

குஜராத்தி மொழியில் உள்ள இலக்கிய வகைகளில் காந்தியக் தாக்கம் கவிதையில் தான் அதிகமாகக் காணப்படுகின்றது என்று திலிப் தாகூர் கூறுகின்றார். காந்தியடிகளின் தியாக மரணம் குஜராத்தியில் முதல் தரமான கவிதைகளைத் தோற்றுவித்துள்ளது என்பர். மேகனி, உமாசங்கர், சுந்தரம், காபர்தார், ஸ்நேகரஷ்மி, ஆகியோரின் கவிதைகள் காந்தியத்தால் பாதிப்புற்றவை. காந்தியடிகளின் உள்ளப் பாங்கினைக் குஜராத்தி மொழியில் தந்தவர் மேகனி என்பவர். இவரது யுகவந்தனம், என்னும் கவிதை நூல் புது யுகத்தின் குரலாகும். உமாசங்கர் ஜோஷி சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டார். அவரது விஸ்வசாந்தி என்னும் 500 அடிக்கவிதை உலக சகோதரத்துவத்தையும், உலக அமைதியையும் வலியுறுத்திப் பாடுகின்றது.

தெலுங்கு

காந்தியடிகளின் சமூகச் சீர்திருத்தக் கொள்கைகளும் விடுதலைப் போராட்டங்களும் தெலுங்குக் கவிதை இலக்கிய வளர்ச்சிக்குத் தூண்டல் அளித்துள்ளன. பலிஜெபல்லி லட்சுமி காந்தம் எழுதிய ஸ்வராஜ்யரதம், ஸ்வராஜ்ய சமஸ்ய என்னும் கவிதைகள் தேசியப் போராட்டத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி, திலகரின் தொண்டு, காந்தியடிகளின் அரசியல் பிரவேசம், காந்தியடிகளின் அழைப்பு, நாட்டு விடுதலையில் மக்களின் ஈடுபாடு ஆகியவற்றைச் சித்திரிக்கின்றன. பசவராஜு அப்பாராவ் மகாத்மாவின் பக்கிரி ஆடையையும் (Lion Cloth) மற்றும் பிற கொள்கைகளையும் ஆத்மகதா என்னும் பெயரில் செய்யுள் வடிவத்தில் மொழிபெயர்த்துள்ளார். சத்தியநாராயண ஆங்கிலேயரின் உப்புவரியைக் கேலி செய்யும் கவிதைகள் புனைந்துள்ளார். காந்தியடிகளின் அகாலமரணம் பல இரங்கற்பாடல்களின் பாடுபொருளாக அமைந்துள்ளது.

மராத்தி

சுதந்திரம் எனது பிறப்புரிமை என்று வீரமுழக்கம் இட்ட மராட்டிய மண்ணில் நிறைய தேசபக்திக் கவிஞர்கள் தோன்றினார்கள். மகாத்மாவின் நவகாளியாத்திரை மராத்திக் கவிஞர்களைக் கவர்ந்தது. வசந்த்பாபத் மகாயன் என்னும் நூலை எழுதினார். பி.பி.போர்கர் அமர்ஜீவன் என்பதையும் கங்கோஷ்

பட்கோன்கர் அமர்கஹனி என்பதையும் எழுதி வெளியிட்டார்கள். பி.பி.போக்கர் காந்தியடிகளின் வாழ்க்கையை மகாத்மயன் என்னும் பெயரில் 18,000 செய்யுட்களில் அலங்கார வார்த்தைகளால் வருணிக்காமல் ஓர் உயர்ந்த ஆன்மா தெய்வத் தன்மையை அடையும் புனிதப் பயணமாகக் காட்டியுள்ளார். மேலும் டி.ஜி. கேல்கர், பி.ஆர்.தம்பே, எம்.டி.பட்வர்தான், வி.டபிள்யு, ஷிட்வட்கர் ஆகியோரின் கவிதைகளில் காந்தியத் தாக்கம் உள்ளது.

மலையாளம்

மலையாளக் கவிதை இலக்கியத்தின் கவி மூவேந்தர்களுள் ஒருவர் வள்ளத்தோள். இவர் கேரளாவின் காந்தியக் கவிஞராகப் போற்றப்படுகின்றார். காந்தியடிகளைக் குருவாக ஏற்றுக் கொண்டு கதர், தீண்டாமை ஒழிப்பு, பெண்ணுரிமை போன்றவற்றைப் பாடுபொருளாகக் கொண்டு கவிதைகளை இயற்றியுள்ளார். என்றெ குருநாதன், காந்தி ஜெயந்தி, பாபூஜி போன்ற கவிதைகள் மகாத்மாவின் மகிமையைப் பறைசாற்றுபவை. "ஞாலமே குடும்பச் சொத்து நாங்கூழும் செடியும் எல்லாம் சாலவோர் குடும்பம்" எனக் கருதும் ஆசான் என்கிறார் வள்ளத்தோள். ஏசு, கண்ணன், புத்தன், சங்கரன், இந்திரன், அரிச்சந்திரன், முகமதுநபி, ஆகியோரின் நற்பண்புகளின் திரண்ட வடிவமே காந்தியடிகள் என்று வருணிக்கின்றார்.

ஜி.சங்கர குறுப்பின் கவிதைகளிலும் காந்தியத்தின் தாக்கத்தைக் காணலாம். தண்டி யாத்திரையைப்பற்றி ஒரு கவிதை இயற்றியுள்ளார். அதில் ஒரு மென்மையான ஆன்மா ஒரு கொடூரமான ஏகாதிபத்தியத்தின் துப்பாக்கிகளுக்கு எதிராக உப்புக்காய்ச்ச சென்ற போதே, இந்தியா தனது வரலாற்றில் தலைநிமிர்ந்து விட்டது என்று குறிப்பிடுகிறார். வெண்ணிக் குளம் கோபலகுறுப்பு காந்தியடிகளின் வாழ்வுப் பணியைப்பற்றி "ஸ்வராஜ்ய கீதம்" என்னும் கவிதையில் போற்றுகிறார்.

தமிழ்

பாரதியார் "மகாத்மா காந்தி பஞ்சகம" என்னும் கவிதையில் பாரததேசம் தன்னை வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா! நீ வாழ்க! வாழ்க!, என்று போற்றிப் பரவுகின்றார். இவரைத் தொடர்ந்து, பாரதிதாசன், திரு.வி.க., ச.து.சு. யோகியார், தேசிக விநாயகம் பிள்ளை, நாமக்கல் கவிஞர், சுத்தானந்த பாரதியார், எஸ்.டி.சுந்தரம், முருகேச பாகவதர் போன்றோர்கள் காந்தியடிகளின் பண்புகளையும் கொள்கைகளையும் தனிநிலைச் செய்யுட்களில் பாடியுள்ளனர். கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது என்னும் பாடலை உள்ளடக்கிய காந்தி அஞ்சலி என்னும் நாமக்கல்லாரின் கவிதைநூல் அவருக்குப் பெரும் புகழைத் தேடித்தந்தது.

காந்தியடிகளின் முன்பகுதி வாழ்க்கை நிகழ்ச்சிகளை 1952 வரைக்கும் கொண்டு நான்கு காண்டங்களில் 3000க்கும் மேற்பட்ட பாடல்களில் காந்திபுராணமாகப் பாடியுள்ளார் பண்டிதை அசாலாம்பிகையார். இதில் வழக்கு மன்றத்தில் காந்தியடிகள் அளித்த வரலாற்றுச்சிறப்புமிக்க வாக்கு மூலத்தை (8-3-1922) 310 வரிகளுக்கு மேல் கொண்ட நேரிசை ஆசிரியப்பாவில் இயற்றியுள்ளார். இவ்வாக்குமூலத்தை காந்தி பிள்ளைத்தமிழ் என்னும் பெயரில் 100 செய்யுட்களில் ராய.சொக்கலிங்கம் படைத்துள்ளார். மேலும் இவர் காந்தியந்தாதி, காந்தி மணிமாலை போன்ற சிற்றிலக்கியங்களையும் படைத்துள்ளார்.

கொத்தமங்கலம் சுப்பு மகாத்மாவின் வாழ்க்கையைக் காந்தி மகான் கதை என்ற பெயரில் நாட்டுப்புறப்பாடல் வடிவத்திலே எழுதி தமிழகமெங்கும் காந்தி மணம் கமழச் செய்தார். டி.கே.ராமானுசக் கவிராயர் மகாத்மா காந்தி காவியம் (1975) என்னும் நூலை வெளியிட்டுள்ளதாகத் தெரிகின்றது. அரங்க. சீனிவாசனின் மனித தெய்வம் காந்திகாதை (1980) என்னும் பெருங்காவியம் மகாத்மாவின் வாழ்க்கைமுழுவதையும் 5 காண்டங்களில் 77 பாடல்களில் 5000க்கு மேற்பட்ட செய்யுட்களில் பெரிய சித்திரமாக வரைந்து காட்டுகின்றது.

சி.சு.செல்லப்பாவின் "நீ இன்று இருந்தால்", என்னும் குறுங்காவியம் காந்தியத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் அதன் இன்றைய நிலையையும் புதுக்கவிதை வடிவத்தில் திறம்பட எடுத்துரைக்கின்றது. அப்துல் ரகுமான், மு.மேத்தா, இரா.வைரமுத்து, சக்திக்கனல், புவியரசு, தமிழன்பன், அழகர்சாமி ஆகியோரின் புதுக்கவிதைகளில் காந்தியத்தின் தாக்கத்தை உணரலாம், "பாட்டிலே காந்தி" என்னும் நூலை அழ. வள்ளியப்பா குழந்தைகளுக்காக எழுதி வெளியிட்டுள்ளார்.

முடிவுரை

மேலே கொடுக்கப்பட்ட செய்திகளைக் கொண்டு ஒப்பிட்டு ஆராயும் போது, கீழே தரப்பட்டுள்ள சில முடிவுகளைப் பெறலாம் :

1. இந்திய மொழிகளில் வங்களம், இந்தி, காஷ்மீரி, பஞ்சாபி, ஒரியா போன்ற மொழிகளைத் தவிர மற்ற மொழிகளில் காந்தியத்தாக்கம் அதிகமாகக் காணப்படுகின்றது. மதநம்பிக்கை, முற்போக்கு இலக்கியங்கள் ஆகியவற்றின் தாக்கம் அம்மொழிகளில் அதிகமாகக் காணப்பட்டதால் காந்தி, அங்கு செல்வாக்குப் பெறவில்லை.

2) எல்லா மொழிகளிலும் காந்தியடிகளைப் பற்றிய போற்றிப் பாடல்களும் (Odes) கையறுநிலைப் பாடல்களும் (elegies) தோன்றி உள்ளன.

3) ஏற்கனவே இலக்கிய வளமும் பழமையும் கொண்ட மொழிகளில் காந்தியடிகளின் வாழ்வைச் சிற்றிலக்கியமாகவும் பெருங் காப்பியமாகவும்

படைத்துள்ளனர். இதில் முன்னணியில் நிற்பது தமிழ். தமிழில் காந்தி பிள்ளைத் தமிழ் போன்ற சிற்றிலக்கியங்களும், காந்தி புராணம் போன்ற காவியங்களும் தோன்றியுள்ளன.

4) 18,000 செய்யுட்களைக் கொண்ட காந்தியடிகளின் வாழ்க்கைப் பெருங்காப்பியத்தை (மகாத்மயன்) பி.பி.போக்கர் மராத்தியில் படைத்துள்ளார்.

5) காந்தியடிகளின் சத்திய சோதனை என்னும் சுய சரிதை நூல் இந்திய மொழிகளில் அவரைப் பற்றிய காவியங்கள் தோன்றுவதற்குத் துண்டுகோலாய் அமைந்துள்ளது. அதைத் தெலுங்கில் செய்யுள் வடிவத்தில் மொழிபெயர்த்து உள்ளார்கள்.

*

துணைநூற் பட்டியல்

1 ராய.சொக்கலிங்கம், **காந்திக்கவிதை**, அழகப்பா கல்லூரி வெளியீடு, காரைக்குடி, 1969.

2. Nayak, H.M., ed, **Gandhiji in Indian Litreature**, Institute of Kannada Studies, University of Mysore, Mysore, 1971.

*

7

இந்திய இலக்கியத்தில் மார்க்சியத் தாக்கம்

முன்னுரை

1935 இல் பாரிசில் உலக முற்போக்கு எழுத்தாளர்கள் மாநாடு நிகழ்ந்தது. இதில் கலந்து கொண்ட-தெரிந்து கொண்ட சில இந்திய தீவிரவாத எழுத்தாளர்கள் இந்தியாவிலும் முற்போக்கு இலக்கியச் சங்கத்தை ஆரம்பித்தார்கள். இந்திய முற்போக்கு எழுத்தாளர்களின் மாநாடு லக்னோவில் 1936ல் "இந்தியாவின் கார்க்கி" என்றழைக்கப்படும் இந்தி (உருது) புனைகதை ஆசிரியர் பிரேம்சந்த் அவர்களின் தலைமையில் நடந்தது. 1917 இல் நிகழ்ந்த அக்டோபர் புரட்சி, பாட்டாளி அரசு, சமத்துவ சமுதாயம், நிலப்பிரபுத்துவ-முதலாளித்துவத்திற்கு எதிர்ப்பு பற்றிய கருத்துருவாக்கங்கள் இந்திய மொழிகளில் இலக்கிய வடிவங்களில் இடம் பெறலாயிற்று. மாநாட்டில் கலந்து கொண்ட பல்வேறு இந்திய மொழி எழுத்தாளர்கள் தத்தம் மொழிகளில் சோசலிச எதார்த்தவாதத்தையும், மார்க்சிய திறனாய்வு முறையையும் அறிமுகப்படுத்தி வளர்த்தனர்.

அசாமி

லட்சுமிதர் சர்மா என்பவர் முற்போக்கு இலக்கியத்தின் முன்னோடியாகத் திகழ்கின்றார். ஜெயந்தி மாத இதழ் முற்போக்கு இலக்கிய வளர்ச்சிக்கு உதவிக்கரம் நீட்டியது. முதலில் முற்போக்குச் சிறுகதைகள் (புரட்சிப் பெண் சிராஜ்) தோன்றின. பின்பு கவிதைகள், நாவல்கள், கட்டுரைகள் தோன்றின. கமல்நாராயணன் தேவியின் முற்போக்குக் கவிதைகளின் உத்திகள் முற்போக்குத் திறனாய்வுக்கு அடித்தளமிட்டது. பாபாநந்ததத்தா அமுல்ய பருவா, ஹெம்பருவா, ஜோதி பிரசாத் அகர்வாலா, விஷ்ணு பிரசாத்ராவ், ஹேமங்கவிஸ்வாஸ், சக்ரேஸ்வரர்பட்டாச்சார்யா, அமலேந்துகுகா, கேசவமகந்தா, ராம்கோகோய், ஹரென் கொஹைன், சிவநாத்பர்மன், ரவீந்திர சர்கார், பிஜன்லால்சௌத்ரி, ரஞ்சித் தேவ் கோசுவாமி ஷிராபத்ரா, அனில்ராய் சௌத்ரி, முகுத்பட்டாச்சார்யா, நிருபமா பொற்கோகய்ன், விபுல் கடனியர் ஆகியோர்

மார்க்சிய எழுத்தாளர்கள். அனில்ராய் சௌத்ரியின் கந்தரி (1979) என்னும் நாவல் அனைந்திந்திய ரயில்வே தொழிலாளர்களின் போராட்டத்தை எதார்த்த முறையில் சித்தரிக்கின்றது. சைனீக் பீர், சத்ரு, இபரர்கர் சிபரர்கர் (1979) போன்ற முற்போக்கு நாவல்களும் குறிப்பிடத்தக்கவை.

இந்தி

இந்திய புனைகதை இலக்கியத்தில் சோசலிச எதார்த்த முறையில் கிராமிய இந்தியாவின் விவசாயிகளைப் பற்றி அற்புதமான சித்திரத்தைத் (கோதான்) தந்து இந்திய இலக்கியத்தில் முன்னோடியாகத் திகழ்பவர் பிரேம்சந்த். இந்தியச் சமூக நாவல்களுக்குப் புதிய பரிமாணத்தையும் வழங்கியவர் இவர். இவரைத் தொடர்ந்து ராகுல் சாங்கிருத்யாயன், யஷ்பால், இலாச்சந்திர ஜோஷி, ராம்விலாஸ் சர்மா, நாகர்ஜூன், கேதார்நாத் அகர்வால், ராங்கேயராகவ், சுமன், திரிரோசன் ஆகியோர் புனைகதைகளின் மூலம் மனிதநேயத்தைச் சித்தரித்தனர். நிரலா (சுமித்திராநந்தன் பந்த்) தின்கர், நவீன், நரேந்திரசர்மா, முக்திபோத், ராம்விலாஸ் சர்மா, பிரகாஷ்சந்திர குப்தா, அமிரித்ராய், நாம்வர்சிங், சிவ்தன்சிங் சௌகான் ஆகியோர் முற்போக்குக் கவிஞர்கள். இவர்கள் மார்க்சிய கண்ணோட்டத்தில் இலக்கியப் படைப்புகளையும் விமர்சித்தனர்.

உருது

1935-இல் இலண்டனில் சஜ்ஜத் ஜாகிர் வெளியிட்ட எரிகரிகள் என்ற இலக்கியத் தொகுப்பை ஆங்கிலேய அரசு தடை செய்தது. அடுத்த ஆண்டு நிகழ்ந்த இந்திய முற்போக்குச் சிந்தனைகளை இலக்கிய வடிவங்களில் தந்தனர்.முற்போக்கு இலக்கியம் இடதுசாரி அரசியலைச் சார்ந்து படைக்கப்பட்டது. நாவல்களைக் காட்டிலும் சிறுகதைகளும் கவிதைகளும் முற்போக்கு, இலக்கியக் களஞ்சியத்தில் செல்வாக்குச் செலுத்தின. கிரிஷன் சந்தர், ராஜேந்தர்சிங் பேடி, சத்தத் உசேன்மண்டோ, இஸ்மத் சுக்தை, ஹயதுல்லா, அன்வாரி, கே.ஏ.அப்பாஸ், குர்ரஅதுல் ஐன் ஹைதர் ஆகியோர் புனைகதை மூலம் சுரண்டும் வர்க்கத்திற்கு எதிர்ப்புக் குரல் கொடுத்தனர். ஃபெய்ஸ் அகமது ஃபெய்ஸ், அஸ்ரருல் ஹஹ்மஜாஜ், மக்தும்மொகைதீன் போன்றவர்கள் கஜல் போன்ற கவிதை வடிவங்கள் மூலம் முற்போக்குச் சிந்தனைகளை முன்வைத்தனர். ஃபெய்ஸ், லெனின் அமைதி விருது பெற்றார். ஃபிரெக் கொரக்புரி, அலிசர்தார் ஜப்ரி, குர்துல் அய்ன் ஹைதர் ஆகியோர் ஞானபீடப் பரிசு பெற்று உருது இலக்கியத்திற்கு பெருமை சேர்த்தனர்.

ஒரியா

பகவதிசரண் பானிகிரகி ஒரிசாவில் பொதுவுடைமைக் கட்சியை நிறுவிய முதல் செயலாளர். இவர் பல பத்திரிக்கைகளில் பொதுவுடைமைக் கட்சிக் கொள்கைகளை எழுதிப் பரப்பினார். இவர் லெனினைப் புகழ்ந்து ஒரு கவிதை

வெளியிட்டார். ஆனந்த் பட் நாயக், ரகுநாத் நாயக், சசிரெளரத்ராய், மோகன் மிஸ்ரா, கோதாவரிஷ் மகாபத்ரா, கிருஷ்ணசரணபெகரா, சிந்தாமணி பெகரா ரபிசிங், பிராஜ்நாத்ரத், பிரசன்னபத்சனி, சதாசிவதாஸ் ஆகியோர் முற்போக்குக் கவிஞர்கள். சச்சிதானந்த ரெளத்ராயின் பாஜிலெளத் என்னும் மிக நீண்ட கவிதை போலிஸின் அடக்குமுறையையும் அரசியல் சிக்கல்களையும் எடுத்துரைக்கின்றது. கோபிநாத் மொகந்தி, ராம்பிரசாத் சிங் போன்ற நாவலாசிரியர்கள் முற்போக்கு இயக்கத்தைச் சார்ந்து புனைகதைகளை வெளியிட்டனர். முற்போக்குக் கவிஞர் கிருஷ்ணசெளத்ரி ஒரிசாவின் முதல்வர் ஆனார். ஒரிசாவில் கவிதைகள், கட்டுரைகள் ஆகியவற்றில் தான் மார்க்சிய தாக்கம் அதிகமாகக் காணப்படுகின்றது.

காஷ்மீர்

கலை வாழ்க்கைக்காக என்னும் கொள்கை உடையது முற்போக்கு இலக்கியம். நாற்பதுக்களில் கார்க்கியின் சிறுகதைகள் மொழி பெயர்க்கப்பட்டன. அப்துல் அஹத் ஆஜார் (1903-1948) வர்க்க உணர்வை வெளிப்படுத்தும் கவிதைகளை எழுதிப் புத்துணர்ச்சி ஊட்டினார். இவரைத் தொடர்ந்து குல்தும்ஹஸன் பெக் (அரிம்ப்) குலாம் அகமது (ஃபாசில்), நூர்முகமது (ரேஷன்) தினநத் (நதிம்) ஆகியோர் பல்வேறு சமூகப் பிரச்சனைகளைப் கருப்பொருட்களாகக் கொண்டு எழுதினார்கள். இவர்களுள் நதிம் தலைமைசான்ற கவிஞர். அப்துல் ரஹ்மான் ரஹி, அமின் கமில், ஷம்புநாத் பட் (ஹலிம்) குலாம் நபி (ஃபிரக்) ஏடிமஜ்புதர், மக்கன் லால் (மஹவ்) முஜாப்பர் (அஜிம்) மோதிலால் (சகி), சமன்லால் (சமன்) மகன் லால் (பெக்ஸ்) சையத் ரசுல் பொம்புர், அப்துல் சத்தார் (ரஜூர்) ஆகியோர் முற்போக்குக் கவிஞர்கள். ரோஷன், அமின் கமில், அலிமுகமத் லோன் ஆகியோர் உரைநடை வாயிலாகவும், மார்க்சியத் தத்துவங்களை எழுதி வெளியிட்டனர்.

குஜராத்தி

குஜராத்தில் 1940-இல் முற்போக்குச் சங்கம் தொடங்கப்பட்டது. இதன் சார்பாக, கவிதைகள், சிறுகதைகள், ஓரங்க நாடகம், கட்டுரைகள் ஆகியவற்றை இரண்டு தொகுதிகளாக வெளியிட்டனர். உமாசங்கர் ஜோஷி போன்றவர்களும் இத்தொகுதியில் எழுதியுள்ளனர். ஸ்வப்னஸ்தா (1903-1970), பகுவேஷ், ஜிதுயிய்மேத்தா, சந்திரபாய் பட் ஆகியோர் தூய, எளிய குஜராத்தியில் சமூக எதார்த்தத்தோடு தம் படைப்புகளை வெளியிட்டனர். இரண்டாம் உலகப் போருக்குப்பின் இந்த இயக்கம் தளர்ச்சியுற்றது. இருப்பினும், தலித் இயக்கத்தோடு முற்போக்கு இயக்கம் மீண்டும் மறுமலர்ச்சி அடைந்துள்ளது என்று கருதுவதற்கு இடமுண்டு.

சிந்தி

1940-க்குப்பின் கவிதையிலும் உரைநடையிலும் மார்க்சீயத் தத்துவம் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியது. கோவிந்த மல்கி உத்தம் கிரத்பாபனி ஆகியோர் இவ்வியக்கத்தை நடத்தியவர்கள். ரெஜிஸ்தானி புலா (1941) என்னும் பல ஆசிரியர்கள் எழுதிய சிறுகதைத் தொகுப்பு முற்போக்கு இயக்கத்திற்குக் கால்கோளிட்டது. கோவிந்த பஞ்சாபி, உத்தம், கிரத்பாபனி ஆகியோரின் சிறுகதைகள் குறிப்பிடத்தக்கவை. கோவிந்த் மல்கி இரண்டு டஜன் நாவல்களையும் மற்றும் சிறுகதைகளையும் நாடகங்களையும் வெளியிட்டுள்ளார். ஏ.ஜே.உத்தம் என்பவரின் சிறுகதைகள், இலக்கியக் கட்டுரைகள் ஆகியவைகள் ஐம்பதுகளில் அவருக்கு ஒரு நிலையான இடத்தைத் தேடித்தந்தன. சுந்ததி உத்தம்சந்தினி என்ற ஒரே ஒரு பெண் படைப்பாளர் முற்போக்குச் சிறுகதைகளையும் நாவல்களையும் வெளியிட்டு முன்னோடியாக உள்ளார். அறுபதுகளிலும் எண்பதுகளிலும் எந்திரமான பாத்திரங்கள் மறுபடைப்புச் செய்யப்பட்டன. உளரீதியாக அவைகள் கலைத்திறனுடன் வார்க்கப்படவில்லை என்று விமர்சிக்கப்படுகிறது.

பஞ்சாபி

பிரகதிவாதம் எனப்படும் முற்போக்கு இயக்கம் பஞ்சாபில் முப்பதுகளில் தோன்றியது. மார்க்சிய இயக்கம் சாதி வேறுபாடுகளுக்கும் புனைவியலுக்கும் நிலப்பிரபுத்துவத்திற்கும் எதிராக எழுந்தது. மோகன் சிங், அம்ருதா பிரிதம் போன்றோர் புரட்சிகரமான புனைவியலுக்கு மாறினர். சந்தோக்சிங் திர், குருசரண் ராம்புரி, பவாபஸ்வந்த் தேராசிங்சன், சுக்பீர் ஆகியோர் தன்னுணர்ச்சி, புரட்சிக்குரல் இரண்டையும் கலந்து கவிதைகள் படைத்தனர். குருபாக்ஷிசிங் (1895-1977) கர்தர்சிங் டக்கல், ஜஸ்வந்த் சிங்கன்லால், சுஜன் சிங், சுரிந்திரசிங் நருலா ஆகியோர் புனைகதைகள் வாயிலாக நிலப்பிரபுத்துவக் கொடுமைகளைச் சித்தரித்தனர். சந்தசிங் செங்கோன் இலக்கியத்தின் பொருள் (1959) என்றும் கட்டுரையில் முற்போக்கு இலக்கியத்தின் கொள்கைகளை விளக்கினார். செக்கோன், பால்வந்த்கார்கி ஆகியோர் வர்க்கப் போராட்டங்களைச் சித்தரிக்கும் நாடகங்களை வெளியிட்டனர். சுர்ஜித்சிங் கலை பஞ்சாபி இலக்கியத்தில் பிரகதிவாதம் என்னும் ஆராய்ச்சி நூலை வெளியிட்டுள்ளார். சுதிபிதரானின் நூலும் (Marxist Cultural Movement in India- 1979) குறிப்பிடத்தக்கது.

மராத்தி

மார்க்சியத் தாக்கம் முப்பதுகளில் படியத் தொடங்குகின்றது. ஆனால் இந்திய விடுதலைக்குப் பின்புதான் அது ஓர் இயக்கமாகப் பரிணமிக்கிறது. 1954-55 ஆண்டுகளில் தொடங்கிய சிறுபத்திரிக்கை இயக்கம் மார்க்சிய இயக்கத்தை முடக்கிவிட்டது. புனைகதைகளைக் காட்டிலும் கவிதைகளில்தான் மார்க்சிய தாக்கம் அதிகமாகக் காணப்படுகின்றது. அனில்

ஏ.ஆர்.தேஷ்பாண்டே, குசுமகராஜ் வி.வி.ஷர்வத்கர், ஷரத்சந்திர முக்தி போத், விந்தகராந்திகர் ஆகியோர் முற்போக்குக் கவிதைகளைப் படைத்தனர். கவிதை உலகில் இருந்த தேக்கநிலைக்குப் புத்துயிர் வழங்கியவர் நாராயண் சர்வே வாமன் மல்கர் ஜோஷி, எஸ்.வி.கட்கர், மாமாவரேர்கர், ஜி.டி.மத்கோல்கர், ஷரத்சந்திர முத்திபோத் ஆகியோர் நாவல்கள் வாயிலாக வர்க்கப் போராட்டத்தைச் சித்தரித்துள்ளனர். நாவதேர்கரின் தவத தோத என்னும் நாவலில்தான் தொழிற்சங்கத் தலைவன் முதன் முதலாகக் கதாநாயகனாக இடம்பெறுகிறான். எஸ்.கே.டாங்கே மார்க்சிய அடிப்படையில் இந்திய வரலாற்றை ஆராய்ந்தார்.

வங்காளி

காஜி நஸ்ருல் இஸ்லாம், சாம்யாவாத் (சமதர்மம்) என்னும் பெயரில் ஒரு கவிதையை (1925) வெளியிட்டார். இவர் வங்காளி முற்போக்கு இலக்கியத்தின் முன்னோடியாக விளங்குகிறார். பரிச்சய் (1931) என்ற இதழ் பொதுவுடைமைச் சிந்தனைகளை வெளியிட்டது. இந்திய முற்போக்கு இலக்கியச் சங்கத்தின் இரண்டாவது மாநாடு கல்கத்தாவில் (1939) நடைபெற்றது. இம்மாநாட்டிற்க்கு முன் 1937-இல் பிரகதி (முன்னேற்றம்) என்னும் பெயரில் ஓர் இலக்கியத் தொகுப்பையும் வெளியிட்டார்கள். இடதுசாரி பொதுவுடைமைச் சிந்தனைகளைப் பரப்புவதற்கு அக்ரணி (1939) என்னும் பத்திரிக்கை தொடங்கப்பட்டது. இதற்குப்பின் முற்போக்கு இலக்கியம் வலுப்பெற்றது.

விஷ்ணுதே மணிந்திரராய், மங்கலாசரண் சட்டோபாத்யாய, ஆஷன் ஹபீப், சுபாஷ் முகோபாத்யாய, சுகந்தபட்டாச்சார்யா, அருண் மித்ரா, பிரேந்திர சட்டோபாத்யாய, சித்தேஸ்வரசென் ஆகியோர் முற்போக்குக் கவிதைகளை வெளியிட்டனர். கோபால் ஹல்தா ஷவோகத் உஸ்மான், மாணிக் பந்தோபாத்யாய் ஆகியோர் புனைகதைகள் வாயிலாகவும் பிஜன் பட்டாச்சார்யா, மனோரஞ்சன் பட்டாச்சார்யா, உத்பல் தத்தர் ஆகியோர் நாடகங்களின் மூலமாகவும் வர்க்கப்போராட்டங்களை சோசலிச உணர்வோடு சித்தரித்தனர். வினோய்கோஷ், தேவி பிரசாத் சட்டோபாத்யாய், போபால் ஹல்தா ஆகியோர் கட்டுரைகளை எழுதிப் பொதுவுடைமைக் கொள்கைகளைப் பரப்பினர். இன்று முற்போக்கு இலக்கிய இயக்கம் நன்றாக வேரூன்றி வலிமை பெற்ற இயக்கமாகச் செயல்பட்டுக் கொண்டு வருகின்றது.

முடிவுரை

இந்திய மொழிகளில் ரஷ்ய அக்டோபர் புரட்சியை (1917) வரவேற்றதில் தமிழில் பாரதியார் முன்னோடியாகத் திகழ்கிறார். ஆனால் மலையாளம்தான் சோசலிச எதார்த்தவாதப் படைப்புக்களை அதிகமாக வெளியிட்டதில் தென்னிந்திய மொழிகளில் முதலிடம் பெறுகின்றது. இதற்கு அடுத்தே தெலுங்கு, தமிழ், கன்னடம் மொழிகள் இடம் வகிக்கின்றன. வட இந்திய மொழிகளில்

இந்தி, பஞ்சாபி, வங்காளி, உருது ஆகிய மொழிகளே முற்போக்கு இலக்கிய இயக்கத்தில் தலைமைப் பங்கு பெறுகின்றன. அடுத்த நிலையில் தான் அஸ்ஸாமி, மராத்தி, ஒரியா, காஷ்மீரி, சிந்தி ஆகிய மொழிகள் இடம் வகிக்கின்றன. மயகோவ்ஸ்கி, மாக்சிம்கார்க்கி, ஆண்டன் செகாவ் ஆகியோரது படைப்புகளும், காரல்மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோரது பொதுவுடைமைச் சித்தாந்தங்களும் இந்திய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

*

துணைநூற் பட்டியல்

1. அருணன், ***மார்க்சியமும் புது நூற்றாண்டும்***, தமிழ்ப்புத்தகாலயம், சென்னை-17, 1999.

2. சார்தேசாய், எஸ்.ஜி & திலிப் போஸ், ***மார்க்ஸிசமும் பகவத்கீதையும்***, நியூசெஞ்சுரிபுக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை-98, 1984.

3. தான்யா, கே., **இருபதாம் நூற்றண்டுத் தமிழ்க்கவிதைகளில் மார்க்சியக் கொள்கைகளின் தாக்கம்**, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை-5, 1988.

4. நம்பூதிரிபாட், இ.எம்.எஸ்., ***மார்ச்சியமும் இலக்கியமும்***, சென்னை புக்ஸ், சென்னை, 1988.

5. நாகராசன், ***மார்க்சியமும் இலக்கியத்திறனாய்வும்***, அன்னம் (பி) லிட் சிவகெங்கை. 1991.

6. நுஃமான்,சி., ***இலக்கியமும் மார்க்சியமும்***, மணிவாசகர் பதிப்பகம், சென்னை-1, 1991,

7. முத்துலக்கையன், நா., ***மகாகவியும் மக்கள் கவியும்*** (பாரதியும் மயா கோவ்ஸ்கியும், நி.செ.பு. லிட்., சென்னை, 1986.

8. யூரிகுஸ்மேன்கோ, சோவியத் இலக்கியம் - நேற்று, இன்று, நாளை, ராதுகா பதிப்பகம், மாஸ்கோ நி.செ.பு. லிட், சென்னை, 1987.

9. வானமாலை, நா., ***மார்க்சீய அழகியல்***, மக்கள் வெளியீடு, சென்னை-2,1987

10. வானமாமலை, நா., ***இந்தியநாத்திகமும் மார்க்சிய தத்துவமும்***, நி.செ.பு. லிட்.., சென்னை-98, 1991.

11. ஜெகநாதன், ஆ., ***பாரதிதாசனில் மார்க்சியம்***, அகரம், கும்பகோணம், 1996.

*

8

இந்திய இலக்கியத்தில் இதிகாசங்களின் தாக்கம்

1. இராமாயணத் தாக்கம்

1.1 இந்திய பண்பாட்டின் இரண்டு கண்களாகத் திகழ்பவை இராமாயணமும், மகாபாரதமும் ஆகும். வால்மீகியின் இராமயணத்தில் வரும் அகலிகை இந்திய எழுத்தாளர்களைக் கவர்ந்த கதைமாந்தராகும். வால்மீகிக்குப் பின் தோன்றிய படைப்பாளிகள் தங்களின் காலச்சூழலுக்கு ஏற்ப அகலிகையைப் படைத்துள்ளார்கள். இப்பாத்திரப் படைப்பை பொருந்தாமணம், பெண்மை, பாலுணர்ச்சி, காதல், கற்பு, பெண் விடுதலை, இயற்கையின் தாக்கம், குமரப்பருவ உளவியல் போன்ற கருத்தாக்கங்களோடு தொடர்புபடுத்தி விவாதித்துள்ளார்கள். அகலிகையைப் போற்றியும் தூற்றியும் இந்திய மொழிகளில் படைப்புக்கள் வெளிவந்துள்ளன.

சமஸ்கிருதத்தில்

1.2 வால்மீகியை அடுத்து நரசிம்ம புராணம் (கி.பி.400-500) அகலிகையை பாஷாணப் பூதமாகச் சுட்டுகிறது. கி.பி.8ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சானகி அரனாவில் (குமாரதாசர்) அகலிகை கல்லானாள் என்று கூறப்படுகிறது. இது வால்மீகியிலிருந்து வேறுபடுகிறது. சதுரசித்திலிங்க மகாத்மியம் நூலில் (ரேவாக்காண்டம், இயல் -136) சாபத்திலிருந்து விடுதலை பெற்ற அகலிகை நர்மதைக் கரையில் சிவலிங்கத்தை வழிபாடு செய்கிறாள் என்று கூறப்பட்டுள்ளது.

அசாமியில்

1.3. மாதவ கண்டலியின் ராமாயணத்தில் - ஆதிகாண்டத்தில், அகலிகை கதை காணப்படுகிறது. கௌதம முனிவரின் கடுந்தவத்தைக் கலைக்க வந்த இந்திரன் அகல்யாவின் அழகில் மயங்கினான். அகல்யாவும் அவனைப்புணர்ந்த பின் அவன் இந்திரன் என்று உணர்ந்தாள். உடனே அவனை ஓடித் தப்பி விடும்படி கூறுகிறாள். இருந்தாலும் அவன் ஆணுறுப்பை இழந்து பெண்குறிகளைப் பெறுகின்றான். பின்பு துர்க்கையின் அருளால் அவை ஆயிரம் கண்களாக மாறுகின்றன. இம்மொழியில்

காணப்படும் இராமாயணங்களில் இந்திரனின் பலியாடாக அகலிகையைக் காட்டாமல் விரும்பி ஒத்துழைப்புத் தந்தவளாகச் சித்திரிக்கின்றனர்.

தெலுங்கில்

1.4 ரங்கநாத ராமாயணத்தில் அகல்யை கதை சில மாற்றங்களுடன் கூறப்பட்டுள்ளது. இதில் இந்திரன் சேவல் வடிவத்தில் கௌதம முனிவரின் குடிலுக்குள் சென்று அகலிகையைப் புணர்ந்து விட்டு, சுயரூபத்தில் வெளியேறுகிறான் என்று சொல்லப்படுகின்றது. பாஸ்கர ராமாயணத்தில் கௌதம முனிவர் அகல்யாவைக் கல்லாக சபித்தமை கூறப்படுகின்றது. டி.எல்.ராயின் பாஷாணி என்னும் நாடகம் இந்தியிலிருந்து 1923-இல் தெலுங்கில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மேடையிலும் வெற்றி பெற்றது.

வங்காளியில்

1.5 துவிசேந்திரலால் ராய் அகலிகை வரலாற்றை பாஷாணி என்னும் பெயரில் (1900) ஒரு நாடகமாக இயற்றியுள்ளார். தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட இந்நாடகத்தின் பதிப்புரையில் இந்நாடகம் மக்களிடையே பரவிக்கிடக்கும் மூடநம்பிக்கையைப் போக்கி, பொருந்தா விவாகத்தில் இணைக்கப்படும் தம்பதியரின் வாழ்க்கைச் சித்திரத்தை நம்பும் வகையில் படம் பிடித்துக் காட்டுகின்றது. அதில் வரும் ஒவ்வொரு பாத்திரமும் சமூக வாழ்வின் தத்துவ வடிவாகும் என்று குறிப்பிடப்படுகின்றது. சுதேஷ்ணா சக்ரவர்த்தி அகலிகையைப் பற்றி ஒரு சிறுகதை வெளியிட்டுள்ளார். இது நெய்வேலி வேர்கள் இயக்கம், வெளியிட்டுள்ள தேடல் சிறுகதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. சாபம் பெற்ற அகலிகையைத் தன்னுடன் வாழும்படி இந்திரன் கெஞ்ச அகலிகை மறுத்து விடுகின்றாள். சாப விமோசனம் பெற்ற அகலிகையிடம் கௌதமர் ஒரு வரம் கேள், என்று இரக்கத்துடன் சொல்ல, இந்திரனாக என்னிடம் வாருங்கள் என்று அகலிகை பதிலிறுக்கின்றாள்.

தமிழில்

1.6 பரிபாடல் (19:50-52) அகலிகையின் கதை திருப்பரங்குன்றக் கோயிலில் ஓவியமாக வரையப்பட்டிருந்த செய்தியைக் கூறுகின்றது. கம்பர் தனது இராமாயணத்தில் அகலிகைப் படலம் ஒன்றை இயற்றி மனதில் குற்றமற்றவர்களாகப் புது மெருகூட்டிப் படைத்துள்ளார். வெள்ளக்கால் சுப்பிரமணிய பிள்ளை அகலிகை வெண்பா என்ற ஒரு காவியத்தை இயற்றியுள்ளார். புதுமைப்பித்தன் சாப விமோசனம், அகல்யா என்ற சிறுகதைகளின் மூலம் வெவ்வேறு கோணங்களில் அகலிகையைச் சிந்தித்துப்பேச வைத்துள்ளார். கு.ப.ரா.வும் அகலிகை இயற்கைச் சூழலுக்கு ஏற்ப பருவ உணர்ச்சிக்குப் பலியாகி இருப்பதை வித்தியாசமான பார்வையில் குறு நாடகத்தின் மூலம் சித்திரித்துள்ளார். ச.து.சு.யோகியார், சிற்பி, மேத்தா,

ஞானி, ஆகியோர் அகலிகை மீது கவிதைகளைப் புனைந்துள்ளார்கள். ஞானியின் 'கல்லிகை' விமர்சகர்களால் போற்றப்பட்ட பெண்விடுதலையைச் சித்திரிக்கும் சிறுகாவியம் ஆகும்.

பிறமொழிகளில்

1.7. கன்னடத்தில் ஸ்ரீ தி.ந., அகல்யாமீது ஒரு செய்யுள் நாடகத்தை இயற்றியுள்ளார். பி.ஆர். சந்திரன் அகல்யாவை இருபதாம் நூற்றாண்டின் பெண் ஆளுமையை விளக்கும் பாத்திரமாக மலையாள நாடகத்தில் (1970) காட்டியுள்ளார். ஒரியாவில் உபேந்திர பஞ்சா, அகல்யா உத்தார், என்னும் நூலையும் ராதாமோகன் பட்நாயக் என்னும் கவிஞர் ஆகே பாஷாணி என்ற காவியத்தையும் எழுதியுள்ளார்கள். இந்திய மொழியில் அகல்யோத்தார் என்னும் பெயரில் ஜனரஞ்சகமான நாடகங்கள் நிகழ்த்தப்பட்டன. அகலிகைத் தொன்மம் இந்திய மொழிகளில் சிறப்பாகக் கையாளப்பட்ட கருப்பொருள்களில் ஒன்றாகும்.

2. மகாபாரதத்தின் தாக்கம்

2.1 மகாபாரதம் இந்தியப் பண்பாடு, வரலாறு, அரசியல் மற்றும் சமுதாய அமைப்புகளைப் பற்றிய களஞ்சியமாகத் திகழ்கிறது. தனிமனித ஆன்மாக்களையும், ஒருங்கிணைந்த இந்திய ஆன்மாவையும் மகாபாரதம் விளக்குகிறது என்று ஜெர்மானிய அறிஞர் ஆண்டன் பெர்க் கூறுகிறார். இக்காலப் படைப்பாளர்கள் மகாபாரதத்திலுள்ள துணைக்கதைகளையும் நிகழ்ச்சிகளையும், கதாபாத்திரங்களையும் மறுபடைப்பாகப் பல்வேறு இலக்கிய வகைகளில் கையாண்டுள்ளனர். ஆரம்பத்தில் இந்திய மொழிகளில் உரைநடையில் மகாபாரதத்தைச் சுருக்கித் தந்தார்கள். பின்பு மகாபாரதத்திலிருந்து கருக்களை எடுத்துக்கொண்டு புதிய கோணத்தில் புராணநாவல்களைப் (Mythological Novels) படைக்கத் தொடங்கி விட்டார்கள், இன்றைய இந்திய நாவல் இலக்கியத்தில் இது ஒரு புதுப்போக்காக வளர்ந்து வருவதை உணரலாம்.

2.2 ஆங்கில மொழியில் ஆர்.கே.நாராயணன் மனிதனை விழுங்கும் மால்குடிக்காரன் என்னும் கதையில் பஸ்மாசுரனை மனிதனைத் தின்னும் இரக்கமற்றவனாகவும் இச்சைகளைப் பல வழிகளில் தீர்த்துக் கொள்பவனாவும் படைக்கிறார். நாவலில் வரும் வாசுவின் சிறப்பு பஸ்மாசுரனை ஒட்டியே அமைந்திருக்கிறது. ஷஷிதாகூர் தி கிரேட் இந்தியன் நாவல் (1989) என்னும் நாவலில் மகாபாரதக் கதையினைப் பின்புலமாகவும் காந்தியின் தலைமையில் நடந்த இந்திய விடுதலைப் போராட்டத்தையும் விவரிக்கின்றார். இன்றைய அரசியல் நிலையை தொடர் உருவகமுறையில் (allegorical) மகாபாரதக் கதையின் மூலம் விளக்கமுயன்று வெற்றிபெற்றுள்ளார்.

2.3 ஒரியா மொழியில் பிரதிபாராய் ஜஸதசெனியில் திரௌபதி பாத்திரத்தைப் பெண்ணிய அடிப்படையில் படைத்துள்ளார். அவர் திரௌபதி

தன் நம்பிக்கைகளையும் விருப்பங்களையும் இழப்புக்களையும் கிருஷ்ணனிடம் கூறுவதாக உள்ளது. இது ஓர் அற்புதமான படைப்பாகக் கருதப்படுகிறது. திரௌபதி இதிகாசப்பாத்திரமாக மட்டுமல்லாமல், இன்றைய பெண்ணின் பிரதிநிதியாக ஓங்கி நின்று உரத்துப் பேசுகின்றார். பெண்ணின் மீது சுமத்தப்படும் நிர்பந்தங்களுக்கு அவள் விடும் சவால் படிப்பதற்கும் பாராட்டுதற்கும் உரியது.[7]

2.4 கன்னடத்தில் எஸ்.எல்.பைரப்பா பர்வா (1987) என்னும் பெயரில் மகாபாரதக் கதையைப் புதிய நாவல் வடிவத்தில் தந்துள்ளார். அதைப்பற்றிய விமர்சனம் இந்திய இலக்கியத்தில் (எண்: 123, 1988) வந்துள்ளது. மகாபாரதக் காவியத்தோடு தொடர்புடைய இடங்களுக்குச் சென்று களப்பணி செய்து அந்த அனுபவத்தின் அடிப்படையில் மகாபாரதத்தை இன்றைய நாவல் வடிவத்தில் வழங்கியுள்ளார்.

2.5 மலையாளத்தில் மாடம்பு குஞ்ஞுகுட்டன் அஸ்வத்தாமா, எம்.டி. வாசுதேவன் நாயர் பீமன் என்னும் மகாபாரதக் கதை மாந்தர்களைக் கையாண்டு நாவலைப் (ரண்டாம் மூலம்) படைத்துள்ளார். மேலும் பி.கே.கோபாலகிருஷ்ணன் எழுதிய இனி என்னை உறங்க விடு என்னும் நாவலிலும் மகாபாரதத்தின் செல்வாக்கை உணரலாம்.

2.6 மராத்தியில் காண்டேகர் யயாதி, (1959) என்னும் நாவலை மகாபாரதக் கிளைக்கதையிலிருந்து படைத்து வெளியிட்டுள்ளார். குஜராத்தியில் பன்னாலால்படேல் மகாபாரதக் கதைக் கருவைக் கொண்டு நாவல்கள் படைத்துள்ளார். மண்டன் பண்டியா ருங்கமாங்கத-கதையை கயனியின் மகாபாரதத்தில் அஸ்வமேத பர்வதத்திலிருந்து கையாண்டுள்ளார்.

2.7 வங்காளியில் சமூக எதார்த்த நாவல்களைப் படைத்த அம்ரேஷ் பாசு ஷம்பா (1978) என்னும் நாவலை வெளியிட்டுள்ளார். 16,000 கோபியர்களிடத்தில் காதல் லீலைகள் செய்யும் கிருஷ்ணனின் மகனும், யாதவகுலத்தின் அழகு நிறைந்தவனுமான ஷம்பன் பாலுணர்வுப் பொறாமையால் தந்தையால் சபிக்கப்பட்டு தொழுநோயைப் பெற்றான். நோயை நிவர்த்தி செய்வதற்காக அலைகின்றான். நிலாட்சி என்பவனின் உறவும் கிடைக்கிறது. சூரியனை வழிபடும் 18 குடும்பங்களை ஒன்று சேர்த்துச் சூரியபகவானை வணங்குகிறான். தொழுநோயை நீக்கும் ஞானத்தைப் பெறுகிறான். தன்னுடைய சொத்துக்களைக் கோவில்களைக் கட்டுவதற்குச் செலவழித்து தனது இறுதி காலத்தைச் தொழுநோயாளிகளின் நலத்திற்காகப் பயன்படுத்துகிறான். இவ்வாறு ஷம்பனின் பாத்திரத்தைப் புதிய கண்ணோட்டத்தில் இருத்தலியல் (Existentialism) அடிப்படையில் காட்டியுள்ளார். நிலாட்சி என்பவள் புத்தபிக்குனி அம்பாலியை நினைவுபடுத்துகிறாள். விதி, மறுப்பு, சாபம் ஆகியவற்றைப் பற்றிக் கவலைப்படாமல் மனிதநேயத்துடன் செயல்படுவதாக ஷம்பனைப் படைத்திருப்பது இந்நாவலின் சிறப்பாகும்.

2.8. தமிழில் சிறுகதையிலும் நாவல்களிலும் மகாபாரதக் கதைமாந்தர்களின் தாக்கத்தைக் காணலாம். சான்றாக, மகாபாரதப் போரில் கர்ணன் இறந்த செய்திகயைக் கேட்டு திரௌபதியின் உள்ளத்தில் ஏற்பட்ட உள்ளப் போராட்டங்களையும் எண்ண அலைகளையும் திரௌபதி, தருமன், கண்ணன், அர்ஜுனன் ஆகியோரின் கோணங்களில் ரகுநாதன் வென்றிலன் என்ற போதும் என்னும் சிறுகதையில் விளக்கியுள்ளார். ஒருபுறம் கர்ணன் என்காதலன், மறுபுறம் என் கணவன் இருவரும் போர் புரிகிறார்கள் என்றும், எனக்கு வாய்த்த ஐந்து கணவர்களும் என்னிடம் நடந்து கொண்டவிதம் தான் என்னைக் கர்ணனைப் பற்றிய சிந்தனைக்கு இழுத்துச் சென்றது என்றும் எனக்கு கர்ணன் மேல் தான் நேர்மையான அன்பு படர்ந்திருந்தது கர்ணன் நினைவு தான் என் இளமையைக் கூட கட்டுக்குலையாமல் காத்து வந்தது என்றும் திரௌபதியின் எண்ண ஓட்டங்களை மிக அழகாக ஆசிரியர் சித்திரித்துள்ளார்.

அசுவத்தாமா, பீமா, திரௌபதி, ஷம்பா ஆகிய மகாபாரதக் கதாப்பாத்திரங்களை எடுத்து கொண்டு அவர்களின் மனப்போராட்டங்களை ஆளுமை வளர்ச்சியை இக்காலப் பின்னணிக்கு ஏற்பப் படைத்து காட்டுவது ஒரு போக்காகும், இன்னொரு போக்கு மகாபாரதக்கதையில் இன்றைய அரசியலை உள்ளீடாக வைத்துக் கூறுவது அல்லது எதார்த்தத்தை அன்றைய சமுதாயத்தில் ஏற்றிக் காண்பது ஆகும்.

துணைநூற் பட்டியல்

தமிழ்

1. பிச்சை.அ., & பா.ஆனந்தகுமார், **பாரதியாரின் பாஞ்சாலி சபதமும், மகாபாரதக் கிளைக்கதைகளும்**, கிராமியப்பல்கலைக் கழகம், காந்திகிராமம், 2003.
2. ரத்னம், க., **இவர்கள் பார்வையில் அகலிகை**, ஐந்திணைப்பதிப்பகம், சென்னை-5, 1998.
3. விசுவாசநாதன், அ., **பாரதநூல்களின் திறனாய்வு**, அருள், 9ஆம் வீதி, தென்விரிவு, சுப்பிரமணியபுரம், காரைக்குடி-3, 1979.
4. கணபதி, ச.கு., **வியாசரும் வில்லியும்**, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1986.
5. நந்தகிஷோர் ஆசார்யா, **மகாபாரதத்தில் பெண்ணியம்** (இரு இந்தி நாடகங்கள்), அலைகள் வெளியீட்டகம்) கோடம்பாக்கம், சென்னை-24, 1996.

English

6. Dandekar, **The Mahabharata, Revisited**, Sahitya Academy, New Delhi; 1990.
7. Srinivasa Iyengar, **Asian Variations in Ramayana**, Sahitya Academy, New Delhi, 1983.

9

இந்திய மொழிகளில் பின்னை நவீனத்துவம்

இந்தியமொழிகள் மேனாட்டார் தொடர்பினால் கலைகளிலும் இலக்கியங்களிலும் மறுமலர்ச்சியும் புதிய விழிப்புணர்ச்சியும் பெற்றன. மேனாட்டு குறிப்பாக, ஐரோப்பியக் கலை இலக்கியங்கள் இந்தியக் கலை இலக்கியங்களில் தாக்கத்தை ஏற்படுத்தின. புனைவியல், எதார்த்தவியல், உளவியல், இருத்தலியல் சர்ரியலிசம், மார்க்சியம், அமைப்பியல், படிமவியல், குறியீட்டியல், போன்ற இயக்கங்களின் சிந்தனைகளின் செல்வாக்கு பாரதக் கலை இலக்கியங்களில் படியலாயின. நவீனத்துவம் இந்திய விடுதலைக்கு முன்பும் பின்பும் செங்கோல் செலுத்தி வருகின்றது. இந்திய மொழிகளில் பின்னை நவீனத்துவம் (Post Modernism) எங்ஙனம் நடைமுறையில் உள்ளது என்று காணலாம்..

பின்னை நவீனத்துவம் : ஒரு விளக்கம்

பின்னை நவீனத்துவம் பற்றி வெளிநாட்டவரும் தமிழ் திறனாய்வாளர்களும் பல விளக்கங்களையும் வரையறைகளையும் தந்துள்ளனர். க.பூரணச்சந்திரன், அ.மார்க்ஸ், கா.சிவத்தம்பி, முத்துமோகன், ஞானி, தமிழவன் ஆகியோர் தம் நூல்களில் பின்னை நவீனத்துவம் பற்றி விளக்கியுள்ளனர். பின்நவீனத்துவம் என்பது நவீனத்துவத்துடனும், பிற பழைய இலக்கியங்களுடன் தொடர்பைத் துண்டித்துக் கொண்டு எழுந்த ஓர் இலக்கிய இயக்கம். தொடர்ச்சியின்மை, கலாச்சார இடைவெளி சுயபிரக்ஞை கொண்ட நடைப்பாணி இவற்றை வலியுறுத்துவது. இலக்கியம் போலச் செய்தலோ, பிரதிநிதித்துவமோ, பிரதிபலித்தலோ அல்ல, புனைவாக்கம் என்று கூறுவது. ரிச்சர்ட் பிராடிக்கன், டோனல்ட் பார்த்தல்மே, கர்ட் வானிக்கர்ட், ராபர்ட் கூவர் முதலிய நாவலாசிரியர்கள் இவ்வியக்கத் தொடர்புடையவர்கள் என்று பின்னை நவீனத்துவ இயக்கம் பற்றி பூரணச்சந்திரன் விளக்கியுள்ளார்.

பின்னை நவீனத்துவக் கோட்பாட்டைப்பற்றி அ. மார்க்ஸ் தரும் விளக்கம் பின் வருமாறு: பின் நவீனத்திற்குள் பல்வேறுவிதமான போக்குகள் இருந்தபோதிலும் இவை அனைத்திற்கும் பொதுவான கூறாக விளங்குவது

தன்னிலையை முன்னிலைப்படுத்தும், பகுத்தறிவைக் கேள்விக்குள்ளாக்கும் பண்பே. அறிவு என்பது உண்மையைத் தேடும் முயற்சி என்பதை மறுத்த பின்நவீனத்துவம் அறிவை ஒரு உரையாடலாகவும் சமூகநடைமுறையாகவும் கண்டது. இவ்வாறு அறிவின் சர்வ வியாபகத் தன்மை (Universalism), நிரந்தரத் தன்மை என்பன கேள்விக்குள்ளாக்கப் பட்டன. எல்லாவிதமான கோட்பாட்டுருவாக்கத்தையும் சந்தேகக் கண்கொண்டு பார்த்த பின்நவீனத்துவம் நடைமுறை அறிவுக்கு (Pragmatism) முக்கியத்துவம் அளித்தது. அறிதல் செயல்பாட்டில் தன்னிலையையும் பொருளையும் தனித்தனியே பிரித்து நிறுத்துவதைச் சாத்தியமில்லை எனக்கண்டு உலகில் மனிதன் சூழலுடன் பரஸ்பர வினையாக்கத்தில் உள்ளான் என்கிற ஹெய்டக்கரின் கருத்தை ஏற்றுக் கொண்டது.

பொருட்களின் சாரம், மொத்தத்துவம் போன்ற கருத்தாக்கங்களைப் பின்நவீனத்துவம் மறுத்தது. மொத்தத்துவம் என்பது எதேச்சதிகாரத்திற்கே வழி வகுக்கும் என்பதால் சிதறுண்டு போதலை (Fragmentation) ஆதரித்தது. ஒருமைத் தன்மை, ஒன்றை நோக்கிய கருத்துகுவிப்பு என்பதெல்லாம் வன்முறைக்கே இட்டுச் செல்லும் என்பதால், விலகல், வேறுபாடு பன்மைத்தன்மை, ஒருமையின்மை (Incoherances) இரு பொருட்தன்மை (Ambiguity) ஆகியவற்றை வலியுறுத்தியது. மொத்தத்துவம், பொதுமைப்படுத்துதல், தரப்படுத்துதல் என்பதெல்லாம் தனித்துவமான அடையாளங்களை அழித்தொழிக்கும் வன்முறைகள் என்பதால் சிறுகுழுக்கள், தனித்துவங்கள், தள அளவிலான செயற்பாடுகள் ஆகியவற்றை வரவேற்று பெருந்திட்டம் என்பதற்குப் பதிலாகச் சிறிய திட்டங்கள், பேரிலக்கியம் என்பதற்குப் பதிலாக சிறுகதையாடல்கள். இதனைப் பல துறைகளிலும் விவரிக்கலாம்,

இவ்வாறு பல விளக்கங்களைத் தமிழ்த் திறனாய்வு நூல்களில் காணலாம்.

அசாமி

பின்னை நவீனத்துவக் கூறு அசாமிய இலக்கியங்களில் மிகக் குறைவாகக் காணப்படுகின்றது. பிரபுல்ல சந்திகோஸ்வாமியின் முடிவு எங்கே, என்னும் நாவல் பரபரப்பாகப் பேசப்படுகின்றது. இவர் சம்பிரதாயமான அமைப்புகளைத் தகர்த்து இன்றைய மனிதனின் தனிமைப்பட்டுப்போன ஆன்மாவின் அமைதியின்மையை, தவிப்பை, சமதர்ம சமுதாயத்தின்பால் தனக்குள்ள விழைவை இந்நாவலில் வெளிப்படுத்தி உள்ளார்.

தெலுங்கு

திறனாய்வாளர் சேகுரிராமராவ் 1980 முதல் தொடங்கும் கால கட்டத்தைத் தெலுங்கு கவிதை உலகில் பின்னை நவீனத்துவம் என்று குறிப்பிடுகின்றார். *சீலவிமற்றும்* குந்துர்த்தி சத்தியமூர்த்தி பதிப்பித்த (Down

to the Earth - An Anthology of Post Modern Telugu 1994) என்பது பின்னை நவீனத்துவப்பண்பு கொண்ட கவிதைத் தொகுப்பாகும்.

வங்காளி

இம்மொழியில் கவிதை இலக்கியத்தில் 1970-க்குப் பின் ஒரு மாற்றமும் திருப்பமும் ஏற்படட்டுள்ளது. இளங் கவிஞர்கள் உத்தர் - ஆதுனிக் என்னும் பெயரில் பின்னை நவீனத்துவக் கவிதைகளைப் படைக்கத் தொடங்கினார்கள். மேனாட்டு பின்னை நவீனத்துக் கூறுகள் இவற்றில் காணப்படவில்லை. மாறாக, மனிதநேயம், அன்பு, நம்பிக்கை போன்ற உணர்வுகள் தோன்றும் வகையில் கவிதைகளைப் புனைந்தனர். இதை உதயீர் நாராயின் சிங் 'சுதேச பின்னை நவீனத்துவம்', (Indigenous Post-Modernism) என்று குறிப்பிடுகின்றார்.

தமிழ்

தமிழில் பின்னை நவீனத்துவத்தை அறிமுகப்படுத்தும் நூலாக நாகார்ஜுனனின் கலாச்சாரம்-எதிர் கலாச்சாரம் என்னும் நூல் (1992) வெளிவந்தது. இதனை விமர்சித்த கோலாகல ஸ்ரீநிவாஸ் இது எளிய வாசகனைப் பயமுறுத்தும் அறிவுஜீவி பயங்கரவாதமாகவே (Intellectual terrorism) கண்ணில் படுகிறது என்று சுபமங்களாவில் (மே92 பக். 17-19) குறிப்பிட்டுள்ளார். நவீனத்தமிழும் பின்நவீனத்துவம் (1994) என்னும் தமிழவனின் தொகுப்பு நூலும் பின் நவீனத்துவத்தின் மேலைநாட்டு பரிமாணத்தையும் அதன் பல்வேறு உள்ளடக்கங்களைச் சிறந்த முறையில் பகுத்து விளக்குகின்றது.

புதுப்புது நவீனத்துவம் (Post-Modernism) என்ற வகையில் இன்று அமைப்பியல்வாதிகள் இலக்கியம் படைத்து வருகின்றனர். அவர்களது. படைப்புகளில் நவீனத்துவத்தின் அம்சங்களைக் காணமுடிகிறது. தமிழவனின் ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்கள், இந்த வகையைச் சேர்ந்தது. இருப்பினும் இதன் தாக்கம் தமிழ்நாட்டில் நவீனத்துவம் பேசுவர் உரத்தகுரலில் பேசுவது போன்ற வலுவான ஒன்று அல்ல, என்று எஸ்.தோத்தாத்ரி (இலக்கிய இஸங்கள் பக்-44) கூறுவர். தமிழவனின் சரித்திரத்தில் படிந்த நிழல்கள் என்பது முதல் போஸ்ட்மார்டனிச நாவல் என்று நூல் வெளியீட்டாளரால் (காவ்யா, பெங்களூர்) விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இதனைப் பற்றிய ஆய்வுகள் வெளிவரவில்லை. வெங்கட்சுவாமிநாதன், வல்லிக்கண்ணன், மாலன், சுஜாதா இந்திராபார்த்தசாரதி, தி.க.சிவசங்கரன், போன்ற தமிழ் எழுத்தாளர்கள் பின்னை நவீனத்துவம் தமிழுக்குப் பொருந்தாது என்றும், இதற்கும் புதுப்புனைவியலுக்கும் (Neo-romanticism) வேறுபாடில்லை என்றும் கூறுகின்றார்கள். எஸ்.சண்முகம் புதுக்கவிதை, மாடனிசமும் போஸ்ட்மாடனிசமும், என்ற கட்டுரையில் ஆத்மாநாம், ஞானக்கூத்தன்

ஆகியோரின் சில கவிதைகளில் பின்னை-நவீனத்துவக் கூறுகள் காணப்படுவதை எடுத்துக்காட்டியுள்ளார் (1994:190-195). பின் நவீனத்துவம் இங்கே இன்னும் வேர் கொள்ளவில்லை. தொடக்கத்திலேயே கடும் எதிர்ப்புக்களை அது சந்திக்க நேர்கிறது என்றால் அதனுள் பொதிந்துகிடக்கும் அனார்க்கிச/அவான்கார்டே கூறுகளே அதற்கு காரணம் என்பதை யாரும் எளிதில் உணரமுடியும் என்று அ.மார்க்ஸ் குறிப்பிடுகிறார்.

மதிப்பீடு

சில இந்திய மொழிகள் மட்டும் நவீனத்துவத்தின் உச்சத்தைத் தொட்டுள்ளன. இன்னும் பல மொழிகள் நவீனத்துவம் ஆகும் நிலையில் இருக்கின்றன. மேலைநாடுகளில் தோன்றிய அரசியல், பொருளாதாரம், சமூகச் சூழ்நிலைகள் இந்தியாவில் இல்லை. எனவே ஐரோப்பிய நாடுகளில் நிலவும் பின்னை நவீனத்துவ சூழ்நிலையை இந்தியாவில் எதிர்பார்க்கமுடியாது. இந்திய மண்ணிற்கே உரிய பின்னை நவீனத்துவத்தைக் காணவேண்டும். இந்திய மொழிகளில் அனைத்திலும் - ஒரு மொழியிலேயே காணப்படுகின்ற எல்லா இலக்கிய வடிவங்களிலும் பின்னை நவீனத்துவம் ஒரேமாதிரியாக இருக்காது. பின்னை நவீனத்துவ கூறுகளை உள்வாங்கிக் கொள்ளும் சிந்தனையாளர்களையும், படைப்பாளர்களையும் பொறுத்துத்தான் இதன் எதிர்காலம் உண்டு. பெங்களூரில் நடந்த ஓர் இலக்கிய விழாவில் (1996) அஜீஸ் அஹமது என்பவர் நவீனத்துவமும் பின்னை நவீனத்துவமும் பொருள் அடிப்படையில் (Thematics) இரண்டும் பெரிதாக ஒன்றும் வேறுபடவில்லை என்று குறிப்பிடுகின்றார். இந்திய இலக்கிய பதிப்பாசிரியர் கே.சச்சிதானந்தன், பின்னை நவீனத்துவத்தை சமூகமாற்றத்திற்கு துணைபுரியும் அழகியல் உத்தியாக கருதுகின்றார். மகரந்த் ஆர்.பதஞ்ஜபே என்பவர் தமது கட்டுரையில் (Post-Modernism and India-Some Preliminary Anima Diversion) பின்னை நவீனத்துவம் பற்றிய கருத்து இந்திய அறிஞர்களிடையே குழப்பமான நிலையில் உள்ளது என்றும், மேலை நாட்டு பின்னை நவீனத்துவத்தை அப்படியே தழுவுவது தற்கொலைக்கு சமமானது என்றும், இலக்கியத்தைப் புதிய கோணத்தில் படித்து திறனாய்வு செய்ய வேண்டும் என்றால் அதனை ஓர் உத்தியாக பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார். (பக். 150-165). கட்டவிழ்ப்பு திறனாய்வாளர் காயத்திரி சக்கரவர்த்திஸ்பிவக், மகேஸ்வேதா தேவியின், ஸ்தனதாயினி என்னும் சிறுகதையை அம்முறையில் (Author is Dead) ஆய்வு செய்வதற்கு படைப்பாளர் எதிர்ப்பும் மறுப்பும் தெரிவித்துள்ளமை இவண் குறிப்பிடத்தக்கது. எனவே, இந்தியமொழிகளில் பின்னை நவீனத்துவம் பற்றிய கருத்தாக்கம் திறனாய்வாளர்களிடமும் அதன் பாணி படைப்பாளர்களிடமும் மிகச் சிறப்பாக பெரிதாக வரவேற்கப்படவில்லை என்பது புலனாகிறது.

துணைநூற் பட்டியல்

1. கார்த்திகேசு சிவத்தம்பி, நவீனத்துவம் - தமிழ் - பின்னைநவீனத்துவம், மக்கள் வெளியீடு, சென்னை-2. 2001.

2. தமிழவன் (தொ.ஆ.) நவீனத் தமிழும் பின் நவீனத் தமிழும், காவ்யா, பெங்களூர், 1994.

3. தேவசிகாமணி, இ.எஸ்.(தொ.ஆ.) இலக்கிய இஸங்கள், அன்னம் வெளியீடு, சிவகங்கை சென்னை-1996.

4. பூரணச்சந்திரன், க., அமைப்புமைய வாதமும் பின் அமைப்பு வாதமும், நிகழ் வெளியீடு கோவை-19.

5. மார்க்ஸ்,அ., பின் நவீனத்துவம்-இலக்கியம் அரசியல், விடியல் பதிப்பகம், கோவை-15, 1996.

6. Vibhan Mauriya (Ed)., Post - Modernism : A Discussion, Kalinga Publishers, Delhi-9, 1994.

*

10

இந்திய மொழிகளில் தலித் இலக்கியம்

முன்னுரை

சாதிய/வருண அடுக்குமுறைகளைக் கொண்ட இந்தியாவில் 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆரிய சமாஜம், பிரம்ம சமாஜம் போன்ற இயக்கங்களின் மூலம் சமுதாய விழிப்புணர்ச்சியும் பண்பாட்டுக் கூறுகளில் மாற்றங்களும் நிகழத் தொடங்கின. மகாத்மாகாந்தி, அம்பேத்கார் மற்றும் பல தலைவர்களின் சிந்தனைகளும் சமூக மாறுதல்களுக்குப் புதிய உத்வேகம் கொடுத்தன. அரிசனம், பெண்கள் போன்ற நலிவுற்ற பிரிவினரின் முன்னேற்றம் பற்றித் தனிக் கவனம் செலுத்தினர். இந்திய விடுதலைக்குப் பின் முற்போக்குச் சிந்தனைகளின் தாக்கத்தினால் பெண்ணியம், தலித்தியம் போன்ற கருத்தாக்கங்கள் பின்னை நவீனத்துவத்தின் கூறுகளாக/போக்குகளாக இந்திய மொழிகளில் அறுபதுகளுக்குப் பின் இடம் பெற்று வருகின்றன.

மூலக்கரு

தலித் இலக்கியத்தின் மூலக்கரு புத்தரின் காலத்திலேயே தோன்றி விட்டதாகச் சிலர் கணிக்கின்றனர். ஞானக் கவியான சொக்கமேளா (கி.பி. 14ஆம் நூ.) என்பவரை இதைத் தொடங்கி வைத்தவராகத் தெரிவிக்கின்றனர். தமிழில் எழுந்த புத்த மத இலக்கியங்களிலும் திருமூலரைத் தோற்றுவாயாகக் கொண்ட பிற்காலத் தமிழ்ச் சித்தர்களிடத்திலும் தலித் இலக்கியக் கூறுகள் காணப்படுகின்றன. திருவள்ளுவர், பசவண்ணர், சர்வக்ஞர். வேமனர் ஆகியோர் பாடல்களிலும் ஒடுக்கப்பட்டடோரின் குரல் மெல்லிதாக ஒலிக்கப்படுவதைக் காணலாம். இருந்தாலும், மகாத்மா பூலே (1828-90), எஸ்.எம்.மதே (1886-1957) ஆகியோர் தலித் இலக்கிய முன்னோடிகளாகச் சுட்டிக்காட்டப்படுகின்றனர்.

மராத்தி

டாக்டர் அம்பேத்காரின் சிந்தனை மராத்தி மண்ணில் புதிய தலித் இலக்கியம் தோன்ற வழி வகுத்தது. தலித் இலக்கியம் தோன்ற சித்தார்த்த

சாகித்ய சங்கம், மகாராஷ்டிரா தலித் சங்கம் ஆகியவை அடிப்படைத் தூண்டல்களை அளித்தன, 1958-இல் மகாராஷ்டிரா தலித் சாகித்ய சங்கம் தலித் இலக்கிய மாநாட்டை நடத்தியது. தலித் இலக்கியத்தை வரையறை செய்து பல்கலைக் கழகம் போன்ற அமைப்புகள் இதற்கு உரிய இடத்தை தரவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தது.

பாபுராவ் பாகுலின் சிறுகதைத் தொகுப்பு 'நான் எனது சாதியை மறைத்துக் கொண்டபோது' என்பது தலித் இலக்கிய வரலாற்றில் ஒரு மைல் கல். அஸ்மிதா தர்ஷா, சத்ய கதா போன்ற பல தலித் இதழ்கள் புதிய எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தின. கோபமான இளைஞர்கள் இயக்கம், பல சிற்றிதழ்களை நடத்தி தலித் இலக்கியக் கருவூலத்திற்கு வளம் சேர்த்தது. இக்காலக்கட்டத்தில் தான் தயாபவார், வாமன் நிம்பல்கர், திரியம்பக் சம்காளே, அர்ஜுன் டாங்ளே, நர்மதியோ தாசல், உமாகாந்தி, ரந்தீர் போன்ற கவிஞர்கள் மலர்ந்தனர். தாராசந்திர காண்டேகர், யோகிராஜ், வாக்மாரே, அவினாஷ் டோலாஸ் என்ற பல சிறுகதை எழுத்தாளர்களும் தோன்றினார்கள்.

அமெரிக்காவில் தோன்றிய கறுஞ்சிறுத்தை (Black panther) என்ற இயக்கம் எழுபதுகளில் சிறிது தொய்வு அடைந்த தலித் இயக்கத்தை முடுக்கிவிட்டது. 1972-இல் தியோதாசல், அர்ஜுன் டாங்ளே, ஜே.வி.பவார் ஆகிய மூவரின் முயற்சியால் தலித் சிறுத்தைகள் என்னும் அரசியல் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. தலித் இலக்கியம் மாநில / தேசிய அங்கீகாரம் பெற்றது. மாநில / தேசிய விருதுகளை எழுத்தாளர்கள் பெற்றனர்.

மராத்தி தலித் இலக்கியத்தில் சுயசரிதைகள் ஒரு முக்கியமான பங்கை வகிக்கின்றன. தயாபவாரின் 'பலூடா', பி.இ.ஸொன் காம்ளேயின் அத்வானின் சேபக்சி, மற்றும் லட்சுமண் மானேயின் 'உபாரா' ஆகியவை புகழ்பெற்ற - விருதுகள் பெற்ற தன் வரலாறுகளாகும். சாந்தாபாய் காம்ப்ளேயின் தன் வரலாறும் குறிப்பிடத்தக்கதாகும். கவிதை, சிறுகதை, நாவல் ஆகிய வகைகளில் தலித் இலக்கியம் செழுமை அடைந்துள்ளது. தலித் இலக்கியத் திறனாய்வு நெறியும் ஓரளவு செம்மை அடைந்துள்ளது. மராத்தியில் தலித் இலக்கியம் சமூகப் புரட்சியின் கருவியாகப் போர்க்குணத்தோடு இன்றும் வளர்ந்து கொண்டிருக்கிறது.

கன்னடம்

கர்நாடகத்தில் எழுபதுகளில் தலித் இலக்கியம் தோற்றம் கண்டது. தேனூரு மகாதேவ, கிருஷ்ணப்பா, சித்தலிங்கையா ஆகியோர் தலித் இலக்கியத்தைத் தொடங்கினார்கள். 25 ஆண்டுகளில் தலித் சமுதாயம் பற்றிய விழிப்புணர்ச்சி பரவி உள்ளது. சில நல்ல படைப்புகள் வந்துள்ளன. தலைசிறந்த படைப்புகள் என்று சொல்கிற அளவிற்கு எதுவும் வரவில்லை

என்று குறிப்பிடும் சித்தலிங்கையா மூன்று கவிதைகளையும் மூன்று நாடகங்களையும் இரண்டு கட்டுரை நூல்களையும், ஒரு சுயசரிதையையும் வெளியிட்டுள்ளார், சித்தலிங்கையாவின் சுயசரிதையை 'ஊரும் சேரியும்' என்னும் பெயரிலும் கன்னடத்தலித் சிறுகதைகளை 'புதைந்த காற்று' என்னும் பெயரிலும் பாவண்ணன் தமிழாக்கம் செய்து வெளியிட்டுள்ளார்.

குஜராத்தி

காந்தியத் தாக்கத்துடன் கூடிய முற்போக்கு இலக்கிய முயற்சிகளும், அறுபதுகளில் தோன்றிய ரேமத் இயக்கமும் நாளடைவில் தேக்க நிலை அடைந்தபோது இம்மொழியில் எழுபதுகளில் தான் தலித் அடையாளத்துடன் கூடிய இலக்கியம் உருவாகத் தொடங்கின. இதற்கான பங்களிப்பைப் பல இதழ்கள் சிறுத்தை, ஆக்ரோஷ், காலாசூரஜ், கருட் தலித்பந்து, நயாமார்க், திஸா, ஆக்ஷேபல்கச் செய்து குஜராத்தி இலக்கியத்தில் எதிர் மரபு உணர்ச்சியைக் கிளரச் செய்தன. 1981-ல் இட ஒதுக்கீட்டிற்கு எதிரான இயக்கங்கள் குஜராத்தில் ஓங்கியபோது. தலித் இலக்கியம் முழுவீச்சுடன் அதனை எதிர் கொண்டது.

ஜோசப் மக்வான், மோகன் பார்மர், ஹரீஷ் மங்களம், மங்கள்ரத்தோட், கிசான் சோசா போன்ற எழுத்தாளர்கள் தலித் இயக்கத்தை வளப்படுத்தியுள்ளார்கள். பெரும்பாலான தலித் எழுத்தாளர்கள் (தல்பத் சௌஹான், ராஜீ சோலங்கி, ஜே.ஜே.பரோட், அஸ்வவின் தேசாவ், சஹில் பார்மர் கர்தம்பட்) வடக்குக் குஜராத் பகுதியைச் சேர்ந்தவர்கள். உஷா மஜ்வானாவைத் தவிர குஜராத்தி தலித் இலக்கியத்தில் பெண் எழுத்தாளர்களே பெரும்பாலும் இல்லை என்ற குறைபாடு நிலவுகிறது. சில தலித் எழுத்தாளர்கள் 1990-ல் பகுஜன் சாகித்ய சங்குல் (சம்மேளனம்) என்ற அமைப்பை ஏற்படுத்தி தலித் இலக்கியத்தை வளர்ச்சியுறச் செய்கின்றனர்.

தமிழ்

இந்திய விடுதலைக்குப் பின் தோன்றிய திராவிட முற்போக்கு இலக்கியப் படைப்புகளில் தலித் இலக்கியச் சாயல்களை / வேர்களைக் காணலாம். ஆனால் மராத்தி தலித் அரசியல் இலக்கிய அமைப்புகளின் தாக்கத்தினால் 90-களில் பின்னை நவீனத்துவப் போக்குடன் தமிழில் தனித்துவமான தலித் இலக்கியம் தோன்றி வளர்ந்து வருகின்றது. டேனியலின் பஞ்சமர், டிசெல்வராஜின் மலரும் சருகும், ஆரம்பகால தலித் அம்ச நாவல்களாகும். சிவகாமியின் பழையன கழிதலும் மற்றும் ஆனந்தாயி, பூமணியின் பிறகு, பாமாவின் கருக்கு மற்றும் சங்கதி, விழி பா. இதய வேந்தனின் நந்தனார் தெரு, க.பா.அருகனின் சாதி பத்தியம், தணிகைச் செல்வன் மற்றும் பழமலயின் கவிதைகள் தலித் இலக்கியத்தில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவை. தேவேந்திரகுல வேளாளர் (பள்ளர்)களில் ஒரு பிரிவினரும் கிறித்துவத்தைச் சேர்ந்த பறையர்களும், அருந்ததியர்களும் தங்களைத் தேசிய நீரோட்டத்தில் இணைத்து

தலித் என்று அடையாளம் காண்கிறார்கள். தமிழ்த் தேசியவாதம் கொண்ட தேவேந்திர குல வேளாளர் ஏற்கவில்லை. தலித், சேரி என்னும் சிறப்பிதழ்களும், வேர்களின் நிறப்பிரிகை போன்ற பொது இதழ்களும் விடியல் பதிப்பகம் (கோவை), தாமரைச் செல்வி பதிப்பகம் (சென்னை) போன்ற வெளியீட்டகங்களும் தலித் இலக்கிய வளர்ச்சிக்கு ஊக்கம் கொடுத்து வருகின்றன.

முடிவுரை

பொதுவாக, இந்திய மொழிகளில் மராத்திய தலித் இலக்கியம் பிற இந்திய மொழிகளில் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. தலித் இயக்கம், உத்திரப்பிரதேசம் குஜராத் ஆகிய மாநிலங்களில் பகுஜன், என்பதோடு இணைந்துள்ளது. தென் மாநிலங்களில் திராவிட - முற்போக்கு இயக்கங்களோடு தொடர்பு கொண்டுள்ளது. கவிதை, சிறுகதை, நாவல், சுயசரிதை ஆகிய இலக்கிய வகைகள் தலித் இலக்கியத்தில் நன்கு வளர்ந்துள்ளது. தலித் நாடகம், தலித் சினிமா, காவியங்கள் இனி வளர வேண்டிய கலைகளாகும்.

துணைநூற் பட்டியல்

*

1. அர்ஜுன் டாங்ளே, **தலித் இலக்கியப் போக்கும் வரலாறும்** (தமிழாக்கம்: தி.சு.சதாசிவம்), தாமரைச் செல்வி பதிப்பகம், சென்னை-78, 1992.
2. அருகன், க.பா, **சாதி பாத்தியம்** (சிறுகதைகளும், நாவலும்), தாமரைச் செல்வி பதிப்பகம், சென்னை-78, 1995.
3. இந்திரன், (தொ.ஆ), **பிணத்தை எரித்தே வெளிச்சம்**, (சிறுகதைத் தொகுப்பு) அலைகள் வெளியீட்டகம், சென்னை-24, 1995.
4. இதயவேந்தன் விழி.பா., **நந்தனார் தெரு**, (சிறுகதைகள்), தாமரைச் செல்வி பதிப்பகம், சென்னை-78, 1993
5. சாந்தா ரமேஷ்வர் ராவ், **இருட்டில் மனிதர்கள்** (Children of good) (மொ.பெ.ஆர். சிவக்குமார்), ஓரியண்ட் லாங்மேன் லிமிடெட், சென்னை-2, 1993.
6. பாவண்ணன் (மொ.பெ.), **புதைந்த காற்று**, (சிறுகதைத் தொகுப்பு) விடியல் பதிப்பகம் கோவை-15 1997.
7. பாவண்ணன் (மொ.பெ), **ஊரும் சேரியும்** (சித்தலிங்கையாவின் சுயசரிதை), விடியல் பதிப்பகம், கோவை-15, 1997.
8. பாமா, **கருக்கு** (தன் வரலாற்று நாவல்) சமூகச்சிந்தனை செயல் ஆய்வு மையம் (ஐடியாஸ்) மதுரை-1, 1992.
9. மூர்த்தி மற்றும் சிலர், **தலித் சமூக இயல்**, ஜெய்பீம் பதிப்பகம், 2/சி, சின்னவாய்க்கால் தெரு, புதுச்சேரி-600 050.
10. ராஜ்கௌதமன், **தலித் பண்பாடு**, கௌரிபதிப்பகம், புதுவை-8. 1993.
11. ராஜ்கௌதமன், **தலித் பார்வையில் தமிழ்ப்பண்பாடு** (சங்ககாலம்), கௌரி பதிப்பகம், புதுவை-8, 1994.

*

11

இந்திய மொழிகளில் சமூக நாவல்கள்

முன்னுரை

இலக்கியம் என்பது சமுதாயத்தின் விளைபொருள். சமுதாயத்திலிருந்து தோன்றிச் சமுதாயத்தை முன்னேறச் செய்யும் ஒரு கருவி, ஒரு கலை. ஒரு மொழியைப் பேசுகின்ற மனிதக் குழுவின் ஏக்கங்களையும் எண்ண எழுச்சிகளையும் சமூகச் சிக்கல்களையும் பதிவு செய்யும் முருகியல் உணர்ச்சியுடைய ஆவணம் தான் இலக்கியம். 19-ஆம் நூற்றாண்டில் தோன்றி 20ஆம் நூற்றாண்டில் இந்திய மொழிகளில் எல்லாவற்றிலும் மலர்ந்து மணம் பரப்பி வருவது நாவல் இலக்கியம் ஆகும்.

அசாமி

ரஜினிகாந்த் பர்டோலோயின் மிரி ஜியாரி (1894) இம்மொழியில் தோன்றிய முதல் (சமூக) நாவலாகும், பழங்குடி சமுதாயப் பின்னணியில் காதலைச் சித்தரிக்கின்றது. ஸ்ரீதைவ சந்திர தாலுக்தார் தீனநாத் சர்மா, சரத் சந்திரகோஸ்வாமி ஆகியோர் 1908-1930 ஆண்டுக் காலக்கட்டத்தில் சமூகச் சீர்திருத்தச் சிந்தனைகளைக் கருப்பொருட்களாகக்கொண்டு எழுதினார்கள். வீண பருவாவின் வாழ்க்கைப் பாதையின் மேல் (1945) என்னும் நாவல் இராதாகிருஷ்ண கோஸ்வாமியின் புயல் (1954) நவகந்த பருவாவின் கபிலி ஆற்றின் கதை (1954) போன்ற நாவல்கள் சமூகச் சிக்கல்களை உள்ளடக்கமாகக் கொண்டவை. சையத்அப்துல் மாலிக், ஜோகேஸ்தாஸ் பிரேந்திரபருவா, லட்சுமிகாந்த பருவா, ஹோமென் பார்கோ ஹைய்ன், திருமதி. நிருபமா பர்கோஹைன் ஆகியோர் விடுதலைக்குப்பின் சமூகப் பொருளாதாரப் பிரச்சனைகளைக் கதைவடிவம் ஆக்கிப் புகழ்பெற்றவர்கள்.

இந்தி

பரிக்ஷா குரு (1882) இம்மொழியில் தோன்றிய முதல் (சமூக) நாவலாகும். ஆனால். இந்தி, நாவலுக்குச் சமூகப் பிரக்ஞையும் பரிமாணமும் தந்தவர்

பிரேம்சந்த். சேவாசதன், கபன், கர்மபூமி, கோதான் போன்ற நாவல்களின் மூலம் இந்திமொழியில் ஒரு புதிய திருப்பத்தைக் கொண்டு வந்தார். ஜெய்சங்கர் பிரசாத் கங்கால், தீத்லி என்னும் நாவல்களில் அக்காலத்திய சமூகப்பிரச்சனையை சித்திரித்தார். இவர்களைத் தொடர்ந்து கௌசிக், சதுர்சேன், உபேந்திரநாத் அஷ்க். பகவதி சரண்வர்மா போன்றோர் சமூக நாவல்களைப் படைத்து பிரேம்சந்தின் மரபைக் கட்டிக்காத்தனர். ஆக்ஞேயாவின் சேகர் ஏக் ஜீவானி, யஷ்பாலின் ஜூடாசச், இந்தி மொழிக்குப் பெருமையைத் தேடித் தந்தன. ராஜேந்திரயாதவ், நிர்மல் வர்மா, மோகன் ராகேஷ், மீஸ்ம் சாஹனி, நரேஷ் மேத்தா, தர்மவீர் பாரதி, ஸ்ரீலால் சுக்லா, அம்ரித்லால் நாகர் ஆகியோர் இந்திச் சமூக நாவல் கருவூலத்தை வளப்படுத்தியவர்கள்.

உருது

நஜீர் அஹமத்தின் நாவல்களிலிருந்து உருது கதைத் துறைக்கு ஒரு புதிய யுகம் தோன்றுகின்றது. முப்தாலாவின் கதை என்னும் இவரது நாவல் முஸ்லீம்களிடையே உள்ள பலதார மணத்தின் தீமைகளை எடுத்துக் காட்டுகின்றது. மிர்ஜா முகம்மது ஹாதீயின் 'உம்ராவ் ஜான் கதா' என்பது சமூகத்தின் அவமானத்துக்கு ஆளான ஒரு நடனமாதின் நற்குணங்களை விளக்குகிறது. பிரேம்சந்தின் நாவல்கள் இந்தியில் மட்டுமின்றி, உருதுவிலும் வெளிவந்து சமூக மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. 1936-இல் தோன்றிய முற்போக்கு எழுத்தாளர்களின் சங்கம் யதார்த்தவாதம், உழைக்கும் வர்க்கத்தின் மேம்பாடு, மதச் சார்பின்மை, பரந்த பார்வை, மனிதநேயம் போன்றவற்றை வளர்க்கும் சமூக நாவல்களை எழுதத் தூண்டியது. கிஷன்சந்திரர், ராஜேந்திர சிங்பேதீ, இஸ்மத் சுக்தாயீ ஆகியோர் முற்போக்கு இயக்கத்தைச் சார்ந்து நாவல்களைப் படைத்தார்கள்.

ஒரியா

இராம்சங்கர் ராயின் விபாஷினி (1891) ஒரியாவின் முதல் நாவலாகக் கருதப்படுகின்றது. அபர்ணா பாண்டா எழுதிய கலாபதி (1902), கோபல்லவதாஸ் படைத்த பீமபூயான் (1897) ஆரம்பச் சமூக நாவல்கள் ஆகும். இருந்தாலும் ஃபக்கீர் மோகன் சேனாபதி ஒரியா நாவல் இலக்கியத்தில் பெரிதாகப் போற்றப்படுகின்றார். இவரது ஆறு ஏக்கரும் எட்டு சென்டும் என்ற நாவல் எல்லாக் காலத்துக்கும் சிறந்து விளங்கும் உன்னதமான படைப்பாகும். காளிந்தி சரணின் மண்ணின் மானுடம் என்பது ஒரியா இலக்கியத்தில் எழுதப்பட்ட சிறந்த பத்து நாவல்களில் ஒன்று எனக் குறிப்பிடுகிறார்கள். ஞான பீடப்பரிசு பெற்ற கோபிநாத் மொகந்தியின் அம்ருதேர சந்தன், பரஜா, மாடிமாதல நாவல்கள் ஒரியாவில் புகழ் பெற்றவை. பரஜா பழங்குடியினரின் வாழ்வை பற்றியது. சுரேந்திர மொகந்தி மகாபத்ரா, நீல்மணி சந்தானு ஆச்சாரியா ஆகியோர் புதிய தலைமுறையைச் சேர்ந்த நாவலாசிரியர்கள்.

கன்னடம்

மராத்தியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட பாபாபத்மான்ஜியின் 'யமுனா பரியடன' என்பது கன்னடத்தில் தோன்றிய (1869) முதல் சமூக நாவலாகக் கூறப்படுகிறது. இருப்பினும் குல்வாடி வெங்கட்ராவின் 'இந்திராபாய்' (1899) தழுவலின்றிச் சுயமாகக் கன்னடத்தில் எழுதப்பட்ட சமூக நாவலாகும். முதலில் கூறப்பட்ட நாவல் இந்து விதவையின் துயரங்களைக் கூறுகிறது. இரண்டாவது நாவல் சமய நிறுவனங்களில் உள்ள போலித்தனத்தையும் பழைய பழக்கங்களில் நம்பிக்கையில் உள்ள கொடுமைகளைச் சித்தரிக்கின்றது. எம்.எஸ். புட்டண்ணாவின் விதைத்ததை அறுப்பாய் (1915) என்னும் நாவல் கிராமியச் சமுதாய வாழ்வை எதார்த்தத்துடனும் இலக்கியத் தரத்துடனும் எடுத்துக் காட்டுகின்றது. சிவராமகாரந்த், குவெம்பு, தேவுடு நரசிம்ம சாஸ்திரி, ஏ.என்.கிருஷ்ணாராவ், டி.ஆர்.சுப்புராவ் பசவராஜ் கட்டிமணி, அனுசூயா ஷங்கர், யு.ஆர்.ஆனந்தமூர்த்தி, எஸ்.எல்.பைரப்பா, ஸ்ரீரங்கா, முகளி போன்ற பல்வேறு கன்னட இயக்கங்களைச் சேர்ந்த நாவலாசிரியர்கள் கன்னடச் சமூக நாவல் இலக்கியப் பிரிவை வளப்படுத்தி உள்ளார்கள்.

காஷ்மீரி

இம்மொழியில் நாவல்கள் மிகக் குறைவு. இவற்றுள் சமூக நாவல்களே அதிகம் வெளிவந்துள்ளன. அக்தர் முஹி உத்தீனின் 'கோத்தக்' என்பது முதல் (சமூக) நாவல். அப்துல்கனியின் பாலியல் சிக்கலை - முக்கோணக் காதலில் வைத்து விளக்குகிறது இந்நாவல். கடி மஞ்ஜ்கதஷ் (இருளில் ஒளி) என்னும் நாவல் 1947-இல் காஷ்மீரில் நடந்த பழங்குடியினரின் படையெடுப்பைப் பின்னணியாகக் கொண்டு, பாத்திமா என்ற பள்ளி ஆசிரிலையயின் காதல் வாழ்வையும் தியாகத்தையும் சித்தரிக்கின்றது. குலாம் நபி கௌகரின் குற்றவாளி (1967) ஹஜிரா-புஷர் ஆகியோரின் காதலை எடுத்துரைக்கின்றது. ஹஜிராவின் தற்கொலைச் செயல் அவளது தந்தையைச் சிக்கலுக்குள்ளாக்கித் துயரப்பட வைக்கிறது. இது பல குறைகளை உள்ளடக்கிய ஒரு குறுநாவல், இவரது மற்றொரு நாவல் மயூல் (1973) மெஹ்முதா-ஜலீல் ஆகியோரின் காதல் - திருமணச் சிக்கலை சினிமாத்தனமான முறையில் கூறுகின்றது.

குஜராத்தி

கோவர்த்தன ராம் திரிபாதியின் சரஸ்வதி சந்திரா (1887) இம்மொழியில் தோன்றிய முதல் சிறந்த சமூக நாவலாகும். நான்கு பாகங்களைக் கொண்ட இந்நாவலில் சமூக, பொருளாதார மதப் பண்பாட்டுப் பிரச்சனைகள் எல்லாம் பின்னிக் கிடக்கின்றன. போகேந்திரா துவிவேதியா பெண்கள் முன்னேற்றம் பற்றி பன்னிரண்டு நாவல்கள் வெளியிட்டுள்ளார். இராம்லால் வசந்த்லால்

தேசாய் காதலைக் கருவாகக் கொண்டு பல சமூக நாவல்களைக் காந்தியுகத்தில் படைத்தார். கோகிலா (1928), கிராமலட்சுமி (1933-37), பாரேலோ அக்னி (1935), திவ்ய சக்ஹி (1932) பிரளயம் (1950) பாலாஜோகன் (1952) ஆகியவை இந்திய விடுதலைக்கு முன்னும் பின்னும் பாராட்டப்பட்ட சமூக நாவல்கள் ஆகும். ஞானபீடப்பரிசு பெற்ற பன்னாலால் படேல் பிரிவுபச்சாரம் (1940), இரட்டையாத்மா (1941), மானவிபாவை (1947) ஆகியவற்றில் காதலைக் கருப்பொருளாக்கிக் கிராம வாழ்வைச் சித்தரித்துக் காட்டினார். தர்ஷக், சிவகுமார், ஜோஷி, வரிபடவ பாண்டியா, ரசிக் மேத்தா, சதங்கரோட், ஜஸ்வந்த் மேத்தா ஆகியோரின் சமூக நாவல்கள் குறிப்பிடத்தக்கவை.

தமிழ்

இராஜம்மையரின் கமலாம்பாள் சரித்திரம் தமிழ்ச் சமூக நாவல்களுக்கு வழி காட்டியது. அ.மாதவையா போன்றோர் சமூகச் சீர்திருத்தச் சிந்தனைகளைக் கருவாக்கிச் சமூக நாவல்களைப் படைத்தனர். திராவிட இயக்கத்தினர் இந்து சமுதாயத்தில் உள்ள மூடநம்பிக்கைகளையும் பழக்கவழக்கங்களையும் பகுத்தறிவு பிரச்சாரத்தோடு இணைத்து சமூக நாவல்களைக் வெளியிட்டனர். அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். கல்கியின் சமூக நாவல்கள் இங்கு நினைவுகூரத் தக்கவை. விடுதலைக்குப் பின் ஐம்பது ஆண்டுகளில் சமூக நாவல்கள் அகிலன், ஜெயகாந்தன், லட்சுமி, நா.பார்த்தசாரதி, ஜானகிராமன், மு.வரதராசன், இந்திரா பார்த்தசாரதி, இராஜம்கிருஷ்ணன், சு.சமுத்திரம் சா.கந்தசாமி, பிரபஞ்சன், இந்துமதி, சிவசங்கரி வாஸந்தி, பாலகுமாரன், தோப்பில் முகமதுமீரான், நீல.பத்மநாபன் ஆகியோரால் படைக்கப்பட்டு வருகின்றன. இரா.தண்டாயுதம் தா.வே.வீராசாமி ஆகியோரின் திறனாய்வு நூல்கள் சமூக நாவல்களின் வளர்ச்சியை விரிவாக ஆராய்கின்றன.

தெலுங்கு

கோபால கிருஷ்ண செட்டியின் ஸ்ரீரங்க ராஜா சரித்திரம் (1872) இம்மொழியில் தோன்றிய முதல் நாவல். கந்துகூரி வீரேசலிங்கம் பந்துலுவின் ஸ்ரீராஜசேகர சரித்திரம், சுப்புராவ் ஆகியவை தெலுங்கு வரலாற்றில் குறிப்பிடத்தக்கவை. சுப்பராவில் மாமியார் - மருமகள் சண்டை சித்தரிக்கப்படுகின்றது. லட்சுமி நரசிம்ம பந்துலுவின் ராமசந்திர விஜயம் ஓர் அனாதைப் பையனின் வாழ்க்கைப் போராட்டத்தை விவரிக்கிறது. தல்லாபிரகடாவின் 'ஹேமாவதி' வரதட்சிணை பற்றி எடுத்துக் காட்டுகிறது. விஸ்வநாத சத்திய நாராயணாவின் வேயி படகலு (1939) சாதி அமைப்பைப் பற்றிய விமர்சனம் ஆகும். இந்தியா விடுதலை அடைந்த பின்பு தெலுங்கில் உளவியல் நாவல்களும் துப்பறியும் நாவல்களும் அதிகமாக வெளிவந்து

கொண்டிருக்கின்றன. பெண்கள் சமூக நாவல்களைப் படைப்பதில் அதிகமாகப் பங்கு பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பஞ்சாபி

பாய்வீர் சிங் சுந்தரி என்னும் நாவலை முதன்முதலில் (1897) வெளியிட்டார். இம்மொழியில் நானக்சிங் 1921- முதல் அறுபதுகள் வரை செல்வாக்கு செலுத்தியுள்ளார். இவரது வெண் குருதி (1932) என்னும் நாவல் சிறந்த நாவலாகச் சொல்லப்படுகின்றது. பல வகையான காதல், முதியோர் திருமணத்திற்கு எதிர்ப்பு, இந்து- சீக்கியர் ஒற்றுமை, சீக்கியர்- முஸ்லீம் ஒற்றுமை, தேசபக்தி, காந்தீயம் ஆகிய கருத்துக்களை உள்ளடக்கிய பல சமூக நாவல்களை வெளியிட்டார் நானக்சிங். பொதுவுடைமைச் சிந்தனை பஞ்சாபியர்களைக் கவர்ந்தது. சந்த்சிங் செகோன், குர்சரண்சிங் 'சுரிந்தர் சிங்' நருலா மோகன்சிங் ஆகியோர், பொதுவுடைமைக் கருத்துக்களுக்குக் கலைவடிவம் நல்கினர். அடுத்த தலைமுறையைச் சேர்ந்த அம்ருதா பிரிதம், ஜஸ்வந்த கன்வால், நரிந்தர் பால்சிங், சோஹன் சிங் சீதால் ஆகியோர் புதிய சமூகச் சிக்கல்களைக் கருவாகக் கொண்டு எழுதி வருகின்றார்கள்.

மராத்தி

பாபாபத்மன்ஜி யமுனா பர்யடன் (1857) என்னும் நாவல் மூலம் விதவை மறுமணத்தை ஆதரித்துப் பேசுகின்றார். இம்முதல் நாவலைத் தொடர்ந்து காதலையும் காமத்தையும் பொருளாகக் கொண்டு சில நாவல்கள் வெளிவந்தன. ஹரிநாராயணன் ஆப்தே பல சமூக நாவல்களைப் படைத்துத் தமது முத்திரையை மராத்தி நாவல் வரலாற்றில் பதித்துள்ளார். யாருக்கு அக்கறை என்னும் இவரது நாவல் ஒரு விதவையின் துயரங்களைச் சித்தரிக்கிறது. என்.எஸ்.ஃபட்கேயும் வி.எஸ்.காண்டேகரும் இருபது ஆண்டுக்காலம் கலைத்துறையில் ஆதிக்கம் செலுத்திச் சமூக நாவல்களுக்குப் புதிய பரிமாணங்களைத் தந்தனர். வி.எம்.ஜோஷி, எஸ்.வி.கேட்கத், ஜி.டித்கோல்கர் பி.ஒய்.தேஷ்பாண்டே, பி.எஸ்.சனே, எஸ்.எம்.பென்ட்சே ஆகியோரும் சமூக நாவல்களைப் படைத்து மராத்தியை ஏற்றம் பெறச் செய்தனர்.

மலையாளம்

சந்துமேனன் 1889-இல் இந்துலேகா என்னும் சமூகநாவலை வெளியிட்டார். இது பிராமணக் கூட்டுக் குடும்பப் பிரச்சனையைக் கூறுகின்றது. இதனைத் தொடர்ந்து பல சமூக மோகத்தையும் கேலி செய்தன. முற்போக்கு இயக்கம் கேரளப் பண்பாட்டில் புதிய விழிப்புணர்ச்சியையும் சமூக மாற்றத்தையும் தந்தது. முகமது பஷீர், கேசவதேவ், தகழி, எஸ்.கே.பொற்றேகாட், உரூப் ஆகியோரின் எழுது கோல்கள் கீழ்த்தட்டு

மக்களின் பிரச்சனைகளை உயிரோவியங்கள் ஆக்கின. அறுபதுக்கள் வரை சமூக நாவல்கள் இவர்களால் முதிர்ச்சி நிலையை அடைந்தன. பின்பு தனிமனித உளவியல், நனவோடை உத்தி, புனைவியல், இருப்பியல் வாதம், மாயாவாதம், புராணவியல் ஆகியவற்றின் அடிப்படையில் எழுதும் புதிய எழுத்தாளர்கள் அணிவகுத்து நிற்கின்றனர்.

வங்காளி

பங்கிம்சந்திரர் வரலாற்றுப் புனைந்துரை நாவல்களை மட்டுமின்றி விஷவிருட்சம், கபாலகுண்டலை போன்ற சமூக நாவல்களையும் படைத்துள்ளார். இவரைப் பின்பற்றி, இரவீந்திரநாத் தாகூரும், சரத்சந்திரரும் சமூக நாவல்களை மட்டும் எழுதி வங்காளி இலக்கியத்தில் புத்தொளி பாய்ச்சினர். தாகூரின் கோரா, சதுரங்கம், உடைந்த படகு போன்றவை குறிப்பிடத்தக்கவை. சரத்சந்திரர் தேவதாஸ், கிரஹதாகம், 'தத்தா', கிராமசமாஜம் போன்ற நாவல்கள் மூலம் சமூகச் சிக்கல்களுக்குக் கலைவடிவம் கொடுத்தார். இவர்களுக்குப் பின் கல்லோல் இயக்கம் மற்றும் பொதுவுடைமை இயக்கங்கள் உழைக்கும் வர்க்கத்தினரின் உரிமைப் பிரச்சனைகளை எடுத்துரைத்தன. தாராசங்கர் பானர்ஜி, மாணிக் பானர்ஜி, விபூதி பூஷன் பானர்ஜி திரைலோக்யநாத், அன்னசங்கர் ராய், ஜீவானந்ததாஸ் ஆகியோர் வங்காளிச் சமூக நாவல்களை வளமுறச் செய்தனர். ஆஷாபூர்ணதேவி, மகேஸ்வேத தேவி ஆகியோரின் சமூக நாவல்களும் இத்தலைமுறையினரால் பாராட்டப்படுபவை.

முடிவுரை

இந்திய மொழிகளில் சமூக நாவல்கள் ஆரிய சமாஜம், பிரம்மசமாஜம் காங்கிரஸ் இயக்கம், காந்திய இயக்கம் ஆகியவை பிரச்சாரம் செய்யத் தொடங்கிய காலகட்டத்தில் தோன்றின. முக்கோணக் காதல் சிக்கல், குழந்தை மணம் மற்றும் முதியோர் மணத்திற்கு எதிர்ப்பு, விதவைமறுமணம், வரதட்சணை, சாதி வேறுபாடு மத ஒற்றுமை, பலதாரமணம், வேலையின்மை, பாலுணர்வுச்சிக்கல் போன்றவற்றைக் கருப்பொருட்களாகக் கொண்டு எழுதினார்கள். ஆரம்பத்தில் மேல்தட்டு-நடுத்தட்டு வர்க்கத்தினரைப் பற்றியதாக இருந்த சமூக நாவல்கள் 1936-க்குப் பின் முற்போக்கு இயக்கத்தினரால் கீழ்த்தட்டு மக்களின் பிரச்சனைகளை முதன்மைப்படுத்தின. வங்காளி, இந்தி, உருது, பஞ்சாபி, மலையாளம் ஆகிய மொழிகளில் இந்திய விடுதலைக்குப்பின்னே முற்போக்கு நாவல்கள் தோன்றின. மற்ற மொழிகளில் இந்திய விடுதலைக்குப்பின்னே முற்போக்கு நாவல்கள் தோன்றலாயின. இந்தியா பாகிஸ்தான் பிரிவினையால் ஏற்பட்ட குடும்ப- சமூகப் பிரச்சனைகளை பஞ்சாபி, இந்தி, உருது, வங்காளி நாவல்கள் அவலச்சுவையுடன் சித்தரிக்கின்றன. 20-ஆம் நூற்றாண்டில் சமூக நாவல் என்பது அரசியல், உளவியல், வட்டாரவியல், தலித்தியம், பெண்ணியம், நகரியம் ஆகியவற்றின் அடிப்படையில் பிரிக்கத்தக்கதாக வளர்ந்திருக்கின்றது.

✲

துணைநூற் பட்டியல்

1. கிருஷ்ணமூர்த்தி, க., *கதைச்சிற்பி சரத்சந்திரர்,* சென்னை புக்ஸ், சென்னை-2, 1987.

2. சிவக்கண்ணன், அ., *மு.வ. நாவல்களில் சமுதாயச் சிக்கல்கள்,* தமிழ்புத்தகாலயம், சென்னை-5, 1978.

3. சேதுமணிமணியன், *தமிழ்நாவல்களில் மதிப்புகள்,* செண்பகம், வெளியீடு, மதுரை, 1990.

4. திருமலை, ம., *தகழி செயகாந்தன் நாவல்கள் ஒப்பாய்வு,* பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை-21.

5. நளினிதேவி, நா., *ராஜம் கிருஷ்ணன் நாவல்களில் சமுதாய மாற்றம்,* மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1991.

6. ரங்கராஜன், என்., (பதி.), *இந்திய இலக்கிய மலர்,* தமிழ்ச்சங்கம், தில்லி, 1974.

7. வீராசாமி, தா.வே., *தமிழில் சமூக நாவல்கள்,* தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, 1979.

*

12

இந்திய மொழிகளில் அரசியல் நாவல்கள்

முன்னுரை

இலக்கியம் என்பது எவ்விதச் சார்பின்றித் தனித்தியங்கக் கூடிய சக்தி அல்ல என்று ரெனிவெல்லக் கூறுவர். இது பிறகலைகளையும் துறைகளையும் உள்வாங்கிக் கொண்டு அரவணைத்து வளர்ந்து வருவது ஆகும். இக்கருத்து நாவல் இலக்கியத்திற்கு முற்றிலும் பொருந்தும் - சமூகவியல், வரலாற்றியல் இனவியல், உளவியல், அறிவியல், அரசியல் போன்ற பிற துறைச் சிந்தனைகளை ஏற்று நாவல்கள் படைக்கப்படுகின்றன. நமது காலத்திலே அரசியல் கருத்துக்களும் சித்தாந்தங்களும் எத்தனையோ மனித உள்ளங்களிலே ஆழ்ந்த உணர்ச்சிகளைக் கிளறிவிட வல்லவனாய் உள்ளன. எத்தனையோ மக்களின் குணங்களை நிச்சயிப்பனவாய் இருக்கின்றன. எனவே, நேர்மையோடு சமுதாயத்தைப் பற்றிச் சிந்திக்கும் எந்த ஓர் எழுத்தாளனும் அரசியல் சிந்தாந்தங்களைப் புறக்கணிக்கமுடியாது என்று க.கைலாசபதி விளக்குவார். இந்திய மொழிகளில் அரசியல் தாக்கம் பெற்ற நாவல்களைப் பறவை நோக்கில் காணலாம்.

அசாமி

ரஜினிகாந்த பார்தொலாயின் மனோமதி (1900), ரஹதாய் லகிரி (1930) அசாம் மீது நடைபெற்ற பர்மியப் படையெடுப்பைப் பற்றியவை. தண்டிநாத் காலிதா எழுதிய சாதனா (1929), பரிச்சயா (1948) அவிஸ்கார் (1948) காந்திய அரசியலையும் சமுதாயச் சீர்திருத்தத்தையும் விளக்குபவை. தெய்வச்சந்திர தாலுக்தாரின் துவால - குவாலி (1922) அபுர்ணா (1931) காந்தியத்தாக்கம் பெற்றவை. பிரேந்திர குமார் பட்டாச்சர்யாவின் மிருதுயுன்சய் இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தையும், இயாரிங்கம்(1960) மணிப்பூர் தங்குல் நாகர்களின் போராட்டங்களையும் ஃபிஜோய்ஸ்ட் இயக்கத்தையும் சித்தரிக்கின்றன. இவரது சதுரங்கம் என்னும் நான்கு குறுநாவல்கள் (1987) மொழிக் கொள்கை போன்ற அரசியல் சிக்கல்களை எடுத்துரைக்கும் அரசியல் நாவலாகும். பி.கே.பல்லர்ஸி கதாக்னி என்பதின் மூலம் சீனாவின்

ஆக்ரமிப்பைக் கூறுகின்றார். பசுபதி பரத்வாஜாவின் ரங்காரங்கா நெஜ் (1967) என்னும் சிவந்த ரத்தம் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தைக் கருவாகக் கொண்டது. பத்மா பர்கதியின் ஜீவன் அரனி நாவலில் வரும் பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த கதாநாயகி இன்றைய ஜனநாயகத்தை விமர்சனம் செய்கிறாள், போலித்தனம், சந்தர்ப்பவாதம், காம உணர்வு கொண்ட அரசியல்வாதிகளை இனங்காட்டுகிறாள்.

இந்தி

பிரேம்சந்தின் ரங்பூமி ஒத்துழையாமை இயக்கத்தையும், கர்மபூமி 1932-இல் நிகழ்ந்த சட்டமறுப்பு இயக்கத்தையும் பின்னணியாகக் கொண்டவை. ஆனந்த கோபால் சேவ்டேயின் ஜுவலாமுகி ஆகஸ்டு புரட்சியைப் (1942) பற்றியதாகும். ஸ்ரீபஹாரியின் நிர்தேசக், ஸ்ரீவத்சவாவின் விசர்ஜன், பனிஸ்வர்நாத் ரேணுவின் மைலா ஆஞ்சல், மம்மத்நாத் குப்தாவின் ராயின் அந்தேரி மற்றும் நயா சவேரா ஆகியவை காந்தியத்தாக்கம் பெற்ற நாவல்களாகும். யஷ்பாலின் ஜூட்டாசச்சா (1960) இந்தியா-பாகிஸ்தான் பிரிவினையைக் காவிய வீச்சில் சொல்கிறது. மனஹர் சௌகான் இந்தியா-பாகிஸ்தான் போரினை *சீமயென்* என்னும் நாவலில் மர்மக் கதை போல விளக்குகிறார். ரேணுவின் ஜீலு (1965), ஜைனேந்திர குமாரின் முக்தி போத் (1965) சமகால அரசியல்வாதிகளின் சுரண்டல் போக்கைச் சித்தரிக்கின்றன. யாத்வேந்திர சர்மாவின் முக்ய மந்திரி என்னும் நாவலில் பொதுமக்களின் துன்பத்தையும் அரசியல்வாதிகளின் ஒழுக்கக் கேட்டையும் காணலாம். வேரற்ற மக்கள் (ராஜேந்திரயாதவ் 1956), தர்பாரிராகம் (ஸ்ரீலால் சுக்லா) பிரிக்கப்பட்ட கிராமம் (ரஹிமசூம் ராஜா 1966) ஆகியவை சுதந்திர இந்தியாவில் அரசியல் வாதிகளின் பொய்முகத்தைக் கிழித்துக் காட்டுகின்றன. பீஷ்மகஹ்னியின் தமஸ் 1947-48 ஆண்டுகளில் நிகழ்ந்த மதக்கலவரத்தைச் சித்தரிக்கின்றது. பாகப்பிரிவினையால் நிகழ்ந்த குருதிப்புனலை குறிப்பிடுகிறது. மதமும் அரசியலும் சேரும்போது வன்முறையும் பிரிவினைவாதமும் மேலோங்கி தேசிய ஒருமைப்பாடு ஒரு கனவாக அமைந்துவிடும் என்பதைக் காட்டுகிறது.

ஒரியா

கோபிநாத் மொகந்தி சீனப் படையெடுப்பினால் தேசீய உணர்வை ரன் தண்டல் (1963) என்னும் நாவல் வழியே வெளிப்படுத்துகிறார். ஹரிஹர் பஹினிபதியின் கரர் மனிடி (அடிமை மனிதன்) என்பது சமூக அரசியல் சூழ்நிலையில் மனிதன் அடிமையாக்கப்பட்டுள்ளதைச் சித்தரிக்கிறது. சந்தனு குமார் ஆசார்யா தமது நாவலில் ஓய்வு பெற்ற ஆசிரியர் ஒருவரின் கதை மூலம் காந்திய அரசியல் போராட்டங்களையும் சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளையும் விளக்குகிறார். சுரேந்திரமொகந்தியின் அந்தநிகந்த் இந்திய விடுதலைக்கு முன்பும் பின்பும் உள்ள சமூக அரசியல் நிலைகளைச்

சித்தரிக்கிறது. ஷன்தனு ஆசார்யா தமது நாவலில் (ஜாத்ரர பிரதம பாத 1976) விடுதலை வீரர்களுக்கு சீர் வழங்கிய பெண், சில ஆண்டுகளுக்குப் பிறகு, அவள் விடுதலை வீரர்களால் கற்பழிக்கப்படவே அவள் நக்ஸலைட் இயக்கத்தில் சேர்வதாகக் காட்டுகிறார். நித்யானந்த மகாபத்ராவின் கரடிகா என்னும் கிராமிய நாவல் (1986) நேதாஜி காந்திஜி ஆகியோரின் அரசியல் சித்தாந்தங்களின் போராட்டப் (1947-1961) பின்னணியில் எழுதப்பட்ட நாவலாகும்.

கன்னடம்

1946-ஆம் ஆண்டு வரை இந்திய சுதந்திரப் போராட்டக் காலத்தைப் பற்றிய நாவல்கள் தோன்றவில்லை. பசவராஜ் கட்டிமணி, இமாம்தார் ஆகியோர் நாவல்களில் ஆகஸ்டுப் புரட்சி இடம் பெற்றுள்ளன. வி.கே.கோகாக், டி.ஆர்.சுப்பாராவ், கோரூர் ராமசாமி அய்யங்கார், சிவராமகாரந்த் ஆகியோர் நாவல்களில் காந்தியத் தாக்கத்தைக் காணலாம். பிரகதிசீல என்னும் முற்போக்கு இயக்கம் பொதுவுடைமை, மனிதநேயம், சமூகநீதி ஆகியவற்றை வலியுறுத்தியது. நிரஞ்சனாவின் நினைவுகள்அழிவதில்லை (1952) கையூர் விவசாயிகளின் போராட்டத்தைப் பொதுவுடைமை அரசியல் பின்னணியில் விளக்குகிறது. முன்னாள் முதல் மந்திரி மதிதால் மஞ்சப்பா பஞ்சவதல்விய பஞ்சு என்னும் நாவலின் மூலம் மலைநாட்டு வாழ்வை அரசியல் விமர்சனத்தோடு சித்தரிக்கின்றார். மேலும் அவரது நாளைய நெளலு பொதுவாழ்க்கையில் அரசியல் வாதிகளின் ஒழுக்கச் சிதைவு மலிந்து வருவதைச் சுட்டிக் காட்டிக் காந்திய அரசியல் சித்தாந்தமே இறுதியில் வெற்றி பெறும் என்று விளக்குகிறது. கன்னடத்தில் அரசியலும் சமூக எதார்த்தமும் கால் நூற்றாண்டுக்கு மேலாக ஆட்சி செலுத்தியது.

தமிழ்

1922-இல் வெளிவந்த சபேசன் நாவலில் காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கம் இடம் பெறுகின்றது. மகாத்மாவின் உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டம் வை.மு.கோதைநாயகியின் ஸாரமதி (1931), சாண்டில்யனின் பலாத்காரம் (புரட்சிப், பெண் 1934) ஆகியவற்றில் இடம் பெறுகின்றது. விடுதலைக்குப் பின் உப்புச் சத்தியாகிரகம் ஆகஸ்டுப் புரட்சி ஆகியவற்றைப் பின்னணியாகக் கொண்டு நாவல்கள் படைக்கப்பட்டன. கல்கியின் அலைஓசை மற்றும் தியாகபூமி, டி.எம்.ராஜகோபாலனின் சர்க்கா, ந.சிதம்பரசுப்பிரமணியனின் மண்ணில் தெரியுது வானம், கு.ராஜவேலுவின் 1942, நா.சா.பண்டரிநாதனின் மண்ணின் புதல்வர்கள் என்.ஏ.வேலாயுதத்தின் இருவிழிகளில் ஆகியவற்றில் காந்தியடிகளின் போராட்டங்கள் இடம் பெறுகின்றன. காங்கிரஸ்காரர்கள் காந்தியத்தைச் சுயநலத்துக்காகப் பயன்படுத்தும் சுரண்டும் வர்க்கமாக மாறியதை நாரண துரைக்கண்ணன் (சீமான் சுயநலம்), வல்லிக்கண்ணன் (வீடும் வெளியும்) அகிலன் (எங்கே

போகிறோம்), நா. பார்த்தசாரதி (ஆத்மாவின் ராகங்கள்), ராஜம் கிருஷ்ணன் (வேருக்கு நீர்) போன்றோர்கள் தம் நாவல்களில் விளக்கியுள்ளார்கள்.

அறுபதுக்களில் திராவிடக் கட்சியும் பொதுவுடைமைக் கட்சிகளும் வளர்ந்து காங்கிரஸ் ஆட்சி அறுபதுக்களின் இறுதியில் அகற்றப்படுகின்றது. அறிஞர் அண்ணா, கலைஞர் மு.கருணாநிதி, தென்னரசு ஆகியோரின் படைப்புகள் திராவிடக் கட்சியின் கொள்கைகளை விளக்குபவை. டி.செல்வராஜ், சிதம்பரரகுநாதன் கு.சின்னப்பபாரதி, பொன்னீலன், சு.சமுத்திரம், ராஜம் கிருஷ்ணன் போன்றோர் தமது படைப்புகளில் பொதுவுடைமை அரசியலைப் பிரச்சாரம் செய்துள்ளார்கள். எமர்ஜென்சி காலநிலையை டி.செல்வராஜின் மூலதனம் (1982), அசோகமித்ரனின் இன்று (1984), பொன்னீலனின் புதிய தரிசனங்கள் (1994) ஆகிய நாவல்கள் எடுத்துரைக்கின்றன. பொன்னீலனின் நாவல் அவசரகால நிலையை விரிவாக நுட்பமாக எடுத்துரைக்கும் காவியப் பரிமாணம் கொண்ட நாவலாகும். இந்திராபார்த்த சாரதியின் குருதிப்புனல் தஞ்சை வெண்மணிப் போராட்டத்தையும் ஏசுவின் தோழர்கள் போலந்து நாட்டு அரசியலையும் விளக்குபவை. பிரபஞ்சனின் நாளை ஒரு பூ மலரும் என்பது சாதிக்கும் அரசியலுக்குமுள்ள உறவையும் சுகபோகத்தீவுகள் என்பது நேர்மையற்ற அரசியல்வாதிகளையும் வானம் வசப்படும் என்பது புதுச்சேரி விடுதலைப் போராட்டத்தையும் சித்தரிக்கின்றன. ஆர்.எஸ்.ஜேக்கப்பின் வாத்தியார் (1988) என்பது நெல்லை மாவட்ட கிராமம் ஒன்றில் 1948-52 காலகட்டத்தில் பொதுவுடைமைக் கட்சியும் விவசாயசங்கமும் வளர்ச்சி பெற்றதைக் காட்டும் தன் வரலாற்று ஆவணமாகும்.

பஞ்சாபி

பஞ்சாபி நாவல்களில் குறிப்பிடத்தக்க காந்தியத்தாக்கம் இல்லை என்பது கவனிக்கத்தக்கது. என்.பி.சிங் தமது நான்கு வரலாற்று நாவல்களில் சீக்கியர்கள் அரசியல் சக்தியாக எழுச்சியும் வீழ்ச்சியும் பெறுவதை விளக்குகிறார். ஜஸ்வந்த சிங் கன்வால் பவானி (1963) நாவலில் படித்த பெண் ஒருத்தி முற்போக்குச் சிந்தனையால் கவரப்பட்டுக் கட்சித் தொண்டராகியதைச் சித்தரிக்கிறது. இவரது லஹூடிலோ (1977) என்னும் நாவல் நக்ஸலைட் இயக்கம் தோன்றியதையும் அது ஆளும் அரசினால் ஒடுக்கப்பட்டதையும் சித்தரிக்கிறது. நானக் சிங் தமது ககன் தமமா பஜியா (1967) நாவலில் 1965-இல் நிகழ்ந்த இந்தியா-பாகிஸ்தான் போரினையும் தேசியம், தியாகம் போன்றவற்றையும் கூறுகின்றார். சுர்ஜித் சிங் சேதியின் கல்.வி.சுரஜ் நஹின் சர்ஹெகர் (1967) 1919-ஆம் ஆண்டு ஏப்ரல் 13ஆம் தேதி நடந்த ஜாலியன் வாலாபாக் படுகொலையை நுட்பமாக விளக்குகின்றது. இக்காலப் பஞ்சாபி நாவல்கள் முற்போக்கு பயங்கரவாதம்,

பிரிவினை அரசியல்வாதிகளைப் பற்றி அமைகின்றன. கிர்பால்சிங் ஆஸாத்தின் கனவிலிருந்து எதார்த்தத்திற்கு (1986) பொதுவுடைமைக் கட்சியின் கொள்கையை (1938-1943) விமர்சிக்கிறது. குருதயாள் சிங்ராவின் மஷால்சி (டச்சுக்காரர்கள்) என்பது சுயேச்சையாகத் தேர்தலில் நிற்கும் ஒருவரது அவலத்தையும் அரசியல் அனுபவத்தையும் (1986) விளக்குகிறது. ஓம்பிரகாஷ் (1986) கசோ தமது நாவல் ததித-ஹவா என்பதின் மூலம் சீக்கியத் தீவரவாதத்தையும் இந்து வெறியையும் சித்தரிக்கிறார். சுரீந்தர் பால் தில்லானின் தூரமும் பாதையும் (1986) நீலத்தாரகைப் போரிலிருந்து நவம்பர் 1984 வரை கலவரத்தை விளக்குகிறது.

மராத்தி

வரோர்கரின் தாவதா தொட்டா (1933) முதல் அரசியல் நாவல் என்னும் தகுதியை உடையது. பட்கேயின் ஆசா (1937) உப்புச் சத்தியாகிரகம், தீவிரவாதம் ஆகிய போராட்டங்களின் பின்னணியில் காதலை விளக்குகிறது. ஜி.டி.மட்கோல்கர் ஆறு அரசியல் நாவல்களைப் படைத்துள்ளார். 1920-45 வரையிலான மகாத்மாவின் அரசியல் போராட்டங்கள் இந்நாவலில் இடம் பெற்றுள்ளன. புரட்சிக் கருத்துக்களும் சோஷலிசச் சித்தாத்தங்களும் இவற்றில் காணப்படுகின்றன. எஸ்.ஆர்.பீவல்கர் சுநீதா (1948) நாவலின் மூலம் இந்தியா-பாகிஸ்தான் பிரிவினைக் காலத்தில் நிகழ்ந்த துயரங்களையும் மகாத்மாவின் நவகாளி யாத்திரையையும் சித்தரிக்கிறார். எஸ்.பி.பெண்ட்சேயின் லால்ஹவி (1966) இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் நடந்த சமூக அரசியல் நிலையையும் விலைவாசி ஏற்றத்தையும் ஆகஸ்டு புரட்சியையும் விளக்குகிறது. அருண்சாதுவின் பட்கம் (1985) அரசியல் மற்றும் ஒழுக்கச் சிதைவினால் மாசுபட்ட இன்றைய யுகத்தைக் கல்லூரி வாலிபனின் கண்ணோட்டத்தில் விளக்குகிறது.

மலையாளம்

பழங்கால அரசியலை வைத்து சி.வி.இராமன்பிள்ளை (மார்த்தாண்டவர்மா) அப்பன் தம்புரான் (பூதராயர்) கே.எம்.பணிக்கர் (கேரள சிம்மம்) வி.கே.நாராயணன் (பிதாமகன்) ஆகியோர் வரலாற்று நாவல்களை வெளியிட்டனர். மலையாள நாவல் இலக்கியத்தில் காந்தியத் தாக்கம் அமையவில்லை. 1935-ஆம் ஆண்டுகளுக்குப் பின் பொதுவுடைமை. அரசியலும் சமூக எதார்த்தமும் கால்நூற்றாண்டுக்கு மேலாக ஆட்சி செலுத்தியது. கேசவதேவின் பிராந்தாலயம், மத் அடிப்படையில் பாரதம் பிரிக்கப்பட்டதையும் மதவெறியையும் சாடுகின்றது, எழுபதுகளுக்குப்பின் பொதுவுடைமை அரசியல்வாதிகளின் போலித்தனமும், காங்கிரஸ்காரர்களின் செல்வாக்கும் வளரத்தொடங்கின. என்.பி.முகமதுவின் ஹிரண்ய கசிபு, வி.கே. நாராயணனின், ஆரோகணம், மற்றும் சிண்டிகேட், கே.சுரேந்திரனின்

ஜுவாலா, ஓ.வி.விஜயனின் தர்மபுரம் மற்றும் குருசாகரம், ஆனந்தின் மறுபூமிகள் உண்டாகுன்னது, மலயாற்றூர் ராமகிருஷ்ணனின் அமிர்தம் தேடி, சி.ஆர். பரமேஸ்வரனின் பிரகதி, நியமம், மேற்கூறிய காலகட்டத்தைச் சித்தரிக்கின்றன.

வங்காளி

இரவீந்திரநாத் தாகூர் கரே பாயிரே (1916) சார் அத்யாய் (1934) ஆகிய நாவல்களில் கட்சி போன்ற நிறுவனங்கள் தனிமனிதனின் சுதந்திரத்தைப் பாதித்து எதிரியாக விளங்குவதைச் சித்தரிக்கின்றார். சரத்சந்திரர் எழுதிய பதேர் தாபி (1926) ஜனரஞ்சகமான வன்முறை அரசியலைப் பற்றியது. தாராசங்கர் தர்திதேவதா (1937) கணதேவதா (1942) பஞ்சக்கிராமம் (1943) ஆகியவற்றில் சமூக எதார்த்தத்தையும் அரசியல் விழிப்புணர்வையும் தீவிரவாதம்-காந்தீயப் போராட்டங்களையும் விளக்கியுள்ளார். சதிநாத் பாதுரியின் ஜாகரி (1946) ஆகஸ்ட் புரட்சியின் உயிருள்ள சித்திரம். இவரது சித்ரகுப்தனின் ஃபைல், டோடாயின் சரிதை ஆகியவை அரசியல் பின்னணியைச் செறிவான நிலைக்களனாகக் கொண்டு விளக்குகின்றன. சாவித்ரிராய் எழுதிய ஸ்வரலிபி (1952), மாலஸ்ரீ, பாகாதேனார்கான் ஆகியவை பொதுவுடைமைப் போராட்டங்களை எடுத்துரைக்கின்றன. மாணிக் பானர்ஜியின் நாவல்கள் சமூகத்திற்கும் அரசியலுக்கும் உள்ள உறவுநிலைகளை விளக்குபவை. வங்கப்பரிவினை பற்றிக் கரே பாயிரே போன்ற நாவல்கள் எடுத்துரைக்கின்றன. மகேஸ்வேத தேவியின் நாவல்கள் விவசாயிகள் போராட்டத்தையும் சந்தல், முண்டா பழங்குடியினரின் சிக்கல்களையும் அரசியல் பின்னணியில் காப்பியப் பரிமாணத்தில் விளக்குபவை. குற்றம் சாட்டப்பட்ட 1084 எண்ணுள்ள கைதியின் அன்னை என்ற நாவல் நக்சல்பாரி இயக்கத்தை உணர்ச்சி பூர்வமாகச் சித்தரிக்கிறது.

முடிவுரை

தமிழ், இந்தி, மராத்தி, வங்காளி, அஸ்ஸாம் ஆகிய மொழிகளில் காந்தியச் சிந்தனை மற்றும் தேசிய விடுதலைப் போராட்டங்கள் 1947-க்கு முன்பே பதிவு செய்யப்பட்டுள்ளன. கன்னடம், குஜராத்தி ஆகியவற்றில் விடுதலைக்குப் பின்பே காந்தியமும் சுதந்திரப் போராட்டமும் இடம் பெறுகின்றன. மலையாளம், பஞ்சாபி, வங்காளி, உருது ஆகிய மொழிகளில் விடுதலைக்கு முன்பும் பின்பும் பொதுவுடைமை அரசியலும் தீவிரவாதமும் கருப்பொருளாக்கப்பட்டுள்ளன. இந்திய மொழிகளில் 1942-இல் நிகழ்ந்த ஆகஸ்டுப் புரட்சியைப் பற்றிய நாவல்களை மட்டும் தனியாக ஆராய்வதற்கு வாய்ப்புண்டு. தென்னிந்திய மொழிகளில் ஜாலியன் வாலாபாக் படுகொலை, வங்கப்பிரிவினை, இந்தியா-பாகிஸ்தான் பிரிவினை, சீனப்படையெடுப்பு, நக்ஸலைட் இயக்கம் போன்ற அரசியல் நிகழ்வுகள் இடம் பெறாமை குறிப்பிடத்தக்கது. தமிழில் மட்டும் 50-க்கு மேற்பட்ட நாவல்களில் காந்திய

அரசியல் போராட்டங்களைக் காணலாம். அமெரிக்க நாவல்களைப் போல தொண்ணூறுக்களில் தான் முழுமையான அரசியல் நாவல்களைப் படைக்கத் தொடங்கியுள்ளார்கள்.

*

துணைநூற் பட்டியல்

1. இரபிசிங், ம.செ., **தமிழ் நாவல் இலக்கியத்தில் புதிய பரிமாணங்கள்** ஐந்திணைப்பதிப்பகம், சென்னை-5, 1996.

2. சுந்தரி,சி., **தமிழ் நாவல்களில் பண்பாட்டுத் தாக்கம்**, தமிழ்ப்புத்தகாலயம், சென்னை-17, 1998.

3. சீனிச்சாமி, துரை, **நாவல்கள் - நவீன விமர்சனங்கள்**, காவ்யா, வெளியீடு, பெங்களூர், 1997.

4. மீரா, (பதி.) **கு.சின்னப்பபாரதியின் படைப்புலகம்**, அன்னம்வெளியீடு, சிவகங்கை, 1996.

5. லட்சுமிசுந்தரம் (பதி.) **எதார்த்தவாதமும் தமிழ்நாவல்களும்**, காவ்யா, பெங்களூர்-1984.

*

13

இந்திய மொழிகளில் உளவியல் நாவல்கள்

முன்னுரை

19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கிலேயர் தொடர்பினால் இந்திய மொழிகளில் நாவல் இலக்கியத்திற்கு வித்திடப்பட்டது. வங்காளியில் "துர்கேச நந்தினி" என்னும் வரலாற்றுப் புனைவியல் நாவலை பங்கிம் சந்திரர் வெளியிட்டார். பிற இந்திய மொழிகளில் வரலாற்றுப் புனைவியல் பாங்கான நாவல்களும் சமூக நாவல்களும், மர்ம நாவல்களும் மொழிபெயர்ப்பு நாவல்களும் வெளிவந்தன. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஃபிராய்டு, யூங், அட்லர், வில்லியம் ஜேம்ஸ் ஆகியோரின் உளவியல் கோட்பாடுகளின் தாக்கத்தினால் உலகெங்கும் உளவியல் மற்றும் நனவோடை நாவல்களும் தோன்றின. இவற்றின் தாக்கத்தை இந்திய மொழிகளிலும் காணலாம்.

அசாமி

நிராத் சௌத்திரி தாம் வெளியிட்ட நாவல்களில் வெவ்வேறு சூழ்நிலைகளில் சிக்கிய பல பெண் மாந்தர்களின் மனநிலைகளைப் பகுப்பாய்வு செய்துள்ளார். ஜடாயு (1971) ஸ்டிபவிருந்தாவனம் (1968) கால்ஹீரா (1970) ஆகிய நாவல்களில் பாலியல், மணஉறவுகளை மனோதத்துவ நுட்பத்துடன் அணுகியுள்ளார். சையத் அப்துல் மாலிக் (திரிசூள், 1968). பத்மா பர்காதகி (துஷ்யந்தர் சுமா), நிராத் சௌத்திரி (காட்டுவாத்து), கிஷோர் குமார் (தாரகைகளின் ஜொலிப்பு) ஆகியோர் நனவிலிமனத்தின் அமுக்கப்பட்ட விருப்பங்களையும் அனுபவங்களையும் சித்தரிக்கும் நாவல்களைப் படைத்தனர். மாலிக் "இளமைக் காலக் குற்ற உணர்வு"களையும், பத்மா பர்காதகி "எலெக்டிரா காம்பிளெக்சையும்" கிஷோர் குமார் பைத்திய நிலைக்குத் தள்ளும் குற்றவுணர்வையும் அடிப்படையாக கொண்டு நாவல்களைப் படைத்துள்ளனர். சௌரப் சாலிஹா, மஹிம்பரா, நஜென் சைகியா ஆகியோர் நனவோடை மற்றும் மனக்குரல் உத்திகளைக் கையாண்டு நாவல்களை வெளியிட்டுள்ளனர்.

பொதுவாக அறுபதுக்களில் தான் அஸ்ஸாமியில் உளவியல் நாவல்களின் பரவலான வருகையைக் காணமுடிகிறது.

இந்தி

பிரேம்சந்திற்குப் பிறகு சில ஆண்டுகள் சமூகப் பிரச்சனைகளை மையப்படுத்தி நாவல்கள் எழுதினர். பின்பு புதிய மதிப்புகளைத் தேடியும், தனி மனித அடையாளத்தை நாடியும் எழுத்தாளர்கள் புறப்பட்டார்கள். ஜைனேந்திரகுமார், இலா சந்திரஜோஷி, தேவ்ராஜா, அக்ஞேயா ஆகியோரின் உளவியல் நாவல்கள் இந்தியில் குறிப்பிடத்தக்கவை. நாற்பதுகளில் பாலியல் வக்கிரங்களைக் கருப்பொருளாகக் கொண்டு நாவல்களைப் படைத்தனர். சமூக மரபுகளின் பலியாடாகத் தனிமனிதனின் வீழ்ச்சியையும், உணர்ச்சி மிகுந்த வாழ்க்கையின் அவலத்தையும் தம் நாவல்களில் சித்தரித்தனர். மனிதனின் 'அடிமனமும் நனவிலிமனமும்' காரண காரிய முறையில் ஆய்வுக்குள்ளாக்கப்பட்டன. சாதாரண/அசாதாரண (normal/abnormal) மனிதர்கள் கதாநாயகர்களாக இடம் பெற்றனர். ஈகோ பிரச்சனைகள், இடப்பெயர்ச்சி பெற்ற உணர்ச்சிகள், அகமனப்போராட்டங்கள் போன்ற தற்கால மனிதனின் பிரச்சனைகள் கலைவடிவம் பெற்றன. அக்ஞேயாவின் "சேகர் ஏக் ஜீவானி" என்னும் நாவல் ஒரு தனிமனிதனின் ஆவணம் என்றும், சுயசரிதை நடையில் உளப்பகுப்பாய்வு முறையில் எழுதப்பட்ட சிறந்த நாவல் என்றும் பல திறனாய்வாளர்களாலும் பாராட்டப்படுகின்றது.

உருது

உருதுவில் நாற்பதுகளிலிருந்து உளவியல் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு நாவல்களைப் படைக்கத் தொடங்கி விட்டனர். இஸ்மத் சுக்தர் (வளைந்த கோடு, 1947), அஜிஜ் அகமது (பிறழ்வு) சாதத் ஹஸன் மன்தோ (தலைப்பில்லாமல்) ஆகியோர் ஃபிராய்டின் கோட்பாட்டின் அடிப்படையில் பாத்திரங்களைப் படைத்துள்ளனர். தலைப்பில்லாமல் (பகைர் அன்வன்கே) என்னும் நாவல் தாழ்வுணர்ச்சி கொண்ட ஓர் இளைஞனின் காதல் மற்றும் பாலுணர்ச்சிக் சிக்கலைத் திறம்பட விவரிக்கின்றது. சஜ்ஜத் ஜஹீர் என்பவரின் "இலண்டனில் ஓர் இரவு" (1938) என்பது நனவோடை உத்தியில் ஜேம்ஸ் ஜாய்ஸின் நாவலைத் (A Day in Dublin) தழுவி எழுதப்பட்டது. இலண்டனில் உள்ள இந்தியர்களின் மனப்போக்குகளை மனக்குரல், மனப்போராட்டம் ஆகியவற்றால் சித்தரித்துள்ளார். குற்ரதுள் ஐன் ஹைதர் என்பவர் வர்ஜீனியா உல்ப்பினைப் பின்பற்றி "மேரே பி சனம் கனே" (1948) என்னும் நாவலை வெளியிட்டுள்ளார். இவரது "அக்னிநதி" என்னும் நாவல் இந்தியப் பண்பாட்டின் 2500 ஆண்டுக்கால வரலாற்றை நனவோடை உத்தியில் சொல்வதாக எழுதப்பட்டுள்ளது.

ஒரியா

இந்திய விடுதலைக்கு முன்பே ஒரியாவில் உளவியல் நாவல்கள் படைக்கப்பட்டுள்ளன. வைஷ்ண தாஸின் "மனே மனே" (ஒருவரின் மனத்திற்குள், 1926) என்பது ஒரியாவில் தோன்றிய முதல் உளவியல் நாவல். காதலை உளவியல் அடிப்படையில் ஆராய்கின்றது. நித்யானந்த மகாபத்ராவின் "ஜியந்த மனிஷா" (வாழும் மனிதன், 1945) என்னும் நாவல் ஒரு விதவைக்கும் (sister-in-law) திருமணம் ஆனவருக்கும் (brother-in-law) இடையே நிகழும் காதலைச் சித்தரிக்கும் உளவியலைக் கொண்டதாகும். நித்யானந்த மகாபத்ராவின் நாவல்களில் மனோதத்துவ ஆராய்ச்சியும் உணர்ச்சி வேகத்தால் ஏற்படும் பலாபலன்களின் வர்ணனையும் கற்பனையும் ஒன்றாய்ச் சேர்த்து இழைகின்றன என்று ஒரு மதிப்பீடு கூறுகின்றது. இந்திய விடுதலைக்குப்பின் ஒரியாவில் ஒரு தூக்கலான போக்காக உளவியல் வளரவில்லை என்று உணரப்படுகின்றது.

கன்னடம்

நவோதய இயக்கத்தைச் சேர்ந்த தேவுடு நரசிம்ம சாஸ்திரி முதல் உளவியல் நாவலை (அந்தரங்கம்) எழுதியுள்ளார் என்று கூறப்படுகின்றது. ஆனால் ஸ்ரீரங்க என்பவர் "முதலில்லாததும் முடிவில்லாததும்" (அனதி அனந்த) என்பதில் நனவோடை உத்தியை முதன்முதலில் அறிமுகப்படுத்தியுள்ளார். த.ரா.சு.(டி.ஆர்.சுப்பாராவ்) தமது "விடுதலையைத்தேடி" (பிடுகதேய பேடி, 1953) என்னும் நாவலில் நாமண்ணா, ருதா ஆகிய இருவரின் 11-12 வருடத்திய உறவை, அவர்களின் நனவோட்டங்களின் வாயிலாக அழகிய முறையில் எடுத்துரைத்துள்ளார். இந்நாவல் ஆணாதிக்கச் சமுதாயத்தில் ஒரு பெண், விடுதலை நாடுவதை உளவியல் அடிப்படையில் கூறுகின்றது. திரிவேணியின் "அம்புகளின் கூடு" (சரபஞ்ஜரா, 1965) என்பதும் உளவியல் சார்புடைய நாவலாகும்.

குஜராத்தி

இந்திய விடுதலைக்கு முன்பும் பின்பும் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில் குறைந்த அளவில் உளவியல் நாவல்கள் வெளிவந்துள்ளன. 1940-இல் ஜெயந்திலால் "தீமு அனே விபா" என்னும் உளவியல் நாவலை எழுதியுள்ளார். உமாஷங்கர் ஜோஷியின் "பார்கான் ஜன்யாம்" என்பது உளவியல் பாங்கானது. திருபன் பமேலின் "அடிமட்டத்தீ" (வதவானரா, 1963) என்பது இரு சகோதரிகளிடம் உள்ள பொறாமைக் குணத்தை உளவியல் ரீதியில் விளக்குகிறது. குண்டனிகா கபாடியா என்பவரின் "விடியலுக்கு முன்" (பரோத் தடன் பஹெலன்) என்பது உணர்ச்சிகளின் வேர்களை ஆராய்ந்து வெளிப்படுத்துகின்றது.

மலையாளம்

இந்திய விடுதலைக்குப் பின் குறிப்பாக அறுபதுகளிலும், எழுபதுகளிலும் உளவியல்/நனவோடை நாவல்கள் வெளிவரத் தொடங்கின. சமூக

எதார்த்தத்தைக் கொண்ட முற்போக்கு நாவல்களிலிருந்து விலகி புதிய பாணியில் சோதனை நடத்தியவர் எம்.டி.வாசுதேவன். இவரின் "மஞ்சு" என்னும் நாவல் நனவோடை உத்தியில் அமைந்ததாகும். நாலுகட்டு, காலம் ஆகியவையும் உளவியல் பாங்கான நாவல்களாகும். மலயாற்றூர் ராமகிருஷ்ணனின் "யக்ஷி" (1967) உரூப்பின் "அம்மிணி" (1972), சி.இராதாகிருஷ்ணனின் "ஸ்வப்ன பரம்பர" (1976) ஆகிய நாவல்கள் ஃபிராய்டின் உளவியல் பகுப்பாய்வின் தாக்கத்தினால் எழுதப்பட்டவை. போஞ்ன்ஜிக்கர ராஃபி (சுவர்க்க தூதன்) பாரப்புறத்து (அரை நாழிகை நேரம்), கோவிலன் (பரதன்), விலாசினி (அவகாசிகள்) ஆகியோர் நனவோடை உத்தியைப் பயன்படுத்தித் தமது நாவல்களைப் படைத்துள்ளனர். விலாசினியின் அவகாசிகள் (1980) நான்கு பாகங்களில் வெளிவந்த மாபெரும் படைப்பாகும். கே.சுரேந்திரனின் நாவல்கள் சமூக எதார்த்தத்தைக் காட்டிலும் உளவியல் எதார்த்தத்தைக் கொண்ட படைப்புகள் என்று மதிப்பிடப்படுகின்றன.

தமிழ்

உளவியல் கருத்துக்களும் நனவோடை உத்தியும் தமிழில் விடுதலைக்கு முன்பே கால்கொள்ளத் தொடங்கிவிட்டன. கு.ப.ரா.வின் சிறுகதைகளில் பிராய்டின் கருத்துக்கள் இடம் பெற்று, தி.ஜானகிராமனின் மோகமுள்ளிலும் ஜெயகாந்தனின் ரிஷிமூலத்திலும் வளர்ச்சி அடைகின்றன. புதுமைப்பித்தன் கயிற்றரவு என்னும் சிறுகதையில் நனவோட்ட உத்திகளைப் புகுத்தி வழிகாட்ட, மௌனி, லா.சா.ராமாமிருதம் படைப்புகளில் பின்பற்றப்பட்டன. க.நா.சு.(ஒரு நாள்) ரகுநாதன் (பஞ்சும் பசியும்), லா.சா.ரா.(புத்ர), அநுத்தமா (கேட்டவரம்) ஆகியோரின் நாவல்களில் நனவோட்டத்தின் மெல்லிய-மங்கலான சாயலைக் காணலாம் என்று க.கைலாசபதி குறிப்பிட்டுள்ளார். (1984: 109) தமிழில் ஜீவனாம்சம் (சி.சு.செல்லப்பா), அபிதா (லா.ச.ரா) அம்மாவந்தாள் (தி.ஜானகிராமன்), பள்ளிகொண்டபுரம் (நீலபத்மநாபன்), புனலும் மணலும் (ஆ.மாதவன்), நாய்கள் மற்றும் நினைவுப்பாதை (நகுலன்), சிலநேரங்களில் சில மனிதர்கள் (ஜெயகாந்தன்), கல்லும் மண்ணும் (க.ரத்னம்) உச்சிவெயில் (இந்திராபார்த்தசாரதி), கடை (தேனிசீருடையான்) ஆகிய நாவல்களில் நனவோடை உத்தி மிகத்திறம்பட கையாளப்பட்டுள்ளது. ம.வீ.பச்சையப்பன் "தமிழ்நாவல்களில் நனவோடைக் கோட்பாடுகள்" என்னும் பொருளில் ஆய்வுநிகழ்த்தி (1984), அந்த ஆய்வேட்டை வெளியிட்டுள்ளார் (1993). நா.அனுராதாவின் தமிழ் நாவலில் மனித மனம் (2001) என்னும் நூல் இக்காலத் தமிழ் (30) நாவல்களில் உளவியலின் தாக்கம் பற்றி ஆராய்கின்றது.

தெலுங்கு

தெலுங்கு இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் "1943-1960" என்ற காலகட்டத்தை உளவியல் நாவலின் காலம் என்று கூறுகின்றார்கள். உளவியல் நாவல்களுக்கு முன்னோடியாக விளங்கியவர் கோபிசந்த். அதை வளர்த்தவர்கள்

கிருஷ்ணாராவ் (கீலுபொம்மை), ராச கொண்ட விஸ்வநாத் சாஸ்திரி (அல்பஜீவி) புச்சிபாபு (கடைசியில் இதுதான் மிச்சம்) ஆகியோர். புச்சிபாவின் நாவல் ஈடிபஸ் காம்ப்ளக்லை ஆதாரமாகக் கொண்டு மேலைநாட்டுத் தத்துவத்திற்கு ஏற்ப படைக்கப்பட்டுள்ளது. மல்லி வசந்தம் (ஆர்.எஸ்.சுதர்சனம்), சுவரின் மேல் பொம்மை (பாலிவாடகாந்தராவ்), யுகசந்தி (பாஸ்கரபட் கிருஷ்ணராவ்) போன்றவை உளவியல் பாங்கானவை. நவீன் "அம்புகளின் படுக்கை (அம்பசையா)" என்னும் நாவலில் நனவோடை உத்தியைப் பயன்படுத்தியுள்ளார். கனவுநிலை, தாழ்வுமனப்பான்மை, குற்ற உணர்வு, உள்மனமுரண்பாடு போன்றவை உளவியல் நாவல்களில் கருப்பொருட்களாகக் கையாளப்பட்டுள்ளன.

வங்காளி

உளவியல் நாவல்கள் குறைந்த அளவிலே வெளிவந்துள்ளன. துர்ஜதி பிரசாத் அடிநீரோட்டம் (அந்தஹ்சியா, 1935), நீர்ச்சுழி (ஆபர்தா 1937), நதியின் வாய் (மோஹன், 1943) ஆகியவற்றை வெளியிட்டு உளவியல் நாவலுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தார். கோபால் ஹல்தார் ஒருநாளின் சம்பவங்களை பன்னிரெண்டு மணிக்கால அளவில் கதா நனவோட்டத்தில் சொல்வதாக ஏக்தாவில் (1939) படைத்துள்ளார். புத்ததேவ் போஸ் "நல்ல சிவந்த மேகம்" (லால்மேக், 1932) என்னும் நாவலை நனவோடை மற்றும் மனக்குரல் உத்திகளைப் பயன்படுத்தி எழுதியுள்ளார். இந்நாவல் நல்ல தொழில்நுட்பப் பண்பும் சிறந்த மொழிநடையும் கொண்டுள்ளது என்று திறனாய்வாளர்களால் பாராட்டப்படுகின்றது.

முடிவுரை

இந்திய விடுதலைக்கு முன்பு ஃபிராய்டின் உளப்பகுப்பாய்வை அடிப்படையாகக் கொண்டு உளவியல் நாவல்கள் எழுதப்பட்டன. நனவோடை உத்தி பெரும்பாலும் இந்திய விடுதலைக்குப் பின்பே பல இந்திய மொழிகளில் அறிமுகப்படுத்தப்படுகின்றது. வங்காளி, குஜராத்தி, மராத்தி, மலையாளம், தமிழ், தெலுங்கு, உருது போன்ற மொழிகளில் நனவோடை உத்தி அழுத்தமாகவும் மற்ற மொழிகளில் மேலிருந்தவாரியாகவும் கையாளப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. வங்காளி, மராத்தி, குஜராத்தி, உருது போன்ற இந்தோ-ஆரிய மொழிகளில் இந்தியாவின் சுதந்திரத்திற்கு முன்பே சோதனை ரீதியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் போன்ற திராவிட மொழிகளில் இவ்வுத்தி சுதந்திரத்திற்குப் பின்பே எழுத்தாளர்களால் பயன்படுத்தப்பட்டது. டோரதி ரிச்சர்ட்சன், வர்ஜீனியாவுல்ஃப், ஜேம்ஸ் ஜாய்ஸ், பிரௌஸ்ட், ஃபௌக்னர் ஆகியோரின் நாவல்களின் தாக்கம் வெவ்வேறு அளவில் இந்தியமொழிகளில் காணப்படுகின்றது.

*

துணைநூற் பட்டியல்

தமிழ்

1. அனுராதா.நா., **தமிழ் நாவலில் மனித மனம்**, மீனாட்சி புத்தகநிலையம், மதுரை-1, 2001.

2. காஞ்சனா.இரா., **இலக்கியமும் உளவியலும்**, விஷ்ணுப்ரியா பதிப்பகம், மதுரை-19, 2000.

3. கைலாசபதி,க.**தமிழ்நாவல் இலக்கியம்**, நியுசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட், சென்னை-98, 1984 (மூன்றாம் பதிப்பு)

4. பச்சையப்பன்,ம.வீ., **தமிழ் நாவல்களில் நனவோடைக் கோட்பாடுகள்**, அருவிப்பதிப்பகம், சென்னை-78, 1992.

5. நலங்கிள்ளி. அரங்க., **கலை இலக்கிய உளப்பகுப்பாய்வு**, வாணிதாசன் பதிப்பகம், புதுவை,1999.

ENGLISH

6. George K.M.(ed.) **Comparative Indian Literature,** vol-I., Macmillan India Ltd, Madras, 1984.

7. George K.M.(ed.) **Comparative Indian Literature,** vol-II., Macmillan India Ltd, Madras,1985.

*

14

இந்திய மொழிகளில் அறிவியல் புனைகதைகள்

முன்னுரை

ஆங்கிலேயரின் வணிகத் தொடர்பு, அவர்களின் ஆட்சி முறையையும் கல்வி முறையையும் இந்தியாவிற்குக் கொண்டுவந்தன. இதனால் இந்திய மொழிகள் மேனாட்டவரின் இலக்கிய வடிவங்களையும் பெற்றன. வங்காளி மொழியில் முதன் முதலாக நாவலும் (பங்கிம்சந்திரர்) சிறுகதையும் (இரவீந்திரநாத்தாகூர்) தோற்றம் கண்டதைப் போலவே, அறிவியல் புனைகதையும் இந்திய மொழிகளிலே வங்காளியில் தான் ஜகதீஸ்சந்திரர்போஸ் என்பவரால் படைக்கப்பட்டது.

உருது

முப்பதுகளில் பெஃரோஸ்புரி எனப்படும் முன்ஷி நதிம்ஷேக்பை "நக்லிரைஸ்" என்ற ஒரு துப்பறியும் நாவலை எழுதினார். இதில் அறுவைச் சிகிச்சை நிபுணர் பைத்தியக்காரப் பெண்ணின் மூளையை அழகான, ஆரோக்கியமான பெண்ணின் கபாலத்திற்குள் மாற்றி வைப்பதாகக் கதை அமைந்துள்ளது. இதனால் பைத்தியம் பிடித்த பெண் நல்லவளாகவும், பைத்தியம் பிடிக்காத பெண் பைத்தியம் பிடித்தவளாகவும் ஆக்கப்படுகிறார்கள். அந்தக் காலகட்டத்தில் மனித உறுப்புகளை அகற்றி இன்னொருவருக்குப் பொருத்துவது என்பது மருத்துவ அறிவியலாரின் கனவாக இருந்தது. ஆனால் இன்று சிறுநீரகம், கல்லீரல், இருதயம் ஆகியவற்றை அறுவைச் சிகிச்சை மூலம் மாற்றிப் பொருத்துவது நடைமுறையில் காணக்கூடிய ஒன்று. மூளையை மாற்றம் செய்வது மருத்துவ ரீதியில் இன்னும் சாத்தியப்படாத ஒன்றாக இருக்கின்றது. இந்த நாவலில் அறிவியல் கூறுகள் அதிகமாகக் காணப்படவில்லை. இருந்தாலும் இது அறிவியல் புனைகதையில் முன்னோடி முயற்சியாகக் கருதப்படுகிறது. இதனைத் துப்பறியும் நாவல் என்ற கூறுவதே பொருத்தமாகும்.

நூற்றாண்டுகளுக்கு முன்பு முகமது ஷீசைன்ஷா அகம்மது ஷீசைன் உமார் என்ற இருவரும் தஸ்தன் என்ற பெயரில் நீண்ட கதைத் தொகுதிகளை

வெளியிட்டார்கள். இதில் படைக்கப்பட்டுள்ள உம்ருஜயர் இருவருடைய ஜீம்பில் எனப்படும் பையும் சில அற்புதங்களை நிகழ்த்தத் கூடியது. இந்தப் பை தான் விரும்பும் பொருளை மறைக்கவும், சிறிதாக்கவும் வல்ல சக்தியைப் படைத்தது.

இந்திய விடுதலைக்குப்பின்னால் சிலர் விஞ்ஞானக் கருத்துகளை எடுத்துக் கொண்டு துப்பறியும் நாவல்களைப் படைத்தனர். 1950-இல் ஈஜர் அஸர் என்பவர் "ஆதிஸிந்தகி" என்னும் தனது முதல் நாவலை வெளியிட்டார். இது இன்றும் "ரோபோர்ட்" என்னும் மனித இயந்திரத்தைப் பற்றிய கதையாகும். இந்தப் பெண் எந்திரம் கதாநாயகனிடத்தில் தன்னுடைய தோற்றத்தை விளக்குகின்றது. அப்போது தான் ஒரு சூப்பர் கணிப்பொறியால் ஒரு தொழிற்சாலையில் உருவாக்கப்பட்டதாகச் சொல்லுகிறது. அஸத் 50க்கும் மேற்பட்ட அறிவியல் புனைகதைகளைப் படைத்துள்ளார். "சோலன்அக இன்சன்" என்பது விண்வெளிப் பயணத்தைப் பற்றியது. "பீற் சால் பாத்" என்பது மற்றொரு கிரகத்தைச் சேர்ந்த விஞ்ஞானியால் ஏதோவொரு காரணத்தினால் அழிந்து வருகின்ற ஓர் இனத்தின் வரலாற்றைப் பதிவு செய்வதற்காகப் படைக்கப்பட்ட சூப்பர் மூளையைப் பற்றியதாகும். இவரே இந்தி மொழியிலும் இத்தகைய கதைகளை, பேராசிரியர் திவாகர், டாக்டர் இராமன் என்ற பெயரில் வெளியிட்டுள்ளார்.

ஒரியா

இம் மொழியில் விடுதலைக்குப் பின்புதான் அறிவியல் புனைகதைகள் எழுதப்பட்டன. போதவரிஷ் மிஸ்ரா, "நிர்வசிதா" என்னும் திகிலூட்டும் நாவலில் அறிவியல் புனைகதை கூறுகளைக் கலந்து எழுதியுள்ளார். இருப்பினும், கோகுல் நந்தமகாபத்ராவின் "விருதி பஹரே, மனிஷா" (பூமிக்கு வெளியே மனிதன், 1965) என்னும் நாவல் அறிவியல் புதினத்தின் முதலில் வந்த தலைசிறந்த படைப்பாக ஒரியாவில் மட்டுமின்றி இந்திய அளவிலும் கருதப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து பல நாவல்களை வெளியிட்டார். கிருதிரிமா உபகிரஷா (செயற்கைக் கோள், 1958) ஸ்புட்னிக் (1958) மத்தியன் கஹரா (நடுப்பகலின் இருட்டு 1959) உதாந்தா தாலியா (பறக்கும் தட்டு, 1963) சந்திர மிருத்யு (நிலாவின் மரணம் 1966) சோனார் ஒரியா (பொன் ஒரிஸா 1973) மனித நாகரிகத்தில் அறிவியலின் தாக்கத்தையும் மனித வாழ்க்கை அறிவியல்தொழில் நுட்பக் கண்டுபிடிப்புகளால் தாக்கத்திற்கு உள்ளாகியதையும் இவருடைய நாவல்கள் சித்திரிக்கின்றன. அறிவியலும், கற்பனையும் சிறப்பாகக் கலந்து படைக்கப்பட்டுள்ளன. இவர் ஒரிசாவின் எச்.ஜி.வெல்ஸ் என்று அழைக்கப்படுகிறார்.

நிருசிங்க ஸரன் பண்டா, "தக்த கொலபரசிர பசந்த" (உலர்ந்த ரோஜாவின் வற்றாத நீருற்று, 1981) என்னும் நாவல் விஞ்ஞானிகள் அவர்களது கண்டுபிடிப்புகள் இத்தகைய நிலையில் சிக்கலைச் சித்தரிக்கின்றன. அமுல்ய

கிருஷ்ணமிஸ்ராவின் "விஞ்ஞானரசந்த" (அறிவியல் சந்தம் 1963) மற்றும் அவரது சிறுகதைத் தொகுதி (1988) குறிப்பிடத்தக்கவை. தேபகந்த மிஸ்ரா "க்ருதிரிம மனிஷா" (ரோபோர்ட்) என்னும் ஒரே ஒரு நாவலை எழுதி வெளியிட்டுள்ளார். பின்பு, இவர் அறிவியல் கட்டுரைகளை எழுதுவதில் தன்னுடைய கவனத்தைச் செலுத்திவிட்டார். சில இளம் எழுத்தாளர்கள் அறிவியல் புனைகதைகளை எழுதி வருகின்றார்கள். சிறுவர் இலக்கியத்தில் இதற்கொரு தனிஇடம் கிடைத்துவிட்டது. சாந்தனுகுமார் ஆச்சார்யா ஆஹாசகு சததி பகக்சா (ஆகாயத்திற்கு ஏழு படிகள்) என்னும் இரண்டு தொகுதிகளில் எழுதப்பட்ட அறிவியல் புனைகதைகள் குழந்தை இலக்கியத்தில் சிறப்பிடம் பெறுகின்றன.

கன்னடம்

இம்மொழியில் 1965க்கு முன்பு குறிப்பிட்டு சொல்லக்கூடிய வகையில் அறிவியல் புனைகதைகள் எழுதப்படவில்லை. இராஜசேகர், பூஸ்நூர்மத் எனப்படும் மரபு சிறுகதைகள், குறுநாவல்கள், நாவல்கள் ஆகியவற்றை அறிவியல் தலைப்புகளின் அடிப்படையில் எழுதி வெளியிட்டார். இவரது படைப்புக்கள், அதிகமாக விற்பனையாகும் புகழ் பெற்ற சுதா, மயூரா ஆகிய இதழ்களில் வெளிவந்தன. வைஞ்ஞானிக கதகலு என்றும் வைஞ்ஞானிக காம்பரிகளு என்றும் அறிவியல் சிறுகதைகளும் நாவல்களும் அழைக்கப்பட்டன. இவர் கன்னட மொழியில் முன்னோடியாக, தலைமையான எழுத்தாளராக விளங்குகின்றார். சமீபத்தில் அவர் நல்ல ரஷ்ய கதைகளைத் தழுவி அறிவியல் புனைகதைகளை எழுதியுள்ளார். மேலும் இவர் இந்திய அறிவியல் புனைகதை எழுத்தாளர் சங்கம் அமைப்பதிலும் ஆங்கிலத்தில் இதற்கான இதழ் ஒன்றை வெளியிடுவதிலும் ஈடுபாடு காட்டியுள்ளார்.

இவரைத் தவிர எச்.எஸ்.பைமனட்டி மநுசங்சய் காவனூர் எம்.எஸ்.கே.பிரபு, சரிதிஞானானந்தா மட்டும் இத்தகைய புனைகதைகளை எழுதுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. இம்மொழியில் குழந்தைகளுக்காகச் சில புனைகதைகள் எழுதப்பட்டுள்ளன. இங்கும் ரகு தன் பெயரைப் பதித்துள்ளார். நவிமைக்களு கதகளு அல்லது ஜியோர்ன் ரோபன் ஆகிய கதை மாந்தர்கள் குழந்தைகளிடத்தில் செல்வாக்குப் பெற்றுள்ளனர். குழந்தைகளுக்கான அறிவியல் புனைகதைகள் அறுபதுக்கும் மேல் எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் பாதி ராசு என்பவர் எழுதியவையாகும். 1965க்கு முற்பட்ட காலத்தில் ஜீல்ஸ்வர்னேயின் படைப்புகள் கோபாலகிருஷ்ணா அடிகா என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டன. விடுதலைக்குமுன்பு இத்தகைய கதைகள் எழுதப்படவில்லை என்று தோன்றுகிறது. இருப்பினும் சதானந்த நாயக்கின் காதல்கதை (1930) அறிவியல் புனைகதை போன்று எழுதப்பட்டுள்ளது. ஏனென்றால் இக்கதையில் "இருதய மாற்று சிகிச்சை முறை ஒரு தீர்க்க தரிசனமாக" அமைந்துள்ளது.

குஜராத்தி

ஐம்பதுக்களிலிருந்து இம்மொழியில் அறிவியல் புனைகதைகளை காணமுடிகிறது. காளிதாஸ் ஜாதவ் எழுதிய "குமார்" என்னும் சிறிய அறிவியல் புனைகதை விமர்சகர்களின் கவனத்தைக் கவர்ந்த ஒன்றாகும். இதற்குப் பின் நாகின்மோதி விஞ்ஞான சிறுகதைகளை சந்தனி மற்றும் பிற இதழ்களில் வெளியிட்டார். ஆனால் இன்று வரைக்கும் குறிப்பிடத்தக்க அறிவியல் புனைகதை தோன்றவில்லை என்று குறிப்பிடப்படுகின்றது. இருப்பினும் எண்பதுக்களில் சத்யஜித்ரேயின் பேராசிரியர் சங்கு, ஜயந்த் நர்விக்கரின் ட்ரோயினோ கோடோ என்னும் விஞ்ஞானச் சிறுகதைகளின் தொகுப்பும் குஜராத்தில் மொழி பெயர்க்கப்பட்டன. கிஷோர் பண்டியர், யஷ்வந்த் மேத்தா ஆகியோர் நீண்ட புனைகதைகளை வெளியிட்டனர். நாகின்மோரி கதைவடிவத்தில் இரண்டு அறிவியல் நூல்களை வெளியிட்டுள்ளார். பீப்பின் பட்டேல், யஷ்வந்த் மேத்தா இரண்டு சிறுகதை தொகுதிகளைக் குழந்தைகளுக்காக எழுதி வெளியிட்டுள்ளார்.

1976-ல் அபூர்வ அபேக்ஷா என்ற நாவலை தாமோதர் பாலர் எழுதி வெளியிட்டுள்ளார். இதனைப் பற்றி இராம்லால் ஜோஷி விரிவாக விமர்சனம் செய்துள்ளார். இராம்லால் ஸோனியின் நதசுர் என்னும் நீண்ட நாவல் குறிப்பிடத்தக்கது. 1989-90க்களில் குஜராத் ராஜ்ஜிய சலபத்திய புஸ்தக் மண்டல் குழந்தைகளுக்கு வண்ணப் படங்களுடன் பல அறிவியல் கதை நூல்களை வெளியிட்டுள்ளது. இவற்றுள் அறிவியல் கருத்துக்கள் கதை வடிவத்தில் இம்மொழியில் அறிவியல் புனைகதைகளைக் காட்டிலும் அதிகமாக வெளிவந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

மராத்தி

இம்மொழியில் அறிவியல் புனைகதை தனித்த ஓர் இலக்கியவகையாக வளர்ந்துள்ளது. இதனின் வளர்ச்சியை நான்கு நிலைகளில் விளக்கலாம். முதல்நிலையில் தேவதைக் கதைகள் போலவும் சாகசக் கதைகள் போலவும் அதீதக் கற்பனையுடன் தோன்றின. இரண்டாம் நிலையில் தான் அறிவியல் உண்மை, தருக்கம், அறிவியல்முறை ஆகியவற்றை அடிப்படைகள் கொண்டு, கண்டுபிடிக்கப்படாத வற்றைக்கூட கணித்துச் சொல்லும் வகையில் கற்பனையுடன் எழுதப்பட்டன. மராத்தியில் இந்நிலையைச் சார்ந்த கதைகள் காணப்படுகின்றன. மூன்றாம் நிலையில் அறிவியல் புனைகதைகள் சமூகவியல் பரிமாணத்தைக் கொண்டதாக அமைந்தன. இரண்டாம் உலகப் போரினால் மனித சமுதாயம் பாதிக்கப்பட்ட போது, மனிதனுக்கும் எந்திரங்களுக்கும் உள்ள உறவுநிலைகளை விளக்கி, அறிவியல் தொழில் நுட்பத்தினால் எப்படி மனிதன் பாதிக்கப்படுகிறான் என்பதை விளக்கத்தோன்றின. இத்தன்மைய கதைகள் பலவும் மராத்தியில் தோன்றின. நான்காம் காலகட்டத்தைச் சேர்ந்த கதைகள் வடிவத்திற்கும் மொழிநடைக்கும் முதன்மை தருகின்றன. அறிவியல் உள்ளடக்கத்திற்குத் தருவதில்லை.

மராத்தியில் மற்றைய வடிவங்களைப் போலவே அறிவியல் புனைகதைகளும் ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்த்து அறிமுகம் செய்யப்பட்டன. கேரல் கோகில் என்னும் இதழில் ஜூல்ஸ்வெர்னியின் "சந்திரனுக்குப் பயணம்" என்பது வெளியிடப்பட்டது. கிரந்த மாலா என்னும் இதழில் வெர்னியின் வேறு நாவல்களும் வெளியிடப்பட்டன. எஸ்.பி.ரானடேயின் "தரெச்சே ஹஸ்ய" என்னும் சிறுகதை மராத்திய அறிவியல் புனைகதை இலக்கியத்தில் முதல் முதலில் (1911) தோன்றியதாகக் கருதப்படுகின்றது. சிலர் நாத்மாதவ்வின் "சீனிவாசராவ்" அறிவியல்கூறுகள் போதுமானதாக அமையவில்லை என்று கூறுகிறார்கள். வா.மா.ஜோஷியின் "அப்ராகாஷ் கிரந்ஞ்ச திவ்ய பிரகாஷ்" மற்றும் "வாமலோச்சனா" (1914) ஆகிய இரண்டு கதைகள் குறிப்பிட்டுச்சொல்லக்கூடியவை. காந்தியுகத்தில் அறிவியல் புனைகதைகள் எழுதப்படவில்லை. இருப்பினும் பி.ஆர்.பக்வத், ஜூல்ஸ் வெர்னி மற்றும் எச்.ஜி.வெல்ஸ் படைப்புகளை (Around the world in Eighty Days, Twenty thousands leagues under the sea, or the invisible man) மொழிபெயர்த்தும், தழுவி மறுபடைப்பாக்கம் செய்தும் வழிகாட்டினார்.

இந்திய விடுதலைக்குப்பின் புகழ்பெற்ற புனைகதையாசிரியர் நாராயணன் தரப், டி.பி.கம்பெட்டே, டி.பி.மோகஷி ஆகியோர் ஒரு சில அறிவியல் புனைகதைகளை எழுதினர். பி.ஆர். பக்வத்தைப் பின்பற்றினார்கள். பி.ஆர்.பக்வத் குழந்தைகள், இளைஞர்கள், வயது வந்தோர்கள் அனைவரும் ரசிக்கும் வகையில் புனைகதைகளைப் படைத்தார். ஐம்பதுகளிலும் அறுபதுக்களிலும் புத்துயிர் பெற்ற அறிவியல் புனைகதை மீண்டும் அறுபதுகளின் இறுதியில் தொய்வு அடைந்தது. இருப்பினும், அனந்த "அந்தர்கர்" "நவல்" என்னும் மாதஇதழின் வழியே ஊக்கமும் உற்சாகமும் ஊட்டி வந்தார்.

எழுபதுகளின் நடுப்பகுதியில் மராத்தியில் அறிவியல் புனைகதைகளுக்கு நல்ல வாய்ப்பும் வளர்ச்சியும் ஏற்பட்டது. பள்ளிக்கல்வியிலும் தொலைக்காட்சியிலும் தொடங்கப்பட்ட அறிவியல்-கணக்குப் பாடங்கள், மராத்தி சிவான் பரிஷத்தின் புனைகதைப் போட்டி, உலகப் புகழ்பெற்ற வானியல் அறிஞர் ஜெயந்த் நர்லிகர் என்பவர் புனைகதை எழுதத் தொடங்குதல் ஆகியன மராத்தி அறிவியல் புனைகதை மறுமலர்ச்சிக்கு காரணிகள் ஆகும். அறிவியல் புனைகதைப் போட்டி சிறந்த வினையூக்கியாகச் செயல்பட்டு வருகின்றது. பல எழுத்தாளர்களைத் தோற்றுவித்தது. பால்பாண்டகே, லட்சுமன்லோன்தே, நிரஞ்சன்கட்டே, சுபோத், ஜவ்தேகர் டி.வி.ஜகிர்தார், விஸ்வேஸ்வரர் சவதேகர், சுபத கோகட்டே, ஜி.கே.ஜோஷி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். எண்பதுகளில் நல்ல உயரிய வளர்ச்சியை மராத்தி கண்டுள்ளது.

தமிழ்

தமிழில் புதுமைப்பித்தன் மேரி ஷெல்லியின் 'Frankenstein' என்னும் நாவலைப் பிரேத மனிதன் என்னும் பெயரில் மொழிபெயர்த்து வெளியிட்டார். வ.ரா.வின் கோதைத் தீவும், மு.வ.வின் கி.பி.2000-ம் எதிர்காலச் சமத்துவச்

சமுதாயத்தைப் பற்றிய கற்பனைக் கதைகளாக அமைந்தனவே தவிர, அறிவியல் புனைகதைகளாக அமையவில்லை. சுஜாதாவின் "சொர்க்கத்தீவு" என்னும் நாவலைத் தான் தமிழில் தோன்றிய "முதல் அறிவியல் புனைகதை" என்று சொல்ல வேண்டும். இதற்குப் பின் ஒருசிலர் அறிவியல் நாவல்களையும் சிறுகதைகளையும் வெளியிட்டனர். குறிப்பாக, மாலன், சஞ்சீவன், கல்வி. கோபாலகிருஷ்ணன், மலர்மன்னன், மலையமான், கே.என்.ராமசந்திரன், இராம.மணிகண்டன் ஆகியவர்களைச் சுட்டிக்காட்டலாம் இருந்தாலும் சுஜாதா தான் ஐந்து நாவல்கள், இரண்டு சிறுகதைத் தொகுப்புகளை புனைகதை வகையில் வெளியிட்டுத் தனித்து நிற்கின்றார்.

சுஜாதா கணிப்பொறியாளர். எனவே, முதன் முதலில் கணிப்பொறியியல் வளர்ச்சியை வைத்து, அதாவது மூன்றாம் தலைமுறையைச் சேர்ந்த கணிப்பொறியை வைத்து ஏதேச்சதிகார மனப்பான்மை கொண்ட ஒரு குழுவினர் ஒரு நாட்டை ஆட்டிப்படைக்கின்றனர் என்று சொர்க்கத்தீவில் காட்டினார். இதைத் தொடர்ந்து "என் இனிய இயந்திராவில்" ஐந்தாம் தலைமுறைக் கணிப்பொறி நுட்பங்களையும் ரோபோடிக்ஸ் கருவிகளையும் (எ.கா.ஜினோ என்னும் நாய்) பயன்படுத்தி முன்னைய "வாய்பாடுவிலேயே" எழுதினார். அப் புனைகதையின் தொடர்ச்சியாக "மீண்டும் ஜினோ" என்னும் நாவலைப் படைத்து "நிலா-ஜினோ" வாழ்நிலையைச் சித்தரித்தார். செயற்கையறிவு ஆராய்ச்சியில் பயன்படுத்தப்படும், "அறிவு மற்றும் பதிவு" உத்தியைப் பயன்படுத்திப் "பேசும் பொம்மைகள்" என்னும் நாவலைப் படைத்துள்ளார்.

இவருடைய அறிவியல் புனைகதைகள் எல்லாம் பெரும்பாலும் கணிப்பொறியை, ரோபோடிக்ஸ் ஆகியவற்றைச் சார்ந்ததாகவும், கணிப்பொறியை ஒரு குழுவினர் பயன்படுத்தி மனித உணர்வையும், மக்களாட்சியையும் அழித்து ஏதேச்சதிகார நிலையை உருவாக்குவதாகவும் இதற்கு எதிராக ஒரு குழுவினர் போராடுவதாகவும் ஒரு சில வாய்பாடுகளின்படி எழுதியுள்ளார். இவருடைய "நிலம் நீர் நெருப்பு காற்று ஆகாயம்" என்னும் புனைகதை விண்வெளி மற்றும் கணிப்பொறி அறிவியல் சிந்தனை கொண்டு மேலே சொன்னபடி மனிதர்களும் இயந்திர மனிதர்களுக்கும் நடக்கும் போராட்டத்தைச் சித்தரிக்கிறது.

இவருடைய சிறுகதைத் தொகுப்புகள் இரண்டு. 1. கம்பியூட்டரே கதை சொல்லு 2. வடிவங்கள் ஆகிய இரண்டும் இவண் குறிப்பிடத்தக்கவை. இந்த இரண்டு தொகுப்புகளிலும் "ஆத்மா" என்னும் கதைமாந்தர் பல கதைகளில் தொடர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. 1000 வருடங்கள் உயிருடன் வாழ்தல், முட்டாளின் அறிவைக் கூட்டுதல் போன்ற அறிவியல் ஆராய்ச்சியைப் பின்னணியாகக் கொண்டு முதல் தொகுப்புக் கதைகள் அமைகின்றன. இரண்டாம் தொகுப்பில் மகாபாரதக் கிளைக் கதை (நச்சுப்பொய்கை),

நாட்டுப்புறக்கதை (நாளொருமேனி) ஆகியவற்றோடு மாயாஜாலம், அறிவியல் தொழில் நுட்பம் ஆகியவற்றைக் கலந்து, புனைகதைகளைப் படைத்துள்ளார். கணிப்பொறி, ஆல்பா பீட்டா செயற்கை மழை (ஜில்லு), வேதியியல் அறிவு, நச்சுப்பொய்கை, விண்வெளி ஆய்வு (வடிவங்கள் & புதியவன்) செயற்கை அறிவு மற்றும் ரோபோடிக்ஸ் (பிரதிமகன்) ஆகிய அறிவியல் சிந்தனைகளின் அடிப்படையில் எழுதியுள்ளார்.

தெலுங்கு

தெகுமல்ல இராஜகோபாலராவின் விஹங்கயணம் (Bird's flight) என்னும் நாவல் இம்மொழியில் வந்த முதல் அறிவியல் புனைகதையாகும். இதில் நீர்மூழ்கிக் கப்பலில் கதாநாயகி பயணம் செய்வதாகச் சித்தரித்துள்ளார். விஸ்வநாத சத்ய நாராயணா என்பவரின் ஹஹா ஹீ ஹீ என்பது காந்தர்வன் விண்ணில் இருந்து பூமிக்கு விழுவதாகவும் லண்டனில் உள்ள டிராபல்கர் சதுக்கத்தில் இறங்குவதாகவும் குறிப்பிட்டுள்ளார். சந்திர மண்டலத்திற்கு விண்வெளிக் கப்பல்களை ஏவிய நிகழ்ச்சிக்குப் பின்பு ராவுலிபரத்வாஜ சந்திரமண்டல யாத்ரா என்னும் சிறுகதையை வெளியிட்டார். இதில் கதாநாயகன் ரசிகரோடு சேர்ந்து சந்திர மண்டலம் செல்வதையும், தூரம், புவி ஈர்ப்பு விசை பற்றிய சிக்கல்களையும் பற்றி விளக்கமாக எடுத்துரைத்துள்ளார்.

தெலுங்கில் அறிவியல் புனைகதைகளுக்கு வரவேற்பு இல்லாததால் அதிகமாக அறிவியல் புனைகதைகள் எழுதப்படவில்லை. இருப்பினும் சிலர் முயன்றிருப்பது பாராட்டத்தக்கது. புல்விமுந்த நாகேஸ்வரராவ், கிரகாந்திர ஜாக்ரிக்குழு என்ற நாவலில் வேற்றுக் கிரகங்களிலிருந்து மனிதர்கள் பூமிக்கு வருவதாகவும், பூமியில் வாழும் மக்களிடையே வாழ்க்கைத்தரத்தில் பெரும் வித்தியாசங்கள் இருப்பதைக் கண்டு ஆச்சர்யப்படுவதாகவும் எழுதியுள்ளார். கும்முரி வேணுகோபாலராவின் "ஒகேரத்தம்", "ஒகேமனுஷலு" போன்ற நாவல்கள் அறிவியல் புதினங்களின் கூறுகளைக் கொண்டவை. பருச்சுரி ராஜாராம் வெளியிட்ட மப்புவிதிச்சின வெண்ணிலா (1983) என்னும் சமூக நாவலில் ஒரு தோல்வியாதி நிபுணர் தன்னுடைய மனைவியைக் காக்க மனோதத்துவ மருத்துவத்தில் ஆராய்ச்சி செய்வதாக விளக்கியுள்ளார். இவரது "ஜெயமாலா" என்னும் நாவலும் யோக அறிவியலை விளக்கியும் போலிச்சாமியார்களின் மந்திரங்களையும் விளக்குகின்றது. எண்டமூரி வீரேந்திரநாத்தின் சில நாவல்கள் அறிவியல் புதினங்களாகக் கருதத்தக்கவை. "யுகாந்தம்" என்னும் நாவல் எரிகல் ஒன்று பூமியைத் தாக்குவதையும், அதனால் பூமி இருளில் மூழ்குவதையும் சித்தரிக்கிறது. "துளசிதளம்" என்னும் நாவல் மந்திர தந்திரங்களை உள்ளடக்கிய கறுப்புகளைப் பற்றியதாகும். என்.ஆர்.நந்தியின் காஞ்சனகங்கா என்னும் நாவலும் ஆவியுலகம் பற்றியது. பின்பு வேற்றுகிரகங்களுக்குச் செல்லுகின்ற பயணத்தைப் பற்றிய நாவல்கள் வெளிவந்தன. மல்லாடி வேங்கடகிருஷ்ணமூர்த்தியின் நத்தலோஸ்துள்ள

கிஜாக்ரத்த மற்றும் கொத்தசத்ரு என்பவை குறிப்பிடத்தக்கவை. இரண்டல நாகேஸ்வரராவின் "ஸ்திரீலோகம்" என்னும் கதை குறிப்பிடத்தக்கவை. இவர் பாரம்பரியவியல் (Genetics) அடிப்படையில் ஒரு பெண் தந்தையாவதைக் கற்பனை செய்து தந்துள்ளார்.

வங்காளி

உலகப் புகழ்பெற்ற இந்தியத் திரைப்பட இயங்குநர் சத்யஜித்ரேயின் தந்தை சுகுமார் ராயின் (1887-1923) ஹேஹேஷோரம் ஹன்ஷியரர் டயரி (1922) என்னும் நூல் வங்காளியில் தோன்றிய முதல் அறிவியல் நாவலாகும். இது கோணன்டாய்லின் (Conan Doyale) இழந்த உலகம் (The Lost World) என்னும் நூலின் அடிப்படையில் மறுபடைப்புச் செய்யப்பட்டது. கோணன் தனது படைப்பை டார்வினின் உயிரினங்களின் தோற்றம் (Origin of species 1859) என்பதன் அடிப்படையில் உருவாக்கினார். இந்நாவலில் பேராசிரியர் ஹீன்ஷியர் "கரகோரம் பள்ளத்தாக்கில்" டயோசைரஸ் போன்ற வினோதமான விலங்குகளையும் பேராசிரியரின் பார்வையில் விவாதித்துள்ளார்.

ஹேமேந்திர குமார்ராய் (1888-1963) என்பவர் எச்.ஜ்.வெல்ஸின் "புலப்படாத மனிதன்" (Invisible man) என்னும் நாவலை "அத்தரிஷ்ய மனுஷ்" என மொழி பெயர்த்தார். வெளிநாட்டுப் புனைகதைகளைத் தழுவிச் சில நாவல்களைப் படைத்தார். கஞ்சர் காஃபின் என்பது முதியோரியலை (Gerontology) அடிப்படையாகக் கொண்ட துப்பறியும் கதையாகும். மேக தூதேர்மர்த்யெ அகமன் (பூமிக்கு மேகதூதனின் விஜயம்) என்பது செவ்வாய்க் கிரகத்துப் பயணம் செய்து மீண்டும் பூமிக்குத் திரும்பும் வீரதீரச் செயலைக் கொண்ட கதையாகும்.

பிரேமேந்திர மித்ரா (1904-1988) வங்காளி வாசகர்களின் இதயங்களைப் பிடித்துக் கொண்ட எழுத்தாளர். "கனந்தாகதைகள்" இவருக்குப் பெரும்புகழைத் தேடித் தந்தவை. இவரது கதைகளில் கனந்தா என்னும் கதை மாந்தர் அறிவியல் கருத்து, சாகசம், நகைச்சுவை, பூகோள வருணனை ஆகியவற்றைக் கொண்டு கதை சொல்லுவதில் வல்லவர். இவரது முதல்கதை, "கோஷா" (கொசு, 1937) மரபணு மாற்றம் (Genetic Transformation) பற்றிய கதையாகும். கனந்தர் சிங்ரீ விருத்தாந்தா ஆகிய கதைகள் குறிப்பிடத்தக்கவை. அகாஷேர் அதங்கா (dread of sky.1942) துஹ்ஸ்வப்னேர் திவிப் (கனவுத்தீவு, 1948) ஷ்க்ரேய் ஜரகியெச்சிலோ (வீனஸ் கிரகத்திற்குச் சென்றவர்கள், 1964) ஆகியவற்றில் அறிவியல் கருத்து, துப்பறிதல், வீரதீரசாகசம் போன்றவைகளின் கலப்பினால் சிறப்பாகப் படைக்கப்பட்டவை.

பிரேமேந்திராவின் சமகாலத்தவரான அறிவியல் பேராசிரியர் க்ஷிந்திர நாராயண பட்டாச்சார்யா அறிவியல் சிக்கல்களை அடிப்படையாகக் கொண்டு கதைகளை எழுதியுள்ளார். அசுவத்தாம்மாவின் அடிச்சுவடுகள்! என்பது புவிவேதியல் பற்றியது, "தூங்கும் நகரம்" என்பது உயிரியல் மற்றும் இசையியல் (sonography) பற்றியது. அசுரர்களின் தீவு என்பது கதிரியக்கச் சூழ்நிலைக்கேடு பற்றியது.

சத்யஜித்ரே (1912-1992) வங்காளியில் அறிவியல் புனைகதை ஆசிரியர்களில் குறிப்பிடத்தக்கவர் என்பது பலருக்கும் தெரியாது. பேராசிரியர் "திரிலோசன் ஷங்கு" என்னும் கதைமாந்தரைக் கொண்டு பல புனைகதைகளைப் படைத்துள்ளார். பல அறிவியல், சமூகவியல் துறைகளில் புலமை பெற்றவராகப் படைக்கப்பட்டுள்ளார். மன்றோ தீவின் மர்மம் (1977), காங்கோவில் ஷங்குவின் சாகசங்கள் (1981), ஷங்குவும் காட்டுமிராண்டியும் (1986) டான் கிறிஸ்தோபல்டியின் தீர்க்கதரிசனம் (1987) ஆகியவை ஷங்கு கதைகளில் குறிப்பிடத்தக்கவை. "செப்டோபஸ் பசி" என்பது பூச்சியுண்ணும் தாவரத்தைப் பற்றியது. ஆக் என்னும் கதை வேற்றுகிரகத்திலிருந்து பூமிக்கு வந்தவனைப் பற்றியது. இக்கதை ஸ்பீல்பெர்க்கின் இ.டி.திரைப்படத்தை நினைவூட்டக்கூடியது. இருப்பினும், ரேயின் கதை இ.டி.திரைப்படத்திற்கு முன்பே வெளியாகிவிட்டது.

இக்கால வங்காளி கவிஞர் மற்றும் நாவலாசிரியர் சுனில் கங்கோபாத்தியாய (பி.1934) அறிவியல் சிறுகதைகளையும் புதினங்களையும் படைத்தவர். சிவப்பு வனம் (1984) என்பது அமூலகம் (Anti-matter) பற்றியது. இராட்தரின் கல் (1983) என்பது வசியப்படுத்தும் கல்லை உடைய தீவைப் பற்றியது. நீலமனிதனின் உலகம் (1985) என்பது வேற்றுக் கிரகத்தின் தொடர்பால் நிறம் மாறிப் போன மனிதர்களைப் பற்றியக் கதையாகும். ஷீர்சேந்து முகோபாத்தியாய் ஓர் இலட்சிய எழுத்தாளர். மூன்றுக்கு மேற்பட்ட அறிவியல் புதினங்களைப் படைத்துள்ளார். எல்லாவற்றிலும் "மனிதசக்தி தீய எந்திரசக்தியை வெல்லும்" என்பதைக் கோடிட்டு காட்டுகிறார். "புதுரய் கோரி" (1983) கணிப்பொறியையும் வானவூர்தியியலையும் அடிப்படையாகக் கொண்டது. "பக்லகணேஷ்" கி.பி.3589ல் மனித நாகரிகம் நுண்கலைகளைச் சுவைக்கும் திறனிழந்து காணப்படும் சிக்கலான சூழ்நிலையில் இருப்பார்கள் என்று சித்தரித்துள்ளார். பொன்னி (1989) என்பது கருநிலையிலுள்ள குழந்தையின் மூளையில் "மைக்ரோசிப்பை" பொருத்தி (Bonny) அக்குழவிக்கு பின்பு ஏற்படும் டயபாலிக் நிகழ்வுகளைப் பற்றியதாக அமைகிறது இந்நாவல்.

சையது முஸ்தபா சிராஜ் என்பவர் தாவரவியல், மரபணுவியல், பயன்பாட்டு இயற்பியல், கணிப்பொறி தொழில் நுட்பவியல் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டவர். ராம்கரூர்ச்சான(1984), சபுஜ் சங்கேத்(1987) வலதக் போன்ற கதைகள், மேற்கூறிய துறைகளில் நாட்டம் கொண்டவர் என்பதைப் பறைசாற்றுகின்றன. இவரது கதாநாயகன் கலோனல் நிலத்ரி சர்கார் உண்மையைக் கண்டுபிடிக்கும்

நாட்டம் கொண்டவன், இயற்கையில் அறிஞரின் அறிவியல் புதிர்களை - சிக்கல்களை அவனது பாணியிலே விடுவிப்பவன்.

வேறுபல எழுத்தாளர்களும் வங்காளி அறிவியல் புனைகதைக்கும் பங்களிப்புச் செய்துள்ளார்கள். பிமல்கர், அத்ரிஷ் பர்தன், சங்கர்ஷன்ராய், அனிஷ்தேவ் கின்னர்ராய் சித்தார்த்த கோஷ், நிரஞ்சன், சின்கா ஆகியோர் புதிய தலைமுறையைச் சேர்ந்த அறிவியல் புனைகதை எழுத்தாளர்கள் ஆவார்கள்.

முடிவுரை

இந்தியில் துர்கா பிரசாத் கத்ரியின் நாவல்களில் (ரக்த மண்டலம் - 1927) மற்றும் கருப்புத்திருடன் - 1932) அறிவியல் கண்டுபிடிப்புகள் கலந்து எழுதப்பட்டாலும், இந்தியில் தனித்தொரு அறிவியல் புனைகதை இலக்கியம் வளரவில்லை. இந்நிலையைத் தான் அசாமி, மலையாளம், பஞ்சாபி, சிந்தி, காஷ்மீரி ஆகிய மொழிகளில் காண்கிறோம். இந்திய மொழிகளிலே மராத்தியில் தான் வலுவான-சிறந்த நிறைய அறிவியல் புனைகதைகள் தோன்றியுள்ளன.. அடுத்த நிலையில் வங்காளி அறிவியல் புனைகதைகள் இடம் பெறுகின்றன. மூன்றாம் நிலையில் தமிழ், கன்னடம், தெலுங்கு, ஒரியா, குஜராத்தி, உருது ஆகிய மொழிகளில் பலவற்றில் அறிவியல் புனைகதை குழந்தைப் பருவத்திலே உள்ளது என்பதே உண்மை. பொது அறிவியல் கழகங்களும், (குழந்தை) எழுத்தாளர் சங்கங்களும் இதற்குப் போட்டிகள் நிகழ்த்தியும் பரிசுகள் வழங்கியும் வளர்ச்சியைத் தூண்டலாம். வெளிநாட்டு மொழிகளிலிருந்தும் மராத்தி, வங்காளம், மொழிகளிலிருந்தும் மொழிபெயர்ப்பு செய்தும் தழுவியும் புத்துணர்வு ஊட்டலாம்.

துணைநூற் பட்டியல்

தமிழ்

1. கல்வி. கோபாலகிருஷ்ணன், *சந்திரனுக்குச் செல்வோம்*, என்.சி.பி.எச்., சென்னை-88. 1980 (3ஆம் பதிப்பு)
2. சஞ்சீவன், *விண்வெளிநிலையம்* 9, வானதி பதிப்பகம், சென்னை-17, 1985. சுஜாதா, சொர்க்கத்தீவு, குமரிப்பதிப்பகம், நாகபட்டினம், 1975.
3. சஞ்சீவன், *நிலம் நீர் நெருப்பு காற்று ஆகாயம்*, பாரதிபதிப்பகம், சென்னை-17, 1984 (2ஆம் பதிப்பு).
4. சஞ்சீவன், *கம்பியூட்டரே ஒரு கதை சொல்லு* (சிறுகதைகள்) குமரிப்பதிப்பகம் நாகபட்டினம், 1984.
5. சஞ்சீவன், என் *இனிய இயந்திரா*, குமரிப்பதிப்பகம், நாகப்பட்டினம், 1986.
6. சஞ்சீவன், *மீண்டும் ஜீனோ*, குமரிப்பதிப்பகம், நாகபட்டினம், 1988.

7. சஞ்சீவன், ***வடிவங்கள் (சிறுகதைகள்)*** குமரிப்பதிப்பகம், நாகப்பட்டினம், 1988.

8. சஞ்சீவன், ***பேசும் பொம்மைகள்,*** பாரதி பதிப்பகம் சென்னை-17, 1991.

9. சோலையப்பன், எம்., ***விண்வெளியில் மஹாமண்டூர்***-மண்ணாங்கட்டி மீனாட்சி புத்தகநிலையம், மதுரை-1, 1984.

10. பிச்சை, அ., ***தமிழ் அறிவியல் புனைகதைகளில் எதிர்காலச் சமுதாயம் (திசைகள்)*** மதி பதிப்பகம், மதுரை, 1995, பக் 37-45.

11. மலர்வண்ணன், ***ஏழாவது விண்வெளி நகரம்,*** மலர் பதிப்பகம், கோவை-15, 1991.

12. மலையமான், ***அறிவியல் சிறுகதைகள்,*** ஒளிப்பதிப்பகம். சென்னை-18, 1987.

13. ராமசந்திரன், கே.என். ***கி.பி.2500 அறிவியல் புனைகதைகள்,*** வானதிபதிப்பகம், சென்னை-17, 1989.

14. வரதராசனார், மு.வ., ***கி.பி.2000,*** பாரி நிலையம், சென்னை-8, 1988 (9ஆம்பதி).

15. வல்லிக்கண்ணன், ***கி.பி. 2001 (சிறுகதை),*** நவசக்தி, செப்-1942.

ENGLISH

16. Asimov, **Asimov on Science Fiction**, Panther Grande Publishing Limited, London, 1984.

17. Budrys Algis (ed), **Writers Future**. New Era Publications, UK Ltd, Kent England, 1986

18. Krishnamoorthy, P.S., **A Scholar's Guide to Modern American Science Fiction,** American Studies Research Centre, Hydrabad, 1983.

19. Mohan Lal (Chief Editor) **Encyclopaedia of Indian Literature,** Vol.V.Sathiya Academy, New Delhi, 1992, pp.3889-3897.

*

15

இந்திய புனைகதை இலக்கியத்தில் பெண்களின் பங்களிப்பு

முன்னுரை

பாரத மக்கள் கலைகளின் தெய்வமாக "சரஸ்வதியை" வழிபடுகிறார்கள். வெற்றி பெற்ற ஒவ்வொரு மனிதனின் பின்னால் பெண் ஒரு கிரியா சக்தியாக இருக்கிறாள் என்று நம்புகிறார்கள். ஆவதும் பெண்ணால் அழிவதும் பெண்ணால் என்பதும் அவர்கள் அனுபவத்தின் சாராம்சம். ஆகவே, இந்தியர்கள் பெண்களைப் படைப்புச் சக்தியாக ஆராதனை செய்கிறார்கள் என்பது வெளிப்படை. ஆனால் கலையுலகத்தைப் பொருத்த வரையில் ஆண்களின் எண்ணிக்கை அதிகமாகவும் பெண்களின் எண்ணிக்கை குறைவாகவும் உள்ளது. இருக்கு வேதக் காலந்தொட்டு இக்காலம் வரை இதேநிலை தான் தொடர்கிறது.

அசாமி

நளினி பாலாதேவி, நிர்மல்பிரபா பர்டோலாய் போன்ற கவிஞர்களும், நிருபாபர்கோஹைன், இந்திரா கோஸ்வாமி, மமனி ரைசம் கோஸ்வாமி போன்ற புனைகதை ஆசிரியர்களும் தற்கால அசாமிய இலக்கியத்தை வளப்படுத்தியுள்ளார்கள். நிருபமா பர்கோஹைன் பல்வேறு சூழ்நிலைகளில் பெண்களின் பண்புகளையும் மனவியல்புகளையும் விவரிப்பதில் வெற்றிகண்ட தலைசிறந்த நாவலாசிரியர். 12 நாவல்களையும் சில சிறுகதைத் தொகுப்புகளையும் வெளியிட்டார். ஒரு வயதான மனிதன் (1966) நாள்-மறுநாள்(1968) சாமான்ய அசாமான்ய ஆகியவை இவரது குறிப்பிடத்தக்க நாவல்களாகும். வெற்றியும் தோல்வியும், தாய் என்பன இவரது சிறுகதைத் தொகுப்புகளாகும். இவரது படைப்புக்கள் இந்திய குடும்பங்களில் வாழும் பெண்களின் நிலைகளை சித்தரிக்கின்றன. இந்திரகோஸ்வாமியின் நாவல் "மமரெ தர தரோவல் அருதுகான்உபன்யசா" 1982-இல் சாகித்ய அகடமி பரிசைப் பெற்றுள்ளது. மமனி கோஸ்வாமியின் "நிர்வாண நகரம்" என்னும் சிறுகதைநூல் "பெண்ணிய மணம்" வீசுவதாகும்.

இந்தி

மகாதேவி வர்மா (1907-87) முதலிய கவிஞர்களும் கிருஷ்ணா சோப்டி மன்னுபண்டாரி, மிர்ணாள் பாண்டே போன்ற புனைகதை எழுத்தாளர்களும் இந்தி இலக்கியத்தில் முத்திரை படைப்பாளர்கள். "இருளில் பூத்தவைகள்" (1972) என்னும் கிருஷ்ணா சோப்டியின் முதல் நாவல் சிறுபிராயத்தில் பாலியல் வன்முறைக்குப் பலியான ஒரு பெண் குழந்தை நல்ல மனப்போக்குள்ள பெண்ணாக எப்படி வாழமுடியும் என்ற வினாவை எழுப்புகின்றது. 1979-இல் வெளியிட்ட இவரது "ஜிந்தகிநாமா" என்னும் நாவல் பஞ்சாப் பிரிவினைக்கு முன் செனாப் நதிக்கரைப் பிரதேச வாழ்வைச் சித்தரிக்கும் வட்டார நாவலாகும். இவர் ஆண்-பெண் உறவுகளை உறுதியான நம்பிக்கையுடனும் புதுமையான கோணத்திலும் வெளியிட்டுள்ளார். மன்னுபண்டாரியின் "ஆப்கா பண்டி" (1971) "மகா போஜா" (1979) ஆகிய இரண்டும் குறிப்பிடத்தக்கவை. முதல் நாவல் விவாகரத்து செய்து கொண்ட பெற்றோர்களின் குழந்தைகளின் அவலநிலையை விளக்குகின்றது. இரண்டாம் நாவல் இன்றைய அரசியல்வாதிகளின் சுரண்டல் போக்கை வெளிச்சப்படுத்துகின்றது. முக்கோணக்காதலை மையமாக வைத்தும் நாவலைப் படைத்துள்ளார். பெண்ணின் வாழ்க்கையை மனோதத்துவ ரீதியில் மிருணாள் பாண்டேயின் படைப்புக்கள் விளக்குகின்றன. உஷா பிரியம்வதாவின் குறுநாவல்கள் (55 தூண்களும் சிவப்புச் சுவர்களும், ராதிகா தங்கமாட்டாயா?) பல்வேறு சூழ்நிலைகளில் பெண்களின் மனப்போக்குகளையும் சிக்கல்களையும் சித்தரிக்கின்றன.

உருது

இஸ்மத் சுக்தை (1915-1991) குர் அதுல் ஐன் ஹைதர், அதயா பர்வீன் ஆகியோர் உருது புனைகதை இலக்கியத்திற்கு சிறந்த தொண்டினைச் செய்துள்ளார்கள். இஸ்மத்தின் எழுத்து வாழ்க்கை 1940-இல் தொடங்கியது. சிறுகதை, குறுநாவல், நாவல், நாடகம், கட்டுரை என்னும் பல இலக்கிய வடிவங்களிலும் தமது கலைத்திறனை வெளிப்படுத்தியுள்ளார். இவரது ஜித்தி(1941) டெர்ஹி லகீர் (1943) சௌதை (1964) போன்ற நாவல்கள் குறிப்பிடத்தக்கவை. ஏராளமான சிறுகதைகளையும் எழுதியுள்ளார். குர் அதுல் ஐன் ஹைதர் ஞானபீடப்பரிசு பெற்ற நாவலாசிரியர். அக்னிநதி (1962), கழியும் இரவின் சகப்பிரயாணி (1979) என்னும் ஹைதரின் நாவல்கள் குறிப்பிடத்தக்கவை. இந்தியப் பண்பாட்டு வரலாற்றை (2500 ஆண்டுகள்) நனவோடை உத்தியில் விளக்கும் "அக்னி நதி" சாதனையான படைப்பாகும். இரண்டாவது நாவல் இந்திய விடுதலைக்குப் பின் வங்காளத்தில் தலைமறைவாகிய புரட்சிக்காரர்களின் நிலையைச் சித்தரிக்கின்றது. அதயா பர்வீன் 8 நாவல்களையும் பல சிறுகதைகளையும் வெளியிட்டுள்ளார். மனித நேயத்துடன் வாழ்க்கையை அணுகி, பெண்களின் பிரச்சனைகளைக் கலை வடிவத்தில் தருவதில் வல்லவராக விளங்குகின்றார்.

ஒரியா

சுலக்ஷணா தேவி, சுசித்ரா தேவி, அன்னபூர்ணாதேவி, ரேபா ராய் (1879-1957), பிரதிபா சத்பதி போன்ற கவிஞர்களும், சுப்ரவா தேவி, நர்மதா தேவி, பிரதிபாராய் போன்ற புனைகதை படைப்பாளர்களும் தற்கால ஒரியா இலக்கியத்தைச் செழுமைப்படுத்தியவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். விடுதலைக் போராட்டக் காலத்தில் சுப்ரவாதேவி (அப்பா), நர்மதாதேவி (தேவதர்சன்), ரேபாராய் (சகுந்தலா) ஆகியோர் சிறுகதைகளை வெளியிட்டார்கள். ஒரியா மொழியில் பெரிதும் பேசப்படும் புனைகதை ஆசிரியர் பிரதிபாராய். இவர் 18 நாவல்கள், 6 சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். இவரது "திரௌபதி" என்னும் நாவல் திரௌபதியை மகாபாரத இதிகாசப்பாத்திரமாக மட்டுமன்றி இன்றைய பெண்ணின் பிரதிநிதியாக நின்று பேச வைக்கின்றது. பெண்ணின் மீது சுமத்தப்படும் நிர்ப்பந்தங்களுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் அவள் விடும் சவால் நிந்திப்பதற்கும் சீர்படுத்திக் கொள்வதற்கும் தூண்டுகின்றது. "கோனார்க்" என்பது இவரது சமீபத்திய மகத்தான படைப்பாகக் கருதப்படுகின்றது. இவரது நாவல் "அபரிசிதா" திரைவடிவம் பெற்றுள்ளது. பல பரிசுகளும் இவர் பெற்றுள்ளார் இவரது படைப்புக்கள் இந்திய மொழிகளிலும் ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

கன்னடம்

கௌரம்மா, ராஜலட்சுமி, என்.ராவ், வீணா சந்தேஷ்வர் போன்றோர் சிறுகதைகளையும், திரிவேணி, எம்.கே.இந்திரா, அனுபா நிரஞ்சனா போன்றோர் நாவல்களையும் படைத்து கன்னடப் புனைகதை இலக்கியத்தில் முன்னணியில் உள்ளனர். ஐம்பதுகளில் அனசூய ஷங்கர் என்ற திரிவேணி வாசகர்கள் மற்றும் திறனாய்வாளர்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்தார். தமது நாவல்களை நடுத்தரக் குடும்ப வாழ்க்கையைப் பிரதிபலித்து தாய்மைப் பாசத்தை வளர்க்கும் வகையில் வெளியிட்டார். கல்வித்துறையில் போதிக்கப்படும் உளவியல் இவரது நாவல்களில் கலைவடிவம் பெற்றது. எடுத்துக்காட்டாக, "சரபஞ்சரா" என்பதைக் குறிப்பிடலாம். பிற்காலப்பெண் நாவலாசிரியர்களுக்குத் தூண்டல் அளிக்கும் முன்னோடியாகவும் திகழ்ந்தார். இளையதலைமுறையைச் சார்ந்த எம்.கே.இந்திராவின் புகழ்பெற்ற நாவல் "பணியம்மா." கைம்மைப் பிரச்சனையைச் சித்தரிக்கும் இந்நாவல் திருமதி. பிரேமாகாரந்தின் இயக்கத்தில் திரைவடிவம் பெற்று வெற்றி பெற்றுள்ளது.

குஜராத்தி

1857-இல் தொடங்கப்பட்ட "சுந்தரி சுபோத்" என்னும் மாத இதழ் 20-ஆம் நூற்றாண்டின் இருபதுக்களிலும் முப்பதுகளிலும் சிறுகதைகளை வெளியிட்டது. இதில் பல பெண் எழுத்தாளர்கள் பெண்களின் நிலையையும்

உரிமைகளையும் கருப்பொருட்களாகக் கொண்டு எழுதினார்கள். சுமதி, ஊர்மிளா, விஜயலெட்சுமி, திரிவேதி, ஷார்தாபென் மேத்தா, பிரமிளா, அரவிந்த, வித்யாபென் [illegible] ஆகியோர் ஆணாதிக்கச் சமுதாயத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் சமூக அநீதிகளை வைத்து சிறுகதைகளைப் படைத்தார்கள். பிரமிளா, அரவிந்த ஆகியோர் 1909-இல் சுந்தரி சுபோத் இதழில் வெளிவந்த சிறந்த சிறுகதைகளைத் தொகுத்து ஒரு நூல் வெளியிட்டார்கள். லீலாவதி முன்ஷி இருபதுக்களிலும் முப்பதுகளிலும் பெண்களின் பிரச்சனைகளைச் சித்தரித்து புரட்சிகரமான பாத்திரங்களைப் படைத்தார். மேலும், நாட்குறிப்பு வடிவத்தில் சிறுகதைகளை வெளியிட்டார். "வனமாலாவி டைரிமாந்தி கேட்லாக்" என்னும்தொகுப்பு இதற்குச் சான்றாகும். குண்டனிகா கபாடியா என்னும் புதிய தலைமுறை எழுத்தாளர் 3 நாவல்களையும் 7 சிறுகதைத் தொகுதிகளையும் வெளியிட்டுள்ளார். இவரது "சாத் பக்லான் ஆஸ்மான்" என்னும் நூல் 1985-ல் சாகித்திய அகடமி பரிசைப் பெற்றது.

தெலுங்கு

1920-ஆம் ஆண்டுகளுக்குப் பின் தற்காலத் தெலுங்கு இலக்கிய உலகில் பெண்கள் பிரவேசம் செய்தார்கள். முப்பாள ரங்கநாயகி அம்மாள், துவிவேதுல விசாலாட்சி, ஜானகிராணி, லதா, வாசிரெட்டி, சீதாதேவி, பரிமளா சோமேஸ்வரர், எத்தனபூடி சுலோசனாராணி, ஸ்ரீதேவி, துர்கா ஜானகிராணி, சாரதா, ஆகியோர் ஆரம்பகாலப் புனைகதைப் படைப்பாளர்கள். தெலுங்கு நாவலாசிரியைகளில் தலைசிறந்து விளங்குபவர் முப்பாள ரங்கநாயகி அம்மாள். இவருடைய கிருஷ்ணவேணி, பலிபீடம், ரசயித்ரி, சுவீட்ஹோம், ஸ்திரி, பேக்கமேடலு, கடலின கோடலு ஆகிய நாவல்கள் குறிப்பிடத்தக்கவை. நாவல் மட்டுமன்றி சிறுகதைகளையும் புனைவதில் வல்லவர் என்பதை "சேர்வன ராத்திரி" என்னும் சிறுகதை காட்டுகிறது. தெலுங்கில் பெண் எழுத்தாளர்கள் ஆண்களின் பெயர்களில் எழுதும் போக்கு காணப்படுகிறது. எத்தனைபூடி சுலோனா 30-க்கு மேற்பட்ட நாவல்களை வெளியிட்டு சாதனை புரிந்துள்ளார். இவரது நாவல்கள் பல திரைப்படம் ஆக்கப்பட்டுள்ளன. ஆசாண்ட சாராதேவியின் சிறுகதைகள் நான்கு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. தெலுங்கில் பெண் எழுத்தாளர்களின் பட்டியல் மிகமிக நீண்டதாகும்.

பஞ்சாபி

பிரப்ஜோத் கௌர் என்னும் கவிஞரும், தலீப் கௌர் திவானா என்னும் புனைகதைப் படைப்பாளரும் அம்ருதா பிரீதம் என்னும் எழுத்தாளரும் பஞ்சாபி தற்கால இலக்கியத்தில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவர்கள். ஞானபீடப் பரிசு பெற்ற (1981) அம்ருதா பிரீதம் சிறந்த கவிஞர், புகழ்பெற்ற புதினப்படைப்பாளர். டாக்டர் தேவ் (1949) பின்ஜஜர், தீசரி ஆனக், புலவரஸிதி, டிக்கெட், ரெஹ்ரவன் சூராஜ், 49 நாட்கள் ஆகியவை அம்ருதாவின் நாவல்களாகும். சுயசரிதை, புராணக்கதை, தத்துவம் ஆகியவற்றை உள்ளீடாகக்

கொண்டு நாவல்களைப் படைத்துள்ளார். முற்போக்கான சோஷலிச பெண்ணியச் சிந்தனைகள் இவரது படைப்புகளில் காணப்படுகின்றன. தலீப் கௌர் திவானா 5 நாவல்களையும் 6 சிறுகதைத் தொகுதிகளையும் வெளியிட்டுள்ளார். இவரது "சாதனா" என்னும் சிறுகதைத் தொகுப்பிற்கு பஞ்சாப் அரசு பரிசளித்துள்ளது. "ஏஹோ ஹமாரா ஜீவனா" என்னும் இவரது நாவலுக்குச் சாகித்ய அகடமி (1971) பரிசு அளித்துள்ளது. இந்நாவல் கிராமப் பின்னணியில் ஒரு பெண்ணின் துன்பத்தையும் ஆதரவற்ற தன்மையினையும் விளக்கும் ஓர் உரைநடைக் காவியமாகும்.

மராத்தி

முப்பதுகளுக்குப் பின் பெண்கள் புனைகதைத் துறையில் ஈடுபடுகின்றார்கள். கமலாபாய் திலக், கிருஷ்ணாபாய், விபவரி ஷிருகர் போன்றோர் ஆரம்ப கால கட்டத்தை சேர்ந்தவர்கள். விபவரி ஷிருகரின் "மொட்டுக்களின் பெருமூச்சு" என்பது பெண்களின் சமஉரிமை நீதிக்காகக் குரல் கொடுக்கும் படைப்பு, குசம்வதி தேஷ்பாண்டே கட்டுரை போன்ற வடிவத்தில் சிறுகதைகளை நல்ல சிந்தனையுடன் எழுதியுள்ளார். இவரது "புல்லின் விளிம்பு" என்பது குறிப்பிடத்தக்க சிறுகதைத் தொகுப்பாகும். விஜயா ராஜாத் யக்ஷாவின் "விதேஹி" கமல்தேசாயின் "மகாதேவ வாடி, ரங், திலா பண்டா" என்னும் சிறுகதைகள் சிறந்த படைப்புகளாகும். கீதா சானே என்பவரும் மராத்தி வாசகர்கள் போற்றும் நாவலாசிரியர், ஜீயோஸ்னா தேவ்தர் நாவல்கள் மற்றும் சிறுகதைகள் எழுதிய பிரபல எழுத்தாளர். இந்தி மொழியில் இவரது கதைகள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

மலையாளம்

கேரளா பெண்வழிச் சொத்துரிமையை 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரையிலும் கொண்டிருந்தாலும், கலை, இலக்கியத் துறைகளில் சில பெண் எழுத்தாளர்கள் தான் தோன்றியுள்ளார்கள். பாலாமணி அம்மா, லலிதாம்பிகா அந்தர்ஜனம், மாதவிக்குட்டி, சுகதகுமாரி, சாரா ஜோசப் ஆகியோரின் புனைகதைகள் மலையாள இலக்கியத்தில் குறிப்பிடத்தக்கவை. லலிதாம்பிகா புனைகதைகளில் தனக்கென ஒரு பாணியை வகுத்துக் கொண்டு சிறப்புப் பெற்றார். இவரது நாவல் "அக்னிசாட்சி" 1977-இல் சாகித்ய அகடமி பரிசைப் பெற்றது. சரஸ்வதி அம்மா தனது சிறுகதைகளின் வழியாக நம்பூதிரி சமுதாயத்தின் பழம் மரபுகளைக் கண்டனம் செய்தும், பெண் விடுதலைக்கு வடிவம் கொடுத்தும், ஆடவரின் போலித்தனத்தை வெளிப்படுத்தியும் இலக்கிய சேவை செய்தார். மாதவிக்குட்டி மேட்டுக்குடிச் சமுதாயத்தில் பாலுறவு முறைகளில் திருப்தியடையாதவர்களின் சபலங்களைச் சித்தரிக்கும் கதைகளை எழுதினார். இட நாழியிலே கண்ணாடிகள் (1965) சதுரங்கம் (1970) பக்ஷியுடெ மணம் (1964), மலெச் செருவில் (1955) ஆகிய கதைகள் சுட்டிக் காட்டத்தக்கவை. இளைய தலைமுறையைச் சேர்ந்த சாரா தாமஸ் 12 நாவல்களையும் 2 சிறுகதைத்

தொகுதிகளையும் வெளியிட்டுள்ளார். இவரது பல நாவல்கள் திரைவடிவம் பெற்றுள்ளன. இவரது நாவலுக்கு (நாட்மடிப் புடவ) கேரளா சாகித்ய அகடமி பரிசு கிடைத்துள்ளது.

மணிபுரி

இந்த மொழியில் சுட்டிக்காட்டத் தக்க பெண் எழுத்தாளர் மகாராஜா குமாரி வினோதினிதேவி, சிறுகதை, நாவல் என்னும் கலைவடிவங்களில் சிறந்து விளங்குகின்றார். மணிபுரியின் மகாராஜ் சுர்சந்திர சிங்கின் மகள் சனதோம்பியின் வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு வரலாற்று நாவலை எழுதியுள்ளார். நாவலின் நடையும் கதை சொல்லும் முறையும் அரண்மனை வாழ்வை மீட்டுருவாக்கம் செய்து தருவதாக உள்ளது. சிறுகதைகளை எழுதுவதிலும் ஆற்றல் வாய்ந்த படைப்பாளர். 1965-இல் வெளியிட்ட சிறுகதைத் தொகுப்பு வாசகரின் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியது. வாழ்வின் இன்ப துன்பங்கள் கதைகளின் கருவாகின்றன. தலைமுறை இடைவெளியினால் தோன்றும் மதிப்புகளின் வேறுபாடுகளைத் தம் கதைகளில் சித்தரித்தார். இவரது மொழிநடையும் கதை சொல்லும் பாணியும் கதைகளுக்கு அழகூட்டுகின்றன.

வங்காளி

சுவர்ண குமாரி வங்காளியில் முதல் பெண் நாவலாசிரியர். அனுருபாதேவி, சீதாதேவி, சாந்தாதேவி, சைலாபாலா கோஷ்ஜயா, பிரதிபா போசு, லீலாமஜீம்தார், ஆஷாபூர்ணா தேவி, சாவித்ரி ராய், மகஸ்வேத தேவி ஆகியோர் வங்காளியில் புனைகதைகளை எழுதி வெளியிட்டுப் புகழ்பெற்றவர்கள், மரபுக்கும் மாறிவருகின்ற புதிய மதிப்புக்களுக்கும் இடையில் நிகழும் மனப் போராட்டங்களைப் பல நாவல்கள் சித்தரிக்கின்றன. சைலாபாலா கோஷ்ஜய ஒரு முஸ்லீம் ஒட்டுனருக்கும் இந்து உயர்குடி மாதுவிற்கும் இடையே உள்ள காதலை நாவலாக எழுதி (ஷெய்க் ஆந்து, 1917) பழைய மரபை ஆட்டம் காணச் செய்தார். சாவித்ரிராய் தமது நாவல்களின் வாயிலாக (ஸ்வரலிபி, மாலாபதி) கம்யூனிச இயக்கத்தை விளக்கியுள்ளார். ஞான பீடப்பரிசு பெற்ற ஆஷா பூர்ணாதேவியின் நாவல் "பிரதம பிரதிஸ்ருதி" (1976) குறிப்பிடத்தக்கது. மகஸ்வேத தேவியின் "அரன்யெர் அதிகார்" (காட்டில் உரிமை) என்பது 1979-இல் சாகித்ய அகடமி பரிசைப் பெற்றது. இவரது திரௌபதி ஸ்தானதாயின் என்னும் கதைகள் சமீப காலத்தில் வாசகர்கள் மத்தியில் விவாதத்தைத் தூண்டிய படைப்புக்களாகும்.

முடிவுரை

பாரதீய ஞானபீடம் இதுவரை 33 எழுத்தாளர்களுக்குப் பரிசுகளை வழங்கியுள்ளது. வட இந்தியாவைச் சேர்ந்த மகாதேவி வர்மா (இந்தி), அம்ருதா பிரீதம் (பஞ்சாபி), ஆஷாபூர்ணதேவி (வங்காளி), குர் அதுல் ஐன் ஹைதர் (உருது) ஆகிய நான்கு பெண் எழுத்தாளர்கள் மட்டுமே பரிசுகளைப்

பெற்றுள்ளார்கள். தென்னிந்திய மொழிகளில் தேசீயப் பரிசுபெறத் தகுதியான பெண் எழுத்தாளர்கள் தோன்றவில்லையா? தெலுங்கு, வங்காளி ஆகிய மொழிகளில் நிறைய புனைகதைப் படைப்பாளர்கள் தோன்றியதற்கான சமூக உளவியல் அல்லது சமூக அரசியல் காரணிகள் என்ன? ஏன் பெண்ணியத் திறனாய்வைக் காட்டிலும் அதிகமான பெண்ணியப் படைப்புக்கள் தோன்றவில்லை? இவை போன்ற வினாக்களுக்குப் பதில்களைத் தேட வேண்டிய நிலையில் இருக்கின்றோம். எண்பதுக்களில் இளைய தலைமுறையினர் சிலர் பெண்ணியச் சிந்தனையோடு எழுதத் தொடங்கியுள்ளார்கள். பெண்ணிய அலை வடக்கில் வீசிக் கொண்டிருக்கின்றது. திரௌபதி புதிய அணுகுமுறையில் விமர்சிக்கப்பட்டு வருகின்றாள்.

*

துணைநூற் பட்டியல்

1. கலாதாக்கர், *எழுத்தும் ஒருவகை மருத்துவமே* (நாவலாசிரியை லட்சுமி பற்றிய ஆய்வு வானதி பதிப்பகம், சென்னை-17, 1998.

2. சித்திரலேகா. இரா., *லட்சுமி-சூடாமணி* நாவல்கள் ஓர் ஒப்பாய்வு, சினேகா வெளியீடு, குற்றாலம், 1989.

3. சுசிலா, எம்.ஏ., *விடுதலைக்குப் பின் தமிழ் நாவல்களில் பெண்கள்,* உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை-113, 1995.

4. விஜயலட்சுமி ஹரி, *ராஜம் கிருஷ்ணன் புதினங்களில் பெண்மாந்தர்கள், ஓர் ஆய்வு,* என்னெஸ் பப்ளிகேஷன்ஸ், உடுமலைப்பேட்டை, 1993.

*

16

இந்திய கடல்புறத்து நாவல்கள்

முன்னுரை

இந்தியா ஒரு தீபகற்ப நாடு. குஜராத், மகாராஷ்டிரம், கோவா, கேரளம், தமிழ்நாடு, பாண்டிச்சேரி, ஆந்திரா, ஒரிசா, மேற்குவங்காளம் ஆகிய மாநிலங்கள் கடற்புறங்களைக் கொண்டவை. இந்த நீண்ட கடற்கரைப் பகுதியில் பம்பாய், சென்னை, கல்கத்தா போன்ற பெருநகரங்களும், கோவா, மங்களூர், திருவனந்தபுரம், தூத்துக்குடி, நாகப்பட்டினம், பாண்டிச்சேரி, விசாகப்பட்டினம், பூரி போன்ற நகரங்களும் அமைந்துள்ளன. தொழிற்சாலை மயமாக்கப்பட்ட இந்நகரியப் பகுதிகளில் மேனாட்டுக் கலாச்சாரத்தால் தாக்கமுற்ற நடுத்தர மக்களைப் பற்றி ஏராளமான நாவல்கள் வெளிவந்துள்ளன. ஆனால், கடற்கரைக் குப்பங்களிலும் குடிசைகளிலும் கிராமங்களிலும் வாழ்கின்ற கீழ்த்தட்டு மக்களைப் பற்றிச் சில நாவல்களே எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் மீனவர்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் நாவல்கள் சில அறிமுகப்படுத்தப்படுகின்றன.

வங்காளியில்

மாணிக் பானர்ஜியின் “பத்மாநதிப் படகோட்டிகள்” (1939) படகோட்டிமகன் (1956) மற்றும் கங்கா, திடஸ எக்திர் நதி நம் ஆகியவை வங்காளி மீனவர்களைப் பற்றிய நாவல்களாகும். பத்மாநதிப் படகோட்டியில் கிராமிய வங்காளத்தின் ஏழைமீனவர் வாழ்க்கையின் இதயத்தைப் பிளக்கக் கூடிய ஏமாற்றச் சோர்வும் கடும் போராட்டமும் நிரம்பிய வாழ்க்கையின் மறக்க முடியாத ஒரு சோகசித்திரத்தைக் காணலாம். நெருக்கமான குடிசைகள் நிறைந்த மீனவர் குப்பம், அறியாமை, புயலின் சீற்றம், ஆகியவற்றால் சிக்குண்ட துயரமிக்க வாழ்வை அவர்களின் வட்டாரப் பேச்சுவழக்கிலே படம் பிடித்துக் காட்டியுள்ளார். குபேர், கபிலா, ஹுசைன்மியான் ஆகியோரைச் சுற்றிக்கதை நிகழ்கின்றது. மியானின் மதச்சார்பற்ற ஓர் இலட்சியச் சமுதாயக் கனவு நிறைவேற குபேர் துணை நிற்கின்றான். உலக இலக்கியத்தில் ஒரு சுடர்மணியாகக் கருதத்தக்க இந்நாவல் ஆங்கிலத்திலும் (1948) பின்னர் சீனம், செக், ஹங்கேரியன், லிதுவேனியன், நார்விஜயன், ரஷ்யன், ஸ்வீடிஷ் ஆகியவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

போதிசத்வ மைத்ரேய தமிழக மீனவர் வாழ்க்கையைப் பற்றி "சிப்பியின் வயிற்றில் முத்து" (ஜினுகேர் பேட்டெ முக்தொ) என்னும் நாவலில் எழுதியுள்ளார். இந்நாவல் "நவகல்லோல்" இதழில் தொடர்கதையாக வெளிவந்து 1980-இல் நூல் வடிவம் பெற்றது. நேஷனல் புக் டிரஸ்ட் இந்தியா (1994) தமிழாக்கம் செய்துள்ளது. தூத்துக்குடிப் பகுதியில் வாழும் மீனவர்களின் வாழ்க்கையையும் தஞ்சை வட்டாரத் தேவதாசிகளின் வாழ்க்கையையும் விரவி இந்நாவலை எழுதியுள்ளார். இருப்பினும், கிறித்துவ மீனவர்களின் வாழ்க்கைப் போராட்டமே இந்நாவலில் மேலோங்கியுள்ளது. மன்னார்வளைகுடா கடற்கரையிலுள்ள தூத்துக்குடி, சங்கும் முத்தும் குளிப்பவர்கள் வாழும் பூர்விக பூமி. இப்பகுதியின் தோற்றவரலாறு (பக் 213-223) மிகச்சிறப்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மீனவர்களின் கூலிப்போராட்டம், புதுப் பணக்காரர்களின் சுரண்டலுக்கு எதிர்ப்பு, நடையுடைகள், பழக்கவழக்கங்கள், மனப்போக்கு, நம்பிக்கைகள், பழமொழிகள், விழாக்கள் போன்ற பண்பாட்டுக் கூறுகள் விளக்கப்பட்டுள்ளன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து 1950-ஆம் ஆண்டு வரையிலுள்ள தமிழக அரசியல் வாழ்வையும் ஆங்காங்கே சுட்டிச் செல்கிறது இந்நாவல்.

மலையாளத்தில்

தகழி சிவசங்கர பிள்ளையின் உலகப்புகழ் பெற்ற நாவல் செம்மீன் என்பது இருபது நாட்களுக்குள் எழுதப்பட்ட நாவலாகும். இது 1956-இல் சாகித்ய அகடமியின் பரிசையும் பெற்றது. எல்லா இந்திய மொழிகளிலும், 22-க்கு மேற்பட்ட வெளிநாட்டு மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. கருத்தமா என்ற இந்து மீனவப் பெண்ணுக்கும் பரீக்குட்டி என்ற முஸ்லீம் வியாபாரிக்கும் இடையே தோன்றிய ஆழமான காதலை எடுத்துரைக்கின்றது. கடலில் மீன் பிடிக்கச் சென்ற கணவனின் உயிர் கரையில் இல்லறப் பணித்தவம் செய்யும் மனைவியின் கற்பொழுக்கத்தில்தான் உள்ளது என்னும் மீனவச் சமூகத்தின் நம்பிக்கையைக் கொண்டு பின்னப்பட்டுள்ளது (பக். 14-16). கடலன்னை பற்றிய நம்பிக்கை மீனவர் பண்பாட்டின் அச்சாணியாக அமைகின்றது.

கேரள மீனவர்களிடையே அரையன், வலைஞன், முக்குவன், மரக்கான், பஞ்சமர் என்ற ஐந்து பிரிவுகள் உண்டு (பக். 14-16). அரையன் மீனவர்களின் தலைவன், வலைஞன் மட்டும் தோணியும் வலையும் வாங்கலாம் (பக்.47) அரையனிடம் அவற்றை வாங்குவதற்கு ஏழு இதழ் புகையிலையும் பதினைந்து ரூபாயும் காணிக்கையாகக் கொடுக்க வேண்டும் (பக். 48). ஒரே கடற்கரையைச் சேர்ந்தவர்களுக்குள்ளே அடித்துக் கலகம் செய்வதுண்டு. வழக்கு ஏற்பட்டு துறை அரையன் தலையிட்டு தீர்ப்பதுண்டு (பக். 117). திருமணத்தின் போது அரையனுக்கு ரூபாய் எழுபத்தைந்து மாப்பிள்ளை வீட்டார் காணிக்கை செலுத்த வேண்டும். மறுமணம் செய்ய விரும்பினால் வெற்றிலை, புகையிலை, காணிக்கை செலுத்த வேண்டும். மறுமணம் கைகளை ஒன்று சேர்த்தலும்

திருமணத்தில் முக்கிய சடங்குகள் (ப.164). இறப்பவர்களைக் கடற்கரை உப்பு மணலில் புதைக்கிறார்கள். ஆண்டு தோறும் மண்ணார் சாலையில் ஆயில்ய. விழா கொண்டாடு கிறார்கள். முக்குவர்கள் மீன்பிடித்தல் தொழில் தவிர, வறுமை வந்தாலும் பிற தொழில்களைச் செய்யமாட்டார்கள். இவ்வாறு மீனவர்களின் பல பண்பாட்டுக் கூறுகள் நாவலில் சொல்லப்பட்டுள்ளன.

இந்தோ-ஆங்கிலத்தில்

அனிதா தேசாய் எழுதிய முதல்புதினம் "கடற்புறத்துக் கிராமம்" (The village by the sea) பிரிட்டிஷ் பத்திரிக்கையான கார்டியன் 1982-இல் இப்படைப்புக்கு இலக்கியப்பரிசு அளித்தது. இந்தியாவின் மேற்குக் கடற்கரையில் பம்பாய்க்கு (அலிபாக்கிற்கு) அருகிலுள்ள தூல் கிராமத்து மனிதர்களைப் பற்றிய உண்மை சம்பவக் கதை. அமைதியான அழகான கிராம வாழ்வும், அவசரமும் ஆரவாரமும் மிக்க பம்பாய் நகர வாழ்வும் இதில் சித்தரிக்கப்பட்டுள்ளன. மீன்பிடித்தும் விவசாய வேலை செய்தும் வருகின்ற ஓர் ஏழை இளைஞன் பம்பாய் நகரம் சென்று வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்று விரும்புவதையும் பின்பு புதிய தொழிலைக் கற்றுக் கொண்டு கிராமத்திற்கே திரும்புவதையும் விளங்குகின்றது. சமூக மாறுதல்களை ஏற்று கிராமமக்கள் வாழ வேண்டும் என்று நாவலாசிரியர் ஹரிபால் இளைஞன் மூலமாகத் தெரிவிக்கின்றார். தூல் கிராமமக்கள் கடற்கரையிலுள்ள புனிதப்பாறைக்குப் பூவைத்துக் குங்குமமிட்டு வழிபடுகின்றார்கள் (ப.118-123). அதாவது கடலன்னைக்குத் தேங்காயும் பூவும் வழங்கி வணங்குகிறார்கள். கட்குடித்தல், ரேக்ளா பந்தயம், கிருஷ்ணா லீலா போன்ற கூத்துக்கள் தூல் கிராமக்களின் பண்பாட்டில் கலந்துவிட்ட அம்சங்கள். எல்லா வீட்டுவாசல்களிலும் நுழைந்ததுமே ஒரு துளசிச் செடி இருக்கும். நண்டுகளை உணவாகச் சாப்பிடுவார்கள். சிறுமிகள் சதுரக்கட்டத்திற்குள் கூழாங்கற்களைப் போட்டு விளையாடுவார்கள் (ப.22) பூம்பூம் பாட்டுக்காரன் மூலிகை வைத்தியம் செய்கிறான், மந்திரித்துத்தாயத்து கொடுக்கிறான் (பக்.48-51). பம்பாய்ச் சிறு உணவு விடுதிகளில் சப்பாத்தியும் மொச்சைக் கொட்டைக் குழம்பும் விற்கப்படுகின்றது (ப.85). பெண்கள் வீட்டு வேலை செய்வதோடு மீன்விற்கச் செல்வார்கள். பிஜ்ஜூ போன்ற ஒரு சிலர் காலத்தின் மாறுதலுக்கு ஏற்ப எந்திரத்தால் ஓடும் பெரிய படகுகளை / கப்பல்களைக் கட்டி மீன்பிடிக்கிறார்கள். தூல் கிராமத்திற்கு இரசாயனத் தொழிற்சாலைக் கொண்டுவர அரசுத் திட்டமிடலும், அதற்குக் கிராமமக்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதும் இந்நாவலில் இடம் பெறுகின்றது. இருந்தாலும், நாவலாசிரியர்கள் கிராம மக்கள் சார்பாக நின்று குரல் கொடுக்கவில்லை.

தமிழில்

வண்ணநிலவனின் "கடல் புரத்தில்" (1977), இராஜம்கிருஷ்ணனின் "அலைவாய்க் கரையிலே" (1978) வலம்புரி ஜானின் "நீர்க்காகங்கள்" பானுமதி பாஸ்கோவின் "நீலநிறப்பறவைகள்" ஆகிய நாவல்கள் கிழக்குக் கடற்கரை

கிறிஸ்தவ மீனவர்களின் வாழ்க்கையைச் சித்தரிப்பவை. ஜெகதாவின் "சமுத்திர குமாரர்கள்" சங்குகுளித் தொழிலாளர்களின் அவல வாழ்வை விளக்குகிறது. இராஜம் கிருஷ்ணனின் கரிப்புமணிகள் (1979), ஸ்ரீதரகணேசனின் உப்புவயல் (1995) தூத்துக்குடி உப்பளத் தொழிலாளர்கள் கண்ணீர்க் கதையை எடுத்துரைப்பவை. தோப்பில் முகம்மது மீரான் வெளியிட்டுள்ள ஒரு கடலோரக் கிராமத்தின் கதை (1988); துறைமுகம் (1991), கூனன் தோப்பு (1993) சாய்வு நாற்காலி(1996) ஆகிய நாவல்கள் தேங்காய்ப்பட்டணப் பகுதியில் அறியாமை இருளில் வாழ்கின்ற-மரபிலிருந்து மாறாமல் பழம் பெருமையும் மதப்பிடிப்புக் கொண்ட முஸ்லீம் சமுதாயத்தை நமக்கு இனங்காட்டுகின்றன.

வண்ணநிலவன், இராஜம்கிருஷ்ணன், ஜெகதா, பானுமதி பாஸ்கோ ஆகியோரின் மீனவர்கள் முதலாளித்துவ அமைப்பைச் சேர்ந்த கிறித்தவத்திருச்சபை போன்றவற்றுக்கு எதிராகப் புரட்சிக்குரல் எழுப்புகின்றனர். வண்ணநிலவன் மணப்பாடு கிராம மீனவர்கள் லாஞ்ச் என்னும் புதுஇயந்திரப் படகு வருகையால் பாதிக்கப்பட்டதையும் அதற்கு எதிராகப் போராடியதையும் விளக்குகிறார். இராஜம் கிருஷ்ணன் இடிந்த கரை மீனவர்கள் சுறாமீனின் துவிகளைக் கோவிலுக்கு வரியாகச் செலுத்த மறுத்து குருமார்களின் சினத்திற்கு உள்ளாகி இனத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டத்தைச் சித்தரிக்கின்றார். ஜெகதா சங்கு குளித்தொழிலாளர்கள் சங்கம் அமைத்து தாங்களே நல்ல விலைக்கு விற்க முற்படுவதையும் கடற்கரை முதலாளிகளின் சுரண்டல்களுக்கு ஒன்று திரள்வதையும் தன் நாவலில் காட்டியுள்ளார். பானுமதி பாஸ்கோ தூத்துக்குடிக்கு அருகிலுள்ள பண்டாரவிளைக் கிராமத்தின் பக்கத்தில் அமைந்த குப்பத்து மீனவர்கள் தேர்த் திருவிழாவிற்குத் தெரிப்பு தர மறுத்துத்தேரோட்டத்தைப் புறக்கணிப்பதைக் தன் நாவலில் எடுத்துரைக்கின்றார். நான்கு நாவல்களும் மீன்பிடிக்கும் பரதவர்களின் பண்பாட்டு அம்சங்களோடு முதலாளித்துவ வர்க்கத்தோடு போராடி மாறிவரும் மனிதக் குழுக்களாக வாழ்ந்து வருவதைக் கோடிட்டுக் காட்டுகின்றன.

பிறமொழிகளில்

அஸ்ஸாமியில் "எய் பதுமணி" இந்தியில் "வருணகே பேட்டா" இந்தோ ஆங்கிலத்தில் "பிளஸர் சிட்டி" (Pleasure city) ஆகிய நாவல்களும் மீனவர்களின் வாழ்க்கையைக் கூறுபவை. உதய் சங்கர் பட்டாவின் "கடல் அலைகள், மற்றும் மனிதன்" என்னும் இந்தி நாவல் (1956), கணேஷ் மிஸ்ராவின் "சமுத்ரிகா" என்னும் ஒரிய நாவல் (1968) ஆகியவனவும் மீனவர் சமுதாயத்தைப் பிரதிபலிப்பவை. சமுத்ரிகா ஒரிஸ்ஸா "பூரி" கடற்கரை மீனவர்களின் வாழ்வியலைச் சித்தரிக்கின்றது. எம்.வீரப்ப மொய்லியின் இரண்டாவது நாவல் "சாகர தீபம்" தட்சிண கன்னட மாவட்டத்தின் மீனவர் வாழ்வை விளக்குகின்றது.

முடிவுரை

இந்திய மீனவர்கள் கடலை அன்னையாக வழிபடுவது இந்தியக் கடற்கரையெங்கும் காணப்படும் பொதுவான பண்பாட்டுக் கூறாகும். நிலத்தைப் போலவே கடலையும் வழிபட்டு "அம்பா(ள்)" பாடலைப் பாடும் தமிழகப் பரதவர்களைக் காணலாம். குப்பத்துக் குடிசைகள் மிக நெருக்கமாக இருப்பதாலும் - மதுவும் விபச்சாரமும் அவர்களை ஆட்டிப் படைப்பதாலும் அவர்கள் அடிக்கடி சண்டைகள் செய்து போட்டி, பொறாமைகளை வளர்த்துக் கொள்கிறார்கள். படகுகளை இயந்திரமாக்கல், ஏழை மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவில்லை. புதுப்பணக்காரர்கள் தோன்றி அவர்களின் உழைப்பை உறிஞ்சுவதாக அமைகின்றது. மேலும், அவர்கள் இயற்கைச் சீற்றத்துக்குப் பலியாகி விடுவதைக் காணலாம். பழைய மரபுகளுக்கும் பொருளாதாரச் சுரண்டலுக்கும் எதிராக அணிதிரளும் மீனவர்களைச் சமீபத்திய இந்திய நாவல்கள் எடுத்துக் காட்டுகின்றன.

*

துணைநூற் பட்டியல்

தமிழ்

1. அனிதா தேசாய், **கடற்புறத்துக் கிராமம்** (தமிழாக்கம்: நாக. வேணுகோபாலன்) நேஷனல் புக் டிரஸ்ட் இந்தியா, புதுடில்லி-16, 1993.

2. சண்முகசுந்தரம் சு., **தமிழில் வட்டார நாவல்கள்**, காவ்யா, பெங்களூர், 1991.

3. மாணிக் பந்த்யோபாத்யாயர், **சரோஜ் மோஹன்**, (தமிழாக்கம்: எஸ். கந்தசாமி) சாகித்ய அக்காதெமி, புதுடில்லி, 1983.

4. ஞானி, **எண்பதுக்களில் தமிழ்நாவல்கள்**, விஜயா பதிப்பகம், கோவை-1.

5. தகழி சிவசங்கரபிள்ளை, **செம்மீன்** (தமிழாக்கம்: சுந்தர ராமசாமி) பாரிநிலையம், சென்னை-108, 1987 (4-ம் பதிப்பு).

6. போதிசத்வ மைத்ரேய, **சிப்பியின் வயிற்றில் முத்து**, (தமிழாக்கம்: எஸ்.கிருஷ்ணமூர்த்தி), நேஷனல் புக் டிரஸ்ட் இந்தியா, புதுடில்லி, 1994.

ENGLISH

7. Amiya dev (Ed), **Comparative Literature; Theory and Practice**, Allied Publishers, New Delhi, 1989.

8. George, K.M. (Ed) **Comparative Indian Literature**, Vol-I., Macmilan Indian Ltd, Madras 1984.

*

17

இந்திய மொழிகளில் வட்டார நாவல்கள்

முன்னுரை

காந்தியடிகள் வருகைக்குப் பின் இந்திய சமூக அரசியலில் மாற்றங்கள் ஏற்பட்டன. காந்தியச் சிந்தனைகள் படைப்பாளர்களைக் கவர்ந்தன. கிராமிய நாவல்களும், வட்டார நாவல்களும் படைக்கப்பட்டன. தமிழ், கன்னடம், அசாமி, குஜராத்தி போன்ற இந்திய மொழிகளில் சிந்தனைகளின் செல்வாக்கினால் புனைவியல் வட்டார நாவல்கள் ஆரம்ப காலத்தில் எழுதப்பட்டன. மலையாளம், வங்காளி, பஞ்சாபி, தெலுங்கு, ஒரியா ஆகிய மொழிகளில் முற்போக்குப் பொதுவுடைமைச் சிந்தனைகளின் தாக்கத்தினால் நடப்பியல் வட்டார நாவல்கள் தோன்றின.

அசாமி

அசாமி இந்தியச் சுதந்திரத்திற்குப் பின்பு ஆரம்ப காலத்தில் ஆங்காங்கே சில வட்டார நாவல்கள் வெளிவந்தாலும் இதனின் வருகை அறுபதுகளுக்குப் பின்பு அதிகரித்துள்ளது. இந்நாவல்களின் பொதுவான பண்புகள் இரண்டு: (1) சமுதாயத்தில் காணும் பல கதைமாந்தர்களின் நிழலாகப் பல பாத்திரங்களைப் படைத்தல் (2) ஒளிப்படம் எடுத்தாற் போன்ற வட்டார வர்ணனை. பழங்குடியினரின் வாழ்வு (மக்களின் குரல்), பழங்குடி அல்லாதவரின் வாழ்வு (பூமியின் சிரிப்பு) மக்களின் வாழ்வையும் நதியையும் இணைந்த சித்தரிப்பு (கபிலி ஆற்றின் மேல் ஒரு கதை) என்னும் அடிப்படையில் அசாமி வட்டார நாவல்களைப் பகுக்கலாம். அமூல்ய பரூவாவின் இது பதுமனி (1965) ரஸ்னா பரூவாவின் பச்சை இலைகளின் கதை (1959) ஸ்ரீமதி மமணி கோஸ்வாமியின் நீலகண்ட பரிவியின் விராஜதாம் ஆகிய வட்டார நாவல்கள் குறிப்பிடத்தக்கவை.

இந்தி

இந்தியில் பிரேம்சந்த் கிராம இந்தியச் சமுதாயத்தின் குறுக்கு வெட்டுத் தோற்றத்தை எதார்த்தத்துடன் காட்டினார். இதற்குப் பின்பு சமூக

எதார்த்தத்துடன் வட்டார நாவல்கள் வெளிவரத் தொடங்கின. நாகர்ஜுன் (பலசனமா), பணீஷ்வர்நாத் ரேணு (மைலா ஆஞ்சல்) ஆகியோர் வட்டார நாவல் இலக்கியத்திற்கு முன்னோடியாகத் திகழ்ந்தனர். ரேணுவின் மைலா ஆஞ்சல் (கறைபடிந்த நிலம்) கோதானோடு ஒப்பிடக்கூடிய மிகச்சிறந்த வட்டார நாவலாகும். தமிழ்முதலிய இந்தியமொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. வடக்குப் பீகாரில் பூர்ணிமா மாவட்டத்தின் வட்டார வாழ்வை நன்கு சித்திரிக்கின்றது. தற்காலத்தில் கிருஷ்ணா சோப்டி போன்றோரும் வட்டார நாவல்களை எழுதி இந்தி வட்டார நாவல் இலக்கியத்திற்கு வளமூட்டுகின்றனர்.

உருது

உருது மஜ்நூன் கொரக்புரியின் நாவல்கள் தாமஸ் ஹார்டியின் நாவல்களோடு ஒப்பிடத்தக்கவை என்று குறிப்பிடப்படுகிறது. பஞ்சாபியில், விடுதலைக்குப் பின் எழுதிய எழுத்தாளர்களில் சோஹன் சிங் சீத்தால் புனைவியலுடன் கதை சொல்வதில் திறமுடையவர் என்று சுட்டிக் காட்டப்படுகின்றார்.

ஒரியா

ஒரியாவில் காளிந்திசரணின் மண்ணின் மனிதன் (1934) பலராலும் விரும்பிப் படிக்கப்பட்ட சிறந்த கிராமிய நாவலாக இருப்பினும், இந்திய விடுதலைக்குப் பின்புதான் வட்டார நாவல் தனித்தன்மையுடன் கிளைத்து வளரத் தொடங்கியது. கோபிநாத் மொகந்தியின் நாவல்கள் தலைசிறந்த வட்டார நாவல்களாகும். கிராம வாழ்க்கை, பழங்குடி மக்களின் வாழ்க்கை ஆகியவற்றைக் கருப்பொருட்களாகக் கொண்டு நாவல்கள் வெளியிட்டுள்ளார். வளமான மண் (1964) மற்றும் பரஜா ஆகியவை கோபிநாத் மொகந்தியின் சிறந்த வட்டார நாவல்களாகும். ஜாமேஷர் மிஸ்ராவின் மற்றும் கததியா ஆகிய இரண்டும் மேற்கு ஒரியா வட்டார வழக்கில் எழுதப்பட்ட நாவல்களாகும்.

கன்னடம்

கன்னடத்தில் பல்வேறு இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் வட்டார/கிராமியத் தன்மை மிக்க சமூக நாவல்களை வெளியிட்டுள்ளார்கள். சிவராமகாரந்தின் சோமனதுடி மற்றும் மரளி மண்ணிகே (மண்ணும் மனிதரும்) கே.வி.புட்டப்பாவின் கானூரு சுப்பம்மா ஹெக்கடிதி, ஆர்.வி.குல்கர்னியின் கிராமாயணம், ஆகியவை வட்டாரத்தன்மை கொண்டவை. பைரப்பாவின் தப்பலிய நீனாதெ மகளே, என்னும் நாவல் பசுக்களை மேய்க்கும் இடையர் வாழ்வைப் பற்றியது. ஆலனகள்ளி கிருஷ்ணாவின் காடு என்பதும் தனிப்பட்ட வட்டார நாவலாகும். கன்னடத்திலும் வட்டார நாவல் சமூக நாவலின் அங்கமாகவே இருந்துள்ளது. தனித்த நாவல் வகையாக வளரவில்லை.

குஜராத்தி

குஜராத்தில் காந்தியடிகளின் இயக்கங்கள் கிராமிய வாழ்வைக் கருப்பொருளாக்கத் தூண்டின. மேகானி தம் படைப்புகளின் மூலம் தாம் வாழும் வட்டாரத்தின் சிறப்புக்களைப் பிரதிபலித்தார். தமது நாவல்களில் அடிமட்ட/ நடுத்தர சௌராஷ்டிரா சமூக வாழ்வைப் பதிவு செய்தார். சோரட் உனது பெருவெள்ளமும் (1937) என்பது மேகானியின் மிகவும் புகழ்பெற்ற நாவலாகும். நிச்சயதார்த்தம் (1939). துளசிச் செடி (1940) ஆகிய இரண்டும் இவரது குறிப்பிட்டத்தக்க நாவல்கள். வட்டார வழக்குச் சொற்களைக் கையாண்டு குஜராத்தி உரைநடைக்குப் புது உயிர்ப்பையும் சுவையையும் ஊட்டியுள்ளார் என்று திறனாய்வாளர்கள் இவரைப்பாராட்டுகிறார்கள்.

மராத்தி

மராத்தியில் வட்டாரத் தன்மையுடைய சிறுகதைகள் முதலிலும் பின்பு வட்டார நாவல்களும் தோன்றின. ஆர்.வி.தி.கே. என்பவரின் மழைக்காலம், (1939) வட்டார நாவலுக்குக் கால்கோள் இட்டது. பின்பு வி.டி.சின்தர்களின் ஊழி வெள்ளம் (1942) வெங்கடேஷ் மால்கூல்கரின் பன்கன்வாடி (1965), எஸ்.என்.பென்ட்சேயின், காரம்பி, பாபு, (1952) ஜி.என்.தண்டேகரின் படகாவலி, ஜி.எல். தோகல்லின் கிராம ரவுடி (1974) ஆகியவை வட்டார நாவல்களில் குறிப்பிடத்தக்கவை. ஜி.எஸ்.தண்டேகர். எஸ்.என்.பென்ட்சே ஆகிய இருவரும் வட இரத்தினகிரி வட்டாரத்தின் வாழ்க்கையைத் தம் நாவல்களில் உயிர்த்துடிப்போடு சித்தரித்துள்ளார்கள்.

மலையாளம்

கேரள எழுத்தாளர்களுக்கும் இந்திய முற்போக்கு இலக்கியச் சங்கத்தோடு தொடர்பு ஏற்பட்ட பின்பு தகழி, கேசவதேவ் போன்றோர் புதிய பரிமாணத்தைக் கொண்ட சமூக நாவல்களை மலையாளத்தில் வெளியிட்டனர். இவர்களின் சமூக நாவல்கள் வட்டாரஇயல்புகளோடு தோற்றமளிக்கின்றன. சான்றாக, தகழி சிவசங்கர பிள்ளையின் செம்மீன், இரண்டிடங்கழி கயறு, ஆகியவற்றைக் கூறலாம். கேசவதேவின் ஓடையில் நின்னு, அயல்க்கார், ஆகியனவும், எஸ்.கே.பொற்றக்காட்டின் விஷகன்யக மற்றும் ஒரு தேசத்தின் கதை, ஆர்.எஸ்.குறுப்பின் தோட்டி ஆகியனவும் வட்டார இயல்புகளைக் கொண்டவை. இருப்பினும் மலையாளத் திறனாய்வாளர்கள் வட்டர நாவல் என்னும் பகுப்பைப் பின்பற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தெலுங்கு

தெலுங்கில் வட்டார வாழ்க்கையைக் கொண்டு நாவல் எழுதும் போக்கு 1960-க்குப் பின் மிகவும் தூக்கலாகக் காணப்படுகிறது. போரங்கி தட்சிணாமூர்த்தி கோதாவரி வட்டார வழக்கிலும் (வெளிச்சம், வெண்ணிலா, கோதாவரி)

தெலுங்கானா கைத்தறியாளர் வட்டார வழக்கிலும் (ரங்கோலி) எழுதியுள்ளார். ராசகொண்ட் விஸ்வநாத சாஸ்திரி (விசாக் வட்டாரம்), அல்லம் ராஜய்யா (தெலுங்கானா வட்டாரம்), சேதுவிஸ்வநாத் ரெட்டி (ராயலசீமை வட்டாரம்) ஆகியோரும் வட்டார வழக்கில் நாவல்களைப் படைத்துள்ளனர். கோதாவரி மாவட்டத்தில் உள்ள பிராமணர்களின் குடும்ப வாழ்வை ஸ்ரீ பாத சுப்பிரமணிய சாஸ்திரி ஆத்மபலி, ரட்சா பந்தமு, வட்டலகிஞ்சலு மூலம் எடுத்துரைத்தார். பாலகும்மி பத்மராஜுவின் கருப்பு மண் என்னும் நாவல் வட்டாரத் தன்மை மிக்கது. தெலுங்கானாப் பகுதியில் நிகழ்ந்த மக்களின் போராட்டம் மண்வாசனையுடன் சில நாவல்களில் எழுதப்பட்டுள்ளது.

வங்காளி

வங்காளியில் 1930-க்குப் பின்பு தோன்றிய கல்லோல் இயக்கமும் முற்போக்கு இயக்கமும் வட்டார நாவலுக்குத் தூண்டல்கள் அளித்தன. மூன்று பானர்ஜிகள்-தாராசங்கர் பானர்ஜி, விபூதி பூஷன் பானர்ஜி, மாணிக் பானர்ஜி மண்வாசனையுடன் வங்காளியில் நாவல்களைப் படைத்தனர். தாராசங்கர் பானர்ஜியின் பஞ்ச் கிராமம், மற்றும் கணதேவதா, விபூதி பூஷன் பானர்ஜியின் பதேர் பாஞ்சலி மற்றும் அபராஜிதா, மாணிக் பானர்ஜியின் பத்மாநதி ஓடக்காரன் ஆகியநாவல்கள் நினைக்கத்தக்கவை. தாராசங்கர் தான் பிறந்த மாவட்டமான பிர்பூம் மாவட்டத்தில் வாழும் மனிதர்களையே கதைமாந்தர்களாக்கி நாவல்களைப் படைத்துள்ளார். இவர் வங்காளியில் வட்டார நாவல்களின் தந்தை எனப் போற்றப்பட்டுகின்றார்.

தமிழ்

1893-இல் திரிசிரபுரம் சு.வை.குருசாமி சர்மாவால் வெளியிட்டப்பட்ட பிரேம கலாவதியம் கிராமிய பாடல்கள், நாட்டுப்புற விளையாட்டுக்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய முதல் சமூக நாவலாகும். சமகாலப்பண்பாட்டு அம்சங்களை இனம் கண்டு கொள்ளக்கூடிய நிலப் பகுதிகள், ஊர்கள் போன்ற பின்னணியில் கற்பனை மூலம் கதை சொல்வதில் குருசாமி சர்மா முன்னோடியாகத் திகழ்கின்றார். இதைத் தொடர்ந்து சமூக எதார்த்தத்தோடு சிறுகுளம் கிராமத்தில் பிராமணக் குடும்பத்தில் நிகழும் நிகழ்ச்சிகளை ஆன்மீகக் கருத்துக்களோடு சித்தரிப்பது இராஜம்அய்யரின் கமலாம்பாள் சரித்திரமாகும். இவையிரண்டோடு கிராமப் பின்னணியைக் கொண்ட பத்மாவதி சரித்திரத்தையும் பிற்காலத்தமிழ் வட்டார நாவல்களுக்கு அடித்தளமாகக் கருதலாம்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தீனதயாளு (1900), கமலாட்சி (1903) போன்ற குடும்ப நாவல்களும், முத்து மீனாட்சி (1903), சுந்தரி (1915), மேனகா (1920) போன்ற சமூக சீர்திருத்த நாவல்களும், முருகன் ஓர் உழவன் (1927), மண்ணாசை (1940) போன்ற கிராமிய நாவல்களும் தோன்றின. ஆனால்

வட்டார நாவல் என்னும் முழுத்தகுதியினைப் பெற்ற நாகம்மாள் 1942-இல் வட்டார நாவல் சகாப்தத்தைக் தொடங்கி வைத்தது. கொங்கு நாட்டின் வேளாளக் கவுண்டர் சமூகத்தை மண்வாசனை குறையாமல் ஆவணப்படுத்தியிருப்பவர் ஆர்.சண்முகசுந்தரம். பூவும் பிஞ்சும், பனித்துளி, அறுவடை, இதயதாகம், சட்டி சுட்டது, அழியாக்கோலம், காணாச்சுனை, மாயத்தாகம் ஆகியவை சண்முகசுந்தரத்தின் பங்களிப்பாகும். டி.கி.ராமசாமி இவரது நாவல்களை விரிவாகவே ஆராய்ந்து நூல் ஒன்றை வெளியிட்டுள்ளார். இவரது படைப்புகள் தமிழ் வட்டார நாவல் கருவூலத்தில் விலைமதிக்க முடியாத வைரங்களாகக் கருதப்படுகின்றன.

இந்திய விடுதலைக்குப் பின்பு பலரும் வட்டாரப் பண்பாட்டுச் சுரங்கத்திலிருந்து கருக்களை எடுத்துக் கொண்டு வட்டார நாவல்களைப் படைத்தனர். சி.சு.செல்லப்பாவின் “வாடிவாசல்” இராஜம்கிருஷ்ணனின் “குறிஞ்சித் தேன்” (1963) ஆகியவைகள் ஐம்பதுக்களில் வெளிவந்த முக்கியமான வட்டார நாவல்களாகும். ஹெப்சிபா ஜேசுதாசனின் “புத்தம் வீடு” (1964), சுந்தரராமசாமியின் “ஒரு புளிய மரத்தின் கதை” (1966), டி.செல்வராஜின் “மலரும் சருகும்” (1966), நீல.பத்மநாபனின் “தலைமுறைகள்” (1968), ஆகியவை தமிழ் வட்டார நாவல் உலகில் முத்திரை பதித்த அறுபதுக்களில் வெளிவந்தவையாகும். ஆ.மாதவனின் “புனலும் மணலும்” (1972), கி.ராஜநாராயணின் “கோபல்ல கிராமம்” (1976), கு.சின்னப்ப பாரதியின் “தாகம்” (1976), பொன்னீலனின் “கரிசல்” (1976), நாஞ்சில் நாடனின் “தலைகீழ் விகிதங்கள்” (1977), ஆர்.விட்டல்ராவின் “போக்கிடம்” (1977) ஆகியன எழுபதுக்களில் வெளிவந்த வட்டார நாவல்களில் குறிப்பிடத்தக்கவை. எண்பதுகளில் வட்டார நாவல்கள் ஓர் இலக்கியப் போக்காக வளர்ந்துள்ளதைச் சுருக்கமாகவும் அதே சமயத்தில் சிறிது விரிவாகவும் கோவை ஞானியின் நூல் ஒன்று விளக்குகின்றது.

பி.கண்ணுமுத்து எண்பதுக்களில் வெளிவந்துள்ள வட்டார நாவல்களைப் பற்றி முனைவர் பட்டத்திற்கு ஆராய்ந்து ஆய்வேடு சமர்ப்பித்துள்ளார் (1996). இவரது ஆய்வின்படி இக்காலகட்டத்தில் ஏறக்குறைய 150 நாவல்கள் வெளிவந்துள்ளன என்றும் அவற்றுள் 60க்கு மேற்பட்ட நாவல்கள் வட்டார நாவல்களாக கருதத்தக்கவை என்றும் தமது ஆய்வேட்டில் குறிப்பிட்டுள்ளார். சு.சமுத்திரத்தின் ஊருக்குள் ஒரு புரட்சி (1980), இராஜம் கிருஷ்ணனின் சேற்றில் மனிதர்கள் (1982), கு.சின்னப்பபாரதியின் சங்கம் (1985), தோப்பில் முகம்மது மீரானின் ஒரு கடலோரக் கிராமத்தின் கதை (1988), சூரியகாந்தனின் மானாவாரி மனிதர்கள் (1989) என்பன எண்பதுக்களில் வெளிவந்த வட்டார நாவல்களில் குறிப்பிடத்தக்கவை.

தொண்ணூறுகளிலும் (1990-1995) வட்டார நாவலின் போக்குத் தொடர்கின்றது. பழைய தலைமுறையைச் சேர்ந்தவர்களும் புதிய இளம் எழுத்தாளர்களும் வட்டார நாவல் வளர்ச்சிக்குத் தமது இலக்கியக்

காணிக்கையைச் செலுத்திவருகின்றனர். ஜெயமோகனின் ரப்பர் (1990), ஆர்.சண்முகசுந்தரத்தின் பனித்துளி (1990), தோப்பில் முகமது மீரானின் துறைமுகம் (1991), சிவகாமியின் ஆனந்தாயி (1991), அய்க்கனின் மண்ணின் மலர்கள் (1991), அறிவழகனின் கழிசடை (1991), கொ.மா.கோதண்டத்தின் குறிஞ்ஞாம்பூ (1993), ஐசக் அருமைராசனின் வலிய வீடு (1993) நாஞ்சில் நாடனின் சதுரங்க குதிரை (1993), தோப்பில் முகமது மீரானின் கூனன் தோப்பு (1993), பெருமாள் முருகனின் ஏறுவெயில் (1991), சு.சமுத்திரத்தின் தாழம் பூ (1992), சோலை சுந்தரப் பெருமாளின் ஒரே ஒரு ஊர்ல, சி.ஆர்.ரவீந்திரனின் ஈரம் கசிந்த நிலம் (1992) பெருமாள் முருகனின் நிழல்முற்றம் (1994), மேலாண்மை பொன்னுச்சாமியின் கிளி மற்றும் அச்சமே நரகம் (1994), ஸ்ரீதர கணேசனின் உப்புவயல் (1995), தோப்பில் முகமது மீரானின் நாற்காலி ஆகியவைகள் தொண்ணூக்களில் வெளிவந்த குறிப்பிடத்தக்க வட்டார நாவல்களாகும். ஜெயமோகனின் ரப்பர் அகிலன் நினைவு சமூக நாவல் பரிசையும், சி.ஆர்.ரவீந்திரனின் ஈரம் கசிந்த நிலம் பாரதீய பாஷா விருதையும் பெற்றவை.

தொகுப்புரை

வட்டார நாவல்கள் கிராமிய இந்தியாவின் நாடித்துடிப்பைச் சித்தரிக்கின்றன. இந்திய மொழிகளில் மகாத்மா காந்தியடிகள் இந்திய அரசியலில் பங்கு பெற்ற பின்பு கிராமிய நாவல்கள் எழுந்தன. முப்பதுகளுக்குப்பின் எதார்த்தப் பேச்சு வழக்கைக் கொண்டு வட்டார நாவல்கள் எழுதப்பட்டன. இந்திய விடுதலைக்குப் பின் மொழிவாரி அரசுகள் ஏற்பட்டபின்பு குறிப்பிட்ட சாதிகளின் பண்பாடுகளைப் பாதுகாக்கும் வகையிலும் வட்டார நாவல்கள் படைக்கப்பட்டுவருகின்றன. அறுபதுக்களுக்குப் பின் முற்போக்கு சிந்தனைகளோடும் சோசலிச எதார்த்தத்தோடும் எழுதப்பட்டு வருகின்றன. மலையாளம், கன்னடம், பஞ்சாபி ஆகிய மொழிகளில் வட்டார நாவல் சமூகநாவலுக்குள் அடங்கிவிடுவதால் இம்மொழிகளில் தனித்த நாவல் வகையாக அடையாளம் காணமுடியவில்லை.

*

துணைநூற் பட்டியல்

தமிழ்

1. கனகசபாபதி. சி., **தமிழில் வட்டார நாவல்கள்**, ஆய்வுக்கோவை 11: 2.1.,1976, பக்-167, 171.

2. கண்ணுமுத்து, ப., **எண்பதுக்களில் தமிழ் வட்டார நாவல்கள்**, முனைவர் பட்ட ஆய்வேடு, கிராமியப்பல்கலைக்கழகம், காந்திகிராமம், 1996.

3. சண்முகசுந்தரம் சு., **தமிழில் வட்டார நாவல்கள்**, காவ்யா, பெங்களூர்-38, 1991.

4. நடராசன், தி.சு., **வட்டார இலக்கியம் என்னும் பாகுபாடு**, மகாநதி-1978, பக்-15

5. ஞானி., **எண்பதுக்களில் தமிழ் நாவல்கள்**, விஜயா பதிப்பகம் கோவை -1, 1994.

6. பிச்சை. அ., **இந்திய மொழிகளில் வட்டார நாவல்**, ஆய்வுக்கோவை-2, 1995, பக். 866-870.

7. முருகன், தி., **தமிழில் வட்டார இலக்கியம்**, ஒரு பொதுப்பார்வை, ஆய்வுக்கோவை-2, 1995, பக். 526-531.

8. இராமசாமி, டி.சி., **ஆர்.சண்முகசுந்தரனின், கொங்கு மணம் கமழும் நாவல்கள்**, வானதி பதிப்பகம், சென்னை-17, 1994.

9. விஜயலெட்சுமி இராஜாராம்., **வட்டார இலக்கியமும் கி.இராஜநாராயணனும்**, அன்னம் வெளியீடு, சிவகங்கை, 1996.

ENGLISH

10. Bentley, phyllis., **The English Regional Novel, Alen and unwin**, London, 1941.

11. George, K.M. (Ed.,) **Comparative Indian Literature**, Vol.I Macmilian, Madras, 1982,

12. Pande, **Indu Prakash Regionalism in Hindi Novels**, Franz Steiner Verlog, Wiesbaden, 1974.

13. Squires, Michael, **The Pastoral Novel**, University, Press of Virgina, Chaliottes ville, 1974.

*

18

கன்னடச் சிறுவர் இலக்கியம்

முன்னுரை

தென் திராவிட மொழிகளில் ஒன்றான கன்னட இலக்கியத்தின் வரலாறு ஏறக்குறைய கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த கவிராச மார்க்கத்திலிருந்து தொடங்குகிறது என்பர். இதனின் ஆரம்பகால வரலாற்றில் குழந்தை இலக்கியம் எதுவும் தோன்றவில்லை. கி.பி. 1035-இல் துர்க்க சிம்மன் என்பவரால் சமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட பஞ்சதந்திரக் கதைகளைக் குழந்தைகளுக்கு எழுதப்பட்ட இலக்கியம் என்றும் குறிப்பிடலாம். ஆனால், இன்று அவற்றைப் பெரியவர்கள் படித்துத்தான் சிறுவர்களுக்குச் சொல்லவேண்டும். வாய்மொழி மரபில் விடுகதை, பழமொழி, கதை, கதைப்பாடல், விளையாட்டுப்பாடல் ஆகியன தாத்தா, பாட்டி, பெற்றோர்கள் வாயிலாக வழக்கில் இருந்து வருகின்றன. 19-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தான் குழந்தைகளுக்காக எழுதப்பட்டுகின்ற முறையான குழந்தை இலக்கியம் தோற்றம் காண்கிறது.

நாட்டுபுறக் குழந்தை இலக்கியம்

நாட்டுப்புறக் குழந்தைகளிடத்திலும் நகர்புறச்சேரிச் சிறுவர்களிடத்திலும் வாய்மொழி மரபில் பொழுதுபோக்காகப் பயன்படும் நாட்டுபுறப் பாடல்கள் காணப்படுகின்றன. விளையாடும் பொழுதும் கேலி, கிண்டலாகச் சில உறவினரை / சில இனத்தவரை நையாண்டி செய்யும் பொழுதும் பாடப்படுகின்ற நாட்டுப்புறப் பாடல்கள் சுவையானவை. 1972-ஆம் ஆண்டில் மைசூர் ஜானபத பளக என்னும் நாட்டுப்புற அமைப்பு சிசு பிராசகளு நூலை வெளியிட்டது. பின்பு ராகௌ (ராமகௌடா) ஆனெ பந்தொந்தான (வி.எல்.இலட்சுமி நாராயணன்) ஆகியோரும் வாய்மொழிக்குழந்தைப் பாடல்களைத் தொகுத்து வெளியிட்டனர்.

1. **உரையாட்டுப் பாடல்கள்**

அ) புஸ்புஸ் நாகப்பா
ஹாலுகொட்டரே குடிதினப்பா
கொடிலிக்கெ பந்தரெ குடிதினப்பா

ஆ) அச்சச்சு
பெல்லிச்சு
அல்லிநோடு
இல்லிநோடு
சம்பங்கி மரத கௌகே கும்பு நோடு

யாவரும்பு. . . . ?
காகே கும்பு
யாவ காகே. . . ?
காப்பு காகே
மடிக்கே கப்பு ?
யாவ மண்ணு. . . .?
மைசூர மண்ணு
யாவ மைசூரு. . . .?
விசால மைசூரு!

2.2. கேலிப்பாடல்கள்

அ) பட்டாரா கோணி
படாபடா கோணி
குடுகுடு கும்பா
ஹெறதி ஹேற தாரெரா
இக்கேதி மக்களே ஹறிடு கொண்டு ஹோகோ

ஆ) மாமா மாமா மாதாடு
மாவின கிடக ஜோதாடு
மாவின தொங்கி முறிது
மாமன குண்டி கறிது

இ) அஜ்ஜா அஜ்ஜி
மொச்சன்ன பஜ்ஜி
ஹெறச்சிகே திண்டு
ஹெறச்சிது பொஜ்ஜு

ஈ) குடுகுடு முத்யா பண்ட
சஜ்ஜிரொட்டி தண்ட
மடாதாக இட்டா
பேடிதாக கொட்டா

உ) கோ கோ கோழி
பெலகாய்து ஏவி
மாவ் மாவ் கேகு
கத்து ஹாலு நெக்கு

ஊ) கிட்ட கிட்ட
கோழி சுட்ட
மனெமனெகெல்லாம்
நாத்த கொட்ட

3. அறிவூட்டும் பாடல்கள்

அ) தோசெ தோசே
துப்புபதாக மாடித தோசெ
அப்பகெ அய்து அம்மானிகெ நால்கு
அண்ணின்கெ மூணு அக்காளி கெ எரடு
நானெகெ ஒண்டு

ஆ) ஆனெ ஆனே ஆனே
விட்டல தேவரே பட்டியானெ
கோல்யோர தேவரெ கொம்பானெ
புத்துர தேவரெ முட்டயானெ
மதுபுர தேவரெ மத்தானெ
பாயோரெக தேவர ஆனெ

இ) மல்லிகெ மல்லிகெ மாடதிருவ மல்லிகெ
படாதிதரெ சிவனா பாதகானே மல்லிகெ
துண்டு துண்டு மல்லிகெ கோலு கோலு மல்லிகெ
ஏளுசுத்தின் மல்லிகெ காகட மல்லிகெ

நாட்டுப்புறக் குழந்தைப் பாடல்களில் எளிமையும் இனிமையும் நகைச்சுவையும் நற்செய்திகளும் இடம் பெற்று மீண்டும் மீண்டும் பாடப்படுகின்றன. எதுகை, இயைபு, மோனைத் தொடைகள் பொருத்தமாக அமைந்து இனிமையைக் கூட்டுகின்றன. பொழுது போக்கை காட்டுகின்றன.

3. எழுத்து வடிவத்தில் குழந்தை இலக்கியம்

3.1. 1840-1968 காலகட்டத்தில் ஏறக்குறைய 1500 குழந்தைகளுக்கான நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன என்று ஒரு மதிப்பீடு தெரிவிக்கின்றது. எம்.எஸ் புட்டாண்ணா என்பவர் நீதி சிந்தாமணி என்னும் பெயரில் 1884-இல் பதினைந்து நூல்களை வெளியிட்டார். இது ஒரு வரலாற்றுப் புகழ்மிக்க சாதனையாகும். இந்த நீதிக் கதைகள் குழந்தைகளுக்கு நல்ல பண்புகளை வளர்க்கும் அறநெறிகளைப் புகட்டும் கதைகளாகும். இக்கதைகள் பல்வேறு மூலங்களிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளன. மொழிநடை எளிமையாகவும் உரையாடல் வடிவத்திலும் அமைந்துள்ளது.

3.2 வயது வந்தோர்களுக்கு எழுதிய புகழ்பெற்ற எழுத்தாளர்கள் குறிப்பாக கே.வி.புட்டப்பா, கே.சிவராமகாரந்த், தேவுடு நரசிம்ம சாஸ்திரி ஆகியோர்களும், குழந்தைகளுக்காகவே இலக்கியங்களைப் படைத்த பஞ்செ மங்கேஷ்வரராவ், ஜி.பி.ராஜரத்தினம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். தென்கர்நாடகப் பகுதியைச் சேர்ந்த பிதாமோதர பாலிகா என்பவர் நவநிதி சானத்யமால், என்னும் பெயரிலும், வடகன்னடப் பகுதியைச் சேர்ந்த மேவுந்தி மல்லாரி என்பவர் கன்னட கந்த புத்தக மால, என்னும் பெயரிலும், கதை நூல்களை வெளியிட்டார்கள். மங்கேஷ்வரராவ் ஒந்தான மால என்னும் பெயரில் ஒரணா நாணயத்திற்குப் பதினாறு பக்கங்களைக் கொண்ட குழந்தை நூல்களை வெளியிட்டார். இவையெல்லாம் குழந்தை இலக்கிய வளர்ச்சிக்குத் தூண்டல் கொடுத்தன. மேலும், சென்னை மாகாண அரசின் பாடத்திட்டக் குழுவைச் சேர்ந்த எம்.எஸ்.புட்டண்ணா, சா.வாசுதேவய்யா ஆகியோர் சிறுவர்களுக்கான இலக்கிய நூல்களைத் தொகுக்கும் பணியில் ஈடுபட்டார்கள்.

ஆரம்பக் கல்விப் பாடநூல்களைத் தயாரிக்கும் பொழுது வாய்மொழிப்பாடல்களையும், சுயமாக இயற்றிய பாடல்களையும் நூல்களில் சேர்த்ததோடு சில ஆங்கிலக் குழந்தைப்பாடல்களையும், கன்னடத்தில் மொழிபெயர்த்துச் சேர்த்தார்கள். தாமஸ் தேய்யின் Standford and Merton, என்பதைத் தழுவி சுமதி மதனா-குமார சரித்திர என்னும் நீண்ட கதையைப் புட்டண்ணா வெளியிட்டார். Twinkle Twinkle Little Star, என்னும் பாடலை கன்னட மொழியில்

மிரு மிரு கொல்ஹெகிரு தாரகெலீ
அரியெனு நானலெ நீநரீ,

என மொழி பெயர்க்ககப்பட்டுள்ளது. இதைப்போலவே ராபர்ட் புருஸின் Try and Try again / என்னும் பாடல்

மரலி யத்நல மடு
மரலி யந்நல மடு
கெலசகைகூட்ட திரலு

என்று கன்னடத்தில் மொழியாக்கம் செய்யப் பட்டுள்ளது. பாடல்களைப் போலவே ஸ்டீவன்சனின் Treasure Island / (பவளத்தீவு), ஜொனதன் ஸ்விப்டின் Guivallers Travel, போன்ற சிறுவர்களுக்கான புனைகதைகளும் கன்னடத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

4. குழந்தை இலக்கிய எழுத்தாளர்கள்

4.1. குழந்தைகள் மகிழும் வகையில் பாடல்களையும் கதைகளையும் எழுதி மிகவும் முன்னோடியாக குழந்தை இலக்கியத்தில் தலைசிறந்து விளங்கியவர் பஞ்சே மங்கேஷ்வரராவ். இவருடைய தெங்கன காளியாட (தெற்குக் காற்றின் விளையாடல்) ஹாவினஹாடு (பாம்புப் பாட்டு) ஆகியன மங்கேஷ்வரராவின் மங்காப் புகழ்பெற்ற பாடல்கள்.

நாகர ஹாவே ஹாவொலு ஹீவெ
பாசிலா பில தோலு நின்னய தாவே
கைக்கள முகிவே ஹாலண்ணிவே
பா பா பா பா பா

நாகப்பாம்பே நீ பாம்புகளுக்குள் ஒரு மலராக இருக்கின்றாய், பார்ப்பதற்கும் கவர்ச்சிகரமாய் இருக்கிறாய். ஆனால், நீ ஓய்வெடுப்பது கதவிடுக்கில் உள்ள பொந்தாகும். நீ வெளியே வா. உன்னை வணங்குகிறேன். உனக்குப் பால் தருகின்றேன் தாரமய்ய (கொண்டுவா, அம்மா) என்பதும் பல்லோராலும் பாடப்படுகின்ற பாடலாகும். இயற்கைக் காட்சிகளை மிக அற்புதமாக கவிதையில் வடித்துள்ளார். பாடல்களைத் தவிர இவர் கதைகளையும் குழந்தைகளுக்கு எழுதியுள்ளார்.

4.2. எம்.என். காமத் என்பவர் காவியங்களிலிருந்து கிளைக் கதைகளை எடுத்துக் கொண்டு குழந்தைகளுக்கான நாடகங்களை எழுதினார். சில நாடகங்களில் பறவைகளையும் விலங்குகளையும் பாத்திரங்களாக்கினார். ஆனால் துரதிருஷ்டவசமாக இவருடைய நாடகங்கள் ஒன்று கூட இன்று கிடைக்கவில்லை. ஆரகம் லட்சுமணராவ் என்ற கொய்ஷாலா என்பவர் பல்வேறு வடிவங்களில் குழந்தை இலக்கியத்தைப் படைத்தவர். பாடல்கள், கதைப்பாடல்கள், நாடகங்கள் ஆகிய எல்லா வடிவங்களையும் கையாண்டு வெற்றி கண்டவர். புட்டதம்ம யாரு, போரி, மஸிதியன்று எல்வி கட்டித்தரு ஆகியவை அவருடைய சில பாடல்களாகும்.

பி.எஸ் பாண்டுரங்கராவ், நாடகங்கள், கதைகள், தலைவர்களின் வரலாறுகள் ஆகியவற்றை எழுதி வழிகாட்டினார். கே.வி.புட்டப்பாவின் பொம்மக ஹல்லிய கிந்தரி ஜோகி, என்பது ராபர்ட் பிரவுனின் பாடலைத் தழுவியதாகும். படங்களுடன் கொண்ட இப் பாடல் பலரின் மனங்கவரத்தக்கது. மேடையில் நாடகமாகவும் நடிக்கப்பட்டு பார்வையாளருக்கு இன்பம் ஊட்டியது.

பாடல்களில் நகைச்சுவை உணர்வைக் கலந்து எழுதியவர். ஜி.பி.ராஜரத்தினம் இவருடைய முதல் கவிதை துத்தூரி (குழல்) என்பது குறிப்பிடத்தக்கது. இப்பாடலின் தொடக்கப்பகுதி

பண்ணத தகடின துத்தூரி
காசிகே கொண்டனு கஸ்தூரி
சரிகம பதநிச ஊதிதனு
சனி தப மகரிச ஊதிதனு

இப்பாடல் கன்னடக் குழந்தை இலக்கியத்தில் மிகவும் புகழ்பெற்றது. உலகக் குழந்தை ஆண்டில் (1979), கந்தன காவிய மால, என்னும் தனது தொகுப்பை வெளியிட்டார். நரஹரி ஜெய ராயச்சாரியா, ஜி.எஸ்.லக்சுணபை, பி.எ.சனதி

ஆகியோர் ஆட்டப்பாடல்கள் எழுதினார்கள். நரஹரியின் அனுகரண கீத லஹரி (1902) பறவைகளையும் விலங்குகளையும் போலச்செய்து ஆடத்தூண்டும் முப்பது பாடல்களின் தொகுப்பாகும். ஜி.எஸ்.எல்.பையின் அபிநய கீத மஞ்சதி, அபிநய கீதவளி, ஆகியனவும் ஆட்டப்பாடல்களில் குறிப்பிடத்தக்கவை.

5. அறுபதுகளுக்குப் பின்

5.1. 1960 வரைக்கும் எழுதப்பட்ட குழந்தை இலக்கியத்தில் போதுமான கதைநூல் தோன்றவில்லை. நாடகங்களும் மிகக் குறைவாக காணப்பட்டன. குழந்தை இலக்கியத்தைப் பற்றிய முறையான திறனாய்வு நூல்களும் தோன்றவில்லை. பல்வேறு வயதினருக்கு உரிய நூற்பட்டியல்கள் தயாரிக்கப்படவில்லை. இக்குறைபாடுகள் அறுபதுக்குப்பின் மறையத் தொடங்கின. பல எழுத்தாளர்கள் குழந்தை இலக்கியங்களைப் படைக்க முன் வந்தார்கள். 1968-78 ஆண்டு கால கட்டத்தில் 4000 நூல்கள் வெளிவந்துள்ளன என்று ஒரு புள்ளி விபரம் தெரிவிக்கின்றது.

5.2. 1979-இல் கொண்டாடப்பட்ட உலகக் குழந்தை ஆண்டு பல்வேறு தூண்டல்களைத் தந்தன. சில நாடகங்கள் வெளிவந்தன. நன்கறிந்த தலைவர்களைப் பற்றிய வாழ்க்கைவரலாறுகளும், காவியங்களிலிருந்து கதைகளை எடுத்துக் கொண்டுகதைத்தொகுப்புகளும் வெளிவந்தன. ஏ.ஜி.அமிர்தேஸ்வரா. பி.வி.சந்திர சேகர், அனுபமா நிரஞ்சனா, கணேகர் ஆகியோர், புதிய எழுத்தாளர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். 'துப்பாரெட்டி கே.கே.கே' என்னும் தொகுப்பில் சித்தையா புரணிகா சில அழகான கவிதைகளைப் படைத்துள்ளார்.

6. இதழ்களும் கலைக் களஞ்சியங்களும்

6.1 குழந்தைக்காக இதழ்கள், மற்ற இந்திய மொழிகளில் வருவதைப் போலவே கன்னட மொழியிலும் வெளியிடப்படுகின்றன. ஆரம்ப காலத்தில் குமார வெங்கண்ண என்பவரால் பாப்பாச்சி, என்னும் இதழ் கொண்டு வரப்பட்டது. பின்பு அசுவத் நாராயணா மக்கள் புஸ்தக என்னும் மாத இதழைப் பதிப்பித்தார். சந்த மாமா. பாம்பே மண, பால மித்ர போன்ற இதழ்கள் குழந்தைகளுக்காக வெளியிடப்படுகின்றன. தேவுடு நரசிம்ம சாஸ்திரி நம்ம புஸ்தக என்னும் இதழைப் பதினைந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து வெளியிட்டமை, குழந்தை இலக்கிய வரலாற்றிலும், இதழியல் வரலாற்றிலும் குறிப்பிடத்தக்கது. மைசூரில் உள்ள சிசு சாகித்ய சங்கம், கந்த என்னும் பெயரில் வெளியிட்டது. சிசு சங்கமேஷா என்பது 1978 முதல் பாலபாரதி என்னும் இதழை வெளியிடுகிறது. 1978-இல் குழந்தைகளிடையே அறிவியல் அறிவை வளர்க்க இந்திய அறிவியல் கழகத்தின் மேற்பார்வையின் கீழ் கர்நாடக மாநில அறிவியல் தொழில் நுட்பக் குழுமம், பாலவிஞ்ஞானம் என்னும் இதழைப் பதிக்கின்றது.

6.2. சிவராம கரந்த் 1800 பக்கங்களில் மூன்று தொகுதிகளில் பால பிரபஞ்சம் என்னும் குழந்தைக் கலைக்களஞ்சியத்தை உருவாக்கினார். அற்புத ஜகத்து ஏன்ற நூல் வரிசையையும் வெளியிட்டார். சுபோத குசுமஞ்சலி என்னும் பெயரில் எம்.ராமராவ் 14க்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டார். சிவராம கரந்த விஞ்ஞான பிரபஞ்சம் என்னும் பெயரில் நான்கு தொகுதிகளாக அறிவியல் கலைக் களஞ்சியத்தை வெளியிட்டார். கர்நாடக சகாரி பிரகாஷ்ன மந்திரா மாநில அரசின் உதவியால் ஞான கங்கோத்ரி என்னும் இளையோர் கலைக்களஞ்சியத்தை ஏழு தொகுதிகளில் வெளியிட்டுள்ளது.

7. முடிவுரை

1979-இல் கன்னட சாகித்ய பரிசத் நூல் வெளியீட்டுத் திட்டத்தின் கீழ் குழந்தைக்கான நூறுநூல்களை வெளிக்கொண்டு வந்தது. இந்தியன் புக் ஹவுஸ்பிரபாஷ்ன. ராஷ்ரோத்ன பரிஷத் போன்ற புத்தக நிறுவனங்கள் குழந்தைகளுக்கான கதைநூல்களையும் அறிவியல் நூல்களையும் வெளியிடுகின்றன. புது டெல்லியில் உள்ள நேஷனல் புக் டிரஸ்ட்டும், சில்ரன் புக்டிரஸ்ட்டும் குழந்தை இலக்கியங்களைக் கன்னட மொழியில் முன்வந்து வெளியிடுகின்றன. எண்பதுகளுக்குப் பின் குழந்தை இலக்கியப் படைப்பு இயக்கம் மேலும் பரவி புதிய எழுத்தாளர்களையும் கவர்ந்து வளர்ந்து கொண்டு வருகின்றது.

*

துணைநூற் பட்டியல்

1. இறையடியான், **கருநாடக நாட்டுப்புற இயல்-ஓர் அறிமுகம்** மெஸ்கா வெளியீடு, ஆயிரம் விளக்கு, சென்னை-6, 1993.

2. ரம்.ஸ்ரீ.முகளி, **கன்னட இலக்கிய வரலாறு**, சாகித்ய அக்காதெமி, புதுதில்லி, 1972.

3. Anantharamaiah, R.C., **Children's Literature (kannada) comparative Indian Literature,** Vol-II, Macmillan Ltd., Madras, 1985, pp:116-117.

4. Narasimha Murthy, **Modern Kannada Literature,** Pustakalaya Publications, Bangalore-14., 1992.

5. Jamuna, Dr. (miss) K.A. (ed.), **childrens Literature in Indian Languages,** Publication Division, Ministry of Information and Broad Casting. Govt. of India, New Delhi, 1982.

6. Srikanta kudige, Children's Rhymes (Encyclopaedia of the Folkcultures of Karnataka Vol-I) Institute of Asian Studies, Thiruvanmiyur, Madras-41, 1991, pp. 278-283.

*

19

மலையாள நவீன நாவல்கள்

முன்னுரை

மலையாளத்தில் அறுபத்துக்குப் பின்னுள்ள காலகட்டத்தை நவீன காலம் என்று குறிப்பிடுகிறார்கள். காக்கநாடனின் படைப்புகளோடு நவீன காலகட்டம் தொடங்குகிறது. வி.கே.நாராயணன் குட்டி, எம்.டி.வாசுதேவன் நாயர், கோவிலன், ஏ.பி.குளய்க்காடு, பி.கே.கோபாலகிருஷ்ணன், எம்.முகுந்தன், சி.இராதாகிருஷ்ணன், மாடம்பு குஞ்ஞுகுட்டன், பத்மராஜன், சேது, ஆனந்த், காரூர், சசி, ஓ.வி.விஜயன், புனத்தில் குஞ்ஞுப்துல்லா, விலாசினி ஆகியோர் நவீன காலகட்டத்தைப் பிரதிபலிக்கும் படைப்பாளிகள். சில மகத்தான மலையாள நாவல்கள் பின்வருமாறு:

அக்னிசாட்சி (1976)

லலிதாம்பிகா அந்தர்ஜனத்தின் அக்னிசாட்சி மத்திய அரசின் சாகித்ய அகாதெமி பரிசு, வயலார் விருது ஆகியவற்றைப் பெற்ற சிறந்த நாவலாகும். 1976-77க்களில் மலையாளிகளிடையே பரவலாகப் பாராட்டப்பெற்றது. எளியகதை. ஆழ்ந்த தத்துவம், கவிதையழகு, ஆற்றல் மிக்க சமூகப் பரிமாணம் ஆகியவற்றைக் கொண்டது. இந்நாவல் நம்பூதிரி இனப்பெண் (அந்தர்ஜனம்) ஒருத்தி நம்பூதிரிக்குத் திருமணம் செய்து வைக்கப்படுகிறாள். அவளுடைய சகோதரரும் குடும்பமும் புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டதால் அவர்கள் சமூகத்திலிருந்து விலக்கி வைக்கப்படுகின்றார்கள். அவள் ஒரு தடவை நோய்வாய்ப்பட்ட தாயைப்பார்க்கச் செல்லும் பொழுது சாதிக்கட்டுப்பாட்டின் அடிப்படையில் அனுமதி மறுக்கப்படுகின்றது. ஆனால், அவள் தெருவின் தடையை மீறித்தாயைப்பார்க்க செல்கிறாள். மீண்டும் கணவன் வீட்டிற்குத் திரும்பவே இல்லை. அவள் புரட்சிவாதியாக மாறுகிறாள். மாதாஜி என்று அழைக்கப்படுகிறாள். கணவனும் இவளைப்புரிந்து கொண்டு இவளுக்காக துன்பத்தை ஏற்றுக்கொண்டு விசுவாசத்துடன் நடந்து கொள்வது - இறுதிவரை வாழ்வது, கணவன்-மனைவி ஆகியோரின் ஆன்மீக உறவைப் புலப்படுத்துகின்றது.

ஸ்மாரக சிலகள் (1977)

புனத்தில் குஞ்ஞப்துல்லா ஒரு நிலப்பிரபுவின் வாழ்வைச் சித்திரிக்கும் காவியப் பரிமாணமுள்ள இந்நாவலை எழுதியுள்ளார். பூகோயா தங்ஙள், என்னும் முஸ்லீம் நிலப்பிரபு அவருடைய காலத்திலேயே ஒரு வரலாற்று மாந்தனாகி விட்ட நிலையை எடுத்துரைக்கின்றது. முஸ்லீம் சமுதாய வாழ்வின் குறுக்கு வெட்டுத் தோற்றத்தைத் தருகின்ற இந்நாவல் முகமது பஷீரின் சிறந்த படைப்பைப்போல அமைந்துள்ளது. ம்ஸ்லீம் மசூதி, மணி, மணியடிப்பவன், தங்ஙளின் குதிரை, குதிரைச்சேவகன். தங்களின் வேலைக்காரி, தங்ஙள் மனைவி, இவரது மகள் பூக்குஞ்ஞி பீ, காமக்கிழத்தி மகள் குஞ்ஞாலி போன்ற எல்லாரும் நம் மனதில் பதிவாகி வாழ்கின்றனர்.

ரண்டா மூலம் (1984)

எம்.டி.வாசுதேவநாயர் ரண்டா மூலம், (இரண்டாம்) என்னும் நாவலில் தெய்வீக தன்மையான பாத்திரத்தைச் சாதாரண மனிதனாகப் படைத்து இன்றைய தனிமனித உணர்வுகளை ஏற்றிப் புனைந்துள்ளார். இந்நாவலில் Demythification through Ironical reversal, என்ற முறையில் வீமன் படைக்கப்பட்டுள்ளான் என்று கே.சச்சிதானந்தன் குறிப்பிட்டுள்ளார். தசைப் பலத்தால், பராக்கிரமத்தால் வீரச் செயல்கள் புரிந்த வீமன் தனிமைப்படுத்தப்பட்ட இரவுகளில் அவனின் சிந்தனை ஓட்டங்கள் எப்படி இருந்திருக்கும் என்று கற்பனை செய்து எழுதியுள்ளார். இருத்தலியல் அடிப்படையில் இந்நாவலைப் படைத்துள்ளார். கீழறை, அவநம்பிக்கை அடிப்படையில் மனப்பான்மை, சுய அவமானம், ஆவேசம் ஆகிய பண்புகளோடும் தன்னுணர்வுப்பாங்கின் அழுத்தத்தோடும் இந்நாவலை ஆக்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

குருசாகரம் (1987)

ஓ.வி.விஜயனின் குருசாகரம் என்னும் நாவல் 1990 ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகதெமி பரிசு பெற்ற நாவலாகும். இந்நாவலின் களம் கல்கத்தா. காலம் இந்திய பாகிஸ்தான் போர்நிகழ்ந்த சமயம். கதை நிகழ்ச்சிகள் எழுபதுகள் காலகட்டத்தில் நடைபெறுகின்றன. பாகிஸ்தானுடன் சண்டை நடந்து (1971) கிழக்குப் பாகிஸ்தான் வங்காள தேசமாக மாற்றம் பெறுகிறது. இந்த அரசியல் பின்னணியில் குஞ்ஞுண்ணி என்னும் பத்திரிக்கையாளனின் ரெட்டை வால் குருவி, வாழ்க்கை சித்திரிக்கப்படுகிறது. இவனுக்கு சிவனி என்ற மனைவியும் இவளின் தோழியான பினகி என்ற காதலியும் உண்டு. இவர்களின் அகவாழ்க்கைப் போராட் தயும் மேலே கொண்ட அரசியல் போராட்டப்

பின்னணியும் இணைத்து இந்நாவல் விளக்குகின்றது. மேலும் செக்கோஸ்லேவியாவிலிருந்து வந்த 'வோல்க்' என்னும் ஜிப்சி பெண்ணின் தொடர்பும் கிடைக்கிறது. கதாநாயகனின் அரசியல் பின்னணியில் மனித உறவுகள் அலசப்படுகின்றன. சிறந்த பாத்திரப்படைப்பும் அரசியல் பின்னணிச் சித்தரிப்பும் இந்தியப் பண்பாட்டைச் சேர்ந்த ஆச்சரியங்களின் ஆன்மீகச் சிந்தனைகளும் சிறப்பாக இடம் பெற்றுள்ளன. இந்நாவலில் மனித நேயம் தூக்கி நிறுத்தப்பட வேண்டும் என்பது ஆசிரியரின் குரலாக ஒலிக்கின்றது.

தெய்வத்திண்றெ விக்ருதிகள் (1989)

எம்.முகுந்தனின் மய்யழிப் புழயுடெ தீரம், என்னும் நாவலின் தொடர்ச்சியாகும். கேரளாவில் பிரெஞ்சுகாலனியாக இருந்த மாஹே மய்யழி வட்டார வழக்கின் பல பரிமாணங்களைக் கொண்ட பாத்திரங்களையும் இந்நாவலில் உலாவவிட்டுள்ளார். சோம்பேறியான இந்தோ ஆங்கிலேயர்கள். உழைக்கும் முஸ்லீம்கள், ராசவம்சத்தினர். நக்சலைட்டுகள் ஆகியோர் இந்நாவலில் சித்தரிக்கப்பட்டுள்ளனர்.

பிரகதிநியமம் (1989)

சி.ஆர்.பரமேஸ்வரனின் முதலாவது படைப்பும் முதல் தரமான நாவலுமான இப்படைப்பிற்கு கேரள சாகித்திய அகதெமி 1989-இல் சிறந்த நாவலுக்குரிய பரிசை வழங்கி கௌரவித்துள்ளது. கேரளாவில் தலைசிறந்த விமர்சகர்களின் திருமதி. எம்.லீலாவதி ஆகியோரின் பாராட்டுதலைப் பெற்றது. மாத்ரு பூமியில் இரண்டு ஆண்டுகளாகத் தொடர்கதையாக வந்து, பின்பு நூல் வடிவம் பெற்றது. தென்னகக் கேரளப் பொதுவுடைமைக் கலாச்சாரம் சிதைவு அடைந்து வருவதை இந்நாவல் சித்திரிக்கின்றது. நாற்பதுகளில் பண்பாட்டுப் புரட்சியைத் தந்த இயக்கம், எழுபதுகளுக்குப்பின் மத்தியதரவர்க்கத்தை ஏற்படுத்தி விட்டு இன்று வலுவிழந்து வருவதை சித்தரிக்கும் இந்நாவல் கேரளாவின் அரசியல் வாழ்வைச் சித்தரிக்கும் தலைசிறந்த படைப்பாகும்.

தெய்வத்திண்றெ கண்ணு (1993)

என்.பி.முகமதுவின் மகத்தான படைப்பு தெய்வத்தின்றே கண்ணு என்னும் நாவலாகும். சாகித்ய அகதெமி பரிசை 1993-இல் பெற்றது. புறநிலையில் மத்தியக் கேரளத்தின் ஒரு முஸ்லீம் குடும்பத்தின் அவலநிலையைச் சித்தரிப்பதாகத் தோன்றினாலும் அகநிலையில் இந்திய வாழ்வைத் தொனிப் பொருளாகக் கொண்டுள்ளது. ஒரு குடும்பத்தின் அவல வாழ்வின் வழியே இந்தியாவின் பின்தங்கிய வாழ்வை விளக்குகிறது. நகரம்புர என்னும் இக்குடும்பத்தில் சாவுகள் தொடர்ந்து

நிகழ்கின்றன. பழமையான வீட்டைப்புதுப்பிக்க முடியவில்லை. வீடு பல சிக்கல்களுக்கும் சீர்கேடுகளுக்கும் உள்ளாகின்றது. கோபமும் குழப்பங்களும் அதிகாரப் போக்கும் செல்வத்தைச் சேர்க்கும் வெறியும் மனித உறவுகளைத் தகர்க்கின்றன. பூதங்களினால் நிகழ்கின்றன என்று நம்பப்பட்டு மூட நம்பிக்கையான சடங்குகள் பரிகாரத்திற்கு நிகழ்த்தப்படுகின்றன.

முதுமைக்கும் அறியாமைக்கும் முதலிடம். இளமைக்கும் விவேகத்திற்கும் இடமில்லை. முதுமையே இளமையைப் பலிவாங்கத் துடிக்கின்றது. ஆண்மையே பெண்மையை அழிக்க ஆவேசம் கொள்கிறது. ஒரு வீட்டை வைத்து அதன் மூலமாக நாட்டு நடப்புகளைச் சித்திரிக்கின்றது இந்நாவல். தெய்வத்தின் கண் சூரியன் என்று முஸ்லீம்கள் நம்புகின்றார்கள். இது இந்துக்களின் நம்பிக்கையான சூரியன் கர்மசாட்சி, என்பதற்கு இணையானது. சூரியன் பூமியில் நிகழ்கின்ற வாழ்க்கைகளைக் கவனித்துக் கொண்டு வருகிறான். பூமி-உலகம் மனிதனுக்கு மட்டும் (Anthropocentric view of life) என்ற கருத்தை உடைக்கிறது இந்நாவல். உயிருள்ள அனைத்துப் பொருட்களுக்குரியது இப்பூமியும் உலகமும். இதனை மனிதன் தன் சுயநலத்தினால் அழித்துவிடக்கூடாது என்ற சூழல் பாதுகாப்புக் குரலும் அடிநாதமாக ஒலிக்கிறது.

முடிவுரை

நவீன காலத்தில் ஃபிராய்டின் உளவியல் சிந்தனைகளும் இருத்தலியல் சித்தாந்தங்களும் நனவோடை உத்தியும் முக்கிய பண்புகளாகக் காணப்படுகின்றன. காஃப்கா, காம்யூ ஆகியோரின் நாவல்களும் குறிப்பிட்டத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றன. மாந்திரிக எதார்த்தவாதமும், தொன்மங்களை மறுபடைப்பு செய்வதும் புது விளக்கங்களும் கொடுக்கும்-புதுபாணிகளும் நவீன நாவல்களில் இடம் பெற்றுள்ளன. நகரியமாதல், தொழிற்சாலைப் பெருக்கம், அறிவியல் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சி ஆகியவை எழுத்தாளர்களுக்குப் புது விழிப்புணர்வைத் தந்தன. இவற்றால் வாசகர்களுக்குப் புதிய புலப்பாட்டை (New Sensibility) தரும் நாவல்களைப் படைத்துத் தருகின்றனர்.

*

துணைநூற் பட்டியல்

1. உருப், உம் மாச்சு, *தமிழில்: இளம்பாரதி,* நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா, புதுடில்லி 1993.

2. கேசவதேவ், பி, *அழகியின் சுயசரிதை,* தமிழில்: சி.ஏ.பாலன், பூம்புகார், பிரசுரம், சென்னை.

3. கோட்டயம், புஷ்பநாத், **மோகினி**, தமிழில்: சிவன், பாமா பதிப்பகம், சென்னை-17, 1993.

4. சேது, **பாண்டவபுரம்**, தமிழாக்கம்: குறிஞ்சி வேலன், விழுதுகள், பதிப்பகம், சென்னை-9, 1999.

5. பொற்றே காட், **விஷக்கன்னி**, தமிழில்: குறிஞ்சி வேலன், நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா புதுடில்லி, 1991.

6. பொற்றே காட், **ஒரு கிராமத்தின் கதை**, சாகித்தியா அக்காதெமி, புதுடில்லி, 1998.

7. பொற்றே காட், **ராகினி என்ன ஆனாள்?** தமிழில்: சி.ஏ., பாலன், பூம்புகார் பிரசுரம், சென்னை, 1981.

8. முகுந்தன், எம், **மய்யழிக் கரையோரம்**, தமிழில்: இளம்பாரதி, நேஷனல் புக்டிரஸ்ட், புதுடில்லி, 1996.

*

20

உருது சிறுகதைகளில் உலாவிடும் போக்குகள்

உருது இலக்கிய வளத்துக்கு மூவகை ஊற்றுக்கள் காரணம். ஒன்று சமஸ்கிருத பிராகிருத ஊற்று, இரண்டாவது அரபி-பார்ஸி ஊற்று, மூன்றாவது ஆங்கிலம்-அந்நிய ஐரோப்பிய மொழிகளை ஆதாரமாகக் கொண்டு பெருகிய ஊற்று. ஆரியர் பரம்பரையின் சொந்த உருது மொழிக்கு நாடோடிக் கதைகள், இலக்கியக் கதைகள், கவிநயம் கொண்ட உரைநடைக் கதைகள் ஆகியவை கிடைத்துள்ளன. அவற்றினூடே சின்னஞ்சிறு உபகதைகளும் மதிப்பில்லா மாணிக்கமெனப் பொதிந்துள்ளன.

புனைவியல் போக்கு

மேலைநாட்டுக் கதைகள் உருதுச் சிறுகதை இலக்கியத்தின் உருவ அமைப்பு, படைப்பு முறை, சீரமைப்பு ஆகியவற்றுக்கு இந்த இருபதாம் நூற்றாண்டில் வெகுவாக உதவியுள்ளன. சொல்லப்போனால் தன் நிறமே ஏற்றியுள்ளன. இதில் சிறிதும் ஐயம் இல்லை. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் கற்பனை மிகு புனைகதையே ஓங்கியிருந்தன. மேலை நாடுகளிலும் கூட இத்தகைய புனைகதை போக்குத்தான் பலம் பெற்றிருந்தது. அதே போக்கு உருதுச் சிறுகதைகளிலும் படிந்து தன் முத்திரையைப் பதித்தது. பொதுவாக உருது இலக்கியத்தின் போக்கே அந்தக் கற்பனையில் நாட்டம் கொண்டதாயிருந்தது. அதுவும் கதைகளும் புனைகதைகளும் கற்பனைச் செழுமையையே தம் பிரதான இயல்பாகக் கொண்டிருந்தன. எனவே இரு முறைகளும் கைகோர்த்துக் கொண்டு வளர்ந்தன.

உருதுவில் கற்பனைப் புனைகதைகள் எழுதுவதில் தேர்ந்தவர்களாக ஸஜ்ஜாத் ஹைதர், யல்தரம், நியாஸ்ஃபதேஸ்புரி, லதீஃப் அஹ்மத் அக்பரதாபரிதி, ஹிஜாப் இம்தியாஜ் அலீதாஜ். பஜ்னூ கோரக்புரி, மீர்ஜா அதீப், குர்ரதுல் ஐன் ஹைதர் ஆகியவர்களைக் குறிப்பிடலாம்.

இவர்களைத் தவிர, இன்னும் எத்தனையோ எழுத்தாளர்கள் புனைகதைகள் எழுதி வந்துள்ளார்கள்.

யதார்த்தப் போக்கு

கற்பனைப் புனைகதைகளுக்குப் பின் ஐரோப்பாவில் யதார்த்தவாதம் தொடங்கியது. உருது கதை உலகிலும் மோதும் கடல் அலையென இந்தப்போக்கு தலை எடுத்தது. யதார்த்தவாதம் தோன்றிப் புனைகதைகளின் கற்பனைச் செழுமையை வேரோடு வெட்டி வீழ்த்தி விட்டது என்று கூறுவது உசிதமாகாது. இருபதாம் நூற்றாண்டில் வெகுகாலம் வரை கற்பனைப் புனைகதைகளும் யதார்த்தவாதமும் இடைவெளிவிட்டு ஓடும் இரு ஆறுகளென இணைந்து பிணைந்தே ஓடின. சில சமயம் ஒன்றையொன்று தழுவித்தன் நிறம் ஏற்றியதும் உண்டு.

யதார்த்தவாதத்தின் முன்னோடியாக பிரேம்சந்த் அவர்களைத் தான் கூற வேண்டும். அவருடன் சுதர்சன், ஆஜம் குரைவீ, அலி அப்பாஸ் ஹுஸைன் போன்ற வேறு பல நல்ல எழுத்தாளர்களும் தோன்றினார்கள். இதில் சுவையானதொரு விஷயம் என்னவென்றால், புனைகதையாளர்களில் பலர் ஓரளவுக்குச் சமுதாயவியல் யதார்த்தவாதத்தின் மீதும் அக்கறை காட்டினார்கள். பிரேம்சந்த், அலிஅப்பாஸ் ஹுஸைன் இவ்விருவரது பல கதைகள், முற்போக்கு வெள்ளத்தில் கலைப் படகை வெகு நயமாக இவர்கள் செலுத்திப் புகழ் ஓச்சியிருக்கிறார்கள் என்பதைக் காட்டுகின்றன.

முற்போக்கு இயக்கம்

உருதுக் கதை உலகத்தை மற்றுமொரு மகத்தான புவிசூழ் இயக்கமும் ஆட்கொண்டது. அதனை முற்போக்கு இயக்கம் என்பர். இந்த இயக்கத்தைத் தோற்றுவித்தவர்கள் ஆய்வில் சிறந்து, சமூகத்திற்கு உகந்து புரட்சி புரியும் யதார்த்தம், இலக்கியத்திற்கு இன்றியமையாதது எனக் கண்டனர். அவ்வாறே பிரகடனப்படுத்தினர். உருதுக் கதையில் இவ்வியக்கம் 1936-ஆம் ஆண்டிலிருந்து முழுமூச்சுடன் வலுவாக ஒலிக்கிறது. இன்றுவரை முற்போக்கு எழுத்தாளர்கள் இத்துறைப் படைப்புத் தொண்டில் ஈடுபட்டிருக்கிறார்கள். 1936 முதல் 1946 வரையில் இந்த முற்போக்குச் சாகுபடியில் நிறைந்த செல்வமே கிட்டியிருக்கிறது. இதற்கிடையிலும் இதற்குப் பின்னரும் இந்த இயக்கத்தை எதிர்த்துப் பலமுனை எதிர்ப்புகளும் எழுந்ததுண்டு.

உருதுக்கதை உலகத்துக்கு முற்போக்கு இயக்கம் பல நல்ல எழுத்தாளர்களை தந்திருக்கிறது. ஸாதத் ஹஸன் மண்டோ, அக்தர் ஹுஸைன் ராய்புரீ, ரஷீத்ஜஹான், கிருஷ்ண சந்தர், ராஜேந்திர சிங் பேதீ, இஸ்மத் சுக்தாயீ,

அஹ்மத் நதீப் காஸிமீ, மும்தாஜ் முத்ஃபீ, ஹாயாதுல்லாஹ், அன்ஸாரி முதலியவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். தவிர, முற்போக்கு இயக்கம் கொடிகட்டிப்பறந்த காலத்தில் உருது இயக்கத்திலும் காவியத்திலும் மட்டும் அன்றி, இந்தியாவின் ஏனைய மொழி இலக்கியங்களிலும், காவியங்களிலும் கூட முற்போக்கு மேகங்கள் சூழ்ந்து மூட்டம் போட்டு ஆட்டம் காட்டியுள்ளன.

மனோத்தத்துவப்போக்கு

முற்போக்கு உச்சநிலையில் இருந்த காலத்திலேயே உருதுக் கதையில் உள்ளப் பாங்கை விண்டு வைக்கும் முறைதோன்றி ஆழ வேரும் விட்டுவிட்டது. நாளடைவில் இந்த மன ஆராய்ச்சிப் போக்கு தீவிரமுற்று இரகசியவாதத்துடன் கலந்து புதியதொரு புதுமைப் போக்கையும் படைத்துக் கொண்டது. இந்தப் புதுமை ஓரளவு முற்போக்கு மிகத் தீவிரமுற்றதன் விளைவே. இந்த நாட்களில் இளம் உருது எழுத்தாளர்களிடையே மேற்கூறிய போக்கும் இயக்கமும் ஆக்கப்பூர்வமான சாதனைகளுக்கு அடிகோலியிருப்பதைக் காண்கிறோம்.

உருதுக் கதைகளில் மனத்தத்துவப் பாகுபாடும் ஒருமைப்பாடும் ஓர் எல்லைக்கு முற்போக்கு உச்சகட்டத்தில் இருந்த காலத்திலேயே புதுமை நாட்டம் காண முற்பட்டு விட்டது. புகழ்பெற்ற பல முற்போக்கு எழுத்தாளர்கள் மனித மனத்தின் சுக துக்க உணர்வுகளையும் ஆசாபாசங்களையும் அற்புதமான முறையில் ஆழம், அகலம், பரப்பு, கோணம் என்று பல வகையிலும் சிறப்புற எடுத்துக்காட்டத் தொடங்கிவிட்டனர். ராஜேந்திரசிங் பேடி, ஸாதத்ஹஸன் மாண்டோ, கிருஷ்ண சந்தர், இஸ்மத் சுக்தாயீ, மும்தாஜ், முத்ஃபீ போன்றவர்களின் பலகதைகள் மனத்தத்துவ அடிப்படையில் அபூர்வச் சாதனை புரிந்து சிறப்புப் பெற்றுள்ளனர் என்பதை இங்கு இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடுவது சாலப் பொருந்தும். உள்ளக்கிடக்கை ஆராய்ச்சியில் அதிகக் கவனம் செலுத்தி அதற்கு ஒரு தூண்டுகோலாக அமைந்தவர்கள் ஹஜன் அஸ்கரீ, மோஹ்ஸீன் அஜீமாபாதீ இருவரும் ஆவர்.

ராஜேந்திரசிங் மனத்தத்துவம் பற்றிய ஆராய்ச்சியில் அபார அறிவாற்றல் உள்ளவர். தமது இவ்வாற்றலை அவர் கலைநயத்தோடு பயன்படுத்தி வெற்றி காண்கிறார். அவருடைய ஒரு சில கதைகள் தொய்ந்து தளர்வு கண்டுள்ளன என்பது உண்மையே. மோஹ்ஸின் அஜீமாபாதீயின் கலைச் செழுமையை அவருடைய மனத்தத்துவம் அழுத்திவிட்டுப் பெரும்பாலும் மேலோங்கி நிற்கிறது. ஆனால் மண்டோ, மும்தாஜ் முத்ஃபீ, கிருஷ்ணசந்தர், இஸ்மத் சுக்தாயீ ஆகியவர்கள் மிகக் குறைவாகவே இந்த பலவீனத்துக்கு இரையாகிறார்கள்.

மண்ணின் மாண்பையும் இயற்கையின் இயல்பான மனத்தையும் நன்கு உணர்ந்து பாத்திரப் படைப்பு, சம்பவக் கோப்பு, சூழ்நிலைச் சிருஷ்டி ஆகியவற்றில் தம் அறிவைக் கலைநயத்தோடு பயன்படுத்தினால்தான் எந்த ஒரு சிறந்த கலை எழுத்தாளனும் வெற்றி காணமுடியும் என்பது தெளிவு.

*

துணைநூற் பட்டியல்

1. அக்தர் ஔரேவி (தொ), **உர்தூக்கதைகள்**, தமிழாக்கம்: ரா.வீழிநாதன், நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா, புதுடில்லி, 1987.

2. தர்மராஜன், நா. & **எஸ்.வேலாயுதம், மக்தூம், கிஷன் சந்தர், ராகுல்ஜி,** அன்னம் வெளியீடு, சிவகங்கை, 1986.

3. Ali Jawad Zaidi, **A histrov of Urudu Litrerature** sahitya Academi, New Delhi, `1993.

4. Sahitya Academi, **Urudu writing Today, Indian Literature,** Nov. - Dec. 1995, No. 190.

*

21

தெலுங்கு இலக்கியம்: ஒரு பொது அறிவு நோக்கு

இந்திக்கு அடுத்தாற்போல் அதிகமான மக்கள் பேசுகின்ற மொழி தெலுங்காகும். இம்மொழி திராவிட மொழிக்குடும்பத்தில் நடுத்திராவிடப் பிரிவைச் சேர்ந்ததாகும். தெலுங்கு மொழியின் வரலாற்றை 1. பிராகிருத செல்வாக்குக் காலம் (கி.பி. 1100 வரை) 2. வடமொழி செல்வாக்குக் காலம் (கி.பி.1100 முதல் 1900 வரை) 3. ஐரோப்பிய மொழி (ஆங்கில மொழி) செல்வாக்குக் காலம் என்று மூன்று முக்கிய காலகட்டங்களில் விளக்குவார்கள். ஆயிரம் ஆண்டு வரலாற்றைக் கொண்ட தெலுங்கு இலக்கியத்தை சி.ஆர்.சர்மா ஒன்பது கால கட்டங்களாகப் பிரித்து விளக்கியுள்ளார்.

1. பழங்காலம்

1.1. தெலுங்கு நாட்டின் முதல் அரசர்கள் ஆந்திர சாதவாகனர். அவர்கள் கையாண்ட பிராகிருத மொழியில் காதாஸப்தசதி, என்னும் எண்ணூறு செய்யுட்களைக் கொண்ட தொகுப்புநூல் காணப்படுகிறது. இக்காலகட்டத்தில் வாய்மொழியில் தெலுங்கு இலக்கியங்கள் உருவாகி இருந்திருக்கவேண்டும்.

1.2 நன்னய்யா, திக்கனா, எர்ரனா ஆகிய மூவரும் வடமொழியிலிருந்து மகாபாரதத்தை மொழி பெயர்த்தார்கள். புதிய சில செய்திகள் இதில் காணப்படுவதால் இதனைத் தழுவல் என்றும் கூறுவார்கள். இந்திய மொழிகளில் இயற்றப்பட்ட முழுமையான மகாபாரதங்களில் தெலுங்கு பாரதம் முதலாவது இடத்தைப் பெறுகிறது.

1.3. கன்னடம், வடமொழி ஆகியவற்றில் புலமை பெற்ற சைவக்கவிஞர் பால்குருகி சோமநாதர் பசவபுராணம், பண்டிதாராத்திய சரித்திரம் என்னும் நூல்களை இயற்றியுள்ளார். மேலும் அறுபத்து மூன்று நாயன்மார்களைப் பற்றித் தெலுங்கு மக்களுக்குத் தெரியப்படுத்தியவரும் இவரே. குமாரசம்பவத்தைப் பன்னிரண்டு படலங்களில் சுவைபட எழுதியவர். தெலுங்குச் சோழ மரபைச்சார்ந்த நன்னிசோடர்.

2. இடைக்காலம்

2.1 பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்ரீநாதர், போதன்னா ஆகிய இருவரும் குறிப்பிடத்தக்கவர்கள். ஸ்ரீநாதரின் சிருங்காரநைடதம். பல்நாடி வீரசரித்திரம் ஆகிய காப்பியங்கள் நினைக்கத் தக்கவை. இறுதிநூல் பலநாடு எனப்படும் இன்றைய குண்டூர் மாவட்டத்தில் வாழ்ந்த வீரர்களின் வரலாற்றைச் சித்திரிக்கின்றது. போதன்னாவின் மகாபாகவதம் அரிய படைப்பாகும்.

2.2 கன்னடத்தைத் தாய்மொழியாகக் கொண்ட வடமொழியில் புலமை பெற்ற ஸ்ரீகிருஷ்ண தேவராயர் ஆண்டாளின் வரலாற்றை ஆமுக்தமால்யதா என்னும் காவியமாக இயற்றியுள்ளார். தமிழிலும், தெலுங்கிலும் ஆண்டாளைப் பற்றி எழுந்த முதல் காப்பியம் இதுதான். கிருஷ்ணதேவராயரின் காலத்தில் அஷ்டதிக்கஜங்கள் என்றழைக்கப்படும் எட்டுப்பெரும் கவிஞர்கள் வாழ்ந்தனர். இவர்களுள் அல்லசாணிப் பெத்தண்ணா, முக்குதிம்மன்னா ஆகியோர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். பிங்கலி சூரன்னா என்பவர், அச்சு தெலுகுவில் முதல் முதலாகக் காவியம் படைத்தவர். விகடகவியான தெனாலிராமகிருஷ்ணர், இக்காலகட்டத்தைச் சேர்ந்தவர். இவர் இயற்றிய பாண்டுரெங்கமகாத்மியம். தெலுங்குப் பெருங்காப்பியங்களுள் ஒன்றாகும்.

2.3. தெலுங்கு இலக்கியத்தில் நூற்றுக்கணக்கான சதகங்கள் இயற்றப்பட்டுள்ளன. பக்தி, சிருங்காரம், நீதி, வேதாந்தம் என்னும் பொருளில் சதகங்கள் இயற்றப்பட்டுள்ளன. பெத்தன்னா என்பவரின் சுமதி சதகம் குறிப்பிடத்தக்கது. இதனைத் தமிழில் எழுமூர் சமரபுரி முதலியார் மொழிபெயர்த்து (1903) வெளியிட்டுள்ளார்.

2.4. தெலுங்குகவிஞர்கள் ஆதரவைப் பெற்ற மற்றொரு தமிழ் - நூல் திருவிளையாடற்புராணம். இந்தப் புராணத்தை மொழிபெயர்க்காவிட்டாலும், அதில் கூறப்பட்டுள்ள சொக்கநாதரின் அறுபத்து நான்கு லீலைகளைத் தெலுங்குக் கவிஞர்கள் விரிவுபடுத்தி எழுதியுள்ளார்கள். 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து பிச்ச கப்பூரப்பு திருவேங்கடகவி என்பவர் சொக்கநாதர் சரித்திரம், என்ற நூலை இயற்றியுள்ளார்.

2.5. வேமன்னா மனிதாபிமானம் கொண்ட மக்கள் கவிஞர். அவரது பெயர் தெரியாத தெலுங்குக்குடிமகன் இல்லை. இவரது பாடல்கள் இந்திய வெளிநாட்டு மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. 1892-ஆம் ஆண்டிலேயே வேமனாவின் செய்யுட்களின் தமிழாக்கம் ஒன்று வெளி வந்துள்ளது. சி.பி.பிரவுன் (1789-1884) ஆங்கிலத்தில் வேமன்னாவின் செய்யுட்களை மொழிபெயர்த்துள்ளார்.

2.6. விஜயநகரப் பேரரசு வீழ்ச்சியுற்ற பிறகு (கி.பி 16-17 நூ.ஆ) தென்னகத்தில் உற்ற மதுரை, தஞ்சாவூர், புதுக்கோட்டை, மைசூர் போன்ற பல இடங்களில் உள்ள அரசர்கள் தெலுங்கு இலக்கியத்தை வளர்த்தனர். இவற்றைத் தென்னகத் தெலுங்கு இலக்கியம் என்றும் அழைக்கின்றார்கள். இங்கு இக் காலகட்டத்தில்தான் தெலுங்கில் உரைநடை நூல்கள் எழுதப்பட்டன. விசுவநாத நாயக்கரின் அலுவலர் ஒருவர் ராயவாசகம் என்னும் உரைநடை நூலினை எழுதினார். பல யக்ஷகான நூல்களும், காமச்சுவை மிக்க காப்பியங்களும் எழுதப்பட்டன. இசை பிரம்மமான தியாகராயரின் கீர்த்தனைகள் குறிப்பிடத்தக்கவை.

3. தற்காலம்

3.1. கந்துகூரி வீரேசலிங்கம் இலக்கியத்திற்கு பல்வேறு வகையிலும் புதிய விழிப்புணர்ச்சினையும், புதிய ஒளியையும் பாய்ச்சியவர். இவரது ராஜசேகர சரித்திரம் தெலுங்கில் முதல் நாவலாகக் கருதப்படுகிறது. தெலுங்கு வார மாத இதழ்களும் நாவல் போட்டிகளை நிகழ்த்துகின்றன. கோபிசந்த், குடும்பராவ், புச்சிபாபு, மாலதிசந்தூர், இராமலட்சுமி, சீதாதேவி போன்ற நாவல் ஆசிரியர்கள் சிறப்புமிக்க நாவல்களைப் படைத்துள்ளார்கள்.

3.2. இக்காலத் தெலுங்கு இலக்கியத்தில் மரபுக்கவிதை, புதுக்கவிதை, நாடகம், சிறுகதை, நாவல், இலக்கியத்திறனாய்வு, தன்வரலாறு, பயணக் கட்டுரை, வாழ்க்கை வரலாறு, கடிதஇலக்கியம் எனப்பல உள்ளன. மரபுக் கவிதைக்கு எதிராக பாவ கவுலு, என்னும் புனைவியல் கவிஞர்களும் தோன்றினர். இவ்வகையில் குரஜாடா, ராயப்புரோலு சுப்பாராவ், தேவுலபல்லி கிருஷ்ண சாஸ்திரி, விசுவநாத சத்யநாராயணா ஆகியோர் சிறந்து விளங்கியவர்கள். இவர்களுக்கு எதிராக ஸ்ரீஸ்ரீ போன்ற முற்போக்கு கவிஞர்களும் புரட்சிக்கவிஞர்களும் தெலுங்குக் கவிதை இலக்கியத்தை வளப்படுத்தியிருக்கிறார்கள்.

3.3. தெலுங்கில் முழுநீள நாடகங்களும், ஓரங்க நாடகங்களும் நன்கு வளர்ச்சி பெற்றுள்ளன. தர்மவரம் ராமகிருஷ்ணமாச்சார்யலு என்பவரைத் தெலுங்கு நாடகத்தின் தந்தை என்று கூறுவர். இவர் 28 முழுநீள நாடகங்களை எழுதியுள்ளார். டி.வி.ராசமன்னார் எழுதிய தப்பெவரிதி (1929) (குற்றம் யாருடையது) என்னும் நாடகத்தைத் தற்கால நாடகத்திற்கு வழிகாட்டியாகக் கூறுவார்கள். சிவசங்கர சாஸ்திரி, நாடக எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்கவர். ராசமன்னார், வி.ஆர்.நார்லா, ஆசாரிய ஆத்ரேயா ஆகியோர் சிறப்புமிக்க ஓரங்கநாடகங்களை வெளியிட்டுள்ளார்கள்.

3.4 குரஜாடாவைத் தெலுங்குச்சிறுகதைகளின் தந்தை என்று அழைப்பார்கள். சமூகப்பிரச்சனைகளை மையமாகக் கொண்டு குரஜாடா எழுதினார். பேதராசி பெத்தமா கதலு (ஏழைப்பாட்டியின் கதைகள் ஆகியவை

நினைக்கத்தக்கவை. சலம், கோவிந்த். புச்சிபாபு, குடும்பராவ் விசுவநாத சாஸ்திரி போன்றவர்கள் அருமையான கதைகள் அளித்துள்ளனர். பாலகும்மி பத்மராஜின் காலிவானா (புயல்) என்ற கதை சர்வதேச சிறுகதைப் போட்டியில் (1951) இரண்டாம் பரிசைப் பெற்றது. இவரது கதைகள் தமிழில் டி.எஸ்.கிரிபிரகாஷால் மொழிபெயர்க்கப்பட்டு சாகித்திய அகாதெமி வெளியீடாக வந்துள்ளன.

*

துணைநூற் பட்டியல்

1. கிரிபிரகாஷ், டி.எஸ். & பா.ஆனந்தகுமார், *தெலுங்கு இலக்கிய வரலாறு* பார்த்திபன் பதிப்பகம், மதுரை, 1987.
2. குருஸ்வாமி, டி.ஆர்., *தமிழ் வளர்த்த தெலுங்கர்*, ராஜேஸ்வரி புத்தகநிலையம், சென்னை-14, 1999.
3. சேதுபாண்டியன், தூ. & எஸ்.ஜெயபிரகாஷ், *தெலுங்கு இலக்கியம்: ஓர் அறிமுகம்*, அரசு பதிப்பகம், மதுரை-12, 1988.
4. சர்மா, சி.ஆர்., *தெலுங்கு இலக்கியம் ஒரு கண்ணோட்டம்*, பாரிநிலையம் சென்னை-108, 1987.
5. சர்மா. சி.ஆர்., தெலுங்கு இலக்கிய விருந்து, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை-5, 1991.
6. இளம்பாரதி (மொ.பெ), *கௌசல்யா*, (சத்யநாராயணமூர்த்தி) அகரம், சிவகங்கை, 1977.
7. தர்மாரெட்டி, என்., திருவள்ளுவர், *வேமனர்: ஓர் ஒப்பாய்வு*, திருவேங்கடவன் பல்கலைக்கழகம், திருப்பதி, 1994.
8. துரைராஜ்,பூ.அ., *தெலுங்குச் சிறுகதைகள்*, பூங்கொடி பதிப்பகம், சென்னை-4, 1999.
9. பலிவாடா காந்தாராவ், *ஏமாற்றப்பட்ட தம்பி* (தமிழில்:பா.சுப்பிரமணியன்) நேஷனல் புக் டிரஸ்ட் இந்தியா, புதுடில்லி, 1996.
10. மாணிக்கம், தா.சா., *தமிழும் தெலுங்கும்*, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை-113, 1994.
11. முத்துகிருஷ்ணா, எஸ். தொ., தெலுங்கு ஓரங்க நாடகங்கள், சாகித்திய அகாதெமி, புதுடில்லி, 1985.
12. ஜகந்நாத ராஜா, மு.கு., (மொ.பெ) *காதா சப்தசதி* (பா எழுநூறு) விசுவசாந்தி பதிப்பகம், இராஜபாளையம், 1981.
13. ஜகந்நாத ராஜா, மு.கு., சேரி (*உன்னவலட்சமி நாராயணா*) சாகித்திய அகாதெமி, புதுடில்லி, 1985.
14. ஸ்ரீ.ஸ்ரீ., *நீண்டபயணம்* (கவிதை), நியூசெஞ்சுரி புத்தக நிறுவனம், சென்னை-98, 1992.
15. கிருஷ்ணதேவராயர், *ஆமுக்த மால்யத* (சூடிக்கொடுத்தவள்), தமிழில்: பத்மாஸனி அம்மாள், (ஆங்கிலத்தில்: பிரேமாநந்தகுமார்) திருவரங்கம் பதிப்பகம், இராசிபுரம்-1994.

*

22

பஞ்சாபியில் தலித் இலக்கியம்

முன்னுரை

பீஹார், உத்திரப்பிரதேசம் அல்லது மஹாராஷ்டிரம் போன்ற மாநிலங்களைப் போலல்லாமல் பஞ்சாபி சமுதாயத்தில் சாதிப் பிரிவுகள் மிகக் குறைந்த அளவிலேயே உள்ளன. இடைக்காலத்தில் தோன்றிய வட இந்திய பக்தி இயக்கங்களும் குறிப்பாக சீக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பஞ்சாபி மக்களின் மனப்பாங்கினைச் செம்மைப்படுத்துவதில் முற்போக்கான பங்கினை வகிக்கிறது. ஷைக்ஃபரித், புல்லேஷா போன்ற சூஃபிக்களும் தற்காலத்தில் தோன்றிய 'சிங்சபா' 'ஆரிய சமாஜ்' போன்ற சமூக சீர்திருத்த இயக்கங்களும் எல்லா மக்களையும் ஒருவருக்கொருவர் மரியாதையோடு நடத்துவதற்குத் துணைபுரிந்தன. மேலும் கடார்க் (Ghadar) கட்சி, பப்பர் கேலி இயக்கம், பகத்சிங் இயக்கம் போன்ற இருபதாம் நூற்றாண்டு இயக்கங்களும் சாதிப் பிரிவினையற்ற சமுதாயத்தை உருவாக்குவதில் உதவி செய்துள்ளன.

1. பின்னணி

1.1 இத்தகைய இடைக்கால, தற்கால முற்போக்கான சமூக இயக்கங்கள் இருந்தாலும், 1947இல் ஒரு பக்கம் இந்துக்களும் சீக்கியர்களும் இன்னொரு பக்கம் முஸ்லீம்களும் மோதிக்கொண்ட சாதிப்பூசலை மறக்க முடியாது. குரு கிரந்த சாகிப்பும் சூஃபிசமும் கற்பித்த மனிதநேயத்தை மறந்து சாதிப்பூசலில் ஈடுபட்டார்கள். மற்ற மாநிலங்களை ஒப்பிடும் போது பஞ்சாபியில் அவ்வளவு வலுவாக இல்லாவிட்டாலும், கிராமப்புறங்களில் சாதிப்பிரிவுகளும் வகுப்புவாதங்களும் முற்றிலும் மறையாமல் சமூக யதார்த்தமாகவே விளங்குகின்றது. குரு சாகிப்பின் போதனைகள் இருந்தாலும் பல்வேறு சாதியைச் சேர்ந்த பஞ்சாபியர்கள் தங்களுக்கான தனித்தனி குருத்துவாராக்களை, அதாவது கோவில்களைக் கட்டிக் கொண்டனர். ஏழைகள் தங்களுடைய ஜீவனத்திற்காக செல்வந்தர்களைச் சார்ந்திருக்கும் நிலை தொடர்ந்தது. இத்தகைய சாதிப்பிரிவு நிலை தலித் இலக்கியத்தின் தோற்றத்திற்குக் காரணமாக அமைகின்றது.

1.2. ஆதிகிரந்தம் எனப்படும் குரு கிரந்த சாகிப், 17ஆம் நூற்றாண்டைச் சார்ந்த குரு அர்ஜுன்தேவ் என்னும் ஐந்தாவது குருவால் பதிப்பிக்கப்பட்டது. இதில் அனைத்து சாதிகளைச் சேர்ந்தவர்களின் போதனைகள் பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. கபீர், இரவிதாஸ், நாம்தேவ்ஜெயின், பீபா, தன்னா, ஃபரித் ஆகியோரின் பக்திப்பாடல்கள் ஆதிகிரந்தத்தில் இடம் பெற்றுள்ளன. எல்லா சீக்கிய குருக்களும் பக்தர்களும் சாதிப்பிரிவினைக்கு எதிராக இருந்தனர். அதாவது அவர்கள் எல்லா வகையான ஒடுக்குதலுக்கும் எதிராகக் குரல் கொடுத்தனர்.

2. **சிறுகதை**

2.1. இக்கால பஞ்சாபி சிறுகதை இலக்கியத்தில் முன்னோடிகளில் ஒருவரான பிரின்சிபால் சூஜன்சிங் சிறுகதையில் தலித் குரலை வெளிப்படுத்தியவர். இவருடைய பெரும்பாலான சிறுகதைகள் தாழ்த்தப்பட்ட ஏழை மக்களின் துயரங்களைச் சித்தரிக்கின்றன. இருந்தாலும் சூஜன் சிங் தன்னை ஒரு தலித் எழுத்தாளராக அடையாளப்படுத்திக் கொள்ளவில்லை. பஞ்சாபியில் முற்போக்கு இலக்கியங்கள் தோன்றிய பின்பு தலித் மக்களின் பொருளாதார மற்றும் சமூக நிலைகள் இலக்கியத்தில் சிறப்பான இடம் பெற்றுள்ளன.

2.2. சூஜன்சிங் தடம்பதித்த வழியில் சந்தோஷ் சிங் தீர், குர் தயாள் சிங் ஆகியோர் தலித் சிறுகதை இலக்கியத்தை மேலும் வளர்த்தார்கள். நக்சலைட் இயக்கமும் இவ்வகை இலக்கியப் போக்கிற்குத் துணை செய்தது. அத்தர் ஜீத் என்பதின் 'பத்நூஜமர்' என்ற கதை தலித் மக்களின் துயரங்களை மையப்படுத்துகின்றது. பிரேம் கார்க்கியின் 'அர்ஜுன் சஃபதி வாலா' மற்றும் பூராசிங்லேரின் 'துத்த பத்தீ' ஆகியவை தலித் மக்களின் சமூக எதார்த்தத்தைச் சித்திரிக்கின்றன. எண்பதுகளின் இறுதியிலும் தொண்ணூறுகளின் தொடக்கத்திலும் தலித் போக்கு இலக்கியத்தில் ஒரு மெய்ம்மையாக (reality) இடம்பெற்றது. பக்வந்த் ரசுல்புரி, தேஸ்ராஸ்காளி, ஜிந்தர் போன்ற இளைய தலைமுறையைச் சேர்ந்த சிறுகதை எழுத்தாளர்கள் தங்களைத் தலித் இயக்கத்தோடு அடையாளப்படுத்திக் கொண்டனர்.

3. **நாவல்**

3.1. நாவலைப் பொருத்த வரையில் நானக் சிங், ஜஸ்வந்த் சிங் கன்வால், கர்த்தர் சிங் டக்கல், சரிந்தர் சிங் நருலா, தலித் வாழ்க்கையின் துயரங்களைச் சித்திரித்தாலும் கூட, உண்மையான தலித் கதாநாயகன் 'மர்னஹிதாதினவா' (marnahi da dinava) நாவலில் வரும் ஜக்சீர் என்பவனாவான். இந்த நாவலை குர்தயாள் சிங் அறுபதுகளின் இறுதியில் வெளியிட்டுள்ளார். இந்நாவல் பஞ்சாபி நாவல்களில் புதிய தடமிட்ட படைப்பாகும். குர்தயாள்சிங் எழுதிய பல நாவல்களும் இந்த வகையைச்

சேர்ந்தவை. இவரது 'அன்ஹோா, ஹர்ஸா' ஆகிய நாவல்களில் முந்தைய மரபையே பின்பற்றி இருப்பதைக் காணலாம்.

3.2. தலித் வாழ்க்கையை அனுதாபத்துடன் சித்திரிப்பதில் வெற்றிகண்ட மற்றொரு நாவலாசிரியர் சோஹன் சிங் சித்தல் என்பவராவார். 'துதன் வாலா கூக், ஜீக் பதல் கயா' ஆகிய நாவல்களில் தலித் வாழ்க்கையைப் பிரதிபலித்து எழுதிய மற்றொரு நாவலாசிரியர் குரு சரண் சிங்ராவ். இவர் பல நாவல்கள் எழுதிய போதிலும் 'மஷல்ச்சி' என்பது மிகச்சிறந்த படைப்பு ஆகும். இந்நாவல் தலித் மக்களின் வாழ்க்கையைக் கிராமியப் பின்னணியில் விளக்குகிறது. விமர்சகர்களிடமிருந்து பாராட்டைப் பெறுவதற்கு முன்பே ராவ், அகால மரணம் அடைந்து விட்டார்.

3.3. ஜஸ்வந்த் விர்த்தியின் நாவல் 'நிஹ்சசல் நஹி ச்சீத்' என்பது தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த விஸ்வகர்மா என்னும் தெய்வத்தை வணங்கும் மக்களின் வாழ்க்கையைச் சித்திரிக்கிறது. நிண்டர்கில் என்பவரின் 'தஸ்த்தன் தி' நாவல் பஞ்சாப் தலித் மக்களின் சமூக அரசியல் வாழ்வை விரிவாக விளக்குவதாகும். ஆனால் இந்நாவல் கலையம்சம் குறைந்த பத்திரிக்கை அறிக்கைத் தன்மையை அடைந்து விடுகிறது. சமீபகாலத்தில் வந்த நாவல்களில் 'பக்கிதா சச்' என்ற நாவல் தலித் வாழ்க்கையோடு தொடர்புடையது. இதுபோன்ற படைப்புக்கள் சில வந்து கொண்டு இருக்கின்றன. 1994 இல் வெளிவந்த பிரேம் கார்க்கியின் 'கய்ர் ஹசீர் ஆத்மி' (The optioned person) என்னும் நூல் பஞ்சாபியில் வந்த முதல் தலித் சுயசரிதை நூலாகும். இதில் தலித் வாழ்வை அற்புத நவிற்சியுடன் நாடக வடிவத்தில் கலைத்திறனுடன் எழுதியுள்ளார். மராத்தி, ஹிந்தி, கன்னடம் போன்ற மொழிகளிலும் தலித் சுயசரிதைகள் வெளிவந்துள்ளன.

4. கவிதை

பஞ்சாபிக் கவிதையில் தலித் இலக்கியப் போக்கு வலுவான முத்திரையைப் பதித்துள்ளது. பெரும்பாலான கவிஞர்கள் தலித் பின்னணியைச் சார்ந்தவர்கள். சமீபகாலத்தில் லால்தில்சிங் என்னும் தலித் கவிஞர் ஒரு முதன்மையான கவிஞராக எடுத்துக்காட்டப்படுகிறார். எழுபதுகளின் தொடக்கத்தில் தோன்றிய புரட்சி எழுத்தாளர்களாகிய பாஷ், வரியம் சந்து, சுர்ஜித் பதர், அஜ்மீர் ஔலக் ஆகியோரைப் போல இவரும் புரட்சி எழுத்தாளர் குடும்பத்தைச் சேர்ந்தவர். உண்மையான தலித் கவிஞர் என்றால் அது குர்தாஸ் ராம் ஆலம் என்பவரையே சாரும். இவர் தன்னுடைய எல்லாக் கவிதைத்தொகுப்புக்களிலும் தலித் மக்களின் வாழ்க்கையை மையப்படுத்தியுள்ளார். மன்சித் கடார், சந்த்ராம் உதாசி, ஹுர்மித்கலா மன்சீர், மதன் வீரா, தரம் கர்மியனா ஆகியோர் தலித் இலக்கியப் போக்கை பஞ்சாபிக் கவிதையில் நிறுவியவர்கள் ஆவர்.

5. நாடகம்

முழு நாடகத்திலும் ஓரங்க நாடகத்திலும் ஹர் சதண்சிங் தலித் கதைமாந்தர்களைச் சித்திரித்துள்ளார். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு 'நத்தசலூ' பால்வந்த் கார்க்கி தமது நாடகங்களில் (லோயாஹூத், கெஸ்ரோ மற்றும் கணக்தீ கல்வி) தலித் மாந்தர்களின் உண்மையான ஆசைகளை விளக்கியுள்ளார். இக்காலத்தில் புகழ் பெற்று விளங்கும் சி.டி.சித்து, அஜ்மீர் ஒளலக் ஆகியோர் தங்களுடைய நாடகங்களில் தலித் மக்களின் துயரங்களைப் பிரதிபலித்துள்ளனர்.

6. தொகுப்புரை

பஞ்சாபியில் தலித் இலக்கியத்தைப் பற்றிய விமர்சனம் மிகமிகக் குறைவாகவே உள்ளது. குர்பஜன், திறனாய்வாளர்களால் ஒதுக்கப்பட்ட தலித் எழுத்தாளர்களைப் பற்றி தம் நூலில் குறிப்பிடுகின்றார். பிரேம் பிரகாஷ் 1995இல் வெளியிட்டுள்ள 'லகிர்' பத்திரிக்கையில் ஜாதி பற்றி ஒரு கட்டுரையை வெளியிட்டார். ஆனால் இந்தப்பத்திரிக்கையில் ஓர் இடத்தில் கூட 'தலித்' எனும் சொல் ஆளப்படவில்லை. அக்கட்டுரை தலித் இலக்கியப் போக்கைக் காட்டிலும் பஞ்சாபி எழுத்தாளர்களின் சாதிப்பிரிவை விளக்குகிறது. 'தலித் சாஹித் சபா' பஞ்சாபி மொழிக்காக ஏற்படுத்தப்பட்டது. இது 1994இல் 'பக்வாரா' என்னுமிடத்தில் முதல் தலித் இலக்கிய மாநாட்டை நடத்தியது. இதில் பஞ்சாபி தலித் இலக்கியம் பற்றிச் சில குறிப்புகள் காணப்படுகின்றன. 1995இல் குருக்ஷேத்ரா பல்கலைக் கழகத்தில் நடந்த இந்திய இலக்கியத்தில் தலித் மற்றும் பெண்ணியப் போக்குகள் பற்றி மூன்று நாள் தேசியக் கருத்தரங்கம் நடந்தது. ஆனால் பஞ்சாபி தலித் இலக்கியப் போக்கு பற்றி கட்டுரை வாசிக்கப்படவில்லை. ஆகவே பஞ்சாபி இலக்கியத்தில் தலித் போக்கு கருநிலையிலேயே உள்ளது என்று கூறலாம்.

*

துணைநூற் பட்டியல்

தமிழ்

1. அம்ருதா பிரிதம், **பாடகி** (நாவல்), தமிழாக்கம் ஆர்.ஷண்முக சுந்தரம், இந்திரா பதிப்பகம், 198 ட்வுன்ஷிப், திருச்சி-14, 1992.

2. அம்ருதா பிரிதம், **ராதையுமில்லை ருக்மணியுமில்லை** (நாவல்), தமிழாக்கம்: சரஸ்வதி ராம்நாத், நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா, புதுடில்லி-16, 1995.

3. கபூர் சிங், சர்தார், ***குருநானக் வாழ்வும் தத்துவமும்***, தமிழாக்கம்: ந.முத்து மோகன், குருகோபிந்த் சிங் கல்வி வட்டம், தமிழ்நாடு கிளை, 250, தம்புச்செட்டித்தெரு, சென்னை-1, 1995.

4. தலீப் கௌர் டிவானா, ***இது தான் நம் வாழ்க்கை***, தமிழாக்கம்: தி.சா.ராஜு, நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா, புதுடில்லி, 1992.

5. முத்துமோகன், ந., (பதி.ஆ), ***சீக்கியமும் தமிழும்***, குருநானக் ஆய்வக மாணவர் வெளியீடு, மதுரை-21, 1997.

6. ஜக்ஜித்சிங், சர்தார், ***சீக்கிய சமய இயக்கம்-வரலாறும் கருத்தியலும்***, தமிழாக்கம்: ந.முத்துமோகன் & ந.ம.வீ.இரவி, சீக்கிய ஆய்வு நிறுவனம் சண்டிகர், 1995.

7. ஜோஷி, பி.சி. (தொ.ஆ) ***பால்ராஸ் சஹானி***, தமிழில்: நெல்லை எஸ்.வேலாயுதம்/ அன்னம் வெளியீடு, சிவகங்கை, 1992.
ஹர்பஜன் சிங் (தொ.ஆ)., பஞ்சாபிக் கதைகள், நேஷனல் புக் டிரஸ்ட் இந்தியா, புதுடில்லி, 1973.

ஆங்கிலம்

8. Amrita pritam, **The Skeleton and That man** (two novel), Sterling publishers private ltd., New Delhi-16, 1987.

9. Ahulwalia, **Punjabi Literature in Perspective** (A marxist approach) Kalyani publishers, 1/1, Rajinder Nagar, Ludhiana, 1976.

10. Duggal, K.S., **Literary Encounters**, Karwah Publications, Delhi, 1964.

11. Harbansans singh, **Punjabi writing today**, Navyug publication, Delhi, 1964.

12. Kohli, Mohenderpal, **The influence of the west on Punjabi Literature**, Lyall Book Depot, Ludhiana, 1969.

13. Mohan singh, **A history of Punjabi literature**, Kasturi lal sons, Amritsar, 1956.

14. Uppal surinder singh, **Punjabi Short stories**, Pushpa Prakasan, New Delhi, 1970.

*

23

இந்திய மொழிகளில் குழந்தை இலக்கியம்

இலக்கியம் இன்று பலவகையாக பாகுபாடு செய்யப்படுகின்றது. செய்யுள், வடிவம், தொடை உத்தி, வட்டாரம், இனம், பாலினம், பாடல்களின் எண்ணிக்கை, கருத்து ஆகிய காரணிகளின் அடிப்படையில் பாகுபாடு செய்வதைப் போல இலக்கியத்தைக் கற்போரின்/நுகர்வோரின் அடிப்படையில்-வயது அடிப்படையில் குழந்தை இலக்கியம் அல்லது சிறுவர் இலக்கியம் என வகைப்படுத்தப்படுகின்றது. இது 3 வயது முதல் 14 வயதுக்குட்பட்ட குழந்தை/சிறுவர்கள் படிக்கும் இலக்கியம் என்று ஒருவாறு வரையறை செய்து கொள்ளலாம்.

தோற்றம்

தொல்காப்பியம் 'குழவி மருங்கினும் கிழவதாகும்' என்று கூறுவதிலிருந்து பாட்டுடைத் தலைவனின் குழந்தைப் பருவத்தைப் பாராட்டு முகத்தான் அவனின் சிறப்புக்களை எடுத்துரைக்கும் பிள்ளைத் தமிழ் இலக்கியம் தோன்றிற்று. மழலைச் செல்வங்களின் மாண்புகளைத் திருக்குறளும் அவர்களின் நடத்தை இயல்புகளை 'குறுகுறுநடந்து சிறுகை நீட்டி' என்னும் புறநானூற்றுப் பாடலும் எடுத்துரைக்கின்றன. தாய் சேய் உறவுகளைச் சங்கப்பாடல்கள் பல்வேறு பருவங்களின் அடிப்படையில் சுட்டிக்காட்டுகின்றன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு பல்லவர், சோழர், நாயக்கர் ஆட்சிக் காலங்களில் பிள்ளைத் தமிழ்நூல் பெருகின. இக்கால கட்டங்களில் இங்கொன்றும் அங்கொன்றுமாக எளிய நடையில்-சிறிய வடிவத்தில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, நீதி நெறிச்சாரம் போன்ற நீதி நூல்கள் தோன்றின. இவைகளே பிற்காலத்தில் குழந்தைகள் கற்க வேண்டிய நூல்களாகக் கருதப்பட்டு இன்றும் தமிழ்ப் பாடத்திட்டத்தில் அதிகச் செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. ஆனால், ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் - இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் - குழந்தைகளின் உளவியல் - மொழியறிவிற்குப் பொருத்தமான குழந்தைப் பாடல்களும் கதைகளும் எழுதப்பட்டன. இவற்றின் வளர்ச்சியை ஆராய்வது காலத்தின் தேவையாகும்.

பாடல்கள்

இந்திய மொழிகள் அனைத்தும் நாட்டுப்புறப் பாடல்களின் வளத்தைக் கொண்டவை. பள்ளிக்கூடங்களும் பாடநூல்களும் எழத் தொடங்கிய காலத்தில் குழந்தைகளுக்கு முன்பே பரிச்சயமான நாட்டுப்புறப் பாடல்களும் அவற்றின் சந்தங்களும் நேரடியாகவே பயன்படுத்தப்பட்டன. பின்பு அந்தந்த மொழிக்குரிய பேச்சொலி நயத்தில் பாடல்கள் இயற்றப்பட்டன. இந்தியில் பிரித்வந்தி மேஹோத்ரா, சார்தா கபூரியா, பகத்சிங், நிரன்கர்சேவ் சேவக் ஆகியோரின் செவிக்கினிய பாடல்கள் குறிப்பிடத்தக்கவை. மலையாளத்தில் ஏவூர் பரமேஸ்வரன், சிபி பள்ளிபுரம், குஞ்ஞுண்ணி, பி.சங்கரநாராயணன் ஆகியோரும்-தமிழில் பாரதியார், பாரதிதாசன், அழ.வள்ளியப்பா, கவிமணி, தூரன், அழகனார் ஆகியோரும் - வங்காளியில் தாகூர், மோஹித்கோக்ஷ், மஞ்சுசேன், ஷிப்ரா ஆகியோரும், மராத்தியில் நிர்மலா தேஷ் பாண்டே, விந்தா கராந்திகர் ஆகியோரும் - ஓரிசாவில் பண்டித உபேந்தராலதிரிபாதி, வித்யுத் பிரபாதேவி, ராம் பிரசாத், மொஹந்தி ஆகியோரும் தம் மொழிகளில் குழந்தைகளுக்கான பாடல்களை இயற்றி குழந்தை இலக்கியத்தை வளப்படுத்தி உள்ளார்கள்.

கதைகள்

வாய்மொழிப் பாடல்களைப் போல வாய்மொழிக் கதைகளும் இந்திய இலக்கியக் கருவூலத்தில் அரிய செல்வமாகக் காலந்தோறும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவற்றுள் அச்சு வடிவம் பெற்று குழந்தைகள் படிப்பதற்குரிய நூல்களாயின. பஞ்சதந்திரம், கதாசாகரம், ஹிதோபதேசம், புத்த ஜாதக் கதைகள் ஆகியவைகளும் எளிய நடையில் படங்களுடன் புத்துருவம் பெற்றன. ஈசாப் கதைகளும் பீர்பால் முல்லா, மரியாதைராமன், தெனாலிராமன், வேதாளம், விக்ரமாதித்தன் கதைகளும் வண்ணப்படங்களுடன் வரையறுத்த சொல்லாட்சியுடன் மறுபடைப்புச் செய்யப்பட்டன. இராமாயணம், மகாபாரதம், பாகவதம் ஆகியவற்றிலிருந்து முக்கிய கதைமாந்தர்களின் (இராமன், ஹனுமன், அர்ஜுனன், கண்ணன்) வீரச்செயல்கள், முக்கியமான ஞானிகள் (குருநானக், கபீர்) அருளிச்செயல்கள் ஆகியவற்றைக் குழந்தைகள் நூல் டிரஸ்ட்டும் (அறக்கட்டளையும்) தேசியநூல் டிரஸ்ட்டும் வெளியிட்டன. அந்தந்த மாநிலங்களில் புகழ்பெற்ற வீரர்களும் தலைவர்களும் வாழ்க்கை வரலாற்று நூல்களில் இடம் பெற்றனர். கேரளத்தில் வேலுதம்பி, வலியதச்சன், கொச்சுண்ணி-தமிழகத்தில் கட்டபொம்மன், வாஞ்சிநாதன்-கர்நாடகத்தில் ஐதர் அலி, திப்புசுல்தான், ராணிசென்னம்மா-மகாராட்டிரத்தில் சிவாஜி, வாசுதேவபட்கே, சாவர்கர், சபேகர், திவகர், அம்பேத்கர் - பஞ்சாபியில் பகத்சிங், மகாராஜா ரஞ்சித்சிங் - வங்காளியில் சூர்யாசென், பிரீதிலதா வட்டதர் - இந்தியில் ஜான்சிராணி, நானாசாஹிப் ஆகியோரின் வரலாறுகளும் கதைகளாக எழுதப்பட்டன. ஏ.கே.கோஷ் பண்டைய வரலாற்றை நாவல்களாக ஆக்கியுள்ளார்.

இன்றைய வாழ்க்கை முறைகளை அடியொட்டி கதைகளும் நாவல்களும் குழந்தைகளுக்காக எழுதப்படுகின்றன. மராத்தியில் துர்கா பக்வத், சைபரஞ்பே, மாலதி தண்டேகர் ஆகியோரும் - தெலுங்கில் யதுகூரிவேங்கட நரசய்யா, அடவிபாபிராஜு, ஈடிதகாமேஸ்வரராவ், குஜுபாய் ஆகியோரும், குஜராத்தியில் உமாஷங்கர் ஜோஷி, சுரேஷ் தலால், பிரக்ஜி தோஸ்ஸா, உஷா மல்ஜி ஆகியோரும் தம் மொழிகளில் வீரசாகசக் கதைகளை எழுதிப் புகழ் பெற்றுள்ளனர். அருப்குமார் தத்தா, திருமதி. சிலிமாசிங்கம் ஆகியோர் இத்தகைய கதைகளை எழுதி விருதுகள் பெற்றுள்ளனர். தமிழில் கல்வி கோபாலகிருஷ்ணன், வாண்டுமாமா, மலையமான் ஆகியோரின் கதைகள் குறிப்பிடத்தக்கவை.

படக்கதைகள்

ஒரு படம் ஆயிரம் வார்த்தைகளுக்குச் சமம். அழகான தாளில் வண்ண வேறுபாடுகளுடன் குறைந்த சொற்களில் தயாரிக்கப்படும் மழலையர்/ குழந்தைகளுக்கான படக்கதைகள் குழந்தைகளுக்கு அதிகக் கவர்ச்சியூட்டுபவை. மேனாட்டுத் தாக்கத்தினால் இத்தகு படக்கதைகள் இந்திய மொழிகளிலும் அச்சாகி வருகின்றன. ஆனால், இந்திய மொழிப் படக்கதைகள் உலகத்தரத்தை எட்டவில்லை. அதிகச் சொற்களோடு, குறைந்த படங்களோடு, மட்டமான தாள்களில் தயாரிக்கப்படும் இந்நூல்கள் உள்ளங் கவரத்தக்கவையாக இல்லை. திரு.ஷங்கர், திருமதி.பிரதிபாநாத், திருமதி.மனோரமா ஜஃபா, திருமதி சிக்ருன் ஸ்ரீவஸ்தவா, ஜகதீஷ் ஜோஷி போன்றோர் இப்படக்கதைகள் தயாரிப்பதில் சிறந்து விளங்குகின்றனர். அபித்சுர்தி, சுபிர்ராய், பி.ஜி.வர்மாஹெப்பர் ஆகியோர் விளக்கப் படக்கதை நூல்களைத் தயாரித்து இந்தத் துறையைச் செழுமைப்படுத்தியுள்ளனர். ‘அமர்சித்ர கதா’ இவ்வகையில் அகில இந்திய அளவில் புகழ் பெற்ற ‘காமிக்ஸ்’ ஆகும். பெ.நா.அப்புசாமியின் சித்திரக் கதைப் பாடல்கள் குறிப்பிடத்தக்கவை.

கட்டுரை நூல்கள்

வரலாறு, அறிவியல், தொழில்நுட்பம், மருத்துவம் தொடர்பாகக் கட்டுரை நூல்கள் குழந்தைகளுக்காக எழுதப்பட்டு வருகின்றன. குழந்தைகளின் பொதுஅறிவை வளர்க்க குழந்தைக் கலைக்களஞ்சியங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. பெ.தூரன் தலைமையில் குழந்தைகள் கலைக்களஞ்சியங்கள் தயாரிக்கப்பட்டன. மலையாளம், வங்காளி மொழிகளில் நகைச்சுவை படைப்புகள் வெளியாகின்றன.

மொழிக்கல்வியும் குழந்தை இலக்கியமும்

ஆரம்பப்பள்ளியில் குழந்தை இலக்கியம் அல்லது செய்யுட்பகுதியில் ஆர்வத்தைக் கிளர்க்கும் வகையிலும் மொழித்திறன்களை வளர்ப்பதற்குத்

துணையாக நிற்கும் வகையிலும் இருக்க வேண்டும். தமிழில் ஆரம்பப் பள்ளியின் செய்யுள் பகுதியிலும் அறிவுரைச் செய்யுட்களின் ஆதிக்கம் அதிகமாகவே உள்ளது. மற்றும் அவை இடைக்காலச் செய்யுட்கள். ஒன்றாம் வகுப்புக்கு ஔவையாரின் ஆத்திசூடிக்குப் பதிலாகப் பாரதியார்/பாரதிதாசன்/வாணிதாசன் எழுதிய புதிய ஆத்திசூடியை வைத்தால் மாணவர்கள் தற்காலத் தமிழிலே ஒழுக்கங்களை உணர்ந்து கொள்வார்கள்.

இது போலவே தற்காலக் கவிஞர்களின் தரமான கவிதைகளைப் பொறுக்கித் தரவேண்டும். இடைக்காலச் செய்யுட்களை மனப்பாடப் பகுதியாக வைப்பது-பொருள் புரியாமல் ஒப்பிக்கச் செய்வது மொழித் திறனைக் கூட்டுவதில் எந்த அளவிற்குப் பயன்படும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். மேலும், இலக்கியம் என்பது செய்யுள் (கவிதை) மட்டுமல்ல. சிறுவர்களுக்கு கதை, ஓரங்க நாடகம் போன்ற இலக்கிய வடிவங்களைக் குழந்தை இலக்கியத்தை நிறைய படிக்கும் வகையில் பாடத்திட்டம் வழி வகை செய்ய வேண்டும். எவ்வளவுக்குத் தற்காலத் தமிழ் நூற்களை வாசிக்கின்றார்களோ அவ்வளவுக்கு மொழித் திறன்கள் பெறுவர் என்பதில் ஐயமில்லை.

குழந்தை இலக்கியத் திறனாய்வு வளர்ச்சி

இந்திய விடுதலைக்குப்பின் குழந்தை இலக்கியங்களைப் பற்றிய திறனாய்வுக் கட்டுரைகள் இங்கொன்றும் அங்கொன்றுமாக வெளிவந்தன. குழந்தை எழுத்தாளர் சங்கம் 1976-இல் வெளியிட்ட 'குழந்தை இலக்கியம்-ஒரு மதிப்பீடு' என்னும் நூல் குழந்தை இலக்கியத் திறனாய்வுக்கு அடித்தளமிட்ட நூல் என்று கூறலாம். இதைத் தொடர்ந்து பூவண்ணனின் 'குழந்தைக் கவிஞர்கள்' (2000) 'குழந்தை இலக்கிய வரலாறு' (1999) ஆகிய நூற்கள் குழந்தை இலக்கியம் படைத்த எழுத்தாளர்களை ஒருமுகமாகத் தொகுத்துத் தருகின்ற சாதனை மிக்க ஆராய்ச்சி நூல்களாகும்.

உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட எண்பதில் தமிழ், எண்பத்திரண்டில் தமிழ் ஆகிய நூல்களில் உள்ள கட்டுரைகள் எண்பதுகளின் தொடக்கத்தில் தமிழில் படைக்கப்பட்ட குழந்தை இலக்கிய நூல்களை அளவாய்வு (Survey) செய்து விளக்குகின்றன. சாகித்திய அகடமி (1997), இந்திய அரசின் ஒலிபரப்புத்துறை (1982), மாக்மில்லன்-கேரள சாகித்ய அகடமி (1985), இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் (1976) ஆகிய நிறுவனங்கள் வெளியிட்ட ஆங்கிலக் கட்டுரைகளின் தொகுப்பு நூல்கள் அகில இந்திய அளவில் குழந்தை இலக்கிய வளர்ச்சியை அறியவும் ஆராயவும் வழிகாட்டுகின்றன. கிருஷ்ணசாமியின் 'தமிழில் குழந்தைப் பாடல்கள்' என்ற நூலும், இரா.பாலசுப்பிரமணியனின் 'குழந்தை இலக்கியத்தில் நாவல்' என்ற கட்டுரையும் (1995:106-122) குழந்தை இலக்கியத் திறனாய்வு வளர்ச்சியில் குறிப்பிடத்தக்கவை. காந்திகிராம் கிராமியப் பல்கலைக் கழகத்தின் பாரதியார்

ஆய்வகம் வெளியிட்டுள்ள பாரதியும் குழந்தை இலக்கியமும் என்னும் கருத்தரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு நூல் (ஏப்ரல்-2002) குழந்தை இலக்கியத் திறனாய்வு வளர்ச்சியில் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பாகும்.

மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ள கட்டுரைகளையும் நூல்களையும் தவிர தமிழிலும் பிற இந்திய மொழிகளிலும் குழந்தை இலக்கியத் திறனாய்வு மந்த நிலையில் சவலைப்பிள்ளையாக உள்ளது.

*

துணைநூற் பட்டியல்

1. அ. பிச்சை, & பா. ஆனந்தகுமார் (பதி), **பாரதியும் குழந்தை இலக்கியமும்**, பாரதியார் ஆய்வகம், கிராமியப்பல்கலைக்கழகம், காந்திகிராமம், 2002.

2. பூவண்ணன், **குழந்தை இலக்கிய வரலாறு**, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1999.

3. Jamuna K.A., (eds), **'Childrens Literature in Indian Languages**, Publication Division, Govt. of India, Delhi, 1982.

4. Pattanayak, D.P., **Trends in Juvenile literature in India**, CIIL, Mysore-6, 1976.

*

24

இந்திய இலக்கியத்தில் பெண்ணியம்

முன்னுரை

19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமெரிக்கா, பிரெஞ்சு, இங்கிலாந்து நாடுகளில் தோன்றி வளர்ந்த பெண்ணியம் என்னும் இயக்கம் 1950-க்குள் உலகெங்கும் ஆல்போல் படர்ந்து அருகுபோல் வியாபித்துள்ளது. உலகநாடுகளின் தற்காலப் படைப்புக்களில் செல்வாக்கு செலுத்தி வருகின்றது. பெண்களின் முன்னேற்றம், பெண்களின் பிரச்னைகள் ஆகியவற்றைப் பற்றி எழுத்தாளர்களின் இந்திய விடுதலைக்கு முன்னும் பின்னும் எழுதினாலும் கூட பெண்ணிய விழிப்புணர்வோடும் புலனுணர்வோடும் (woman consciousness and feminine sensivity) எழுதுகின்ற போக்கு இந்திய மொழிகளில் எண்பதுகளில் தான் தோன்றி வளர்ந்து வருகின்றது.

1. அசாமி

1.1 கவிஞர்கள்

நளினிபாலா தேவி : கௌஹாட்டியின் கல்வி, கலை இலக்கியப் பாரம்பரியம் கொண்ட குடும்பத்தில் 1898-இல் பிறந்தார். இவரது தந்தை, நபிசந்திர பர்டோலோய் (1876-1936) ஒரு சுதந்திரப் போராட்ட வீரர். இவருக்கு வங்காளி, சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகியவற்றில் மொழித் திறனுண்டு. இளமையிலேயிருந்து கவிதைகளைப் புனையத் தொடங்கினார். பருவ இதழ்களில் அவற்றை வெளியிட்டார். இவரது கவிதைகள் பல தொகுதிகளாக வெளிவந்துள்ளன. குழந்தைகளுக்கான வாழ்க்கை வரலாறுகளையும் எழுதியுள்ளார். சாகித்ய அகடமியின் பரிசுபெற்ற 'அலகாநந்தா' என்பது 199 பாடல்களைக் கொண்டது. அழகை ஆராதனை செய்யும் ஆன்மீகப் பாடல்களின் தொகுதி, தேசியமும் தெய்வீகமும் கமழுகின்ற கவிதைத் தொகுதி. இதில் தாகூரின் தாக்கம் காணப்படுகின்றது. தந்தையைப் பற்றி ஒரு வாழ்க்கை வரலாற்று நூல் எழுதியுள்ளார். 1957-இல் பத்மஸ்ரீ பட்டத்தையும் பெற்றுள்ளார்.

நிர்மல்பிரபா: 1933-இல் சிப்சாகர் ஊரில் பிறந்த இவர் கவிஞர் மற்றும் திரைப்பாடலாசிரியர். 25-க்கு மேற்பட்ட நூல்களைப் படைத்துள்ளார். இவற்றுள் 6 கவிதைத் தொகுதிகள், அஸ்ஸாமிய நாட்டுப்புறப் பண்பாடு பற்றிய நூலும் அடங்கும். கல்வி, கலாச்சார, இலக்கியக் கழகங்களில் உறுப்பினராகச் செயல்பட்டுள்ளார். சாகித்ய அகடமியின் பரிசை கவிதைக்காக (1983) பெற்றுள்ளார். குழந்தை இலக்கியத்திற்காகத் தேசிய விருது பெற்றுள்ளார்.

1.2 *புனைகதை ஆசிரியர்கள்*

சினேகா தேவி: 1916ல் ஜோர்கத் என்னும் ஊரில் பிறந்தார். இவர் ஐந்தாம் வகுப்பு வரை தான் முறையான கல்வி கற்றார். முப்பதுகளில் சிறுகதை எழுதத் தொடங்கி இந்திய விடுதலைக்குப் பின்னும் தொடர்ந்து எழுதினார். ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும் இவர் வாழ்க்கைப் பிரச்சனைகளைக் கலைவடிவம் கொடுப்பதில் வல்லவர். ஜனனி (தாய்) என்னும் கதை முதுமைத் தாய் திருமணம் ஆன மகனின் குடும்பத்தில் எவ்வாறு ஒரு வேலைக்காரி போல நடத்தப்படுகிறாள் என்பதை விவரிக்கின்றது. இறுதியில் மகன் தாய்மையின் சிறப்பை உணர்கிறான். 1986ல் வெளிவந்த 'ஸ்சினேகதேவிர் ஏகுன்கி கல்ப' என்னும் சிறுகதைத் தொகுதி சாகித்ய அகடமி (1990) பரிசு பெற்றது.

நிருபமா பர்கோஹய்ன் : அசாமி மொழியின் சிறந்த பெண் எழுத்தாளர். பல நாவல்கள் சிறுகதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். இந்தியிலும் பிற இந்திய மொழிகளிலும் இவரது படைப்புகள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இந்திய எழுத்தாளர்களில் சிறந்த படைப்பாளிக்கு வழங்கப்படும் கன்னட இலக்கியப் பரிசான 'திருமலாம்பா' இலக்கியப்பரிசு இதற்குக் கிடைத்துள்ளது. ஏஜன் புத்த மனுஹ் (1966) என்னும் நாவல் ஒரு முதியவரின் வாழ்க்கைப் பிரச்சினையை எடுத்துரைக்கின்றது. வீடுகட்ட பணம் சேர்த்த அவர் மனைவி வீடு கட்டுவதற்கு முன் இறந்துவிட்ட அவல நிலையைச் சித்தரிக்கின்றது.

மமனிரய்சம் (இந்திரா) கோஸ்வாமி : 1942-இல் கௌஹாட்டியில் பிறந்து, அங்குள்ள பல்கலைக்கழகத்தில் முதுநிலைப்பட்டம் அசாமிய இலக்கியத்தில் பெற்றார். 1973-இல் பமாதவி கண்டலி, துளசிதாசர் இராமாயணங்களை ஒப்பிட்டு 'ஒப்பிலக்கியத்தில்' முனைவர் பட்டம் பெற்றார். கணவரை இழந்து, தந்தையினால் தைரியமூட்டப்பட்ட இவர் படைப்பிலக்கியத்தில் கவனம் செலுத்தினார். நான்கிற்கு மேற்பட்ட நாவல்களையும் இரண்டுக்கு மேற்பட்ட சிறுகதைத் தொகுப்புகளையும் வெளியிட்டுள்ளார். இவரது நாவல் 'மமர தர தரோவல்' என்பது 1982-இல் சாகித்ய அகடமி பெற்றது. டில்லி பல்கலைக்கழகத்தின் இந்திய மொழிப்புலத்தில் பேராசிரியராகப் பணியாற்றினார் (1970 முதல்). இவரது நாவலும் சிறுகதைகளும் ஆங்கிலத்திலும் பிற மொழிகளிலும் மொழி

பெயர்க்கப்பட்டுள்ளன. பிரேம்சந்தின் சிறுகதைகளை அசாமியில் மொழி பெயர்த்தார். தனது இலக்கிய வாழ்வைத் தன் வரலாறாக எழுதியுள்ளார். இவர் தனது இலக்கியப் பணிக்காக 2000-ஆம் ஆண்டுக்கான ஞானப்பீடப் பரிசு பெற்றுள்ளார்.

மேலே சுட்டிக்காட்டப்பட்ட எழுத்தாளர்களைத் தவிர வேறு சில பெண் எழுத்தாளர்களும் அஸ்ஸாமியில் உள்ளனர். அனுபமா என்னும் கவிஞரும், உமாபரூவா, ஹிரண்ரண்மயீ போன்ற நாவலாசிரியர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். அசாமிய நாடக உலகில் பெண்களின் பங்கு இல்லை என்று கூறத்தக்க அளவில் உள்ளது. சௌஜள்ய மயீதேவி, பதிநீத்தாதேவி, பத்மாவதி தேவி, விஷ்ணுபிரியா தேவி போன்றவர்கள் குழந்தை இலக்கியத்திற்கு நாடகங்களையும், பாடல்களையும் கதைகளையும் எழுதி சிறந்த சேவையைச் செய்துள்ளார்கள்.

2. மராத்தி

டாக்டர் டி.வி.பட்வர்த்தன் மராத்தி இலக்கியத்தைப் பழங்கால இலக்கியம் (கி.பி.1000-1800), தற்கால இலக்கியம் (1800 முதல் இன்றுவரை) என்று இரு பிரிவாகப் பிரித்து விளக்குவர். பழங்கால இலக்கியத்தில் பெண்களின் பங்களிப்பு மிகமிகக் குறைவாகவே காணப்படுகிறது. விஜயநகர ஆட்சி ஏற்பட்ட பின்பு பதினான்காம் நூற்றாண்டில் சுயமரியாதைகளை வெளிப்படுத்தும் ஓர் இயக்கம் தோன்றியது. பெண்களும் இதில் கலந்து கொண்டு ஞானக்கவிதைகளைப் படைத்தனர். பஹினாபாய், முக்தாபாய், சக்கு ஆகிய மூன்று பேர்களும் ஞானிக்கவிகளில் குறிப்பிடத்தக்கவர்கள். இருபதாம் நூற்றாண்டில்தான் பல்வேறு இலக்கிய வகைகளைப் படைத்த பெண்கள் தோன்றினர்.

2.1 கவிதை

நவகாவியா காலகட்டத்தைச் சேர்ந்த இந்திரா சாந்த, பத்மா கோலெ, ஷந்தா ஷெல்கெ ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இந்திராவின் கவிதையில் நாட்டுப்புறப்பாடல் கவிதை மரபும், காதலும் இயற்கையும், பிரிவினால் ஏற்படும் துயரமும், அனுபூதித்தன்மையும் காணப்படுகின்றன. மெண்டி (Henna, 1967) மிர்கஜல (கானல்நீர் 1957) ஆகிய கவிதைகள் இந்திராவின் கவிதைத் தொகுப்புகளாகும். இவர் மர்தேகர் கவிதைகளினால் கவரப்பட்டு கவிதை புனைந்தவர். பத்மா கவிதையில் தன்னுணர்ச்சிப் பாங்கும் ஷாந்த ஷெல்கே கவிதையில் இசைமையும் சிறப்பாக அமைந்துள்ளன. இந்திய விடுதலைக்குப் பின் பிறந்த அனுராதா பாட்டில் (1953) மலிகா அமர்நேக் (பி.1953), நீரஜா (பி.1960) ஆகியோர் தம் கவிதைத் தொகுப்புக்கள் மூலம் பெண்ணிய உணர்வை வெளிப்படுத்தி வருகின்றனர்.

2.2 சிறுகதை

கமலாபாய்திலக், கிருஷ்ணபாய், மாலதிபாய் பேடேகர் என்றழைக்கப்படும் விதவரிஷிருகர் ஆகிய மூவரும் தனிமனிதனும் சமூக விழிப்புணர்வும் கொண்ட சிறுகதைகளைப் பெண்மை உணர்வுடன் எழுதினார்கள். விதவரி ஷிருகர் புரட்சி மனப்பான்மையுடன் எழுதினார். கல்யாண்சே நிவாஸ் (மொட்டின் பெருமூச்சுகள்) என்னும் இவரது நூல் சமநீதி கோரும் பெண்மைப் படைப்பாகும். சிறந்த தாக்கத்தை ஏற்படுத்திய நூலாகும். குசுமவதி தேஷ்பாண்டே (1904-61) தன்னுணர்வுக் கட்டுரை (Personal Essay) வடிவத்திலே கதை எழுதினார். கவாதாசே பாதே (புல்லின் விளிம்பு) என்னும் கதை அவரது கதையின் சிறப்பையும் குறையையும் எடுத்துக் காட்டுவதாகும். இவர் முப்பதுகளில் சோதனை செய்த சிறுகதை எழுத்தாளர்களுள் ஒருவர். விஜயராதி தியக்ஷா என்பவர் கணவர், மனைவியை உயிரற்ற மாமிசப் பண்டமாகக் காண்பதைத் தம் கதைகளின் வாயிலாகச் சாடுகின்றார். கௌரிதேஷ் பாண்டேயும் புதுமை உணர்வுடன் கதைகளை எழுதியுள்ளார். கமல்தேசாயின் படைப்புகள் நனவோடை உத்தியில் குறிப்புப் பொருளுடன் அமைவன. எடுத்துக் காட்டாக ரங்க் (நிறம். 1962) திலாபந்த (Close Seasame) ஆகிய கதைகளைக் குறிப்பிடலாம். இளைய தலைமுறையைச் சேர்ந்த நீரஜா என்பவரும் சிறுகதைகளை எழுதிவருகின்றார்.

2.3 நாவல்

இந்திய விடுதலைக்கு முன்னும் பின்னும் மராத்தியில் சில பெண் ஆசிரியர்களே நாவல் இலக்கியத்தைப் படைத்துள்ளார்கள். கீதாசானெ, விதவரிஷிருர்கர் ஆகிய இருவரும் குறிப்பிடத்தக்கவர்கள். விதவரி ஷிருக்தான் ஊஞ்சலின் மேல் (1934) சிதைந்த கனவுகள் (1935) ஆகியவை விழிப்புணர்ச்சி பெற்ற பெண்களின் துயரங்களைச் சித்திரிக்கின்றன. பலி என்ற நாவல் (1950) குற்றவாளிகளின், உலகத்தை அனுதாபத்தோடு அலசுகின்றது. ஜ்யோஸ்னா தேவ்தர் என்பவரும் நாவல்கள் மற்றும் சிறுகதைகளைப் படைத்த பிரபல எழுத்தாளர்.

2.4 உரைநடை

சாந்தாபாய் காம்ளே, மலிகா, அமர்ஷைக் ஆகியோரின் தன் வரலாறுகள் மராத்தி இலக்கியத்தில் சிறப்பிடத்தையும், சர்ச்சையையும ஏற்படுத்தி உள்ளதுமாகும். குசுமவதி தேஷ்பாண்டே கி.பி.1850 முதல் 1950 வரையிலான ஆங்கில ஆட்சியில் தோன்றி வளர்ந்த ஒரு நூற்றாண்டு மராத்தி நாவலின் சரித்திரத்தை எழுதி வெளியிட்டுள்ளார். துர்கா பகவத் (1971) கோதாவரி வருலேகர் ஆகியோர் தமது உரைநடையில் அமைந்த ஆராய்ச்சி நூற்களுக்காக சாகித்திய அகாடமியின் பரிசுகளைப் பெற்றுள்ளனர்.

2.5 குழந்தை இலக்கியம்

குழந்தை இலக்கியம் படைப்பதிலும் சில பெண் எழுத்தாளர்கள் சிறந்து விளங்குகின்றனர். குறிப்பாக, மாலதி தண்டேகரைச் சுட்டிக் காட்டலாம். தற்காலத்தில் குழந்தை இலக்கியம் படைக்கும் எழுத்தாளர்களுள் லீலாவதி பகவத் மற்றும் கிரிஜா கீர் ஆகியோர் பங்கு குறிப்பிடத்தக்கது. 1954-இல் குழந்தைகளுக்குப் பாட்டும் சிறுகதையும் எழுதும் எழுத்தாளராக இலக்கிய உலகில் பிரவேசித்தார் லீலாவதி பக்வத். இரண்டிலும் மாநில அரசின் விருதுகளைப் பெற்று தனது பெயரைக் குழந்தை இலக்கியத்தில் தக்க வைத்துக் கொண்டார். கிரிஜாகீரும் தனது கதைகளின் மூலம் குழந்தை இலக்கியத்திற்குச் சிறந்த பங்களிப்புச் செய்துள்ளார்.

தொகுப்புரை

இன்று பெண்களிடையே நல்ல எழுத்தறிவும் விழிப்புணர்ச்சியும் வளர்ந்து வருகின்றன. பள்ளிக் கல்வியிலும் கல்லூரிக் கல்வியிலும் பெண்களின் தேர்ச்சி விகிதம் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. தொலைக்காட்சி போன்ற ஊடகங்களில் வேலை பார்க்கும் பெண்களின் எண்ணிக்கை அதிகம். மத்திய மாநில அரசுகள் பெண்களின் மேம்பாட்டுக்கும் அதிகாரமூட்டலுக்கும் திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தி வருகின்றன. இலக்கியப் படைப்பாளர்களும் காலச்சூழ்நிலைக்கேற்ப சமத்துவத்தையும் விடுதலையையும் பறைசாற்றும் இலக்கியங்களைப் படைக்கின்றனர். பெண்களால் படைக்கப்பட்ட கவிதைகள், ஓரங்க நாடகங்கள், சிறுகதைகள், நாவல்கள், ஆகியவை தொகுப்பு நூல்களாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. இதெல்லாம் பெண்ணியத் தாக்கத்தினால் ஏற்பட்ட படைப்புக்களாகக் கருதப்படுகின்றன.

*

துணைநூற் பட்டியல்

தமிழ்

1. பிரிஞ்சிகுமார் பருவா, **அசாமிய இலக்கிய வரலாறு**, தமிழில்: ம.ரா.பொ.குருசாமி, சாகித்ய அகடமி, புதுடில்லி, 1972.

2. பகவதி, ஏ.கே., **மராத்தி சிறுகதைகள்**, (தமிழாக்கம், வி.ஆர், ராஜாராம்) சாகித்ய அகடமி, புதுடில்லி, 1979.

3. மகாதேவன், கதிர் & இரா.மோகன், **பெண்ணியம்**, தமிழியற்புலம் வெளியீடு, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1994.

4. வேங்கடராமன், சு., **எண்பதுகளில் தமிழ்ப்புனைக்கதைகளில் பெண்ணியம்**, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை-113, 1993.

English

5. Deshpande, Kusumavati, **A History of Marathi Literature**, Sahtiya Academi, New Delhi, 1988.

6. Pratobha Ray, **Yajna Seni** (The Story of Draupathi), Tr. Pradip
7. Bhallacharya, Rupa & co, New Delhi, 1997.

8. Savitri Rout, **Women Pioneers in Oriya Literature**, Motilal Banarsidas, Delhi, 1972.

9. Sahitya Academi, **Accent on Assamese Poetry**, Indian Literature, 197, Jan. Feb. 97, Vol. XL No. 1

10. Sahtiya Academi, **Indian Literature,** No. 112, 1986.

*

25

சிந்தி இலக்கியம் ஒரு கண்ணோட்டம்

முன்னுரை

ஏறக்குறைய பத்தாம் நூற்றாண்டிற்குப் பின் பல்வேறு பகுதிகளில் பேசப்பட்ட அபப்பிரம்சங்களிலிருந்து இன்று வழக்கில் உள்ள இந்தோ ஆரிய மொழிகள் பரிணமித்தன. குஜராத்தி, இந்தி, பஞ்சாபி, இராஜஸ்தானி, காஷ்மீரி, அசாமி, வங்காளி, ஓரியா, மராத்தி போன்ற மொழிகளுடன் சிந்தியும் தோன்றியது. மற்ற மொழிகள் வளர்ந்துள்ள அளவிற்கு இது அவ்வளவாக வளரவில்லை என்று தான் கூறவேண்டும். ஏனென்றால் இம்மொழியைப் பேணி வளர்க்க தனித்த மாநில அரசு இல்லை. சிந்தி என்பது மகாராட்டிரம், குஜராத், பஞ்சாப், பாகிஸ்தான் போன்ற சில வடமேற்கு பிராந்தியங்களில் பேசப்படுகின்றது. சிந்தி ஒரு மொழியாக தோன்றிய போது இந்துக்கள் சிறுபான்மையினராக இருந்ததால் பெரும்பாலும் இஸ்லாமியக் கவிஞர்கள், சிந்தி மொழியைப் பயன்படுத்தினர். அதனால் 15ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவில் பாய்ந்த பக்தி வெள்ளம் சிந்தி இலக்கியத்தில் நுழைந்து வளப்படுத்தவில்லை. ஆனால், இஸ்லாமிய, சூஃபிக் கருத்துக்கள் சிந்தி மொழியில் அழகிய பாடல்களாக இயற்றப்பட்டன. சிந்தி இலக்கியத்தின் வரலாற்றை நான்கு காலக்கட்டங்களாகப் பிரித்து விளக்கலாம்.

முதற்காலம் (கி.பி. 1000 - 1522)

இந்தக் காலகட்டத்தில் சிந்து நாட்டை கம்ரா, சமா என்ற இரு அரசபரம்பரைகள் ஆண்டு வந்தன. இவர்களின் காதல், வீரம், வெற்றி, கொடை என்னும் பாடுபொருட்களுடன் சமயக்கருத்துக்களும் விரவி புனையப்பட்டன. 'மூமல்ராணோ, உமர் மாருயீ, சுகணி மேகர்' முதலிய காதல் வார்த்தா இலக்கியங்கள் படைக்கப்பட்டன. பாரசீகத்திலிருந்து இந்திய வேதாந்தம் பயில வந்த பீர்சதர் அல்தீன் 'கிநான்' (ஞானம்) என்னும் உபதேசத்தை வழங்கினர். சமாக்களின் ஆட்சிக்காலத்தில் சையது அலிஸானி, காஜிகானன் ஆகிய இரு கவிஞர்கள் புகழ்பெற்றுத் திகழ்ந்தனர். இவர்களுடன் காஜிகானின் 'பைத்'

(ஈரடிப்பா) சூஃபிக் சமயக் கொள்கைகளைக் கருவாகக் கொண்டது. இவரது ஏழுபைத்கள் 'சப்தரிஷி', (ஏழு விண்மீகள்) எனப் புகழப்படுகின்றன.

இடைக்காலம் (1523 - 1842)

கி.பி. 1737 வரையில் அரகர், தரகர், முகலாயர் என்ற இனத்தவர்கள் சிந்து நாட்டை ஆட்சி புரிந்தனர். மக்களிடையே சிந்தி செல்வாக்குப் பெற்றிருந்தாலும் அரசு மொழியாகப் பாரசீக மொழி அதிகாரம் செய்தது. எனினும் ஷாகரீம், ஷாஇனாத், ஷாலதீஃப் என்ற முப்பெரும் கவிஞர்கள் பைத் இலக்கியங்களைப் படைத்து இந்தக்காலகட்டத்தைச் சிந்தி இலக்கியத்தின் பொற்காலமாக ஆக்கினார்கள். சிந்தி மொழியின் சாஸர் எனப்படும் ஷாகரீம் எழுதியுள்ள பைத்கள் 97 மட்டும் கிடைத்துள்ளன. இவரைப் பின்பற்றி ஷா இனாத் பைத், வாயீ, என்னும் பாக்களால் காதல் வார்த்தா இலக்கியங்களைச் சிந்தியில் படைத்துள்ளார். ஷா லத்தீஃப் கரீயின் கொள்ளுப்பேரன். இவர் அரபு, பாரசீகம், இந்தி ஆகிய மொழிகளில் பாக்களை இயற்றினார். இவரைப்போல 'தாதூதயால்' ஒரு பன்மொழிப் புலவர்.

1737-இல் கல்ஹோடே என்னும் சிந்து ஆளுநர் சிந்தினைத் தனிநாடாகப் பிரகடனம் செய்தார். 1783-இல் கல்ஹோட வம்சம் ஆட்சியில் நிலைபெற முடியவில்லை. பின்பு ஆப்கானிஸ்தானியர், ஆங்கிலேயர் கைக்கு மாறியது. பாரசீக பாவிலக்கண முறையில் பாக்கள் இயற்றப்பட்டன. இக்காலத்துக் கவிஞர்களில் சாபித் அலிஷா, சசல், ஹமல், ஷாகூ, குலாம் அலி, சாமி, தலபத் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். சாமியும் தலபத்தும் வேதாந்தக் கருத்துக்களைச் சிறப்பாகக் கையாண்டனர். சசல் சமூகப் புரட்சிக்கவிஞர். உண்மைப் பரம்பொருள் மீது இவர்கொண்ட பக்திக் காதல் உள்ளத்தை உருக்கும் கவிதைகளாகப் பிரவாகம் எடுத்தன. சைன்ராய், தளபத்ராய் ஆகிய இருவரும் சித்தர் பரம்பரையில் வந்த பக்திக் கவிஞர்கள்.

நவீன காலம் (கி.பி. 1843 - 1947)

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிந்தியில் உரைநடை இருந்துள்ளது. மகாபாரதம் முழுவதும் உரைநடையில் எழுதப்பட்டிருந்ததாகச் சொல்லப்படுகின்றது. ஆனால், அந்நியப் படையெடுப்புகளால் அவை எல்லாம் அழிந்து போய்விட்டனவாம். கி.பி. 1843-இல் ஆங்கிலேயர் சிந்து நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றினர். அரபி-பாரசீ லிபியிலே சிந்தியை (உருதுவைப் போல) எழுத ஊக்கம் தரப்பட்டது. மேனாட்டுக் கலை இலக்கியச் சிந்தனைகளும் அறிவியல் கருத்துக்களும் சிந்தி உரை நடையில் இடம் பெறலாயின. ஆரம்ப காலத்தில் கேப்டன் ஸ்டேக் துரையும் தேவநாகரி எழுத்திலே சிந்தி மொழி அகராதியையும் புதிய இலக்கணத்தையும் இயற்றினாலும் கூட அரபு - பாரசீக லிபியில் பாடப்புத்தகங்கள் எழுதப்பட்டன. சர் பார்ட்டல் ஃபேயர், ஏலிஸ்துரை,

கோல்ட் ஸ்மித் துரை ஆகிய மூவரும் சிந்தி உரைநடையின் வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டனர்.

கேவல்ராம் சலாமத்ராய் அழகிய கதைகளை 'சுக்டி' 'குல்கந்த்' என்னும் தலைப்புகளில் வெளியிட்டார். அவர் 'குல்ஷக்கர்' என்ற நூலில் சிந்திப் பழமொழிகளைத் தொகுத்தளித்துள்ளார். தயாராம் சிதூமல் சமய வேதாந்த சம்பந்தமான நூல்களை இயற்றினார். மிர்ஜா கலீச் பேக் கவிதை, உரைநடை ஆகிய இரண்டிலும் நூல்களைப் படைத்தார். சாகுந்தலம் முதலிய வடமொழி நூல்களைத் தழுவி நூல்களை வெளியிட்டார். இந்தக்காலத்தை மொழிபெயர்ப்பு யுகம் என்று கூறலாம்.

சிந்து நாட்டில் முதன் முதலில் சமூகப் புரட்சிக்கு அடிகோலியவர் கௌடோமல் சந்தன்மல். பெண் கல்வியை வலியுறுத்தி, பர்தா முறையைக் களைந்து பெண்கள் நவீனக் கல்வி பெறப்பாடுபட்டார். இவரைப் பின்பற்றி சாதுநாவல்ராய், சாதுஹிராசந்த் என்னும் இரு சகோதரர்கள் சமூகப்புரட்சியைப் பரப்பினர். சிந்து நாட்டில் பிரம்மசமாஜத்தின் கிளை தொடங்கப்பட்டது. இதன் மூலமாக வங்கதேசத்து ஆசிரியர்கள் இங்கு வந்து இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தரின் சமயக்கருத்துக்களையும், இந்திய விடுதலை சிந்தனைகளையும் பரப்பினர்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 'லால் சந்த்' அமர்டினோமல் என்பவர் புதிய சகாப்தத்தின் சங்கநாதமாக முழக்கம் செய்தார்.

'ஹிந்து ஜவா உது-உதீ பஹிஞ்ஜ' பாரி

(இந்தியத் தாயின் மக்களே எழுமின்! தன்னம்பிக்கையுடன் வீறு கொண்டெழுமின்) என்று அறைகூவல் விடுத்தார். 1905-இல் நிகழ்ந்த வங்கப் பிரிவினை, சிந்து நாட்டிலும் தேசீயக் கனவை வளர்ச்சியுறச் செய்தது. சிந்துவிலுள்ள ஹைதராபாத்தில் 'வந்தே மாதரம்-மண்டலி' தோன்றியது. 'மதா' என்னும் சிந்துப் பத்திரிக்கை வெளிவரத் தொடங்கியது. 1914-இல் சிந்தி இலக்கியக் கழகம் தோன்றி மாதந்தோறும் ஓர் இலக்கிய நூலை வெளியிட்டது. பழைய இலக்கியத்தை மீண்டும் அறிமுகப்படுத்தி அவற்றின் மீது பற்றினை வளர்க்கச் செயல்பட்டது. பேமேல் மேகர்சந்த் சிந்தி மொழியின் இலக்கிய வரலாற்றை எழுதினார். ஜேத்மல் பரஸ்ராம் 'ஹிந்த்வாசி' என்னும் இதழியன் மூலம் தேசீயத்தைப் பரப்பினார். பரமானந்த மேவாரம் எளிய நடையில் எழுதிய சிறந்த பத்திரிகையாளர்.

இந்திய விடுதலைக்குப்பின் (கி.பி. 1947)

சிந்திக் கவிஞர்களும் எழுத்தாளர்களும் விடுதலைப் போராட்டத்திற்குத் தொண்டு செய்துள்ளார். பாகிஸ்தான் பிரிவினையால் வடஇந்தியாவில் வகுப்புவாதம் தலைவிரித்தாடி வன்முறை-வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. சூஃபி சமயக் கொள்கையிலே பண்பாட்டு அன்புநெறியிலே திளைத்த சிந்தி

மக்கள் சொத்து சுகங்களை விட்டு பிற மாநிலங்களில் சென்று குடியேறினர். பரஸ்ராம் 'ஜியா' வின் கவிதைகளில் சிந்து அகதிகளின் 'கேம்ப்' வாழ்க்கை நகைச்சுவையுடன் சித்தரிக்கப்பட்டுள்ளது.

கவிதை

கடந்த 55 ஆண்டுகளில் நிறைய கவிதைகள் எழுதப்பட்டுள்ளன. நிறைய கவிஞர்கள் தோன்றியுள்ளனர். நூற்றுக்கணக்கான தொகுப்புக்கள் வெளிவந்துள்ளன. பல கவிதை வடிவங்களில் இயற்றப்பட்டுள்ளன. பகர் - வஜன், மந்திரிக் சந்த் என்ற வடிவங்களிலும், தேகா, சொர்தா,கீத், ரூபை, கதா, பைதா, கஃபி, வை, கண்ட்காவ்யா, நஜிம், தரைல், தன்கா, திஸ்டா, பஞ்சகரா, ஹைகு, தபோ, கஜல் போன்ற வடிவங்களிலும் புதுக்கவிதைகளும் வெளியிடப்பட்டுள்ளன. விடுதலைக்கு முன்பே பொதுவுடைமைக் கருத்துக்கள் சிந்திக் கவிதைகளில் புரட்சி எண்ணங்களை அஜிஜ், ஹுண்ட்ராஜ் துக்யஸ், ஹரி (மரபில்) கவிஞர்கள் ஆவார்கள். சுகன் அஹுஜா, அர்ஜன் ஷாத், பிரபு வஃமா, எம்.கமல், ராஹி, ஈஷ்வர் அர்சல், மோதி பிரகாஷ், இந்தேர் போஜ்வாணி, லக்ஸ்மன், கோமல், லக்ஸிமிசந்த் பிரேம், கோவர்தன் பாரதி, அர்ஜன் ஹசிட், ஹரிகந்த், அஷாதுர்காபுரி, ஹசராம், பியா, வாஸ்தேவ் நிர்மல் ஆகியோர் இளைய தலைமுறையைச் சேர்ந்த புதுக்கவிஞர்கள். புனைவியல் கவிஞர்களில் இரு பிரிவுகள் உண்டு. சுகன் அஹுஜா, அஜிஜ் போன்ற 'மனிதக்காதலின் புனைவியலை' (உடல்-ஆன்மா உறவு) பற்றி எழுதுபவர்கள், நாராயண் ஷியாம் போன்றவர்கள் இயற்கைப் புனைவியலை (மனித மனம் இயற்கையுடன் கொண்ட உறவை) பற்றிக் கவிதை புனைபவர்கள்.

எழுபதுகளுக்குப்பின் புதுக்கவிதையை எழுதத் தொடங்கினார்கள். இருத்தலியம், அபத்தவாதம், பின்நவீனத்துவம் போன்ற சித்தாந்தங்களின் அடிப்படையில் மரபுக் கவிதைகளுக்கு எதிராகப் போராட்டம் ஏற்பட்டது. பொருளிலும் வடிவத்திலும் பரிசோதனைகள் செய்யப்பட்டன. புதுக்கவிதையின் தாக்கம் சிந்தி கஜல் வடிவத்திலும் ஏற்பட்டது. கஜல் வடிவம் புதுப்பொலிவும் வலிவும் பெற்றது. எம்.கமல், அர்ஜுன் ஹசிட், கிரிஷன் ரஹி, வாசுதேவ் மோஹி மற்றும் பலர் கஜல் வடிவத்தில் புதுமையைப் புகுத்தினர். மூத்த தலைமுறையைச் சேர்ந்த சதிஷ் ரோஹ்ரா, நந்த் ஜவேரி, கிமன் மூலணி, தோலன் ரஹி, இந்திரா வஸ்வானி, லஸ்மன் துபய் ஆகியோரும் புத்துணர்வுடன் கவிதை எழுத முன் வந்தனர்.

சிறுகதை

விடுதலைக்குப் பின் சிந்திச்சிறுகதை இலக்கியத்தில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது. லால்புஷ்ப், மோகன் கல்பனா, புனோசம்தானி,

ஹரிஸ்வாஸ்வானி, ஈஸ்வர், சந்தேர், சியாம் ஜெய்சிங்கானி, விஷ்ணு பாத்தியா, ஆனந்த் கோமானி, ஹிரோ வெவ்கனி, தீர்த் சந்த்வாணி, பிரேம் பிராகாஷ் ஆகியோர் சிந்தி வாழ்வைப் படம் பிடித்துக் காட்டிய சிந்தி எழுத்தாளர்கள் எழுபதுகளுக்குப்பின் தேசிய, சர்வதேசிய சிந்தனைப்போராட்டங்களும், சிறுகதைகளைப் படைக்கும் மூன்றாம் தலைமுறை தோன்றியது. இருபது முப்பது ஆண்டுகளில் சிறந்த சிறுகதைகள் வெளியிடப்பட்டுள்ளன. பொபதி ஹிரநந்தனி, சுந்தரி உத்தம் சந்தனி, ஹரி ஹிம்தனி, தரமிர்சந்தனி லக்ஸ்மி கிலானி, கிஷன் கத்வாணி, சுந்தர், அக்னானி, இந்திரா வாஸ்வாணி, ஆனந்த் தஹில்ரமனி, ஈஷ்வர் பாரதி, ஹரி, தோத்வாணி, சதிஷ் ரோஹ்ரா,கம்லா கோக்லனி, லட்மண், பம்பாணி, ரித ஷஹாணி, மோதிலால் ஜோத்வாணி ஆகியோர் வெளிநாட்டுக் கருத்துக்களால் தாக்கமுறாத சிறுகதைப் படைப்பாளிகள்.

நாவல்

தாரா மிர்ச்சந்தானி எழுதிய 'கமாயல் கலி' (வாடிய மொட்டு) சிந்தியின் முதல் நாவலாகும். நாவல் இலக்கியத்தைப் பொருத்தவரையில் அது வாடிய மொட்டாக அமையாமல் மறுமலர்ச்சியின் மலராகப் பூக்கத் தொடங்கியது. முப்பதுக்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள் 125க்கு மேற்பட்ட நாவல்களைப் படைத்துள்ளார்கள். பாக் பிரிவினைக்குப் பிறகு எழுதியவர்களுள் கோவிந்த் மாலி குறிப்பிடத்தக்கவர். அசானந்த் மம்தோரா, ராம் பஞ்சவாணி, பொபதி ஹிரண்நந்தனி, கிரிஷன் கத்வாணி, சுந்தரி உத்தம் சந்தணி, கலா பிரகாஷ், மோதிலால் ஜோத்வாணி, ஹரி ஹிம்தணி, ஹரி மோத்வாணி ஆகியோர் நல்ல நாவல்களை வெளியிட்டுள்ளார்கள். மோதுரன் கல்பனா, ஆனந்த் கேமானி, லால் புஷ்ப், ஷியாம் ஜெயசிம்ஹாணி, பிரம் அபிசந்தனி ஆகியோர் புதிய உத்திகளில் இன்றைய சமுதாயத்தைச் சித்தரிக்கும் நாவல்களைப் படைத்து வருகின்றனர்.

நாடகம்

சிந்தியில் தரமான நாடகம் வரவில்லை என்று மோத்திலால் ஜோத்வானி குறிப்பிடுகின்றார். ராம் பஞ்ச்வான் பழைய இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு சில நாடகங்களை எழுதினார். அவை மேடையில் நடிப்பதற்குப் பொருத்தமாக அமையவில்லை. தீர்த் வசந்த் நாடகங்களில் அறிஞர் பெர்னாட்ஷாவின் தாக்கத்தைக் காணலாம். தாஸ் தலிப், ஜேடானந்த நாகராணி ஆகியோர் நகைச்சுவை மிகுந்த நாடகங்களை எழுதியுள்ளனர். எனவே, பாக் பிரிவினைக்குப் பின் நூற்றுக்கணக்கான ஓரங்க நாடகங்கள் பெரிதும் விரும்பப்படுகின்றன. மங்காராம் மல்கானி, ஹரிகாந்த், மோத்தி பிரகாஷ், வாசுதேவ் நிர்மல்

ஆகியோரின் ஓரங்க நாடகங்கள் தரம் மிகுந்தவை. வானொலி, தொலைக்காட்சி நாடகங்கள் பரப்பபப்படுகின்றன. பெருநகரங்களில் மட்டும் நாடகங்கள் நிகழ்த்தப்படுகின்றன.

முடிவுரை

இருபதாம் நூற்றாண்டில் மற்ற இந்திய மொழிகளை ஒப்பிடும் பொழுது சிந்தி இலக்கியம் பின்தங்கிய நிலையில் உள்ளது. இதற்கு ஒரு குறிப்பிட்ட மாநில அரசு புரவலராகச் செயல்படவில்லை. இது அரபி, தேவ நாகரி என்னும் இரண்டு எழுத்து வடிவத்தில் எழுதப்படுவது இதனின் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளது. இதனால் இளைய தலைமுறை சிந்தி மொழி கற்றலைப் புறக்கணித்து வருகின்றது. திறனாய்வும் வளராமல் பின்தங்கி உள்ளது. சில பல்கலைக் கழகங்களில் (மும்பை, டெல்லி) ஒரு டஜன்பேர் சிந்தி இலக்கியத்தில் ஆராய்ச்சி (பி.எச்.டி) செய்திருப்பார்கள். கட்டுரைகள், பயண நூல்கள், வாழ்க்கை வரலாறுகள் குறைந்த அளவிலே வெளியிடப்படுகின்றன. சிந்தி இலக்கியம் வாசகர்களை இழந்து கொண்டிருக்கிறது என்ற கவலை எழுத்தாளர்கள்/ திறனாய்வாளர்கள் மத்தியில் காணப்படுகின்றது. இருப்பினும், ஜீ(Zee) தொலைக்காட்சியிலும், இணைய தளத்திலும் ஓரிடத்தைச் சிந்தி மொழி பெற்றுள்ளது. அரசு மற்றும் தனியார் நிதி உதவியோடு முன்வந்தால்தான் சிந்தி மொழியும் இலக்கியமும் தனது இடத்தைத் தக்க வைத்துக் கொள்ளும். இல்லாவிட்டால் ஏழாயிரம் ஆண்டுகளாக சிந்துசமவெளி நாகரிகத்தின் எச்சமாக இருந்துவந்த சிந்தி மொழியை இழக்கச் செய்துவிட்டோம் என்ற எதிர்காலத் தலைமுறையினரின் குற்றச்சாட்டுக்கு ஆளாக நேரிடும்.

*

துணைநூற் பட்டியல்

1. அஜ்வானி, எல்.எச்., *ஸிந்தி இலக்கிய வரலாறு*, தமிழாக்கம்: இராம.கோபிநாதன் சாகித்திய அக்காதெமி, புதுடில்லி, 1983.

2. கிருஷ்ண கட்வானி, *நந்தினி* (நாவல்) தமிழாக்கம்:சரஸ்வதி ராமநாத் வானதி பதிப்பகம், சென்னை-1992.

3. போபடி ராமசந்த், ஹீரானந்தானி, *எனது நினைவலைகள்* (சுயசரிதம்) தமிழாக்கம்:லட்சுமிநாராயணன், சாகித்ய அக்காடெமி, புதுடெல்லி-1996.

4. Advani, K.B. **Abdul Latif Shah**, (Makers of Indian Literature) Sahitya Akademi, 1970

5. Hiranandani, Popati R. **Histroy of Sinthi Literature** (Post Independance) 1947 - 1978, Shree Sanjay Mudranalay (Printers) Bombay - 1985

6. Jotwani, Motilal, **Sindhi Literature & Society**, Rajesh Prakashan, New Delhi - 1979.

7. Prem Prakash, **Sindhi Literature of New Century**: Prospectus & Possibilities, Indian Literature: 195, PP : 141-156

8. Jhangiani, **Saratchandra's influencs on Sindhi Literature.** Indian Literature Volume XXIV (1981)-PP : 115-120

9. Param Abichandani **modern trends in Sindhi Literature,** Indian Literature; No.119, 1987, PP:125-135

10. Jetley, M.K., **Buddhist Themes in modern Sindhi Literature,** Institute of Asian studies, Madras, 1992, PP : 267 - 276

11. Daudpota U.M. **Survey of Sindi Literature** (Sind People & Prospects) Hydrabad, Sind, 1954

12. Jotwani, Mothilal, **shah Abdul Latif : His life & works,** University of Delhi, Delhi, 1975.

*

பின்னுரை

தமிழில் எழுபதுகளிலும் எண்பதுகளிலும் ஒப்பிலக்கியம் நன்கு வேரூன்றியுள்ளது. ஒப்பிலக்கிய ஆய்வு மேன்மேலும் ஆல்போல கிளைபரப்பி அருகுபோல பரவவேண்டும். இதற்கான சில கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இவற்றை நடைமுறைப் படுத்தினால் ஒப்பிலக்கியம் வளர்ந்து செழிக்கும் என்பது உறுதி.

1. ஒப்பிலக்கியத் திறனாய்வாளன் குறைந்தளவு இரு மொழித் திறன்களைப் பெற்றவனாக இருக்க வேண்டும். பன்மொழித் திறனுடையனாக இருந்து விட்டால், ஒப்பிலக்கியத்துறை செய்த நற்பேறு ஆகும். ஆனால், இந்தியாவின் மொழிக்கொள்கை என்ன? இந்திய அரசு ஒப்புக்காக மும்மொழிக் கொள்கை பேசுகின்றது. நடைமுறையில் வடஇந்தியாவில் அக்கொள்கை செயல்முறைப் படுத்தவில்லை. தமிழகத்தில் இரு மொழிக் கொள்கை, தமிழும் ஆங்கிலமும் பயிற்றுமொழியாக இருந்து வருகின்றன. இரு துறையினரும் மேலும் ஒப்பிலக்கிய ஆய்வை மேற்கொள்வதற்கு வாய்ப்புண்டு. மேலும், ஆங்கிலத்துறை அயன் மொழித்துறையாக மாற்றப்பட்டு ஜெர்மன், பிரெஞ்சு, ஸ்பானிஷ், ரஷியன், சீனம், ஜப்பானிஸ் போன்ற மொழிகளைக் கற்பிக்கும் துறைகளோடு விளங்க வேண்டும். அதுபோல தமிழியல் துறையில் பிற இந்திய மொழிகளையும், இலக்கியங்களையும் கற்க வாய்ப்பினை ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக, வடஇந்திய இலக்கியங்களைக் கற்க வாய்ப்பினைப் பெருக்க வேண்டும்.

2. இரு மொழித்திறன்கள் / பன்மொழித்திறன்கள் பெற்றோர் பிற நாட்டு நல்லறிஞர் இலக்கியங்களை மொழிபெயர்க்க வேண்டும். சாகித்ய அகாடமி. நேஷனல் புக்டிரஸ்ட் போன்ற இந்திய அரசுநிறுவனங்களும், அல்லயன்ஸ் கம்பெனி, ஸ்டார் பிரசுரம், க்ரியா, அன்னம், அலைகள், விழுதுகள், தாமரைச் செல்வி பதிப்பகம் போன்ற சில தனியார் நிறுவனங்களும், மொழிபெயர்ப்பு, இலக்கியங்களை வெளியிடுகின்றன. மொழிபெயர்ப்பு நாவல்கள், நாடகங்கள், சிறுகதைகள் குறிப்பிடத்தக்க அளவில் வந்துள்ளன. இவற்றை ஆய்வு மாணவர்கள் ஒப்பீட்டாய்வுக்கு எடுத்துக் கொண்டால்தான் சிலருக்காவது மேலும் மொழிபெயர்ப்புச் செய்யவேண்டும் என்ற எழுச்சி ஏற்படும்.

3. ஒப்பிலக்கியம் கற்பிப்பதற்கு முதற்படியாக / அடித்தளமாக ஒரு மொழிக்குள் தொடர்புடைய இரு நூல்களை / ஆசிரியர்களை ஒப்பிட்டு அவர்களது தனித்திறன்களைக் காணும் பயிற்சியை இளங்கலைத் தமிழ் மாணவர்களுக்கு அளிக்கவேண்டும். இலக்கிய

மதிப்பீடு ஒப்பீட்டு முறையில் - சில குறிப்பிட்ட பாரபட்சமற்ற கூறுகளின் அடிப்படையில் - காய்தல் உவத்தல் இன்றி செய்து இலக்கியங்களைத் தரங்காணல் வேண்டும். தமிழ் முதுகலை வகுப்பு மாணவர்களுக்கு இரண்டு மொழிகளைச் சார்ந்த இரண்டு படைப்புகளை / ஆசிரியர்களை / இயக்கங்களை / வடிவங்களை ஒப்பிடுவதற்குப் பயிற்சி தரல் வேண்டும். இளநிலை / முதுநிலை ஆராய்ச்சி மாணவர்களுக்குப் பட்டயப்படிப்பு (Diploma) வரை இன்னொரு மொழியைக் கற்க வாய்ப்பளித்து ஒப்பிலக்கிய ஆய்வு நிகழ்த்த வேண்டும். குறிப்பாக, தற்கால இலக்கிய வடிவங்களைப்படித்து ஒப்பிடுவதற்கு வேண்டிய மொழிப் பயிற்சியை ஆய்வுத் திட்டத்தோடு இணைக்கலாம். நூல்களை அந்த அந்த மூல மொழியிலே கற்றால் தான் சரியான ஒப்பீடு செய்ய முடியும்.

4. ஒப்பிலக்கியம் இன்று உலக அரங்கில் பல்வேறு பரிமாணங்களை உடையதாய் பல்வேறு நிலைகளில் வளர்ந்து வருகின்றது. ஆசிய இலக்கியம், ஆப்பிரிக்க இலக்கியம், ஐரோப்பிய இலக்கியம், சிலாவிக் இலக்கியம், இலத்தீன் அமெரிக்க இலக்கியம், கறுப்பர் இலக்கியம் போன்ற பெயர்களில் பட்டவகுப்புகளிலும் முதுகலைப்பட்ட வகுப்புகளிலும் ஒரு தாளினை வைத்து உலக இலக்கியக் கண்ணோட்டத்தை மேலைநாட்டுப் பல்கலைக்கழகங்கள் வளர்க்கின்றன. ஒன்றே மனிதம், ஒன்றே இலக்கியம், என்னும் சிந்தனை வலுத்துக் கொண்டுவருகின்றது. நமது தமிழ் இலக்கியக்கல்வி திராவிட இலக்கியக்கல்வியாக முளைத்து இந்திய இலக்கியக்கல்வியாகக் கிளைபரப்பி, ஆசிய இலக்கியக்கல்வியாகப் பூத்து, உலக இலக்கியக்கல்வியாகக் கனிய வேண்டும். அப்போதுதான் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற வாழ்க்கை முறை இலக்கிய உலகிலும் எதார்த்தமாக நிலைபெறும்.

5. மதுரை காமராசர் பல்கலைக்கழகம் சங்கத்தமிழ் இலக்கியங்களைப் பிற நாட்டுச் செவ்வியல் இலக்கியங்களோடு ஒப்பிடுதலில் அதிக கவனம் செலுத்தி வருகின்றது. காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகம் தற்கால இந்திய வடிவங்களை ஒப்பிடுதலில் ஈடுபாடு கொள்கின்றது. இவற்றைப்போல பிற பல்கலைக்கழகங்கள் ஒவ்வொரு குறிப்பிட்ட இலக்கிய வகைகளில் / இலக்கிய வளர்ச்சி கால கட்டங்களில்/ இலக்கியப் போக்குகளில்/ ஒருமொழிக்குடும்ப இலக்கியங்களில் சிறப்புக் கவனம் செலுத்தலாம். பாரதிதாசன் பல்கலைக்கழக ஆங்கிலத்துறை தென்கிழக்காசிய இலக்கியத்துறை ஏற்படுத்தி (SAARC Literature) செயல்பட்டு வருகிறது. கர்நாடகத்திலுள்ள மைசூர் பல்கலைக்கழக ஆங்கிலத்துறை காமன்வெல்த் இலக்கியத்தில் சிறப்புக் கவனம் செலுத்தி வருகின்றது.

மதுரை பல்கலைக்கழக ஆங்கிலத்துறை தமிழ் இலக்கியத்தை ஆங்கில இலக்கியத்தோடு ஒப்பிடுவதில் முன்னோடியாகவும், முன்னணியிலும் உள்ளது. புதுவைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறை தமிழ் இலக்கியத்தை மானிடவியல் கண்ணோட்டத்தில் ஆராய முனைகின்றது. இவ்வாறு ஒவ்வொரு பல்கலைக் கழகமும் ஒப்பிலக்கியத் துறையில் ஏதேனும் ஒருபிரிவில் சிறப்புக் கவனம் செலுத்தினால், ஆழமான ஒப்பிலக்கிய ஆராய்ச்சி வளர்வதற்கு வாய்ப்பு ஏற்படும்.

6. ஒரு மொழி இலக்கியத்தை இன்னொரு மொழி இலக்கியத்தோடு மட்டும் ஒப்பிடுவதோடு நின்று விடக்கூடாது. இந்த முதல்நிலை ஆராய்ச்சி மேலும் தொடர்ந்து உலகத்தில் காணப்படும் அந்த இலக்கிய வகையை முழுவதும் ஆராய்ந்து பொது விதிகளை (Generalisation) வரைந்து உலகப் பொதுமைகளைக் (Literary Universal) காணவேண்டும். பின்பு உலக இலக்கியக் கோட்பாட்டை வரையறைசெய்ய வேண்டும். மொழிகளை ஆராய்ந்து மொழியியலார் உலகப் பொது மொழிக் கூறுகளைக் காண்பது போல் இலக்கியத்திலும் பொதுமைகளைக் காணவேண்டும். யாப்பில் ஈரசைப்பகுப்பு, உவமை, உருவக, முரண் உத்திகள், நினைவுப்பாதை, உத்திகள் போன்றவை உலகெங்கும் காணப்படுபவை. முக்கோணக்காதல் கதையமைப்பில் உலகெங்கும் காணப்படும் அம்சமாகும். இந்த இலக்கியப் பொதுமைக் கூறுகளைக் காண்பதே ஒப்பிலக்கியத்தின் ஒப்பற்ற-உயரிய இலட்சியமாகும். அதே சமயத்தில் ஒவ்வொரு நாட்டினருக்கும் / மொழியினருக்கும் உரிய சிறப்பைச் சுட்டிக் காட்டவும் வேண்டும்.

7. இலக்கியத்தை இலக்கியத்தோடு ஒப்பிடுவது அல்லது இரண்டு இலக்கியப் படைப்பாளர்களை ஒப்பிடுவது இதுவரை செய்து வந்த பெரும்பாலான ஒப்பிலக்கிய ஆய்வாகும். அமெரிக்க ஒப்பிலக்கிய அறிஞர்களின் கருத்துப்படி இலக்கியத்தைப் பிறகலைகளோடும்/ துறைகளோடும் ஒப்பிடும் போக்கு வளரவேண்டும். எடுத்துக்காட்டாக, பக்தி இலக்கியத்தில் இசையின் தாக்கம், பக்தி இலக்கியமும் கோயில் சிற்பங்களும், இராமாயணமும் இராமாயண ஓவியங்களும் (ஏடுகளில், கோவில் சுவர்களில் காணப்படுபவை) பக்தி இலக்கியமும் தத்துவமும், யுக்தி இலக்கியமும், புராணவியலும், இலக்கியத்தில் சமயம் அரசியலின் தாக்கம், தமிழ் இலக்கியத்தில் அறிவியலின் தாக்கம், அறிவியல் புனைகதைகள், வாய்மொழி இலக்கியங்களை வரிவடிவ இலக்கியங்களோடு ஒப்பிடுதல், புதினங்களும் திரைப்படங்களும் போன்றவற்றைச் சுட்டிக்காட்டலாம். ஆய்வு மாணவர்கள் பிறதுறைகளில் குறிப்பாக, தத்துவம், உளவியல், சமூகவியல், மானிடவியல், நுண்கலையியல், திரைப்படவியல் ஆகியவற்றில்

தனிப்பட்ட முறையிலும் முதுகலைப்பட்டம் பெற்று இத்தகைய ஒப்பீட்டு இலக்கிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டும். எஸ்.டபிள்யூ, குட்வின் என்பவர் இலக்கியத்தை உருவக்கலையோடு ஒப்பிட்டதைப்போல (The Dance of Death in Nineteenth Century Literature and Graphic Arts) தமிழிலும் கலைகளிடையே ஒப்பிலக்கிய ஆராய்ச்சி வளர வேண்டும்.

இன்று அனைத்து நாடுகளும் 'உலகமயமாக்குதல்' என்னும் கோட்பாட்டின் கீழ் வாணிப ரீதியாக நெருங்கி உலகம் ஒரு குடும்பமாகி வருகின்றன. இணைய வழி செய்திப் பரிமாற்றமும், பலமொழி கற்கும் ஆர்வமும் இளைஞர்களிடையே பெருகுகின்றது. சாகித்ய அகாடமி ஆண்டுதோறும் மொழி பெயர்ப்புக்குப் பரிசு வழங்கி வருகின்றது. தனியார் அமைப்புகளும் மொழிபெயர்ப்பு நூல்களுக்கு விருதுகள் வழங்கி ஊக்கப்படுத்துகின்றன. கணிப்பொறி வாயிலாக மொழிபெயர்ப்பு வெற்றி பெற்றுவிட்டால், உலக மொழியில் உள்ள இலக்கியங்கள் அனைவருக்கும் கிடைக்கும்; ஒப்பிலக்கியக் கோட்பாட்டின் இலக்கும் நிறைவுபெறும். 21-ஆம் நூற்றாண்டின் இலக்கியக் கல்வி என்பது ஒப்பிலக்கியக் கல்வி எனக் கூறத்தக்கவகையில் வளர்ச்சி பெறும் என்று நம்புவோமாக.

*



தேனி மாவட்டம் சீலையம்பட்டியில் 12.03.1951ல் பிறந்த முனைவர். அ. பிச்சை அவர்கள் பி.எஸ்.சி.,(வேதியியல்), எம்.ஏ.,(தமிழ்), எம்.ஏ.,(உளவியல்), சான்றிதழ் மற்றும் பட்டயம் (மொழியியல்), பட்டயம்(உயர்கல்வி), சான்றிதழ்(மலையாளம்), பிஎச்.டி.,(தமிழ்-சங்க யாப்பியல்) ஆகிய பட்டங்களைப் பெற்றவர்.

1978-ல் வேலையில் சேர்ந்த இவர், கொடைக்கானல் பண்பாட்டுப் பள்ளியில் இரண்டாண்டுகளும்(1978-80), பாடத் திட்டத்துறை, மாநிலப் பள்ளிசாரா கல்விக்கருவூலம் சென்னையில் நான்கு ஆண்டுகளும்(1980-84) பணியாற்றினார். 1984 -லிருந்து திண்டுக்கல் மாவட்டம் காந்தி கிராமிய பல்கலைக்கழகத்தின் தமிழ் பேராசிரியராக பணிபுரிந்து வருகிறார்.

சிறந்த தமிழறிஞரான இவர், மதுரை ஞாலத் தமிழ் பண்பாட்டுக்கழகத்தின் செயற்குழு உறுப்பினராகவும், இந்திய ஒப்பியலக்கியம் என்ற காலாண்டிதழின் சிறப்பாசிரியராகவும், திருவனந்தபுரம் திராவிடமொழியியல் கழகத்தின் ஆயுட்கால உறுப்பினராகவும் செயல்பட்டு வருகிறார்.

இவர் 'தமிழ் பண்பாட்டில் விளையாட்டுகள்' (1982), 'தமிழ்நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு'(2003), 'நெற்றிக்கண்', 'கலங்கரை விளக்கம்' ஆகிய எழுத்தறி முதன்நூல்களையும் ஆறுக்கும் மேற்பட்ட முதியோர் கல்வி துணைப்பாடநூல்களையும், 90க்கும் மேற்பட்ட தமிழ்க்கட்டுரைகளையும், 12 க்கும் மேற்பட்ட ஆங்கிலக்கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இந்திய ஒப்பிலக்கியத்தில் 1986 ல் 12 மாத இதழ்களையும், 1997 முதல் 20 காலாண்டிதழ்களையும் சிறப்பாசிரியராக இருந்து பதிப்பித்துள்ளார்.

கபிலன் பதிப்பகம், காந்தி கிராமம்.